ஸ்ரீ:

திருவாய்மொழி

எட்டாம் பத்து

முதல் திருவாய்மொழி — தேவிமார் ப்ரவேசங்கள்.

ஈடு முப்பத்தாறுயிரப்படி

பிராட்டிமாரோடே நித்யபரிகரம் ஸேவிக்க, பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வான்மேலே ஸர்வேச்வரன், நாம் பாடின திருவாய்மொழி கேட்கைக்காகத் திருவாறன்விளையிலே எழுந்தருளியிருந்தான்: நாம் அங்கேபோய் திருவாய்மொழி கேட்பித்து அநுகூல வ்ருத்திகளையும் பண்ணி அநுபவிப்போமென்று பாரித்தார்: அது மநோரதமாத்ர மாய் நினைத்தபடி தலைக்கட்டப் பெற்றதில்லை. 'பிராட்டிமார் அருகே எழுந்தருளியிருக்க, நித்ய ஸூரிகளுண்டாயிருக்க, நினைத்தபடி கார்யஞ்செய்து தலைக்கட்டுக்கைக்கீடான ஐச்வர்யம் குறை வற்றிருக்க, ஆச்ரிதர் உகந்தவற்றைத் தனக்குத் திருமேனியாகக்கொண்டு உதவும் ஸ்வபாவனு யிருக்க, எனக்கு ருசியிற் குறைவற்றிருக்க, நினைத்தபரிமாற்றம் பெறுதொழிவோமே!' என்று வெறுத்தார். இவர்தாம் ஸர்வேச்வரன்பக்கல் தமக்குத் தஞ்சமாக நினைத்திருப்பது இரண்டு ஸ்வபாவத்தை :— ஆச்ரித பாரதந்த்ரனு யிருக்குமிருப்பையும், ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக் களும் தனக்கு ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாய் இவற்றுக்கு வந்த வ்யஸநம் தனக்கு வந்த தாக நினைத்திருக்கும் ப்ராப்தியையுமாயிற்று; அவையிரண்டும் தம்பக்கல் கார்யகரமாகக் கண்டிலர்; "நாமொருவன் தோற்றி ஸர்வேச்வரனுக்கு இவையும் பொய்யாகப் புகுகிறதோ?' என்று அதிசங்கை பண்ணினர். "குணஜ்ஞானத்தாலே ஜீவிக்குமவர் குணங்களிலே அதி சங்கை பண்ணினல் ஜீவிக்கமாட்டாரே. இவர்தம்மை நாம் இழக்கவொண்ணாது, இவரை ஸமாதாநம் பண்ணும் விரகு ஏதோ?" என்று பார்த்து, "வாரீர்! நீர், கண்டதெல்லாவற்றிலும் அதிசங்கை பண்ணுகிறதென்? நாம் உமக்கொன்றும் செய்திலோமோ? இவ்வளவாக உபகரித்த நாம் மேலுள்ளதுஞ் செய்யோமோகாணும்; நீர் இங்ஙனே அதிசங்கை பண்ண வேண்டா;' என்று தன்னுடைய விஸ்ரம்பணீயத்வ ப்ரமுகமான கல்யாண குணங்களையும், தான் இவ்வளவாகப் பண்ணின உபகாரங்களையுங் காட்டி, இவருடைய அதிசங்கையைத் தீர்த்து ஸமாதாநம்பண்ண ஸமாஹிதராய், அத்தை யநுஸந்தித்து இனியராகிறுர்.

க்யாத இத்யாதி [*ப்ராஜ்ஞ:*] - தம்மாலே யபிமதம் பெறவிருப்பார் அறிவிற் குறையால் இழக்க வேண்டாதபடி தம்மளவையும் அவர்களளவையும் அறிகைக்கு ஈடான அறிவுடையவர். [* க்ருதஜ்ஞச்ச *] - கிட்டுமவன் தன்பக்கல் வைமுக்யம் பண்ணுமது தவிர்ந்து ஓடி வா நின்ற எல்லையும் அறிவர். [*ஸாநுக்ரோசச்ச*] - அறிவுகொண்டு காரியங் கொள்ளவும் அறியாதேயிருக்குமவர்களுக்கு, அவர்களிழவை யநுஸந்தித்து "ஐயோ!" என்று

இரங்குபவராயிருப்பர். [*ராகவ:*] - இது இவர்தம்மைத் தோற்றிவந்ததல்ல; குடிப்பிறப்பாலே. [*ஸத்வ்ருத்த:*] - பரஸம்ருத்த்யேக ப்ரயோஜநராயிருப்பர். [*க்யாத:*] - இப்படி எதிரிகள் கோஷ்டியிலும் ப்ரஸித்தர். [*நிரநுக்ரோசச்சங்கே*] - இக்குணங்களையுடைய பெருமாளை இத்தசையில் எனக்கு முகங்காட்டக்காணாமையாலே, இக்குணங்களொன்றுமில்லாத ந்ருசம்ஸரோபாதியாக சங்கியாநின்றேன். அவர்க்கு இக்குணங்கள் உண்டாகாதொழியாதிறே. [*மத்பாக்யஸங்க்ஷயாத்*] என்னுடைய பாக்யஹாநியாலேயாமித்தனையிறே "அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்" என்கிறாரிறே இவரும். இத்திருவாய்மொழிக்கு ஆளவந்தாரருளிச்செய்யும் ச்லோகம், இது.

முதற்பாட்டு. பிரியில் தரிக்கவொண்ணாதபடி நிரதிசயபோக்யனான நீ, உன்னை நான் காணும்படி க்ருபை பண்ணியருளவேணுமென்கிறார்.

தேவிமாராவார்திருமகள் பூமி ஏவமற்றமரராட்செய்வார் *
மேவியவுலகம்மூன்றவையாட்சி வேண்டுவேண்டுருவம்நின்னுருவம் *
பாவியேன்றன்னையடுகின்றகமலக்கண்ணது ஓர் பவளவாய்மணியே!*
ஆவியே! அமுதே! அலைகடல் கடைந்தவப்பனே! காணுமாறருளாய். (1)

[தேவிமார் இத்யாதி]-[*நகச்சிந்நாபராத்யதி*] என்பாரும் அருகேயிருக்க, எனக்கு க்லேசப்படவேண்டுகிறதேறதென்? [*மித்ரமௌபயிகம்:*] ராவணன், பிராட்டி திருமுன்பே நின்று சிலவற்றை ஜல்பிக்கப்புக்கவாறே, ப்ரஜைநலிக்கதென்னாத் தாய் சீறுளிறே! ஜநகியான முறையாலே, அவன் அநர்த்தங்கண்டு ஹிதமருளிச் செய்கிறாள். "அவர் திருவடிகளிலே சரணம்புகு" என்றால், அவன் தாழ்வாக நினைத்து இசையானென்னுமத்தாலே - தோழமைக்கொள் என்கிறாள்; அவர் [*மித்ரபாவேந*] என்பர்: இவள் [*மித்ரமௌபயிகம்*] என்னும். அவ்வருகுபோனாலும் பரமஸாம்யாபத்தியிறே கொடுப்பது. எனக்கு சத்ருவாயிருப்பாரோடு உறவு பண்ணவேண்டுகிறதென்? என்னுமே! [*ஸ்த்தாநம் பரீப்ஸதா*] - கெடுவாய், வழி பறிப்பார்க்கும் தரையிலேகால்பாவி நின்று கொள்ளவேணுமே: உன் குடியிருப்பை ஆசைப்பட்டாயாகில் இத்தனையுஞ் செய்யவேணும். 'எனக்கு ஒரு குடியிருப்பும் வேணுமோ? ஆகாசசாரிகளாயன்றோ இருப்பது நாங்கள்' என்று அவனுக்கு நினைவாக, "[*வதம் சாநிச்சதா*] - அவர் அம்புகள் ஆகாசத்திலே நடவாதோ? [*கோரம்*] உன்னைச் சிங்கவிளக்கெரித்துக் கொல்லாதே நற்கொலையாகக் கொல்லும் போதும் அவரைப் பற்றவேணுங்காண். [*த்வயா*] பலசொல்லியென்? உனக்கு அவர் வேணும். [*அஸௌ*] - அவர்படி உனக்குத் தோற்றுகிறதில்லையோ? உருவு வெளிப்பாட்டாலே முன்னிலை இவளுக்கு: அச்சத்தாலே முன்னிலையாகத் தோற்றும் அவனுக்கு. 'தீரக்கழிய அபராதம் பண்ணி நிற்கிற என்னைக் கைக்கொள்ளுவாரோ' என்ன [*புருஷர்ஷப:*] நீ செய்தவற்றை ஒன்றாக நினைத்திருப்பாரொருவரல்லர், புருஷோத்தமர் காண். [தேவிமாராவார் திருமகள் பூமி] - அவர்கள் புருவம் நெளித்தவிடத்தே உனக்குக் காரியஞ் செய்ய வேண்டும்படி வல்லபைகளாயிருக்கிற பெரிய பிராட்டியாரும் ஆண்டாளாரும் [*நகச்சிந்நாபராத்யதி*] என்று பொறைக்கு உவாத்தாயிருக்கும் ஒருத்தி, 'பொறுப்பது எத்தை? குற்றந்தானுண்டோ?', என்று அந்தப்பொறை விளையும் பூமியாயிருக்கும் ஒருத்தி. அவர்கள் அங்கேயிருக்க எனக்கு இழக்கவேண்டுகிறதென்? [ஏவ] -கைங்கர்யந்தான் உத்தேச்யமானவோபாதி ஏவிக்கொள்ளுகையும் உத்தேச்யமென்கை; [*க்ரியதாமிதி மாம்வத*] மின்னி முழங்கி வில்லிட்டு வர்ஷிக்கும் மேகத்வநிபோலே, கம்பீரமாயிறே திருமிடற்றோசைதானிருப்பது, [மற்றமரராட் செய்வார்] - இச்சேர்த்தியில் கிட்டி நின்று அடிமை செய்வார் நித்யஸூரிகள். மற்றென்பது - துல்யவிகல்பத்தைபாயிற்று. திருமுலைத் தடத்திலே அணைந்தால் பிராட்டிமார்க்குண்டான இனிமை இச்சேர்த்தியிலே கைங்கர்யம் பண்ணப் பெறுகையாலே இவர்களுக்கும் உண்டாம்; [*ரமமாண வநே த்ரய:*] என்கிறபடியே, ஸ்வரூபாநுரூபமாயிறே ஸுகங்களிருப்பது. பெருமாளுக்கும் பிராட்டிக்கும் அந்யோந்ய ஸம்ச்லேஷத்தால் பிறக்கும் ரஸம் இருவருமான சேர்த்தியைக் காண்கையாலே பிறக்கும் இளையபெருமாளுக்கு. [அமராட்

செய்வார்] - "வேதம் வல்லார்களைக்கொண்டு" என்கிறபடியே அவர்களும் புருஷகாரபூதராயிறே யிருப்பது, பிராட்டிமாரும் அருகேயுண்டாய், "மற்று" என்று அவர்களோடொக்க விகல்பித்துச் சொல்லலாம்படியான நித்யஸூரிகளு முண்டானாலும் ஐச்வர்யத்திலே குறையுண்டாகில் கார்யஞ் செய்யவொண்ணுகிறதென்னில்,— [மேவிய இத்யாதி] - கீழும் மேலும் நடுவுமான லோகங்களைச் சொல்லுதல், த்ரிவித சேதநரையுஞ் சொல்லுதல், [மேவிய] - லோகத்துக்கு இவன் ரக்ஷகனென்றால் தகும்படியிருக்குமென்னுதல், ராஜ்யந்தான் பொருந்தியிருக்குமென்னுதல். [த்ரைலோக்யமபி நாதேந யேநஸ்யாந்நாதவத்தரம்*] - த்ரைலோக்யத்தையும் கையடைப்பாக்கினாலும், ரக்ஷ்யம் சுருங்கி ரக்ஷகத்வப்பாரிப்பே விஞ்சியிருக்கும். [வேண்டு வேண்டுருவம் நின்னுருவம்] - அவ்வோரக்ஷணத்துக்கு வேண்டின வேண்டினவென்னுதல்; *இச்சாக்ருஹீதமென்னுதல்; ஆச்ரிதர் உகந்தவற்றையே தனக்குத் திருமேனியாகக் கொள்ளுமென்னுதல். [பாவியேன் தன்னை] - புருஷகாரமுமுண்டாய், விபூதியையுமுடையனாய், ஆச்ரிதாதீநமான விக்ரஹத்தையு முடையனாயிருக்க, இழக்கைக் கடியான பாபத்தைப் பண்ணின என்னை. அந்த கார்ஹஸ்த்யத்துக்குப் புறம்பாவேனே! என்கிறார். [அடுகின்ற] - முடிகின்ற உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக் கண்ணையுடையவனே! [பவளவாய்] - [*ஸவிலாஸஸ்மிதாதாரம் பிப்ராணம் முகபங்கஜம்*] என்கிற ஸ்மிதத்தை யுடையவனே! [மணியே] - விடாயர்முகத்தே குளிர்நீர்வெள்ளத்தை வெட்டிவிட்டாற்போலே ச்ரமஹரமான வடிவையுடையவனே! இவை கிடீர் எனக்கு பாதகமாகிறது; [ஆவியே] - ஒரு வாயு விசேஷமன்று இவர்க்கு ப்ராணன்; நாய்ச்சிமாரோடும் நித்யஸூரிகளோடுங் கூடிக் கண்ணும் வாயும் வடிவுமாயாயிற்று இவருடைய ஆவியிருப்பது. [அமுதே] - தாரகமான ப்ராணனாய் போக்யவஸ்துவைப் புறம்புதேடவேண்டாதே போக்யமும் தானேயாயிருக்கை. போக்யமும் தானானால் ஸாதித்துக் கொள்வார் இவரன்றிக்கே உபாயமும் தானேயாயிருக்கை, [அலைகடல் கடைந்தவப்பனே] - ப்ரயோஜநாந்தரபரர்க்கும் அரியன செய்து அபேக்ஷிதங்களைச் செய்யும் உபகாரகனே! உமக்குச் செய்யவேண்டுவதென்? என்ன, [காணுமாறருளாய்] - எனக்குக் கடல் கடைய வேண்டா, அவ்வடிவைக் காட்ட அமையும். வடிவைக் காண்கை - ப்ராப்யம், அருள் - ப்ராபகம். "ப்ராப்யப்ராபகங்கள் நீயே" என்றிருப்பார் கார்யம் செய்யலாகாதோ?

இரண்டாம்பாட்டு. காணவேணுமென்று மிகவும் நோவுபட்டிருக்கும் இருப்பையோ என்திறத்துச் செய்தருளப் பார்த்தது? நான் இங்ஙன் படாமே உன்னைக் காணும்படி க்ருபை பண்ணியருளவேணு மென்கிறார்.

காணுமாறருளாயென்றென்றேகலங்கிக் கண்ணநீரலமர* வினையேன்
பேணுமாறெல்லாம்பேணி நின்பெயரேபிதற்றுமாறருளெனக்கந்தோ!*
காணுமாறருளாய்காகுத்தா! கண்ணா! தொண்டனேன்கற்பகக்கனியே! *
பேணுவாரமுதே! பெரியதண்புனல்சூழ் பெருநிலமெடுத்தபேராளா! (2)

[காணுமாறருளாய்] - ஒருகால் "காணுமாறருளாய்" என்றால், அப்போதே செய்யக் காணவிட்டால், "நாமே ப்ரவர்த்தித்துப் பெறுகிறோம்" என்றிருக்குமவரன்றே. வர்ஷதாரையாலல்லது தரியாத சாதகம் போலே அவனருளை பார்த்திருக்குமவராகையாலே, திரியட்டும் "காணுமாறருளாய்" என்கிறார். [என்றென்றே] - பலகாலும் வார்த்தை இதுவே "புறம்பேயும் ஒரு புகலுண்டு" என்றிருக்கிலிறே அத்தைப் பற்றுவது. [கலங்கி] - கலக்கமேயாயிற்று ஏறி வருவது; [*ஜடிலம் சீரவஸநம்*]. [கண்ணநீரலமர] - நிரம்பின ஏரிகளுக்குப் பரீவாஹம்போலே, கலங்கின கலக்கம் உள்ளடங்காமல் கண்ணநீராய் ப்ரவஹியா நிற்கும். [வினையேன்] - இதுக்குமுன்பு இவ்வவஸ்துவைக்காண ஆசைப்பட்டாரில் கலங்கிக் கண்ணநீர் பாய்ந்து அறிவாரில்லைகிடீர்! "காணவேணும்" என்கிற ஆசாலேசமுடையார்க்குத் தன்னைக் காட்டி அவர்கள் கண்ணநீரையுந் துடைக்குமவனை ஆசைப்பட்டுக் கிடையாதே, கண்ணுங் கண்ணநீருமாம்படியான பாபத்தைப் பண்ணினேன். [பேணுமாறெல்லாம் பேணி] -

பேணுகை - ஆசைப்படுகை. முதலிலே அயோக்யன் என்று அகன்று, "அவன் விரும்பாத நானும் என்னுடைமையும் எனக்கு வேண்டா" என்று ஆற்றாமையாலே மடலெடுக்கையிலே கைவைத்து, பலபடியும் ப்ரபத்தி பண்ணி, ப்ரணயரோஷம் தலையெடுத்துக் கிலாய்ப்பதுஞ் செய்தவிடத்திலும். [நின்பெயரே பிதற்றுமாறருளெனக்கு] - நீ எனக்கு அருளப்பார்த்த படி, நின்பெயரே பிதற்றுமாறாய்விட்டது; உன்னைப்பெறாத வ்யஸநத்தாலே உன்னுடைய திருநாமங்களைச் சொல்லி அக்ரமமாகக் கூப்பிடும்படியோ நீ எனக்குப் பண்ணும் க்ருபை? 'நீ சவிஷயங்களை ஆசைப்பட்டுக் கூப்பிடுமது தவிர்ந்து நம்பேரைச்சொல்லிக் கூப்பிடும்படிபண்ணினேனாகில் இனியென்?' என்றிருக்கிறாயோ? ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தியோ எனக்கு வேண்டுவது? என் அபிமதம் பெற வேண்டாவோ? [வினையேன் பேணுமாறெல்லாம்பேணி] - பேணுதல் - ஆசைப்படுதல். ஆசைப்படும் வழியெல்லாம் ஆசைப்பட்டு. பலவழியுண்டோ ஆசைப்பாட்டில் என்னில்? - உண்டு; வகுத்தவிஷயத்திலாசை. அபிமத விஷயத்தில் ஆசை. இவர்க்கு வகுத்த விஷயம் அபிமதமாயிருக்கும். வகுத்த விஷயத்திலாசை க்ரமமாயிருக்கும், அபிமதவிஷயத்திலாசை வரம்பழிந்திருக்கும். வகுத்தவிஷயத்திலாசைக்கு, அவனைக்கால் கட்டக்கிடைக்கும்; அதுவும் செய்தாரிறே: "நோற்ற நோன்பு," "ஆராவமுது," "மானேய் நோக்கு," "பிறந்தவாறு," "உலகமுண்ட பெருவாயன்" இவற்றிலே. அபிமதவிஷயத்திலாசைக்கு, அபிமதன் பாடேறத் தூதுவிடுகைதொடக்கமாக மடலெடுக்கைமுடிவாகத்துணிகை; அவையுமெல்லாம் செய்தாரிறே "அஞ்சிறையமடநாரை" தொடக்கமாக, "மாசறுசோதி," "வைகல்பூங்கழிவாய்," "பொன்னுலகாளீர்" இத்யாதிகளிலே. இப்படி பேணுமாறெல்லாம் பேணியும், நின்பெயரே பிதற்றுமாறே நீ எனக்கு அருளும் அருள் என்கிறார். [அந்தோ] - உன்னை நீ பிரிந்தறியாய், பிரிந்தாரைக் கண்டறியாய். நித்யஸூரிகள் பிரிந்தறியார்கள், ஸம்ஸாரிகள் பிரிவறியார்கள்; இவ்வாற்றாமை யுடையேன் நானொருவனுமே யாயிற்று. [காணுமாறருளாய்] - திருவாறன்விளையை அணித்தாக்குதல், எனக்கு அவ்வளவும் கால் நடை தருதல் செய்யும்படி பண்ணாய். இப்படி நீர் எங்கே அருளக்கண்டு நிர்ப்பந்திக்கிறீர்? என்ன, [காகுத்தா] - [* ககுத்ஸ்த்தவம்சே விமுகா: ப்ரயாந்தி *] [* ரூபஸம்ஹநநம் *] ஸம்ஸ்த்தாநந் தன்னை. [* லக்ஷ்மீம் *] ஸமுதாயசோபையை. [* ஸௌகுமார்யம் *] - அநுகூலர்க்கும் அடுத்துப்பார்க்கப் பொறாதிருக்கை, [* ஸுவேஷதாம் *] - தாபஸவேஷம். [* தத்ருசுர்விஸ்மிதாகாரா: *] - விஸ்மிதாந்த:கரணராய்க்கொண்டு கண்டார்கள். ஆர்தான்? என்னில், [* வநவாஸிந: *] படைவீட்டிலுள்ளார் காணப்பெறாதத்தைச் சருகிலைதின்று தூற்றிலே கிடந்தவர்கள் பெற்றார்கள். 'அது ஒரு காலம் அங்ஙனே செய்து போனோமாகில், அதுகொண்டு வளைக்கிறீரோ'? என்ன? [கண்ணா] - ருஷிகளுக்கேயன்றிக்கே, [* தாஸாமாவிரபூத் *] என்று இடைச்சிகளுக்கும் இடையர்க்கும் காட்டிற்றிலேயோ? புறம்பு தேடிப்போகிறதென்? [தொண்டனேன் கற்பகக்கனியே] - சப்தாதிவிஷயங்களிலே அந்யபரனாய், அவற்றிலே சபலனாய்த்திரிகிற என்னை, அத்தைத் தவிர்த்து உன்னை ஸர்வஸ்வதாநம்பண்ணினவனே! [பேணுவாரமுதே] - நீயே வந்து மேல்விழாநின்றால் 'அல்லோம்'-என்னாதார்க்கு நிரதிசயபோக்யனானவனே! [பெரிய இத்யாதி] ஆர் உன்னைப்பேண ப்ரளயங்கொண்ட ஜகத்தை எடுத்து ரக்ஷித்தது? ப்ரளயார்ணவஞ்சூழ்ந்த மஹாப்ருதிவியை அதினின்றும் உத்தரித்த பெரியோனே! உன்னை ஆசைப்படுதல், ஆபத்தை யறிவித்தல் செய்யமாட்டாத ஜகத்தையன்றோ ரக்ஷித்தது? நீ அறிய ஆபத் உண்டாமத்தனையன்றோ ரக்ஷிக்க வேண்டுவது? [பேராளா] - ரக்ஷ்யத்தினளவல்லாத ரக்ஷகனுடைய பாரிப்பு. (2)

மூன்றாம்பாட்டு. ஆச்ரிதவாத்ஸல்யனாயிருக்கிற நீ இன்றுவந்து என் ஆபத்தை நீக்காதொழியில், உன்குணமே ஜீவநமாயிருக்கிற ஆச்ரிதர் உன்னை எங்ஙனே விச்வஸிக்கும்படி? என்கிறார்.

எடுத்தபேராளன் நந்தகோபன் தன் இன்னுயிர்ச்சிறுவனே!* அசோதைக்கு
அடுத்தபேரின்பக்குலவிளங்களிறே! அடியனேன்பெரியவம்மானே! *
கடுத்தபோரவுணனுடலிருபிளவாக் கையுகிரான்டஎங்கடலே!*
அடுத்ததோருருவாய் இன்றுநீவாராய் எங்ஙனந்தேறுவருமரே? (3)

[எடுத்தபேராளன்] - நிதியெடுத்துக்கொண்டாற்போலே உன்னை யெடுத்துக் கொண்ட பாக்யாதிகன். இருவருமொக்க நோன்புநோற்க, அவர் பெற்ற முகத்திலே விழிக்கப்பெறாதே போரவிட்டிருக்க, நிதியெடுத்தாற்போலே யெடுத்து புத்ரமுகங்கண்டவரிறே. முன்பு ரிக்தனுப்போந்தவன் கனக்க ஜீவிக்கப்புக்கவாறே, "இவன் எடுப்பெடுத்தான்" என்பர்களிறே. [பேராளன்] - பெரியோன். அவன்பெருமையோபாதியும் போருங்கிடீர் என் சிறுமையும்; 'நீ மகனுகவேணும்'' என்பார்க்கோ முகங்காட்டலாவது? ஸ்ரீநந்த கோபருடைய நற்சீவன் கண்ணுக்குத்தோற்ற ஒருவடிவுகொண்டு திரிகிறவித்தனை. [அசோதைக் கடுத்த] - ஒக்கநோற்கச் செய்தேயும் க்லேசம் மிக்கிருக்குமிறே, உடம்பு நொந்து பெற்றவளாகையாலே; இவள் ப்ரஸவவேதனை அநுபவியாதிருக்கப் பெற்றுக்கொடுநின்றாளித்தனை, கிட்டிக்கொண்டுநிற்கக் கண்டதித்தனை; [* ததர்சச ப்ரபுத்தாஸா யசோதாஜாதமாத்மஜம் *] [பேரின்பம்]-நிரதிசய ஸுகத்தைவிளைத்தவன்; "தொல்லையின்பத்திறுதிகண்டாளே" என்னும் படி இவளுக்கு நிரதிசய ஆநந்தத்தை விளைத்தானுயிற்று. * அந்தமில் பேரின்பத்தைச் * சிற்றின்பமாக்கினன். [குலவிளங்களிறே] - இடைக்குலத்துக்கு ஆனைக்கன்றுபோலே ச்லாக்யமானவனே! அபிஜாதமாய், பருவத்தாலே ஆகர்ஷகமாயிருப்பதொரு மத்தகஜம் போலே, யசோதைப்பிராட்டிக்குப் பிடிகொடாதே திரியும்படி என்னவுமாம்! அகப்பட்டாலும் ஆனைக்கன்றுபோலே யாயிற்று இருப்பது; "தறியார்ந்த கருங்களிறே போலநின்று" என்கிற படியே ஒருகம்பத்தோடே சேர்ந்த களியானைபோலேயாயிற்றுக் கட்டுண்டுநிற்கும்போதும் இருக்கும்படி. "தடங்கண்கள் பனிமல்கும்" - இவள் [* யதி சக்நோஷி *] என்றால், பின்னை அவனுக்குக் கண்ணநீர்பாய்கைக்கு மேற்படவில்லை; ஸர்வசக்தி அசக்தனென்று தோற்ற விருக்கையிறே இவள் நியமிக்க வல்லளாகிறது? "தன்மையானை" - ஆச்ரிதரிட்ட வழக்காகையே ஸ்வபாவமாகவுடையவனை? [அடியனேன் பெரியவம்மானே] - உன்னை "மகன்" என்றிருப்பார்க்கோ உதவலாவது, முறைபுணர்ந்திருப்பார்க்கு உதவலாகாதோ? நான் முறையிலே நின்றவாறே நீயும் முறையிலே நில்லாநின்றாய். "அடியேன்" என்று நான் சொல்ல, நீ ஈச்வரனுயிராநின்றாய். [கடுத்த இத்யாதி] - யுத்தகண்டூதியையுடையனை ஹிரண்யாஸுரனுடலை இரண்டுபாதியாம்படி.. [கையுகிராண்ட] - "படையாண்டான்" என்னுமாபோலே. [எங்கடலே] - [* மஹாவிஷ்ணும் *] என்னும்படி பெரியகிளர்த்தியோடேவந்து ப்ரஹ்லாதனுக்கு உதவின அது தம்பேறாயிருந்தபடி. [அடுத்ததோருருவாய்] - இவன் எங்கே காட்டப் புகுகுறுன் என்று அறியாமையாலே எங்குமொக்கச் சினைத்துக்கொடு நின்றான். ஒன்றை அறுதியிட்டுத் தோற்றப்பற்றுதபடி அவன்மிகைக்கையாலே அப்போதைக்கு யோக்யமான வடிவைக்கொண்டு. [*நரஸ்யார்த்ததநும்க்ருத்வா ஸிம்ஹஸ்யார்த்ததநும்ததா*] என்கிறபடியே அவன்வரத்திலே அகப்படாத வடிவைக்கொண்டு; பதற்றத்தாலே ஒன்றினுடலையும் ஒன்றின் தலையையும் சேர்த்துக்கொண்டு வந்தானென்றுமாம். அடுத்ததோருருவாயிற்றுக் கடுத்த போரவுணனுடல் பிளந்தது. [இன்று நீ வாராய்] - அன்றுமின்றும் ஆயிற்று உதவ வேண்டுவது? அன்று உதவினுய், இன்று உதவுகிறிலை. விபரீதஜ்ஞாநமுடையார்க்கு உதவினுய், யதாஜ்ஞாநமுடையார்க்கு உதவினுய், இவ்விரண்டுகோடிக்கும் புறம்போ நான்? "மகன்" என்று கலங்கினவனுக்கு உதவினுய்; [* மத்தஸ்ஸர்வமஹம்ஸர்வம் *] என்னுந் தெளிவுடையவனுக்கு உதவினுய்; "என்றென்றே கலங்கி" என்கிற கலக்கமுடைய எனக்கேயோ உதவலாகாதது? நீ வாராதொழிந்தாலும் ஜீவிக்க ஆசையுடையார்க்கேயிறே உன்னைக் காற்கட்டவேண்டுவது. அதுகிடக்கிடீர்; ஆனுல், நீர் ஏதுக்குப் படுகிறீர்? என்ன, - [எங்ஙனம் தேறுவர்உமரே] - இவ்வளவில் நீ முகங்காட்டாவிட்டால், உன் குணஜ்ஞாநத்தாலே ஜீவிக்குமவர்கள் பிழைப்பர்களோ? "உன் குணங்களே தஞ்சம்" என்றிருக்கிறவர்கள் எங்ஙனே உன்னை விச்வஸிக்கும்படி? என்னுதல்.

நாலாம்பாட்டு. "உன்னை ஆச்ரிதரிட்டவழக்காக்கிவைப்புதி" என்னும் அறிவு ஒன்றுனுமே தரித்திருக்கிற நான், அதுவும் பொய்யோவென்று சங்கியாநின்றேனென்கிறுர்.

*உமருகந்துகந்தவுருவம்நின்னுருவமாகி உன்தனக்கு அன்பரானார் **
*அவருகந்தமர்ந்தசெய்கையுன்மாயை அறிவொன்றுஞ்சங்கிப்பன்வினையேன் **
*அமரதுபண்ணியகலிடம்புடைசூழ் அடுபடையவித்த அம்மானே **
அமரர்தமமுதே! அசுரர்கள்நஞ்சே! என்னுடையாருயிரேயோ. (4)

[உமருகந்துகந்தவுருவம்நின்னுருவமாகி]-உனக்கு ஆஸ்ரிதாரணராயிருப்பார்மாருதே உகந்தவடிவை உனக்குத திருமேனியாகக்கொள்ளுவதியென்னுதல், உனக்கு நல்லராயிருக்குமவர்கள் உகக்கததாலே நீயுகந்து அது உனக்கு வடிவென்னுதல். [* யேயதாமாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவபஜாம்யஹம் *] என்னுமாபோலே; "தமருகந்தநெவ்வுருவம்" இத்யாதி. [உன்தனக்கன்பரானரவர்] - உன்பக்கல் ப்ரேமபரவசராயிருக்குமவர்கள். [உகந்து] - அத்யாதரத்தைப்பண்ணி, [அமர்ந்தசெய்கை உன்மாயை] - ப்ரயோஜநநிரபேக்ஷமாகக் கிட்டவேண்டும் செயல்கள், உன்னுடைய ஆச்சர்யசேஷ்டிதங்கள். [அறிவொன்றுஞ்சங்கிப்பன்] - இந்த ஒரு குணத்தையும்பற்றின அறிவாயிற்று இவர்க்கு ஸத்தாஹேது; அதிலேயாயிற்று இப்போது இவர்க்கு அதிசங்கை வர்த்திக்கிறது. [வினையேன்] - நாரெருவன் கண்ணுஞ்சுழலையிட்டு அதிசங்கைபண்ணுங்காட்டில், ஸ்வரூபாநுபந்திகுணங்களில்லையாகாதிறே; அதிலே அதிசங்கை பண்ணுகிறது, நான்பண்ணின பாபமிறே; [*க்யாயத: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞச்ச ஸாநுக்ரோசச்ச ராகவ: । ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோசச்சங்கே மத்பாக்யஸங்க்ஷயாத் *] - இப்படிப்பட்ட குணங்களுடையவர்க்கு நான் அதிசங்கை பண்ணுங்காட்டில் அவையில்லையாகிறதன்றிறே; நான் சங்கிக்கைக்கடி என்பாக்யஹாநி என்றுளிறே. [அமரதுபண்ணி] - ஆச்ரிதபக்ஷபாதி என்னுமிடத்துக்கு உதாஹரணங்காட்டுகிறுர்; அந்த அமரைப்பண்ணி. மஹாபாரதமிறே; பூமிப்பரப்படைய நெளியும்படியிறே வந்து சூழ்ந்துகொண்டது. [சூழ் அடுபடையவித்த] - ஸர்வதோதிக்கமாகச்சூழ்ந்துகொண்டு கொல்லவந்த ஸேனையை அவித்த, துர்வர்க்கமடைய காட்டுத்தீக் கிளர்ந்தாற்போலே கிளர்ந்து, "ஸாரதி, ஸாரதி" என்று வாய்பாறிக்கொண்டுவந்து தோற்ற அவர்கள்கிளர்த்தியை அவித்தானாயிற்று. "மழைகொலோ வருகின்றது" என்று சொல்லுகிற க்ருஷ்ணனுகிற காளமேகமிறே ஏறியவித்தது. [அம்மானே] - ஸர்வஸ்வாமியாயிருந்துவைத்து ஆச்ரிதபக்ஷபாதத்தாலே அநாச்ரிதரைக்கிழங்கெடுத்துப் பொகட்டானித்தனை. [அமரர்தமமுதே] - தேவர்களுக்காக ஆஸுரப்ரக்ருதிகளோடே அம்பேற்றுப்பண்ணின வ்யாபாரங்களாலே அவர்களுக்கு நிரதிசயபோக்யனாயிருக்கும்படி. [அசுரர்கள்நஞ்சே] - ஜந்மத்தாலே அசுரர்களாயும் ஸ்வபாவத்தாலே அசுரர்களாயுமுள்ளவர்களுக்கு ஆற்றவொண்ணாத நஞ்சானவனே! [என்னுடையாருயிரேயோ] - எனக்கு ஸத்தாஹேதுவானவனே! தேவர்களுக்கு போக்யனாய் அசுரவர்க்கத்துக்கு நஞ்சாயிருக்கிறவிருப்புத் தமக்கு ஸத்தாஹேதுவாயிருக்கிறபடி. (4)

அஞ்சாம்பாட்டு. [* சாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி *] என்று பேறு உம்மதானால் ஸாதநம் உம்முடையதலையிலே ஆகவேண்டாவோ? என்ன, நான் யத்நம்பண்ணி வந்துகாண என்று ஒருபொருளில்லைகாணென்கிறுர்.

*ஆருயிரேயோ! அகலிடமுழுதும்படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்த **
*பேருயிரேயோ! பெரியநீர்படைத்து அங்குறைந்ததுகடைந்தடைத்துடைத்த **
*சீரியரேயோ! மனிசர்க்குத்தேவர்போலத்தேவர்க்குந்தேவாவோ **
ஒருயிரேயோ! உலகங்கட்கெல்லாம் உன்னைநான் எங்குவந்துறுகோ. (5)

[ஆருயிரேயோ]-உயிர் நீயாயிருக்க நான் என்ன ஸாதநாநுஷ்டாநம் பண்ணிவந்து கிட்டுவேன்? சரீரரக்ஷணம் ஆத்மாவதன்றோ? சரீரந்தான் தன்னை ரக்ஷித்துக்கொள்ளவோ? ஸம்பந்தமேயோ, அநுஷ்டாநமும் இல்லையோ? என்கிறுர்:— [அகலிடமுழுதும்படைத்து]. [* பஹுஸ்யாம் *] என்று பூமிப்பரப்படங்க ஸ்ருஷ்டித்து, ப்ரளயத்திலே நோவுபட மஹா

வராஹமாய் எடுத்துக்கொண்டேறி, திரிய ப்ரளயம்வர வயிற்றிலேவைத்து நோக்கி, உள்ளே கிடந்து தளராதபடி வெளிநாடுகாண உமிழ்ந்து, மஹாபலியாலே அபஹ்ருதமான தசையிலே எல்லைநடந்து மீட்டுக்கொண்டு, இப்படி அந்த தூர்தசைகளிலே அபேக்ஷாநிரபேக்ஷமாக உணர்ந்து நோக்கும் நீயே இது கிட்டும் விரகு பார்க்கவேண்டாவோ? [பெருமிசையோய்] - பெரியோனே! [பெரிய நீர் இத்யாதி]- ஸர்வவிஷயமாகப்பண்ணும் வ்யாபாரத்தோடு பிராட்டிக்காகப்பண்ணும் வ்யாபாரத்தோடு வாசியற்றிருக்கும்படி. [பெரியநீர்படைத்து அங்குறைந்து] ஏகார்ணவத்தை ஸ்ருஷ்டித்து ஸ்ருஷ்ட்யர்த்தமாக அதிலே கண்வளர்ந்து. [அதுகடைந்து] - பிராட்டியை லபிக்கைக்காக அத்தைக்கடைந்து, அவளோட்டை ஸம்ச்லேஷத்துக்காக அத்தையடைத்து, அவ்வருகுண்டான ராக்ஷஸர் வந்து ஆச்ரிதரை நலியாதபடி அத்தையுடைத்த. [சிரியரேயோ] - நித்யாச்ரிதையோடு அல்லாதாரோடு வாசியற விஷயீகரிக்குஞ்சீர்மையுடையவனே! [மனிசர் இத்யாதி] - ஐச்வர்யத்தாலும் கௌரவ்யதையாலும் மநுஷ்யர்களுக்குதேவர்களிருக்குமாபோலேயாயிற்று, அந்ததேவர்களிற்காட்டில் ஸர்வேச்வரனிருக்கும்படி. [ஓர் உயிரேயோ உலகங்கட்கெல்லாம்] - கேவலசரீரமோ, ஆத்மாவோ, ஹிதசிந்தைபண்ணுவார்? நான் உன்னைப் பெறுகைக்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகிறேன், உன்னைப்போலேயிருப்பதொரு தத்த்வாந்தரமுண்டாகில் சொல்லிக்காண். உயிராயிருக்கிற உன்னை சரீரபூதனான நான் என்ன ஸாதநாநுஷ்டாநத்தைப்பண்ணி வந்து கிட்டுவேன்? ஆத்மா சரீரத்துக்கு ஹிதசிந்தை பண்ணுமதொழிய, சரீரம் ஸ்வரக்ஷணத்தைப்பண்ண என்பதொன்றுண்டோ? ஆதாரமாய் நியந்தாவாய் சேஷியாயிருக்கிற நீயொழிய, ஆதேயமாய் நியாம்யமாய் சேஷமான இது ஸ்வரக்ஷணத்தைப் பண்ணவோ? ஆதாராதேய நியந்த்ருநியாம்ய பாவங்களாலே சரீரலக்ஷணம் இதுக்கு உண்டானபின்பு, அல்பசைதந்யமும் "நீயே கடவாய்" என்கிற ப்ரதிபத்திக்குக் கண்டவித்தனையன்றி ஸாதநாநுஷ்டாநம் பண்ணக்கண்டதோ? (5)

எங்குவந்துறுகோ? என்னையாள்வானே! ஏழுலகங்களும்நீயே *
அங்கவர்க்கமைத்ததெய்வமும்நீயே அவற்றவைகருமமும்நீயே *
பொங்கியபுறம்பால்பொருளுளவேலும் அவையுமோநீயின்னேயானால் *
மங்கியவருவாம்நேர்ப்பமும்நீயே வான்புலனிறந்ததும்நீயே. (6)

ஆறும்பாட்டு. உக்தார்த்தத்தை விஸ்தரிக்கிறார்:—[எங்குவந்துறுகோ] - மேருசிகரத்திலே நிற்கிறானொருவனை ஒரு பங்கு சென்றுகிட்டவோ! [என்னையாள்வானே] - இவ்வளவும் வாநின்றேன் நானல்லன்றோ, மேலும் நான் வந்து கிட்டப்பார்ப்பது? [ஏழுலகங்களும்நீயே]- ஸகலலோகங்களும் நீயிட்டவழக்காம்படி இருக்கிறவனே! அபேக்ஷவர்த்திக்கிறஎன்னையொழிய விமுகராயிருப்பார் தானோ ஸ்வாதீனராயிருக்கிறார்: [அங்கவர்க்கு அமைத்த தெய்வமும்நீயே] அவர்களைக் குடிமைகொள்ளுகிற தேவதைகளும் நீயிட்டவழக்கு. [அவற்றவைகருமமும்நீயே]- அவ்வோ தேவதைகளுடைய ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களோதான் அவர்கள் பக்கல் கிடக்கிறது? ஆக, இவ்வருகுண்டான கார்யவர்க்கம் த்வததீநம் என்னுமிடஞ் சொல்லிற்று. [பொங்கிய இத்யாதி]-ஒன்றுக்கொன்று, விஸ்த்ருதமாய், அண்டத்துக்கு புறம்பாய், அதுக்குக் காரணமான மஹதாதிகளென்று சிலவுண்டாகில், அவையும் உன் அதீநம். [மங்கிய இத்யாதி]- கார்யாகாரமடங்க அழிந்துஸூக்ஷ்மாவஸ்த்தையைபஜித்திருக்கிறஅவ்யக்தமும்நீயிட்டவழக்கு- [வான்புலனிறந்ததும்நீயே] - இவற்றின்படியன்றிக்கே, வானாய் - அவ்யக்தத்தையும்வ்யாபிக்கவற்றாய், சக்ஷுராதிகாரணங்களுக்கு அவிஷயமாயிருந்துள்ள காரணமான ஜீவஸமஷ்டியும் நீயிட்டவழக்கு; பத்தாத்மஸ்வரூபமும் நீயிட்ட வழக்கென்கை. [இன்னேயானால் - எங்குவந்துறுகோ] - அர்த்ததத்வம் இதுவானபின்பு, எங்கே வந்து கிட்டக்கடவேன்? "மங்கிய அருவாம் நேர்ப்பமென்று - "பத்தஸமஷ்டி" என்றும், "வான்புலனிறந்ததென்று - முக்தஸ்வரூபத்தைச் சொல்லுகிறது" என்றும் பிள்ளான். அப்போது, அஸத்ஸமமாய் ஸூக்ஷ்மமான ஆத்மஸமஷ்டியென்றும், பரமபதத்திலேயாய் அதீந்த்ரியமான முக்தாத்மஸ்வரூபமென்றும் நிர்வாஹம். இத்தால் சொல்லிற்றாயிற்று என்? என்னில், - கார்யாவஸ்த்தையோடு காரண

வஸ்த்தையோடு முக்தனான அவஸ்த்தையோடு வாசியற உன்னை பார்த்திருக்கவேண்டின பின்பு, நான் என்காரியத்துக்குக் கடவேனாகையென்று ஒரு பொருளுண்டோ? (6)

ஏழாம்பாட்டு. ஸகலபதார்த்தங்களும் உனக்கு ப்ரகாரதயா சேஷமாய், நீ ப்ரகாரியாய், நீயே அவற்றுக்கு நிர்வாஹகனென்னும் அறிவொன்றுங்கொண்டு தரித்திருக்கிற நான் என் பாபத்தாலே அதிலும் அதிசங்கைபண்ணாநின்றேனென்கிறார்.

இறந்ததும்நீயேயெதிர்ந்ததும்நீயே நிகழ்வதோநீயின்னேயானால்*
சிறந்தநின்தன்மையதுவிதுவுதுவென்று அறிவொன்றுஞ்சங்கிப்பன்வினையேன்*
கறந்தபால்நெய்யே! நெய்யினின்சுவையே! கடலினுளமுதமே! * அமுதிற்
பிறந்தவின்சுவையே! சுவையதுபயனே! பின்னைதோள்மணந்தபேராயா!

[இறந்தது இத்யாதி] - "இக்காலத்துக்கு நான் கடவேன், மற்றொருகாலத்துக்கு வேறே சிலர் கடவர்" என்றுதான் உன்னாலே சொல்லலாமோ? பூதகாலத்திலுள்ளாரோடு பவிஷ்யத்காலத்திலுள்ளாரோடு வர்த்தமானகாலத்திலுள்ளாரோடு வாசியற எல்லாரும் த்வததீநர். "இன்னேயானால் - எங்குவந்துறுகோ" என்று கீழிற்பாட்டோடே அந்வயம். [சிறந்தநின் தன்மை அதுவிதுவுதுவென்று] - தூரஸ்தமாயும், ஸந்நிஹிதமாயும், அதூரவிப்ரக்ருஷ்டமாயுமுள்ள ஸகலபதார்த்தங்களும், சேஷித்வத்தாலே சிறந்திருந்துள்ள உன்னுடைய ப்ரகாரம் "இன்னேயானால் இறந்ததும் நீயே" என்னுதல், "சிறந்தநின் தன்மை" என்னுதல் - இப்படி காலத்ரயவர்த்தி பதார்த்தங்களும் நீயிட்ட வழக்காகையாலே ஸகலபதார்த்தங்களும் உனக்கு ப்ரகாரமென்னுதல்; தூரஸ்தமாயும் ஸந்நிஹிதமாயும் அதூரவிப்ரக்ருஷ்டமாயுமுள்ள பதார்த்தங்கள் உனக்கு ப்ரகாரமாயற்றால் காலத்ரயவர்த்தி பதார்த்தங்களும் நீயிட்டவழக்கென்னுதல். [என்றறிவொன்றும் சங்கிப்பன்] - தன்னையொழிந்ததடங்கலும் தனக்கு ப்ரகாரமாய்த் தான் ப்ரகாரியாயிருக்கையாலே, இவற்றுக்கு வந்தது தனக்கு வந்ததாக நினைத்திருப்பானொருவனென்கிற அறிவாயிற்று, இவர்க்கு ஜீவிக்கைக்குஹேது; அதொன்றிலும் அதிசங்கைபண்ணாநின்றேன், அது எனக்குக் கார்யகரமல்லாமையாலே. [வினையேன்]-கலக்கத்தாலே அதிசங்கை பண்ணுங்காட்டில் அவன்ஸ்வரூப மில்லையாகாதிறே: எனக்கு இப்புத்தி பிறக்கைக்கடி என்பாபமிறே. [* சங்கே மத்பாக்யஸங்க்ஷயாத் *] கீழிலதிசங்கைக்கும் இதுக்கும் நெடுவாசியுண்டு. ஆச்ரிதபாரதந்த்ரனென்கிற ஸ்வபாவத்தாலே அதிசங்கைபண்ணினால் ஆச்ரயணத்திற் குறையாலேயென்று நினைத்திருக்கலாம்; இதில் அவனுடைய ஸத்பாவத்திலேயிறே அதிசங்கை. ப்ரகாரியாய்க் கொண்டிறே அவனுடைய ஸத்தை;ஸ்வவ்யதிரிக்தங்கள் அவனுக்கு ப்ரகாரமாய்க் கொண்டிறே உண்டாவது. இப்படி ஸ்வரூபத்தில் அதிசங்கை வர்த்திக்கைக்கு அடியென்? என்னில்;- அதிசங்காஹேது சொல்லுகிறது: [கறந்தபால் இத்யாதி] - வ்யதிரேகத்தில் ஜகத்து உபஸம்ஹ்ருதமென்று நினைக்கவேண்டும்படியான உன்போக்யதாப்ரகர்ஷம் அதிசங்காஹேது. [கறந்தபால்] - கறந்தபோதை ரஸத்தை நினைக்கிறது: அல்லது கறவாதபாலில்லையிறே: உபாதிவிசேஷத்தால்வந்த ரஸவிசேஷத்தை வ்யாவர்த்திக்கிறது. [நெய்யே] - அதில் ஸாராம்சம். [நெய்யினின்சுவையே] - நெய்யில் இனியசுவையானவனே! [கடலினுளமுதமே] -மஹத்தத்த்வத்தைக்கலக்கி அதில் ஸாராம்சமாக வாங்கின அம்ருதம் போலே போக்யனானவனே! [அமுதில் பிறந்த இன்சுவையே] . அதில் ரஸாம்சத்தைச்சொல்லுகிறது. [சுவையதுபயனே] - ரஸாநுபவஸ்வரூபமானவனே! ஒன்றிலொன்று மேற்பட்ட ரஸாம்சங்களைச்சொல்லி, அது தன்னையே சொல்லுகிறது. [பின்னைதோள்மணந்தபேராயா] - ஒரு போராமையாலே மிதுநாநுபவமாயிற்று இவர்க்கு போக்யம். ஸம்ஸாரியை அவன் ஆநந்திப்பிக்குமாபோலே யாயிற்று, ஆநந்தமயனை அவள் உகப்பிக்கும்படி. இருவருடைய சேர்த்தியழகாயிற்று இவர்க்கு போக்யம். (7)

எட்டாம் பாட்டு. ஏதேனும் செய்தாலும் பேறு உம்மதாய் உமக்கு ஆச்ரயிக்கைக்குக் காரணங்களுமுண்டானால் நீரே யத்நிக்கவேண்டாவோ? என்ன :- ஆத்மாத்மீயங்க

ளுடைய உன் அதிசயமானபின்பு என்னால் செய்யலாவது ஒன்றில்லை, நீயே ரக்ஷிக்கவேணு மென்கிறார்.

மணந்தபேராயா! மாயத்தால்முழுதும் வல்வினையேனையீர்கின்ற *
குணங்களையுடையாய்! அசுரர்வன்கையர்கூற்றமே! கொடியபுள்ளுயர்த்தாய்! *
பணங்களாயிரமுடைய பைந்நாகப்பள்ளியாய்! பாற்கடற்சேர்ப்பா! *
வணங்குமாறறியேன் மனமும்வாசகமும்செய்கையும்யானும் நீதானே. (8)

[மணந்த பேராயா மாயத்தால்] - அபிநிவேசத்தாலே நப்பின்னைப்பிராட்டி தோளோடே ஸம்ச்லேஷித்த பேராயனே! நப்பின்னைப்பிராட்டியிற்காட்டில் இடைத்தனத்தில் க்ருஷ்ணனுக்கு உண்டான ஏற்றம், [முழுதும்வல்வினையேனையீர்கின்ற குணங்களையுடையாய்]- [முழுதும் ஈர்கின்றகுணங்கள்] சிலகுணங்கள் நாசச் சிலகுணங்கள் தாரகமாகையன்றிக்கே, எல்லாம் ஒக்க ஈரும்படியான குணங்களையுடையவனே! உன் குணங்களாகையும் நானுகையுமே நோவுபடுக்கைக்கு அடி. [வல்வினையேன்] - சிலர் குணஜ்ஞாநத்தாலே ஜீவித்திருக்க, அது பாதகமாம்படி பாபத்தைப்பண்ணினேன். [ஈர்கின்ற] கலிந்ததாய் விடுகிறதில்லை: அம்புபட்ட புண் மருந்திட்டு ஆற்றலாம், குணத்தால் வந்தநோய்க்குப் பரிஹாரமில்லையே. [அசுரர்வன்கையர் கூற்றமே] - முன்கை மிடுக்கரான அசுரர்க்கு அந்தகன் தண்ணீரென்னும்படி கூற்றமானவனே! [கொடியபுள்ளுயர்த்தாய்] - கண்டபோதே ப்ரதிபக்ஷத்தை மாய்க்கவல்ல பெரிய திருவடியைக் கொடியாகவுடையவனே! ப்ரதிபக்ஷத்தை முடிக்கைக்குத் தான் வேண்டா, கொடியைக்காணவமையும், [பணங்கள் இத்யாதி] - ஸ்வஸ்பர்சத்தாலே விகஸிதமான பணங்களையுடையனாய், பகவதநுபவஹர்ஷத்துக்குப் போக்குவீடாகப் பல தலைகளையும் உடையனாய், ஸர்வேச்வரனுக்கும் பிராட்டிமார்க்கும் நினைத்தபடி பரிமாறுகைக்கீடான பரப்பையுடையனுமாயிற்றுத் திருவநந்தாழ்வானிருப்பது; அப்படிப்பட்டிருக்கிறவனைப் படுக்கையாக உடையவனே! [பாற்கடற் சேர்ப்பா] - ஆச்ரிதர் கூக்குரல் கேட்கைக்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தவனே! [வணங்குமாறு அறியேன்] - பரமபதத்தைவிட்டுத் திருப்பாற்கடலிலே சாய்ந்து என்னுடைய ரக்ஷணத்துக்கு முற்பாடனாயிருக்கிற உனக்கு நான் ஒரு கிஞ்சித்காரம் பண்ணினேனாகைக்கு ஒருவிரகறிகிறிலேன். அறியாதொழிகிறதென்? உமக்கு மனோவாக் காயங்களுண்டு, அவற்றுக்கு ஆச்ரயம் நீருண்டு, வணங்கத்தட்டென்?' என்ன, - [மனமும் இத்யாதி] - எனக்காயிருப்பதொரு நெஞ்சும் வாக்கும் செய்கையும் எனக்காயிருப்பதொரு நானும் உண்டாக வேணுமே; எல்லாம் நீயிட்டவழக்காயன்றோ இருக்கிறது. வணங்கவேணு மென்னும் நினைவுண்டு, வணங்கும் ப்ரகாரம் அறிகிறிலேன்.

ஒன்பதாம்பாட்டு. "ஸகலபதார்த்தங்களும் நீயிட்டவழக்கு" என்கிற இந்த ஜ்ஞானத்தோடேயிருக்குமிடத்தில் ஸம்ஸாரத்தோடு பரமபதத்தோடு வாசியில்லையேயாகிலும், இந்த ஜ்ஞானத்துக்கு விரோதியான ஸம்ஸாரத்திலிருக்க அஞ்சாநின்றேன்: இதுக்கு அநுகூலமான பரமபதத்திலே என்னைக்கொடுபோகவேணுமென்கிறார்.

யானும்நீதானேயாவதோமெய்யே அருநரகவையும்நீயானால்*
வானுயரின்பமெய்திலென்? மற்றைநரகமேயெய்திலென்? எனினும்
யானும்நீதானாய்த்தெளிதொறும்நன்றும் அஞ்சுவன் நரகம்நானடைதல்*
வானுயரின்பம்மன்னிவீற்றிருந்தாய்! அருளுநின் தாள்களையெனக்கே. (9)

[யானும்நீதானேயாவதோமெய்யே] - நான் "நீ" என்கிற சொல்லுக்குள்ளே அடங்கும்படி உனக்குப்ரகாரமாய், நான் ப்ரஹ்மசப்தவாச்யனும்படியிருக்கிற இவ்வர்த்தமோ, அது ஸத்யம். [*ஆத்மேத்யேவது க்ருஹ்ணீயாத், அஹம்மநுரபவம்ஸூர்யச்ச*] என்றிறே முமுக்ஷு ப்ரகாரம். [மெய்யே] - அதில் ஸம்சயமில்லை. [அருநரகவையும்நீ] — எனக்குப் பொறுக்க

வொண்ணாதே கால்வாங்கியல்லது நிற்கவொண்ணாதபடியான ஸம்ஸாரமும் நீயிட்ட வழக்கு. இது இப்போது சொல்லுகிறது; நீ நினைத்தலன்று கழித்துத்தரவல்லை யென்கைக்காக. ஆக, நானும் எனக்குவிரோதியான ஸம்ஸாரமும் உனக்கு ப்ரகாரம். [ஆனால்] - அர்த்ததத்வம் இதுவானால். [வானுயரின்பமெய்திலென்] - சேஷத்வஜ்ஞாநத்தோடே திருநாட்டிலேபோய் நிரதிசயாநந்தத்தைப் பெற்றிருக்கில் என்? [மற்றைநரகமே யெய்திலென்] - ஸுகத்துக்கும் சேஷத்வஜ்ஞாநத்துக்கும் எதிர்த்தட்டான ஸம்ஸாரத்திலே இருக்கில்என்? உடையவன் வைத்த விடத்திலே கிடக்குமத்தனையன்றோ என்று ஓரர்த்த தத்த்வமுண்டு; [எனினும்] - இவ்வர்த்தம் இப்படியானாலும். [யானும்நீ தானாய்த் தெளிதோறும்] - இஸ்ஸம்ஸாரம் உனக்குப்புறம்பு என்கிற ஆகாரத்தாலன்றிக்கே, "நான் உனக்கு அத்யந்தசேஷபூதன்" என்கிற தெளிவு பிறக்கப்பிறக்க. [நன்றும், அஞ்சுவன் நரகம் நான் அடைதல்] - 'சேஷத்வஜ்ஞாநமுண்டான பின்பு சேஷவஸ்து சேஷிசெய்தபடிகண்டு அவனெல்லைக்குள்ளே கிடக்குமித்தனையன்றோ? நம்மை நிர்ப்பந்திக்கக்கடவனோ?'] என்றிறே தேவர்க்கு நினைவு! உனக்கு இது நினைவானாலும், இஸ் ஸம்ஸாரத்திலிருப்பை நான் மிகவும் அஞ்சாநின்றேன்: சேஷத்வப்ரதிபத்திக்கு விரோதியாகையாலே. நீர் அஞ்சுங்காட்டில் நம்மால் செய்யலாவதுண்டோ? என்னில் - [வானுயரின்பம் மன்னிவீற்றிருந்தாய் இத்யாதி] - இதுவேயன்றிக்கே, நித்யவிபூதியிலே நிரதிசயாநந்தயுக்தனாய், உன்னுடைய சேஷித்வவ்யாவ்ருத்தி தோற்ற இருப்பதோர் இருப்புண்டு; அவ்விருப்பிலே என்னையழைத்து அஸாதாரணர் பரிமாற்றத்தை எனக்குத் தரவேணும். (9)

பத்தாம்பாட்டு. தாம் மநோரதித்தபடியே திருவடிகளைத் தந்தருளின மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக இவ்வாத்மவஸ்துவை உனக்குத்தந்தேனென்கிறார். இப்போது திருவடிகளைக் கொடுக்கையாவது - ஸம்ஸாரத்தோடு பொருந்தாதபடியையும் தன்னையொழியச் செல்லாதபடியையும் தமக்குப்பிறப்பித்த தசையை ப்ரகாசிப்பிக்கை.

தாள்களையெனக்கேதலைத்தலைச்சிறப்பத்தந்த பேருதவிக்கைம்மாறு *
தோள்களையாரத்தழுவி என்னுயிரையறவிலைசெய்தனன்சோதீ; *
தோள்களாயிரத்தாய்! முடிகளாயிரத்தாய்! துணைமலர்க்கண்களாயிரத்தாய்! *
தாள்களாயிரத்தாய்! பேர்களாயிரத்தாய்! தமியனேன் பெரியவப்பனே! (10)

[தாள்களையெனக்கே தலைத்தலைச்சிறப்பத்தந்த] - "பலரடியார்முன்பருளிய" என்கிறபடியே - ஸ்ரீவால்மீகிபகவான், முதலாழ்வார்கள் தொடக்கமானார் உண்டாயிருக்க, என்பக்கலிலே விசேஷகடாக்ஷம் பண்ணி, மிகச்சிறக்கும்படி தந்த; பூர்ணமாகத் தந்த என்கை. [பேருதவி] - கொள்ளுகிற என்தரத்திலன்றிக்கே, தன்தரத்திலே தருகை. [கைம்மாறு] - ப்ரத்யுபகாரமாக. [தோள்களையாரத்தழுவி] - ஒருவனுக்கு ஒருவன் கந்யகையை யணைத்துக் கொடுக்குமாபோலே, இங்கும் அணைத்துக்கொடுக்கலாம்படி அமூர்த்தமான ஆத்மவஸ்து தானுந்தோளுமாய்ப்பணைத்ததாயிற்று உபகாரஸ்ம்ருதியாலே. "எனதாவியாவியும் நீ" "எனதாவியார்? யான் ஆர்?", "மனமும்வாசகமும் செய்கையும் யானும் நீ தானே" என்பதானவற்றை மறந்தார் ஹர்ஷத்தாலே. [என்னுயிரையறவிலைசெய்தனன்] - என்னுடைய ஆத்மவஸ்துவை தேவர்க்கு அநந்யார்ஹமாம்படி அறவிலை செய்து தந்தேனே. [சோதி] - இவர் தம்மதல்லாததொன்றைத் தம்மதாக ப்ரமித்துக் கொடுத்தாற்போலே, அவனும் தன்னதல்லாத தொன்றைப் பெற்றாற்போலே ப்ரமித்து உஜ்ஜ்வலனாகாநின்றான். [*விஜ்வர: *] என்னும்படி யிராநின்றான். [தோள்களை இத்யாதி] - முன்பு இழவாலே கூப்பிட்டவர் தரித்து ப்ரத்யுபகாரத்திலே இழிந்தபடியைக் கண்டு, அத்தாலே அவனுக்குப் பிறந்த ஔஜ்ஜ்வல்யத்தைப் பேசுகிறார். உபகார ஸ்ம்ருதியாலே இவருடைய ஆத்மவஸ்து தானுந்தோளுமாய்த் தளிர்த்தாற் போலே, ஸதைகரூபமான வடிவும் சதசாகமாயிற்று. ஒரு ஸம்ஸாரியை லபித்து அவாப்த ஸமஸ்தகாமனான இவன் இப்படி ஹ்ருஷ்டனானானென்கிற இது கூடுமோ? என்னில், ஸார்வபௌமனான க்ஷத்ரியனுக்கு ஒருயர்த்தியுண்டென்னா, அபிமதையான மஹிஷிபக்கலிலே

சாபலமின்றிக்கே ஒழியுமோ? அவாப்த ஸமஸ்தகாமத்வமும் ப்ரமாணஸித்தமாய், ஆச்ரித வாத்ஸல்யமும் ப்ரமாண ப்ரஸித்தமானால் அப்படியே கொள்ளுமத்தனையன்றோ? எனக்கு ஹர்ஷத்தைப் பிறப்பித்து, அந்த ஹர்ஷத்தைக்கண்டு அத்தாலே தான் இப்படி விஸ்த்ருதனுவதே! என்று கொண்டாடுகிறார். [தமியனேன்] - இவன் ஸ்வரூபத்திலும் ஆச்ரிதபாரதந்த்ர்யத்திலும் அதிசங்கை பண்ணினபோதை வெறுமையை நினைத்துச் சொல்லுகிறார். [பெரியவப்பனே] - பண்ணினவுபகாரம், ஓர் அளவுபட்டிருந்ததில்லையீ! என் பக்கலிலே ஒரு நன்மையுண்டாய்ச் செய்தாயல்லையிறே, ப்ராப்தியாலே செய்தாயத்தனையிறே. (10)

நிகமத்தில் - இத்திருவாய்மொழியிற்சொன்ன அர்த்தத்தை ஸங்க்ரஹேண சொல்லி, இத்தை அப்யஸிப்பார்க்கு ஸர்வேச்வரனை லபித்து உஜ்ஜீவிக்கலாமென்கிறார்.

பெரியவப்பனைப் பிரமனப்பனை உருத்திரனப்பனை* முனிவர்க்கு
உரியவப்பனை அமரரப்பனை உலகுக்கோர் தனியப்பன் தன்னை*
பெரியவண்குருகூர் வண்சடகோபன் பேணினவாயிரத்துள்ளும்*
உரியசொல்மாலையிவையும் பத்திவற்றால் உய்யலாந் தொண்டீர்! நங்கட்கே. (11)

[பெரியவப்பனை] - உபயவிபூதியுக்தனை, [பிரமனப்பனை] - சதுர்த்தச புவனேச்வரனான ப்ரஹ்மாவுக்கு உத்பாதகனானவனை. [உருத்திரனப்பனை] - அவன் புத்ரனான ருத்ரனுக்கும் நிர்வாஹகனானவனை. “முனிவர்க்குரிய வப்பனை” - யென்கிறது, ஸநகாதிகளுக்கு ப்ரஹ்மபாவனையேயாகையாலே: உரியவென்று *அனுமை சொல்லுகிறது. [அமரரப்பனை]- தேவர்களுக்கு உத்பாதகனானவனை. [உலகுக்கோர் தனியப்பன் தன்னை] - இப்படி பிரித்துச் சொல்லுகிறதென்? ஸகல லோகங்களுக்கும் ஏகநிர்வாஹகனானவனை. [*பூதாநாம் யோவ்யய: பிதா*]என்றிறேயிருப்பது. இப்போது இவை சொல்லுகிறதென்? என்னில், நிதியெடுத்தவன் “இன்னது கண்டேன், இன்னது கண்டேன்” என்னுமாபோலே, ஸ்வரூபத்திலும் குணத்திலும் அதிசங்கை பண்ணின போது இழந்தாராயிருந்தவற்றை லபிக்கையாலே இவற்றைப்பிரித்துச் சொல்லுகிறார். முனிவர்க்குரிய அப்பனையென்று - ஆச்ரிதபவ்யதையைச் சொல்லுகிறது. [பெரிய வண்குருகூர்] - சங்கிக்கன் தாழ்த்தவாறே அதிசங்கை பண்ணுகையும், உபகாரஸ்ம்ருதியாலே ஹ்ருஷ்டராகையுமாகிற இவற்றுக்கடி, அவ்வூரில் பிறப்பென்கை. [வண்சடகோபன்] - மாநஸாநுபவமாத்ரமாய்விடாதே, ப்ரபந்தீகரித்த ஔதார்யம். [பேணினவாயிரத்துள்ளும் உரிய சொல்மாலை யிவையும்பத்து] - அவனைத்தாம் ஆசைப்பட்ட படியைச் சொன்ன பத்து [உரியசொன்மாலை]-[*யதோவாசோ நிவர்த்தந்தே*] என்று மீளுகையன்றிக்கே, பகவத்குணங்களுக்கு நேரேவாசகமாகை. [இவற்றாலுய்யலாந் தொண்டீர்நங்கட்கே]- அநாதிகாலம் பகவத்விமுகராய், விஷயாந்தரப்ரவணராய் [*அஸந்நேவ*] என்கிறபடியே அஸத்ஸமராயிருக்கிற நமக்கு. [*ஸந்தமேநம்*] என்கிறபடியே உஜ்ஜீவிக்கலாம். (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி.

தேவனுறைபதியிற்சேரப்பெருமையால்
மேவுமடியார்வசனுமெய்க்கிலையும்—யாவையுந்தானுங்கிலையுஞ்சங்கித்தவைதெளிந்தமாறன்பால்
மாநிலத்தீர்! நங்கள் மனம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்,
ஜீயர் திருவடிகளே சரணம்.

கீழில் திருவாய்மொழி ப்ராபகப்ரகாரம்; இது ப்ராப்யப்ரகாரமாயிருக்கிறது. கீழே அவன்குணங்களிலும் ஸ்வரூபத்திலும் அதிசங்கைபண்ணித்தெளிந்து, "வணங்குமாறறியேன்" என்று தந்தலையில் ஸாதநயோக்யதையைத்தவிர்த்து, "யானும் நீதானேயாவதோ மெய்யே" என்று அவன்பக்கல் ந்யஸ்தபரதையைச்சொல்லி, இப்படி ப்ராசங்கிகமாக "அவனே ப்ராபகன்" என்னுமிடத்தை நிஷ்கர்ஷித்தார். அவனே ப்ராபகனுமிடத்தில் பேற்றுக்கு விளம்பஹேது வில்லையாயிருக்க, அவன் வந்து முகங்காட்டாதொழிகைக்கு ஹேது உண்டாகவேணுமென்று பார்த்தார்; அதில் அவன்பக்கல் பார்க்கலாவதொன்றிலே, இதுக்கடி நம்பக்கலிலேயாக வேணும்; [*மமைவ துஷ்க்ருதம் கிஞ்சிந்மஹதஸ்திநஸம்சய:* ரா-ஸு 38-38] என்றாளிறே பிராட்டி. இவரும் அப்படியே, "நெடுநாள்ஸம்ஸரித்துக் கண்டதெல்லாவற்றிலும் ருசிபண்ணிப் போந்தோம்; நம்முடைய பூர்வவ்ருத்தத்தையும் நமக்கு இப்போதுள்ள அளவையும் ஸர்வஜ்ஞனவன் அறியாமையில்லை; நாம் அறியாதிருக்க, அவனறிய அவன்பக்கல் ருசியிலே நமக்குத் குறையுண்டாகவேணும்" என்று பார்த்து, "அது உண்டாகவுமாம், இல்லையாகவுமாம்; புறம் புண்டானவற்றில் ருசியில்லையென்னுமிடத்தை அவன் திருவுள்ளத்திலேபடுத்துவோம்" என்று பார்த்து, ப்ராப்யவிரோதிகளிலும், ப்ராபகவிரோதிகளிலும் தமக்கு ருசியில்லாமையை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார். ஸர்வேச்வரனோடே கலந்து பிரிந்தாளொருபிராட்டி, அவன் தானே வரக்கண்டிருக்கையன்றிக்கே, அபிஸாரிகையாய் அவனிருந்த தேசத்தேறப் போவதாக ஒருப்பட, இத்தையநுஸந்தித்த தோழிமார் தொடக்கமானார், "உனக்கு இது ஆகாதுகாண்" என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்க, அவர்களைக் குறித்து, தோழிமார் தொடக்கமானவர்களிலும் மற்றுமுள்ளவர்களிலும் நசையில்லாமையை அவர்களுக்கு அறிவிக்கிற பாசுரத்தாலே தமக்கு நசையில்லாமையை அவன் திருவுள்ளத்திலே படுத்துகிறார்.

இரண்டாந் திருவாய்மொழி - நங்கள் - ப்ரவேசம்.

முதற்பாட்டு. தோழிமாரானவர்கள், "உகவாதார் எதிரன்றோ லஜ்ஜிக்கவேண்டுவது? எங்களுக்கு லஜ்ஜிக்கவேணுமோ! உனக்கோடுகிற தசையைச் சொல்லு" என்ன, பிறர்க்கு மறைத்து உங்களுக்குச் சொல்லலாம் வார்த்தை பார்த்தவிடத்து ஒன்றுங்காண்கிறிலே னென்கிறாள்.

நங்கள்வரிவளையாயங்காளோ! நம்முடையேதலர்முன்புநாணி*
நுங்கட்குயானென்றுரைக்கும்மாற்றம் நோக்குகின்றேனெங்குங்காணமாட்டேன்*
சங்குஞ்சரிந்தனசாயிழந்தேன் தடமுலைபொன்னிறமாய்த்தளர்ந்தேன் *
வெங்கண்பறவையின்பாகனெங்கோன் வேங்கடவாணனைவேண்டிச்சென்றே. (1)

[நங்கள்வரிவளை] - முன்பு உங்களோடு என்னோடு வாசியற எல்லார்க்கு முண்டான வளை. [* ஏகம் து:கம் ஸுகஞ்சநௌ *] என்று ஸுகது:கங்களொன்றாகச் சொல்லிப்போந்த நீங்கள் அநுஷ்டாநத்திலே வந்தவாறே பேதிப்பதே! இப்போது அநுஷ்டாநத்தில் பேதமென்? என்னில்,—கையிலேகண்டிலேயமோ? நான் சங்கையற்றிருந்தேன், நீங்கள் சங்கையுடையீர்களாயிருந்தீர்கள், [வரிவளை] - வரியையுடைய வளையென்னுதல், தர்சநீயமான வளையென்னுதல். இவளை தரிப்பிக்கைக்காக அவர்களும் வருந்தி தரித்திருப்பர்களிறே. பிராட்டியைப் பிரிந்தவிடத்தில் பெருமாளிற்காட்டிலும் "நம்முடைய காவற்சோர்வாலே வந்தது" என்று தளர்ந்த இளையபெருமாள் தரித்திருக்கச்செய்தேயும், பெருமாள் தளருவரென்று தம்முடைய தளர்த்தியைத் தோற்றாதபடி இளையபெருமாள் தரித்திருந்தாற்போலே, இவர்களும் தரித்திருப்பர்கள் வளையை. [ஆயங்காளோ]-தோழிமாரிலும் தாமுண்டாயிருக்க, இப்போது

எல்லாரும் ஒருபடிப்பட்டிருக்கிறார்கள். [ஆயங்காள்] தோழிமீர்! [ஓ] விஷாதாதிசய ஸூசகம். அவர்களை ஸம்போதித்துவைத்து வார்த்தை சொல்லுவதுக்கு முன்னே விஷண்ணையாகிறாள். இவ்விஷாதஹேதுவைப் புறம்புள்ளார்க்கு மறைத்தாயாகிலும் எங்களுக்குச் சொல்லவேண்டாவோ? உனக்கு ஓடுகிறதசையைச் சொல்லாயென்ன, [நம்முடை இத்யாதி] தோழிமார் இப்போது ஹிதஞ்சொல்லி மீட்கப் பாராநின்றார்களாகிலும், பெறுமிடத்தில் விழுக்காட்டில் ஒத்திருக்கையாலே 'நம்முடை ஏதலர்' என்கிறாள். ஏதலர் - சத்ருக்கள். இவளுக்குச் சில சத்ருக்களில்லையிறே; ஹிதஞ்சொல்லி மீட்கப் பார்க்கிற தாய்மாரிறே சத்ருக்கள். [ஏதலர்முன்புநாணி] சத்ருக்கள் முன்புலஜ்ஜித்து. [நுங்கட்கு] தோழிமாரான உங்களுக்கு. [யான்இத்யாதி] நான் ஒருவார்த்தை சொல்லவேணுமென்று ஆராய்ந்து பாராநின்றேன். [எங்குங்காண்மாட்டேன்] இதுக்கு ஒரு பாசுரமிட்டுச்சொல்லவேணுமென்று பார்த்தவிடத்து ஒருபடியாலும் க்ஷமையாகிறிலேன். மாட்டேனென்கிறதென்; சிலர்க்கு மறைத்து ஆப்தர்க்குச் சொல்லத்தட்டென்? என்ன, [சங்கம்சரிந்தன] நான் இத்தை யார்க்கு மறைத்து ஆர்க்குவெளியிடுவது? [* ஜகதஸ்தமிதம் *] என்றாற்போலேகாணும் இருக்கிறது. இவளைக்கிடையாதபோது நாயகனில்லை; நாயகனில்லாதபோது உபயவிபூதியுமில்லை. ஆகாவது இவள் கையும் வளையுமாயிராதவன்று நாயகன் உளனாகமாட்டான். இருவருமான சேர்த்தியிலே உண்டாகக் கடவ உபயவிபூதியும் அழியும். [சாயிழந்தேன்] அவனோடே கலந்து பெற்றதாய் அவன் வருமளவும் தரிக்கைக்குக் கைம்முதலான எழிலையுமிழந்தேன். [கடபுலைஇத்யாதி] அவன் வந்தாலும் ப்ரயோஜநமில்லாதபடி அவன்கைம்முதலும் அழிந்தது. [கடமுலை] போக்தாவாலுண்டறுக்கவொண்ணாத பரப்பையுடைய முலை. [பொன்னிறமாய்] விவர்ணமாய், ஸுக்ஷேத்ரம் மணல்வீடாய்ப்போமாபோலே. [தளர்ந்தேன்] இழந்தவை வந்தாலும் தாங்குகைக்கு ஆச்ரயமில்லை. [வெங்கட்பறவையின் பாகனெங்கோன் இத்யாதி] இழந்த இழவுக்கு ஹேது சொல்லுகிறது. [வெங்கட்பறவை] வெவ்விய கண்ணையுடைய பெரிய திருவடி. வருமிடத்தில் ப்ரதிபந்தகங்களையும் போக்கிக்கொடுவருமென்னுதல், ஸம்ச்லேஷதசையிலே பிரித்துக்கொடுபோமென்னுதல்; [* அக்ரூர : க்ரூரஹ்ருதய: *][பறவையின்பாகனெங்கோன்] பெரிய திருவடிமுதுகிலிருப்பைக்காட்டியாயிற்று, என்னை அநந்யார்ஹையாக்கிற்று. [வேங்கடவாணனை] பரமபதத்திலிருப்பை ஆசைப்பட்டேனல்லேன்: நமக்குக் காட்சிதருகைக்கு வாநின்றவிடத்தே. [வேண்டிச்சென்றே] நம்மை வேண்டிவந்தவனை நாம் வேண்டிச்சென்று: நாம் ஆசைப்பட்டுச் சென்று என்றபடி. அவன்தான் வரக்கண்டிருக்கையன்றிக்கே, அவனிருந்த தேசத்தளவும் சென்று அபேக்ஷிதம் பெறாமையாலே, சங்கஞ்சரிந்தன. [சென்று] பால்சென்றாற்போலே சென்றற்றென்றுமாம். ... ... (1)

இரண்டாம்பாட்டு: "இப்படியானாலும் அந்தரங்கைகளான எங்களுக்கு கோவிற் சொல்லலாகாததுண்டோ? சொல்லாய்" என்ன "து:காநுபவத்தால் வந்த இளைப்பின் மிகுதியாலே உங்களுக்குச்சொல்லும் பாசுரம் அறிகிறிலேன்" என்கிறாள்.

வேண்டிச்சென்றொன்றுபெறுகிற்பாரில் என்னுடைத்தோழியர் நுங்கட்கேலும்*
ஈண்டிதுரைக்கும்படியை அந்தோ! காண்கின்றிலேனிடராட்டியேன்நான் *
காண்தகுதாமரைக்கண்ணன்கள்வன் விண்ணவர்கோன் நங்கள்கோனைக்கண்டால்*
ஈண்டியசங்கும் நிறைவுங்கொள்வான் எத்தனைகாலமிளைக்கின்றேனே! (2)

[வேண்டிச்சென்றொன்று பெறுகிற்பாரில் இத்யாதி] என்பக்கலிலே வந்து ஒன்றையபேக்ஷித்துப் பெறுமவர்களில் தலையான வரிசையையுடைய தோழிமாரான உங்களுக்காகிலும். [என்னுடைத் தோழியர்] உயிர்த்தோழியர். சென்றென்றது வந்தென்றபடி. அங்ஙனன்றிக்கே, பதபங்கத்தைப்பண்ணி, [வேண்டிச்சென்றொன்று பெறுகிற்பார் இல்] அவனை ஒன்றபேக்ஷித்துச்சென்றாரில் ஓரபேக்ஷிதம்பெற்றாரில்லை; [*ஸகலபலப்ரதோ ஹி விஷ்ணு:*] "வேண்டிற்றெல்லாந்தரும் என்கிறவிடம் உக்திமாத்ரமே" என்று ஒருதமிழன் நிர்வஹித்தான் [ஈண்டு] இப்போது; முன்பெல்லாம் சொல்லிப்

போந்தேனையாகிலும் இப்போது சொல்லலாவதுகாண்கிறிலேன். [இது] எல்லாவற்றிலும் பாசுரமிட்டுச் சொல்லிப்போந்தேனேயாகிலும், இது சொல்லுகைக்குப் பாசுரங்காண்கிறிலேன். [உரைக்கும்படியை] நெஞ்சிலே விஷமூர்ந்தாற்போலே ஊராநின்றது: பாசுரமிட்டுச் சொல்லலாவதில்லை. [அந்தோ! காண்கின்றிலேன்] எனக்கோடுகிற தசையை உங்களுக்குச் சொல்லி அசஞ்சுசிப்படுத்த கரிக்கைக்கு, கேட்கிற உங்களிலும் எனக்குத் தேட்டமாயிருக்க, பாசுரம் காண்கிறிலேன்; [*ப்ரலாபைரேவ தார்யதே*] [இடராட்டியேன்நான்] நோவாட்டியேன் நான். என் இடருக்கன்றிக்கே, "சொல்லு, சொல்லு" என்றலைக்கிற உங்களுக்கன்றிக்கே, து:கப்படுகிறநான்: [காண்தகுதாமரைக்கண்ணன்] காணத்தக்கிருந்துள்ள கண்ணையுடையவன். ஸதா தர்சநீயோக்யமான கண்கள்: விகாஸம், செவ்வி, குளிர்த்தி, நாற்றம் இவற்றால் பங்கஜஸத்ருசமாயிருக்கை. [கள்வன்] நோக்காலே தன் செல்லாமையை ஆவிஷ்கரித்து, என் ஆத்மாத்மீயங்களை அபஹரித்தவன. [விண்ணவர்கோன் நங்கள்கோனை] நித்யஸூரிகளைப்போலேஎன்னை அநந்யார்ஹையாக்கினவன். ஒரு விபூதியாகப் படுத்தின பாட்டைக்கிடீர் என்னையொருத்தியையும் படுத்திற்று. [கண்டால்] காணப்பெற்றால். [ஈண்டியசங்கும்] திரண்டவளையையும். ஒரு வலம்புரி கிடந்தவிடத்தே ஆயிரம் சங்குசேரும். "வலம்புரியாழியன்வேங்கடவேதியன்" இறே. [நிறைவும்] அடக்கத்தையும். [கொள்வான்] கொள்ளுகைக்காக. தன்பக்கல் தொங்காதவையெல்லாவற்றுக்கும்புகல் அங்கேயென்றிருக்குமே; இவளுக்குச் கைமுதல் அங்கேயிறே. இதுவாகில் உன் துணிவு காலஞ்சென்றவாறே நீயே இளைத்துமீளுகிறாயென்ன? — [எத்தனைகாலமிளைக்கின்றேனே] இதுசொல்லிப் பகட்டக் கேட்பேனோ? இவ்வாசையோடே எத்தனைகாலமுண்டிளைத்துப்போருகிறது? ... (2)

மூன்றாம்பாட்டு. 'நாங்கள் சொல்ல மீண்டிலையாகிலும் எட்டவொண்ணாத விஷயமாகையாலே நாட்சென்றவாறே நீயேமீளுவுதி: எங்கள் வார்த்தைக்கு மீண்டாயாக அமையாதோ?' என்ன, - காலதத்வம் முடியிலும் நான் அவனைக் கண்டல்லது விடேனென்கிறாள்'

காலமிளைக்கிலல்லால்வினையேன் நானிளைக்கின்றிலன்கண்டுகொண்மின்*
ஞாலமறியப்பழிசுமந்தேன் நன்னுதலீர்! இனிநாணித்தானென்?*
நீலமலர்நெடுஞ்சோதிசூழ்ந்த நீண்டமுகில்வண்ணன்கண்ணன்கொண்ட*
கோலவளையொடுமாமைகொள்வான் எத்தனைகாலமுங்கூடச்சென்றே. (3)

[காலம் இத்யாதி] - [*அநாதிர்ப்பகவாந் காலோ நாந்தோஸ்ய *] என்கிற காலம் முடிந்துபோமித்தனையல்லது நான் இளைத்து மீளுகிறிலேன். [நான் இளைக்கின்றிலன்] [* நகாலஸ் தத்ர வை ப்ரபு:*] என்று காலத்துக்கும் அவ்வருகான விஷயத்தை விளாக்குலைகொண்ட அபிநிவேசத்தையுடைய நான் மீளுவனோ? [வினையேன்] "துர்லபம்" என்றாலும் மீளவொண்ணாதவிஷயத்திலே கைவைக்கும்படியான பாபத்தைப்பண்ணினேனென்னுதல், நீங்கள்சொன்னவார்த்தை நெஞ்சில் படாதபடியான பாபத்தைப்பண்ணினேனென்னுதல். இப்போது இங்ஙனேசொன்னாயாகிலும் மேல் அநுஷ்டிக்கிறாய் நீயேயென்ன, [கண்டுகொண்மின்] ப்ரத்யக்ஷிக்கலானவர்த்தம் பிறர்பக்கலிலே கேட்டறியவேணுமோ? உன் துணிவு இதுவானபின்பு எல்லாருமொக்கப் பழிசொல்லுகிறார்களிறேயென்ன, [ஞாலம் அறியப்பழிசுமந்தேன்] இன்றோ நான்பழிசுமக்கிறது? "நாடுமிரைக்கவே" என்றவன்றே பழிசுமந்திலேனோ? "பழிசுமந்தேன் என்னுமது வார்த்தையோ? ஸ்த்ரீத்வப்ரயுக்தமான லஜ்ஜையை நோக்க வேண்டாவோ?" என்ன, [நன்னுதலீரினிநாணித்தானென்] நம் அழகு அழிவதற்கு முன்பன்றோ அலை நோக்க வேண்டுவது? ஜகத்ப்ரஸித்தமாய்விட்டதாகில் இனி லஜ்ஜித்து என்ன ப்ரயோஜநமுண்டு? [நன்னுதலீர்] நுதல்-நெற்றி. உங்கள் முகத்தில் எழிலழியாதிருக்க என்முகத்தில் எழில் குடிபோனபடி கண்டீகோளே; இந்த நெடுவாசியைப் பார்த்தன்றோ வார்த்தைசொல்லுவது? அது கிடக்க; அவன் ஸௌந்தர்யம் நம்மை நினைத்தபடி-

செய்யவொட்டாநின்றதோவென்கிறது மேல்:— [நீலமலர் இத்யாதி] நீலமான நிறத்தையுடைத்தாய், [மலர்] விஸ்த்ருதமாய். [கெடு] அபரிச்சேத்யமாய். [சோதிசூழ்ந்த இத்யாதி] தேஜஸ்ஸாலே சூழப்பட்டு, அபரிச்சேத்யமாயிருப்பதொரு காளமேகத்தின் நிறம்போலே யிருக்கிற நிறத்தையுடையனாய், அவ்வடிவைப் பார்த்த மாத்திரைக்கும் அவன் அபஹரித்த தர்சநீயமான வளையோடேகூட அவன் வாய்புலற்றும் நிறத்தையும் மீட்டுக்கொள்ளுகைக்காக, காலமெல்லாம் கூடச்சென்றும் ஞாலமறியப்பழிசுமந்தேன், நன்னுதலீர்! இனிநாணித்தாவென்ன? [எத்தனைகாலமும் கூடச்சென்று] நெடுங்காலம் ஸம்ச்லேஷார்த்தமாகச் சென்று என்னுதல் (3)

நாலாம்பாட்டு- உன் துணிவு இதுவாக இன்னமுள்ளதடைய இழக்கிறாயோ? என்ன; "இனி நான் எத்தை இழப்பது?' என்கிறாள்.

> கூடச்சென்றேனினியென்கொடுக்கேன்? கோல்வளைநெஞ்சத்தொடக்கமெல்லாம்*
> பாடற்றொழியவிழந்துவைகல் பல்வளையார்முன்பரிசழிந்தேன்*
> மாடக்கொடிமதிள்தென்குளந்தை வண்குடபால்நின்றமாயக்கூத்தன்*
> ஆடற்பறவையுயர்த்தவெல்போர் ஆழிவலவனையாதரித்தே. (4)

[கூடச்சென்றேன்] நான் முடிந்து ஒருதலையாம்படி கிட்டினேனென்னுதல், ஸம்ச்லேஷார்த்தமாகச்சென்று கிட்டினேனென்னுதல். [இனியென்கொடுக்கேன்] பண்டே எல்லாமிழந்தபின்பு இனி எத்தை இழப்பது? [கோல்வளை இத்யாதி] தர்சநீயமான வளை நெஞ்சுதொடக்கமானவை யெல்லாம் என்பாடற்று வாஸநையோடே போம்படியாக இழந்து அவன் விபூதியோபாதி போரும், இவள்பரிகரத்தின் பரப்பும். [வைகல்பல்வளையார்முன் பரிசழிந்தேன்] கழற்றிப்பூணும் ஆபரணமும் இழவாதவர்கள் முன்பே, கழற்றவேண்டாத ஆபரணமான பரிசண்டு-ப்ரகாரம்-லஜ்ஜை; அத்தை இழந்தேன். [மாடக்கொடிமதிள் தென்குளந்தை] மாடங்களையும், கொடியோடேகூடிய மதிளையுமுடைத்தான தென்குளந்தையிலே. [வண்குடபால்நின்ற] அழகிதான மேலைப்பார்ச்வத்திலே நின்ற. இதுவும் ஒரு பரத்வஹேதுபோலே. [மாயக்கூத்தன்] ஆச்சர்யசேஷ்டிதன். [ஆடல் பறவையுயர்த்த], ஸர்வேச்வரவாஹநமென்னும் ஹர்ஷப்ரகர்ஷத்தாலே களித்தாடாநின்றுள்ள பெரிய திருவடியாலே வஹிக்கப்பட்டிருப்பானாய். வெல்போராழிவலவனை] புக்க போரிலே வென்றல்லது மீளாத திருவாழியை வலவருகேயுடையனாயிருக்கிற ஸர்வேச்வரனை ஆசைப்பட்டு. 'மாடக்கொடிமதிள் தென்குளந்தை வண்குடபால் நின்ற- ஆடல்பறவையுயர்த்த வெல்போராழிவலவனை மாயக்கூத்தனை ஆதரித்து கூடச்சென்றேன் கோல்வளைநெஞ்சத் தொடக்கமெல்லாம் பாடற்றொழிய இழந்து வைகல் பல்வளையார்முன் பரிசழிந்தேன் இனி என்கொடுக்கேன்?', என்றந்வயம். ... ... (4)

அஞ்சாம்பாட்டு. 'வாங்மநஸ்ஸுக்களுக்கு எட்டவொண்ணாத விஷயத்திலே அபிப்ரவணையாய் எதுக்கு து:க்கப்படுகிறாய்' என்ன; ஆனாலும் அவனை யாச்ரயிக்கையும் அவனாலே விஷயீக்ருதராகையுமான இம்மர்யாதை நம்மைத் தோற்றியுண்டாயிற்றோ, அநாதியன்றோ? என்கிறாள்.

> ஆழிவலவனையாதரிப்பும் ஆங்கவன் நம்மில்வரவுமெல்லாம்*
> தோழியர்காள்! நம்முடையமேதான்? சொல்லுவதோவிங்கரியதுதான்*
> ஊழிதோறூழியொருவனாக நன்குணர்வார்க்குமுணரலாகா*
> சூழலுடைய சுடர்கொளாதித் தொல்லையஞ்சோதி நினைக்குங்காலே. (5)

[ஆழிவலவனையாதரிப்பும்] திருவாழியை வலவருகேயுடையனானவனை ஆச்ரயிக்கையும். [ஆங்கு] ஆச்ரயணதசையிலே. [அவன்] மேன்மையோபாதி நீர்மையுமுடையனானவன்.

[நம்மில்வரவுமெல்லாம்] ஆச்ரயித்த நாமிருந்த ப்ரதேசங்களிலேவந்து விஷயீகரிக்கையுமாகிற
இவையெல்லாம். [தோழியர்காள்] என்னுபாதி இவ்விஷயத்திலே அவகாஹித்திகோளல்லீ
கோளோ? [நம்முடையமேதான்] நம்மளவேதோ? அவனை யாச்ரயிக்கையும் அவன்
அபேக்ஷிதம் செய்கையுமாய்ப் போருகிற இது, நம்மைத் தோன்றிப் புதியதாகவிட்டதொரு
மர்யாதையோ? [சொல்லுவதோ இங்கரியதுதான்] அர்த்தஸ்திதி ஏதேனுமாயிருக்க,
தோற்றித்துச் சொல்லுகையோ அரியது! நிவாரகரில்லையென்று ப்ரதிபந்நங்களைச் சொல்லக்
கடவதோ? அவன்கிட்ட அரியவனாயிருக்கிறமை இல்லையோவென்ன; அதுதானும் நான்
சொல்லக்கேட்கவேண்டாவோ உங்களுக்கு? [ஊழி இத்யாதி] [நன்குணர்வார்க்கும்
ஒருவனென்று ஊழிதோறூழி உணரலாகா] எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரா
யிருப்பார்க்கும், காலமெல்லாம் கூடியறியப்புக்காலும் அறியப்போகாது ஏவம்விசிஷ்டன்
என்று. [சூழலுடைய]கிட்டினாரை அகப்படுத்திக்கொள்ளுகைக்கு ஈடான விரகுகளையுடையனு
யிருக்கும். [சுடர்கொள்] தேஜ:ப்ரப்ருதி அஸங்க்யேய கல்யாணகுணங்களையுடையவன்.
[ஆதி] ஜகத்காரணபூதன். [தொல்லையஞ்சோதி] ஸ்வாபாவிகமாய், நிரவதிகதேஜோ
ரூபமாய், இதரவிஜாதீயமான திவ்யவிக்ரஹத்தை யுடையனாயிருக்கும். [நினைக்குங்கால்]
அவன் பெருமையை ஆராயப்புகில். 'நினைக்குங்கால் - நன்குணர்வார்க்கும் - ஒருவனாக -
ஊழிதோறூழி-உணரலாகாச் சூழலுடைய சுடர்கொளாதித் தொல்லையஞ்சோதி-ஆழிவல்லவனை
யாதரிப்பும், ஆங்கவன் நம்மில வரவுமெல்லாம், தோழியர்காள்! நம்முடையமேதான்,
சொல்லுவதோ இங்கரியதுதான்?' —விலக்ஷண வஸ்துவே ஸுலபமானால், பற்றவடுக்குமோ?
விடவடுக்குமோ? என்கிறாள். ... ... (5)

ஆறும்பாட்டு. 'நீ சொல்லுகிறபடியே எளியனல்லன், துர்லபன்' என்ன; ஸுலபனு
இலும் துர்லபனிலும் தன்னையொழியச் செல்லாதபடி நம்மைப்புகுர நிறுத்தினவன்
வாசலில் கூப்பிடாதே, ஸம்பந்தமில்லாதார் வாசலிலேயோ கூப்பிடுவது? என்கிறாள்.

தொல்லையஞ்சோதிநினைக்குங்கால்என்சொல்லளவன்றிமையோர்தமக்கும்*
எல்லையிலாதனகூழ்ப்புச்செய்யும் அத்திறம் நிற்க வெம்மாமைகொண்டான்*
அல்லிமலர்த்தண் துழாயுந்தாரான் ஆர்க்கிடுகோவினிப்பூசல்சொல்லீர்*
வல்லிவளவயல்சூழ்குடந்தை மாமலர்க்கண் வளர்கின்றமாலே. (6)

[தொல்லையஞ்சோதி நினைக்குங்கால்] ஆராயப்புக்கால், இதரவிஸஜாதீயமான
விக்ரஹத்தையுடையவன். [என் சொல்லளவன்று] அவனுடைய வைலக்ஷண்யம், என்
னுடைய பேச்சினளவன்று. நான் ஓர் அபலையிருந்து சொல்லுமளவோ அவன் பெருமை?
[இமையோர் இத்யாதி] எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளுக்கும் அள
விறந்த ஸம்சயங்களைப் பண்ணுகிற்கும். [*யந்நாயம் பகவாந் ப்ரஹ்மா ஜாநாதி பரமம்பதம்*]
[*நக்ராஹ்ய: கேஷசித் க்வசித்*] இதன்றிக்கே, இமையோர் என்கிறது நித்யஸூரிகளையாய்,
அவர்கள் *சூட்டு நன்மாலைகள் தூயனவேந்திநிற்க, தான் * ஈட்டிய வெண்ணெய்
தொடுஉண்ணப் போரும்படியாகவுமாம். [அத்திறம் நிற்க வெம்மாமைகொண்டான்]
அம்மேன்மையுங் கிடக்கச் செய்தே, தன் ஸௌந்தர்யாதிகளைக்காட்டி என்நிறத்தைக
கொண்டான். என்னோடே இட்டுக்கொண்டல்லது தரியாதானாய், நம்முடைய நிறத்தைக்
கொண்டது தன்னுடைய வைலக்ஷண்யத்தைப் பாராதேயன்றோ? [அல்லிமலர்த்தண் துழாயுந்
தாரான்] நம்நிறத்தைக்கொண்டால் தன்னோடே ஸ்பர்சமுள்ளதொன்றைத்தந்து நம்மை
உஜ்ஜீவிப்பிக்கலாமிறே, அது செய்கிறிலன். அது செய்தானாகில் பூவுக்குஇட்டோம்போலும்
என்றிருக்கலாமே. [ஆர்க்கிடுகோவினிப்பூசல் சொல்லீர்] நம்மை நலிந்தவன் வாசலிலே
கூப்பிடாதே ஆர்வாசலிலே கூப்பிடுவோம்? சொல்லிகோள்! [வல்லி இத்யாதி] பூங்கொடி
படர்ந்த சோலைகளும், வளவிதான வயல்களும் சூழ்ந்த திருக்குடந்தையிலே கண்வளர்ந்
தருளுகிற ஸர்வேச்வரன். [மாமலர்க்கண் வளர்கின்ற மால்] ப்ராப்தனானவன் மலர்ந்த

தாமரைப்பூப்போலேயிருக்கிற கண் என்னளவில் அலரக்காண்கிறிலேன். விசேஷகடாக்ஷம் பண்ணக் காண்கிறிலேனென்கை. கூக்குரல் கேட்கைக்கு ஸந்நிஹிதனென்கை. 'வல்லிவளவயல் சூழ்குடந்தை மாமலர்க்கண் வளர்கின்றமால், தொல்லையஞ்சோதி' என்று தொடங்கி, 'ஆர்க்கிடுகோவினிப் பூசல் சொல்லீர்' என்றங்வயும். ... ... (6)

ஏழாம்பாட்டு. அவனைக்கண்டு முடிகை அரிது, விடவல்லையே என்று உறவுமுறையாரலைக்க; அவன் குணங்களிலே அகப்பட்ட நான் காலமெல்லாம் கூடவாகிலும் அவனைக் கண்டல்லது விடேன்: தத்விரோதிகளான உங்களோட்டை ஸம்பந்தம் எனக்கு வேண்டா என்கிறாள்.

மாலரிகேசவன் நாரணன் சீமாதவன் கோவிந்தன் வைகுந்தனென்றென்று*
ஓலமிடவென்னைப்பண்ணிவிட்டிட்டு ஒன்றுமுருவுஞ் சுவடுங்காட்டான்*
ஏலமலர்க்குழலன்னைமீர்காள். என்னுடைத் தோழியர்காள்! என்செய்கேன்?*
காலம்பலசென்றுங்காண்பதாணை உங்களோடெங்களிடையில்லையே. (7)

[மால்] ஆச்ரிதர்பக்கல் வ்யாமோஹமே வடிவாகவுடையவன். *பொய்ந்நின்ற ஞானந்தொடங்கி, இவ்வளவும்வரக் கூப்பிடப்பண்ணின வ்யாமோஹம். [அரி] விரோதிநிரஸநசீலன். [கேசவன்] காலமெல்லாம் அநுபவியாநின்றாலும் மீளவொண்ணாதபடி ப்ரசஸ்தகேசன். [நாரணன்] ஆச்ரித வத்ஸலன். [சீமாதவன்] அதுக்கடியான ச்ரிய:பதியானவன். [கோவிந்தன்] அவளோட்டைச் சேர்த்தியாலே ஆச்ரிதர்க்குக் கையாளாயிருக்குமவன், [வைகுந்தன்] இதுக்கெல்லாம் அடியான மேன்மையையுடையவன். [என்றென்று] நிரந்தரமாக [ஓலமிட] காரியப்பாடறக் கூப்பிடும்படி. [என்னைப்பண்ணி] [*ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய] என்கிறபடியே, இதுவே யாத்ரையாகப் பண்ணி. [விட்டு] என்னைத் தன்பக்கலினின்றும் பிரித்து. [இட்டு] அசேதநவத் பொகட்டு [ஒன்றும் உருவும் சுவடுங்காட்டான்] தன்வடிவைக் காட்டுகிறிலன், தானிருந்தவிடத்துக்கு ஓரடையாளங்காட்டுகிறிலன். [*தாஸாமாவிரபூத்*] என்கிறபடியே வடிவைக்காட்டுதல் ராமாச்ரமத்தில் ஸ்ரீ பரதாழ்வானுக்கு தூமாதிகள் அடையாளமானாற்போல, இருந்தவிடத்துக்கு ஒரு ஸூசகம் காட்டுதல் செய்கிறிலன். [ஏலமலர்க்குழலன்னைமீர்காள்] நீங்கள் பூண்டிருக்குமாபோலே நான் உங்களை என்று காணக்கடவேன்? [ஏலமலர்] ஏலம் போலே கமழுகிற பரிமளத்தையுடைய மலர், [என்னுடைத்தோழியர்காள்] உங்களுக்கு ஹிதஞ்சொல்லி மீட்குமதில்லை. என்ப்ரியமேயிறே உங்களுக்கு உத்தேச்யம். [என்செய்கேன்] ஓரடையாளமும் காணாத நான் இனி எத்தைச் செய்வேன்? எங்களைக் கேட்கில் விடவடுக்குமென்ன, [காலம்பலசென்றும்காண்பது] காலமெல்லாம் கூடவாகிலும் கண்டல்லது மீளேன். அது செய்து தலைக்கட்டலாவதொன்றல்லகாணென்ன; [ஆணை] விடுகிறவர்களாணையிடாளிறே. பற்றுகிறவனாணையிடுகிறாள். இப்படி துணியச்செய்தேயும் ஹிதஞ்சொல்லத் தொடங்கினார்கள்: [உங்களோடு இத்யாதி] உங்களோடு எனக்கு ஒரு ஸம்பந்தமில்லை, எனக்கு நீங்கள் ஹிதஞ்சொல்லவேண்டா. ... ... (7)

எட்டாம்பாட்டு. கிளிகள் தொடக்கமான லீலோபகரணங்களில் தனக்குஉண்டான அநாதரத்தைச் சொல்லுகிறாள்.

இடையில்லையான்வளர்த்தகிளிகாள்! பூவைகள்காள்! குயில்காள்! மயில்காள்!*
உடையநம்மாமையுஞ் சங்கும் நெஞ்சும் ஒன்றுமொழியவொட்டாதுகொண்டான்*
அடையும் வைகுந்தமும் பாற்கடலும் அஞ்சனவெற்புமவை நணிய*
கடையறப்பாசங்கள் விட்டபின்னையன்றி அவனவைகாண்கொடானே. (8)

[இடையில்லை] என்பக்கல் உங்களுக்கு ஓரவகாசமில்லை. [யான் வளர்த்த கிளிகாள்] பழைமைகொண்டு பின்னாட்டுகிறீர்களிறே நீங்களும், [பூவைகள்காள் இத்யாதி] முன்பு இவள் ஆதரித்தவை, அவனுடைய லீலோபகரணங்களிலும் குவாலிறே; அவையெல்லாவற்றிலும் நசையற்றபடி, [உடைய இத்யாதி] எல்லாவற்றிலும் நசையற்றபடிக்கு ஹேதுசொல்லுகிறது: நம்முடையதான நிறமும், வளையும் நெஞ்சும், பாஹ்யங்களோடு ஆந்தரங்களோடு வாசியற நம்பக்கல் ஒன்றும் சேஷியாதபடி கைக்கொண்டவன். [அடையும் வைகுந்தமும்] சேநம் பரமபதமும். இத்தலையிலுள்ளதெல்லாம் நேராகக்கொண்டு, எட்டவொண்ணாத நிலத்திலே போய்ப் பாரித்து வெற்றி கொண்டாடியிருக்கிறானென்கை. [பாற்கடலும்] அதோடு தோள் தீண்டியான திருப்பாற்கடலும். [அஞ்சனவெற்பும்] திருமலையும் பரமபதத்தோடொக்கச் சொல்லலாயிருக்கிறதாயிற்று. [அவைநணிய] ப்ராப்யபூமியானவை கிட்டிய: கிட்டிற்றின. ஆனால், அநுபவிக்கத்தட்டென்? என்ன, அவன் ஸ்வாதந்த்ர்யமுடையவன், புறம்பேயும் ஒரு விஷயத்திலே நசை கிடக்க பாவாநுபவத்தைக் காட்டிக்கொடான். [கடை இத்யாதி] பின்னாட்டாதபடி ஸ்வாபகமாக பாஹ்யருசிபோனல்லது போகஸ்தாநங்களைக் காட்டிக் கொடான். கீழ் "வணங்குமாறறியேன்" என்று ப்ராபகாபாஸங்களை விட்டார்; இங்கே ப்ராப்யாபாஸங்களை விடுகிறார். ... ... (8)

ஒன்பதாம்பாட்டு. "இதுவே துணிவாகில் ஆத்மாத்மீயங்களை நேராக இழக்கிறாயிறே" என்ற தாய்மாரைக்குறித்து, 'முன்பே அடைய இழந்திலேனோ? இனி எத்தை இழப்பது? என்கிறாள்.

காண்கொடுப்பானல்லன் ஆர்க்குந்தன்னைக் கைசெயப்பாலதோர்மாயந்தன்னால்*
மாண்குறள் கோலவடிவுகாட்டி மண்ணும் விண்ணும் நிறையமலர்ந்த*
சேண்சுடர்த்தோள்கள்பலதழைத்த தேவபிரார்க்கு என்நிறைவினோடு*
நாண்கொடுத்தேனினியென்கொடுக்கேன்? என்னுடை நன்னுதல்நங்கைமீர்காள் (9)

[காண்கொடுப்பானல்லனார்க்குந்தன்னை] ஸ்வயத்நத்தாலே காணநினைப்பார் எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரேயாகிலும், தன்னைக்காட்டும் ஸ்வபாவனல்லன். [கைசெய் இத்யாதி] [மாயந்தன்னால் - கைசெயப்பாலதோர் - கோலம் - மாண்குறள் - வடிவுகாட்டி] மாயந்தன்னால் - க்ருத்ரிமத்தாலே. க்ருத்ரிமமாவது - உபயவிபூதியுக்தனான தான் ஒன்றுமில்லாதானாய்வருகையும், ச்ரிய:பதியான தன்னை அர்த்தியாக்குகையும், சிறுகாலைக் காட்டிப் பெரியகாலாலே அளந்துகொள்ளுகையும். [கைசெயப்பாலதான - கோலவடிவு] - கைசெய்கைக்கு அப்பாலதான அழகையுடைய வடிவு. கைசெய்கையை-கைசெய் என்று குறைத்துக்கிடக்கிறது. அக்ருத்ரிமமான கோலமென்னுதல். அன்றிக்கே, கருவிலே உயிர்பெறவெழுகின்றாற்போலேயிருந்துள்ள கோலவடிவென்றுமாம். [மாண்குறள்-வடிவு] இரப்பிலே தகணேறி அபரிச்சேத்யனான தான் வாமநவேஷனாய். [கோலவடிவு] இப்படி அழிவுக்கிட்ட வடிவுக்கு ஆலத்திவழிக்கவேண்டியிருக்கை. [காட்டி] - மஹாபலியை வஞ்சிக்கைக்காக அக்ருத்ரிமமான அழகையுடைய மாண்குறளான வடிவைக்காட்டி. [மண்ணும்விண்ணும் நிறையமலர்ந்த] கையிலே நீர்விழுந்த ஸமநந்தரம் ஸமஸ்தலோகங்களும் விம்மவளர்ந்த. [சேண்சுடர்த்தோள்கள் பலதழைத்த]-நீண்டு ஒளியையுடைத்தாய், கல்பகதரு பணைத்தாற்போலே பலதோள்களையுடையவன். [தேவபிரார்க்கு] இந்த்ரனிழந்த ராஜ்யத்தைக்கொடுத்து தேவர்களுக்கு உபகாரகனானவனுக்கு. [என்நிறைவினோடுநாண்கொடுத்தேன்] - நான் இரண்டுராஜ்யமிழந்தேன். இந்த்ரன் ராஜ்யம் பெற்றுப்போனான், மஹாபலி ஔதார்யம் பண்ணிப்போனான், நான் எனக்கு ஸர்வஸ்வமுமான அடக்கத்தையும் லஜ்ஜையையும் இழந்தேன் [இனியென்கொடுக்கேன்] - இனி எத்தைக்கொடுப்பேன்? [என்னுடையநன்னுதல் நங்கைமீர்காள்] - து:கம் அறியாமையாலே அழகிலும் குறைவற்று, பரிபூர்ணைகளாய், எனக்கு ஹிதஞ்சொல்லலாமிறே உங்களுக்கு. கீழ் நாலாம்பாட்டிலே, "இனியென்கொடுக்கேன்"

என்று சொல்லிற்று: இதுக்கும் அதுக்கும் வாசியென்? என்னில்,- பெரியதிருவடி முதுகிலிருப்பிலும் கையுந்திருவாழியுமான சேர்த்தியிலும் தோற்று *மாயக்கூத்தனை ஆதரித்துக்கலக்கச்சென்று கிட்டாமையாலே வந்த இழவு-அதில்: ஸ்ரீவாமநனுடைய அழகிலும் சீலத்திலும் தோற்ற மஹாபலியைப்போலே ஸர்வத்தையும் இழந்தேனென்கிறது இதில். ... ... (9)

பத்தாம்பாட்டு. எல்லாஞ்செய்தாலும் ஹிதைஷிகளான நாங்கள் சொல்லிற்றுக் கேட்கவேணுங்காணென்ன,— 'நீங்கள்சொன்ன வார்த்தை கேட்கைக்கு நெஞ்சுவேணுமே; அது அவன்பக்கல் போயிற்று' என்கிறாள்.

என்னுடைநன்னுதல் நங்கைமீர்காள்!யானினிச்செய்வதென்? என்னெஞ்சென்னை*
நின்னிடையேனல்லேனென்று நீங்கி நேமியுஞ்சங்கும் இருகைக்கொண்டு*
பன்னெடுஞ்சூழ்சுடர் ஞாயிற்றோடு பால்மதியேந்தி ஓர் கோலநீலம்*
நன்னெடுங்குன்றம்வருவதொப்பான் நாண்மலர்ப்பாதமடைந்ததுவே. (10)

[என்னுடை நன்னுதல் நங்கைமீர்காள்] - எனக்கு உறவுமுறையாரான நீங்கள், வடிவழகிலும் ஸ்த்ரீத்வத்திலும் குறைவற்றிருக்கையாலே நிர்த்து:கைகளாயிருந்தீகோள். [யான்] - நான் எல்லாமிழந்து அவஸந்நையானேன். [இனிச்செய்வதென்] - இப்படியானபின்பு எத்தைச்செய்வேன்! இவற்றை மீட்கவோ அவனை நியமிக்கவோ எல்லாவளவிலும் தரித்திருக்க வேண்டாவோ? என்ன 'அதுக்கும் நெஞ்சுவேண்டாவோ? என்கிறாள். [என்னெஞ்சு] எல்லா அவஸ்த்தையிலும் எனக்கு பவ்யமான நெஞ்சு. [என்னை - தன்னைக்கொண்டு ஜீவிக்கவிருக்கிற என்னை. [நின்னிடையேனல்லேனென்று நீங்கி] உன்னோடு எனக்கு அடையில்லையென்று அகன்று [*இத்யுக்த்வா பருஷம்* பண்ணிப்போயிற்று. ப்ராப்திசொல்லி மீட்கவொண்ணாதபடி [*ஸந்ந்யஸ்தம் மயா*] என்று போயிற்று. உங்களுக்கு நான் நின்றநிலையிறே என்னெஞ்சு எனக்கவ்வருகேபோனபடி. [நேமியும் இத்யாதி] - பின்தொடராவொண்ணாதபடி கடலிலே வாயிற்றுப்புக்கது. வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டியிருக்கிற இரண்டுகையிலும் ஆழ்வார்களை தரித்து, பலவாய் தூரப்போய் எங்குமொக்க வ்யாபிப்பனவான ஒளிகளையுடைய ஆதித்யனோடே பாலேவொடொக்க தேஜஸ்ஸையுடைய சந்த்ரனையேந்தி, அத்தேஜஸ்ஸுக்களுக்குப் பரபாகமாய், இதரஸஜாதீயமாய், கண்டார்கண்குளிரும்படி நீலமாய், மற்றும் அதுக்கதமான அழகுகளையுடைத்தாய், அபரிச்சேத்யமாயிப்பதொரு மலை நடந்துவருமா போலேயாயிற்று, ஆழ்வார்களை ஏந்திக்கொண்டு உலாவும்படி. [நாண்மலர்ப்பாதமடைந் ததுவே]-செவ்விப்பூவிலே வண்டுபடிந்தாற்போலே சேர்ந்தது-யான் இனிச்செய்வதென்? (10)

நிகமத்தில் - இத்திருவாய்மொழிவல்லார், அவித்யாதி ஸகலதோஷங்களும் நீங்கி, இஹலோக பரலோகங்களில் தாங்களே க்ருதக்ருத்யராவரென்கிறார்.

பாதமடைவதன் பாசத்தாலே மற்றவன்பாசங்கள் முற்றவிட்டு*
கோதில்புகழ்க்கண்ணன் தன்னடிமேல் வண்குருகூர்ச்சடகோபன் சொன்ன*
தீதிலந்தாதியோராயிரத்துள் இவையுமோர்பத்திசையோடும்வல்லார்*
ஆதுமோர்தீதிலராகி இங்குமங்குமெல்லாம் அமைவார்கள் தாமே. [11]

[பாதம் இத்யாதி] - திருவடிகளைக் கிட்டுகையிலுண்டான ஸங்கத்தாலே புறம்புண்டான வலிய ஸங்கங்களை நிச்சேஷமாக விட்டார்: இதுவாயிற்று இத்திருவாய்மொழியிற் சொல்லிற்றாயிற்று. புறம்புள்ள பற்றுக்களற்றுத் திருவடிகளை யாசைப்பட்டவரல்லர்; "மாற்பால்மனஞ்சுழிப்ப மங்கையர்தோள்கைவிட்டு" என்கிறபடியே, திருவடிகளில் ஸங்கத்தாலே ஔபாதிகமான பாஹ்யஸங்கத்தைத் தவிர்ந்தவர். [கோதில்புகழ்] - திருவடிகளில் ஸங்கத்துக்கு முதல் அவனுடைய கல்யாணகுணங்கள். குணங்களுக்குக் கோதாவது -

தன்னையொழியப் புறம்பேயும் நசைபண்ணும்படியிருக்கை. [கண்ணன் தன்னடிமேல்]-
இப்புகழையுடைய க்ருஷ்ணன் திருவடிகளிலேயாயிற்றுச் சொல்லிற்று. பரமோதாரரான
ஆழ்வாரருளிச்செய்த. [தீதிலந்தாதி]-ப்ரபந்தத்துக்குத் தீதாவது - கதாந்தரப்ரஸ்தாவம்.
ராமவ்ருத்தாந்தத்தைச் சொல்லப்புக்கு ஸுப்ரஹ்மண்யோத்பத்தி, புஷ்பகவர்ணநம் இவை
தொடக்கமானவற்றிலே இழிகை; [*நாராயணகதாமிமாம்*] என்று யுத்த ப்ரகாராதிகளைச்
சொல்லுகை. [ஓர் ஆயிரத்துள்ளிவையுமோர்பத்திசையோடும் வல்லார்] - அத்விதீயமான
ஆயிரந்திருவாய்மொழியில் இப்பத்தையும் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே சொல்லுமவர்கள்.
[ஆதுமோர்தீதிலராகி] - அவித்யாதி தோஷங்களும் நீங்கும். புறம்புள்ள நசையற்றிருக்கச்
செய்தே பாபந்தம் தலைக்கட்டுகைக்காக இருக்குமதுவும் அவர்களுக்கில்லை. [இங்குமங்கு
மெல்லாமமைவார்கள் தாமே] - இஹலோகத்தோடு பரலோகத்தோடு வாசியறக் குறைவற்
திருப்பர்கள். இஹலோகத்தில், [*க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே*]-என்கிறபடியே சமைந்திருப்
பர்கள்; பரலோகத்தில்,[*அஹம்ஸர்வம்கரிஷ்யாமி*] என்று குறைவற்றிருப்பர்கள். [தாமே]-
ஈச்வரன்முழங்கைத்தண்ணீர்வேண்டா, உபாயபூதியனும் தாங்களேயாகாநாவர்கள். (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

நங்கருத்தைநன்றாக நாடிநிற்கும்மாலறிய
இங்கியற்றிலாசை எமக்குளதென் — சங்கையினால்
தன்னுயிரில்மற்றில்நசை தனெழிந்தமாறன்தான்
அந்நிலையை ஆய்ந்துரைத்தானங்கு;

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்,
ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாந்திருவாய்மொழி—அங்குமிங்கும்—ப்ரவேசம்

கீழில் திருவாய்மொழியில், பத்தாம்பாட்டிலே - "ஓர்கோலநீலனன்னெடுங்குன்றம் வருவதொப்பான்" என்று வடிவழகை யநுஸந்தித்தவாறே, தாம் பட்ட க்லேசத்தை மறந்து "இவ்வடிவோடே ஸம்ஸாரத்திலே தனியேவந்து அவதரித்து உலாவாநிற்கும். சத்ருக்களும், மத்யஸ்தரும், ப்ரயோஜநாந்தரபரருமாய் இவனுக்குப் பரிவுடையார் ஒருவருமின்றிக்கேயிருக்கிற ஸம்ஸாரத்திலே, அர்த்திகளுடைய அபேக்ஷிதங்களைப் பூரிக்கைக்காக ஸம்ஸாரிஸஜாதீயனாய், சிலர்க்குப் பாரதந்த்ரனையும் சிலர் அர்த்தித்தது வியாஜமாக, அவதாரத்துக்குப் பிற்பட்டார்க்குக் கோயில்களிலும் க்ருஹங்களிலும் ஸந்நிஹிதனையும் வர்த்திக்கிற இவனுடைய ஸௌகுமார்யம் அறிந்து பரியக்கட்வாரொருத்தருமில்லை; நானும் உதவப்பெறுகிறிலேன்" என்று அவன் தனிமைக்கு வெறுத்து பீதராக; "'நமக்குப் பரிவரில்லை' என்று பயப்படவேண்டா. முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யஸித்தரும் நமக்குப் பரிகையே யாத்ரையாயிருக்குமவர்களன்றோ? நமக்குத்தான் வேறே சிலர் பரியவேண்டியிருக்கிறதோ?" என்று ஸர்வேச்வரன் தன் ஸர்வசக்தித்வத்தைக் காட்டி ஸமாதாநம்பண்ண, ஸமாஹிதராய் ஹ்ருஷ்டராகிறார். 'ஸர்வேச்வரனுக்குப் பரிகைக்குத் தமக்குக் கூட்டாவாரில்லையென்று தம் தனிமைக்கு வெறுக்கிறார்' என்றும் சொல்லுவர்கள். "நித்யஸூரிகள் பகவதநுபவத்திலே அந்யபரர்; ஸம்ஸாரிகள் சப்தாதிகளிலே அந்யபரர்: ப்ரஹ்மேசாநாதிகள், தங்களுக்காக 'நீணகர்நீளெரிவைத்தருளாய்' என்று அவனை அம்புக் கிலக்காக்குதல், ஏவித்தேவைகொள்ளுதல் செய்வர்கள்: ஆகையாலே, பரிகைக்குத் தமக்கொரு துணையில்லை" என்று தம் தனிமைக்கு வெறுக்கிறார். சேஷவஸ்துவுக்கு "சேஷியே ரக்ஷகன்" என்னும் வெளிச்சிறப்பு அறிவுக்கு முதலடி; சேஷவஸ்துவாகில், சேஷிக்கு அதிசயத்தை விளைத்துத் தன்ஸ்வரூபஸித்தியாகையாலே, "அவன் ரக்ஷ்யன் நாம் ரக்ஷகர்" என்னுமளவும் *
செல்லவறிகை-ஸ்வரூபத்தை உள்ளபடி உணருகையாவது. ... ...

மூன்றாந் திருவாய்மொழி—அங்குமிங்கும்: ப்ரவேசங்கள்.

முதற்பாட்டு. இதில், முதற்பாட்டில், உன் ஸௌகுமார்யத்தையறிந்து பரிகை யன்றிக்கே, தங்களுக்கு இஷ்டப்ராப்திஸாதநமென்று இருப்பர்களென்று ஐச்வர்யார்த்திகளை க்ஷேபிக்கிறார்.

அங்குமிங்கும் வானவர்தானவர்யாவரும்*
எங்கும் இனையையென்று உன்னையறியகிலாதலற்றி*
அங்கஞ்சேரும் பூமகள்மண்மகள் ஆய்மகள்*
சங்குசக்கரக்கையவனென்பர் சரணமே. (1)

[அங்குமிங்கும் இத்யாதி] - உபரிதநலோகங்களிலும், பூமியிலும். [எங்கும்] - அதஸ்தமான பாதாளாதிகளிலும். [வானவர்] - அநுகூலர். [தானவர்] - ப்ரதிகூலர். [யாவரும்] - இரண்டுவகையுமான மநுஷ்யாதிகளும். [இனையையென்று உன்னை] - உன்னை இனையையென்று - ஸர்வசேஷியான உன்னை, இப்படிப்பட்டாயென்று - நிரதிசய ஸௌகுமார்ய யுக்தனென்று. இவர் நெஞ்சில் அவன் ஸௌகுமார்யமேயாயிற்று உறைக்கிறது. கருமுகை மாலைபோலேயிருக்கிற உன்படியறியாதே. [அறியகிலாது] - அறியாதே. பரிய அறியாமைக்கு அநுகூலரான தேவர்களோடு, ப்ரதிகூலரான அசுரர்களோடு, இவ்விரண்டுங்கூடின மநுஷ்ய ரோடு வாசியில்லை. அவனைப்பரியக்கண்டவர்கள் எல்லாருமென்றிருக்கிறாராயிற்று இவர். [அலற்றி] † [*யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்*] † [*பராஸ்யசக்திர்விவிதைவச்ரூயதே ஸ்வாபாவிகீஜ்ஞாநபலக்ரியாச*] என்று, தங்களுடைய ரக்ஷணத்துக்கு உடலான வசநங்களைக் கதறுநிற்பர்கள், உன்னை ரக்ஷ்யனென்று அறியார்கள். [அங்கஞ்சேரும் இத்யாதி] - இதுக்கு மேல் ஸௌகுமார்யத்தையும் அழகையுஞ்சொல்லுகிறது :— [பூமகள் மண்மகளாய்மகள் - அங்கஞ்சேரும்] - அவனையாச்ரயிக்கைக்குப் புருஷகாரமாகப்பிராட்டிமாருண்டென்பர்கள். [*நகச்சிந்நாபராத்யதி*] என்பாரும், "குற்றத்தைபுணருகிறதென்? பொறுக்குமித்தனை யன்றோ?" என்பாரும், முதலிலே குற்றங்காணுதபடி ஸ்வபோக்யதையை முன்னிடுவாரும் அங்கே உண்டென்பார்கள். "வடிவாய்நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும்பல்லாண்டு" என்று அச்சேர்த்திக்கு மங்களாசாஸநம் பண்ணுவாரில்லை. [சங்குசக்கரக்கையவன்] - கையுந் திருவாழியுமான அழகை அநுபவிக்கைக்கு இழிவாரில்லை. நம் விரோதியைத் துண்டிக் கைக்குக் கையிலே திவ்யாயுதங்களையுடையவனென்பர். "வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு" என்னவேண்டியிருக்குமே இவர்களுக்கு. [என்பர்சரணமே]-[சரணம் என்பர்] அபிமதஸாதநம் என்பர். அபிமதமென்றறிவாரில்லை - ஸௌகுமாரவிஷயமென்றறிவா ரில்லை; முந்தானையேற்றல், எதிரிகளம்புக்கு ஓலக்காக்குதல் செய்வர்கள். ... (1)

இரண்டாம்பாட்டு. ஐச்வர்யம்போலே நிலைநில்லாததொன்றன்றே இது: நித்யமா யிருப்பதொன்றன்றோ?" என்று ஆத்மலாபத்துக்காக உபாஸிக்கிற கேவலர் வந்துதோற்ற, அவர்களை க்ஷேபிக்கிறார்.

சரணமாகிய நான்மறைநூல்களுஞ்சாராதே*
மரணந்தோற்றம் வான்பிணிமூப்பென்று இவைமாய்த்தோம்*
கரணப்பல்படை பற்றறவோடுங்கனலாழி*
அரணத்திண்படையேந்திய ஈசற்கு ஆளாயே. 2

[சரணம் இத்யாதி]-[*த்ரைகுண்யவிஷயாவேதா:*] என்கிறபடியே ஐச்வர்யாதிகளை தங்களைப்ரதிபாதிக்கிறபூர்வபாகத்தில் இழியாதே, அத்தைவிட்டுமோக்ஷத்தை உபதேசிக்கிற வேதாந்தபாகத்திலே புகுராநின்று, ஸர்வேச்வரனை ஆச்ரயித்து, சரீரஸம்பந்தத்தை மாய்த்தோ

மித்திரனையன்றோ நாம் செய்தது? என்று க்ஷேபிக்கிறது. [சரணமாகிய] - ஐச்வர்ய தத்ஸாதந விஷயஜ்ஞாந ஸாதநமான. [நான்மறைநூல்கள்] - சதுர்வேதமாகிற சாஸ்த்ரங்கள். நூல் - சாஸ்த்ரம், நூலென்று - பிரித்து, ஆகமாதிகளைச் சொல்லுகிறதென்றுமாம். நான்மறையாகிற சாஸ்த்ரமென்றே அருளிச்செய்வது [*வேதசாஸ்த்ராவிரோதிநா*] என்னக்கடவதிறே. [மரணம்தோற்றம்] - ஜந்மமரணங்கள் ப்ரபலவ்யாதி, ஜரைதொடக்கமான ஷட்பாவவிகாரங்களை மறுவலிடாதபடி கழித்துக்கொண்டவித்தனையிறே நாமும் செய்தது. பூஜாவசநம் க்ஷேபத்திலே. [சரணப்பல்படை இத்யாதி] - உபகரணங்களையுடைத்தாய்ப் பலவகைப்பட்ட சத்ருஸேனை நிச்சேஷமாக ஓடும்படி ஜ்வலியாநின்ற திருவாழியென்னுதல்; கரணக்ராமங்களை விஷயங்களினின்றும் நிச்சேஷமாகப் பற்றற ஓடும்படி கனலாநின்றிருந்துள்ள திருவாழியென்னுதல். [அரணத்திண்படை]-ஆச்ரிதர்க்கு அரணாய், சத்ருக்களாலே பேதிக்கவொண்ணாதபடியாயிருக்கை. [திண்படை] - ஈச்வரன் விடிலும் ஆச்ரிதரை விடாததென்றுமாம், [ஏந்திய வீசர்க்கு] - திருவாழியை ஏந்துகையாலே ஸர்வேச்வரனானவனுக்கு. [ஆளாயே] - அவர்கள் ஆளாகையாவதேதென்னில்? - பகவத்ப்ராப்திகாமனோபாதி பாகவதபஜநமும் அந்திமஸ்ம்ருதியுமுண்டாகையாலே சொல்லுகிறது. ஆளாயே - மரணம்தோற்றம் வான் பிணி மூப்பெனறிவைமாய்த்தோம்.

மூன்றாம்பாட்டு. ப்ரயோஜநாந்தரபரர்க்காகத் தன்வாசியறியாதே எதிரிடவல்ல ஸம்ஸாரத்திலே தனியே வர்த்தியாநிற்கும்; அங்குத்தைக்கு ரக்ஷையாக நான் உதவப்பெறுகிறிலேனென்று இன்னாதாகிறார்.

ஆளுமாளார் ஆழியும்சங்கும் சுமப்பார்தாம்*
வாளும்வில்லுங்கொண்டு பின்செல்வார்மற்றில்லை*
தாளுந்தோளும் கைகளையாரத்தொழக்காணேன்*
நாளும்நாளும்நாடுவன் அடியேன்ஞாலத்தே.

[ஆளுமாளார்] - விபூதித்வயத்திலும் பரிகைக்கு ஆளில்லை, தனியே ஒருவரை ஆளவேணுமென்றிருக்கிறார். நித்யஸூரிகள் பகவதநுபவத்திலே அந்யபரர், ஸம்ஸாரிகள் ஸப்தாதிகளிலே அந்யபரர். [ஆழியும் சங்கும் சுமப்பார்தாம்] ஆபரணமான திவ்யாயுதங்கள் அவன் ஸௌகுமார்யத்தாலே மலையெடுத்தாற்போலே சுமையாய்த் தோற்றுகிறது இவர்க்கு. எதிரிகளுக்கு அஸ்த்ரமாய் அநுபவிப்பார்க்கு ஆபரணமாயிருக்கிறவை. [தாம்] - தம்மைப் பார்த்துக்கொள்ளவேண்டாவோ. எப்போதும் கைகழலா நேமியானன்றோ, அவனுக்கு நிரூபகங்களான இவை சுமையோ? என்ன,-அது தான்செய்கிறது. [வாளும்வில்லுங்கொண்டு] இளையபெருமாளைப்போலே ஒருவர் பின்னே கொடுசென்றாலாகாதோ? "ஆளுமாளார், சுமப்பார்தாம், பின்செல்வார்மற்றில்லை" என்கிறது. "பரிவரான நீர் அவற்றுக்கன்றோ?" என்று தம்மை ஏவுவாராக. [தாளுந்தோளும்] - நடக்கும்போது நடைச்சக்ரவர்த்துப்பிடிக்கும்படியாயிற்று, மாறியிடும் திருவடிகளிருப்பது. [*அக்ரத:ப்ரயயௌராம:] என்னக்கடவதிறே. அத்தையும், வீசுதோள்களையும். [கைகளையார] - "வயிறாரஉண்ண" என்பாரைப்போல. [தொழக்காணேன்] - தொழுகையும், பரிகையும், பர்யாயம்போலேகாணும். தொழக்காணப் பெறுகிறிலேன். நமச்சப்தத்தால்-எனக்கன்று அவனுக்கென்றிறே சொல்லுகிறது. தொழுகையும், நம:என்கையும், பர்யாயமிறே. [நாளும்நாளும்நாடுவன்] -அவன் தனிமையை அநுஸந்தித்து, "அவனுக்கு என்வருகிறதோ!" என்று நாள்தோறும் ஆராயநிற்பன். ஸம்பந்தம் நித்யமானால் தத்கார்யமான பரிவும் நித்யமாகக் கடவதிறே. [அடியேன்] ஸ்வரூபஜ்ஞானமுடைய நான் - சேஷிக்கு அதிசயத்தை விளைக்கையே சேஷவஸ்துவுக்கு ஸ்வரூபமென்றறிந்த நான். [ஞாலத்தே]-பரமபதத்திலேயிருந்து அஸ்த்தாநேபயசங்கை பண்ணுகிறேனோ? ப்ரஹ்மாஸ்த்ரப்ரயோகம் பண்ணுவார், நாகபாசத்தையிட்டுக் கட்டுவார், அழைத்துவைத்து

மல்லரையிட்டு வஞ்சிக்கத் தேடுவார், பொய்யாஸநமிடுவாராகிற தேசத்திலே வர்த்தியா நின்றால் நான் அஞ்சாதேசெய்வதென்? ... ... (3)

நாலாம்பாட்டு. இவர் இப்படி அஞ்சினவாறே, ப்ரளயாபத்தினின்றும் ஜகத்தையெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கினவனன்றோ நான்? நீர் நமக்கு பயப்படவேண்டாகாணுமென்று தான் ஸர்வரக்ஷகனாயிருக்கிறவிருப்பைக் காட்டினான்; ஸர்வரக்ஷகமான வஸ்துவாகாதே ப்ரளயத்திலே அகப்படப்புக்கதென்று அதுக்கும் அஞ்சுகிறார்.

ஞாலம்போனகம்பற்றி ஓர்முற்றாவுருவாகி*
ஆலம்பேரிலை அன்னவசஞ் செய்யுமம்மானே;*
காலம்பேர்வதுஓர்காரிருளூழியொத்துளதால் உன்*
கோலங்காரெழில் காணலுற்றுஆழுங்கொடியேற்கே. (4)

[ஞாலம் போனகம்பற்றி] - "இது நமக்கு ஸாத்மியாது" என்றறியாதே, பூமிப்பரப்பையன்றோ வயிற்றிலே யெடுத்துவைத்தது! "வெண்ணெயும் ஸாத்மியாது" என்றிறே இவரிருப்பது [ஓர்முற்றாவுருவாகி] - ஒரு கொழுந்திலே தெறித்தால் மற்றைக் கொழுந்திலே பால்பாயும் பருவமாயிற்றுப்பருவம். யசோதாஸ்தநந்தபத்துக்கும் கீழாயிறேயிருப்பது இந்த மௌக்த்யம். ப்ரளயாபத்திலே வரையாதே ரக்ஷிக்கிற ரக்ஷகத்வமும், அகடிதகடநாஸாமர்த்யமும் இவர் நெஞ்சில் படுகிறதில்லை: ஸௌகுமார்யமேயாயிற்று இவர்க்குத் தோற்றியிருக்கிறது. [ஆலம்பேரிலை] - அங்கு ஒரு தொட்டிலிலே கிடக்கப்பெற்றது இங்கு ஒரு பவனான ஆலிலையிலேயாயிற்றுத் திருக்கண் வளர்ந்தருளுகிறது. [பேரிலை] - பெருகிற இலை; முகிழ்விரிகிற இலை, [*கதந்வயம்சிசுச்சேதே லோகேநாசமுபாகதே, சாகாயாமவடவ்ருக்ஷஸ்ய பல்லவேத்விதிவிஸ்மித:*] "இளந்தளிரில் கண்வளர்ந்த" என்கிறபடியே, ஆலிலையென்று - ஒருபேர் மாத்ரமென்னுதல், பெரிய இலையென்று விபரீதலக்ஷணையாய், சிற்றிலையென்னுதல். [அன்னவசஞ்செய்யும்] - உணவுக்குஈடாக இடம் வலங்கொள்ளும். யசோதைப்பிராட்டி தொட்டிலில் பண்ணும் வ்யாபாரமெல்லாம் பண்ணுமாயிற்று அதுக்குள்ளே. *கிடக்கில் தொட்டில் கிழியவுதைத்திடுமதில். தனக்கு ஸாத்மியாதபூமியை அமுதுசெய்கையும், "ஸாத்மியாது" என்றறியாத முக்தனாகையும், ப்ரளயத்திலே அல்பாவகாசமான ஆலிலையிலே கண்வளர்ந்தருளுகையும், அதிலேகிடந்தவிடத்திற்கிடவாதே வ்யாபரிக்கையும், இதெல்லாம் பயஸ்த்தாநமாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. [அம்மானே] - ஸர்வரக்ஷகனானவனே! ஒரு காபுருஷனுக்கு வந்ததொன்றன்றிக்கே ஸர்வரக்ஷகனானவனுக்கு வந்ததென்று இதுவும் பயஸ்த்தாநமாகிறது இவர்க்கு. [காலம் இத்யாதி] - உன்தனிமையை அநுஸந்திக்க அநுஸந்திக்க, ஒரு க்ஷணத்தினின்றும் க்ஷணாந்தரத்திலேபேருகிற நடுவில்ஸந்திமாத்ரம், மஹாந்தகாரமான கல்பமாய்க்கொண்டு நெடுகாநின்றது எனக்கு. [உன்கோலம் காரெழில் காணலுற்று] - உன்னுடைய கறுத்த எழிலான கோலமென்னுதல், மேகத்தினுடைய எழில் போலே இருந்துள்ள அழகென்னுதல் [காணலுற்றாழுங்கொடியேற்கு] - மங்களாசாஸநம் பண்ணுகைக்கு உன்னழகியவடிவைக்காண ஆசைப்பட்டுப் பெறாதே நோவுபடுகிறமஹாபாபியான எனக்கு. ஸம்ஸாரபயம் அவனை ஆச்ரயிக்கப்போம்; ஒரு காலத்திலும் முடியாதே நித்யமாயிருப்பதொரு பயம் அநுவர்த்திக்கும்படியான பாபத்தைப் பண்ணினேன். "ரக்ஷகனுக்கு என்வருகிறதோ?" என்கிற பயத்துக்கு முடிவில்லையே. .... (4)

அஞ்சாம்பாட்டு. ப்ரளயார்ணவத்திலே தனியே கண்வளர்ந்தருளுகிறானென்று பயப்பட்டவர் பயந்தீர, பரிவரும்உண்டாய், நிர்ப்பயமான திருக்கோளூர் திருப்புளிங்குடி தொடக்கமான இடங்களிலே கண்வளர்ந்தருளுகிறபடியைக் காட்டிக்கொடுக்க, அதுதானும் இவர்க்கு பயஹேதுவாயிற்று.

கொடியார்மாடக் கோளூரகத்தும்புளிங்குடியும்*
மடியாதின்னே நீதுயில்மேவிமகிழ்ந்ததுதான்*
அடியார் அல்லல் தவிர்த்த அசைவோ? அன்றேல் இப்*
படிதான் நீண்டுதாவிய அசைவோ? பணியாயே. [5]

[கொடியார்மாடக் கோளூரகத்தும்] - கொடிமிக்க மாடங்களையுடைய திருக்கோளூரிலும்: சத்ருக்கள் கிடந்தவிடமறிந்து அபிசரிக்கும்படி கொடிகட்டிக்கொண்டு கிடக்கவேணுமோ? கொடிக்கு பயப்படவல்லார் இவரைப்போலில்லை. கம்ஸபயத்தாலே ஒளித்து வளர்ந்தாற்போலே இருக்கலாகாதோ? இந்தப்பயமில்லையிறே கீழ்ப்பாட்டில், அநுகூலப்ரதிகூல விபாகமற ஸம்ஹ்ருதமாய்க் கிடக்கையாலே. [புளிங்குடியும்] - இதுவும் ஒருபயஹேதுபலவிடங்களிலும் படுக்கை பந்நிறது ச்ரமத்தின்மிகுதியென்றிருக்கிறார். [மடியாது]- இடம் வலங்கொள்ளாதே என்னுதல்; மடியென்று - சோம்பாய, சோம்பாதே என்னுதல்; அதாவது நமக்காக இவன்கிடக்கிறானென்று அறிந்து "பரிகைக்கு ஒருத்தரைப் பெற்றிலோம்" என்று இளகாதொழிகை. [இன்னே]-இப்படியே. "கிடந்ததோர்கிடக்கை" என்னுமித்தனையொழிய, பாசுரமிடப்போகாதிருக்கை, [நீ துயில்மேவி மகிழ்ந்தது தான்] - *அவிகாரியாயிருக்கிற நீ ஒருபடியே கண்வளர்ந்தருளி, அத்தாலே இனியனாகைக்கு ஹேதுவென்? இவன் முகத்திலே தெளிவுண்டாயிருக்கத்து, அதுக்கடி முன்பே ஒருச்ரமமுண்டாகையிறே என்றிருக்கிறார்; ச்ரமமுடையாருக்கு உறங்கவுறங்க முகம் தெளிந்துவரக் காண்கையாலே. [அடியாரல்லல் தவிர்த்த அசைவோ] - திருவடிகளிலே. சரணம்புகுந்த இந்த்ராதிகளுக்காக ராவணாதிகளை அழியச்செய்து, அவர்களுடைய து:க்கங்களைக் கெடுத்த இளைப்போ? [அன்றேல்] - அன்றியே. [இப்படி இத்யாதி] - அன்றே பிறந்து அன்றே வளர்ந்து ஸுகுமாரயான திருவடிகளைக்கொண்டு காடுமோடையும் அளந்துகொள்ளுகையாலே திருவடிகள்நொந்ததோ? [பணியாயே]-தோள்நொந்ததோ, திருவடிகள் நொந்ததோ? அருளிச்செய்யாய்; தோள் நொந்ததென்னில் தாளைப்பிடிக்கவும் அருளிச்செய்யவேணும். ஸ்வரஸாதங்கொண்டு அறியலாமென்று கேட்கிறார். உகந்தருளினவிடங்களிலும் செய்யமுடியாததில்லை: சொல்ல நினையாமலிருக்கிறானித்தனை என்றிருக்கிறார்.... ... . (5)

ஆறாம்பாட்டு. நீர் இங்ஙனே கிடந்து படுகிறதென்? ஸர்வரக்ஷகனன்றோ அவன்! என்ன; நித்யஸூரிகள் பரியவிருக்கக்கடவ அவன் ஸம்ஸாரத்திலே அவ்வடிவோடேவந்து உலாவாநின்றால் நான் இப்படிப்படாதே செய்வதென் என்கிறார்.

பணியாவமரர் பணிவும்பண்புந்தாமேயாம்*
அணியாராழியுஞ்சங்கமும் ஏந்துமவர்காண்மின்*
தணியாவெந்நோய் உலகில்தவிர்ப்பான் திருநீல*
மணியார்மேனியோடுஎன்மனம் சூழவருவாரே. [6]

[பணியாவமரர்] - வேறே சிலரைப் பணிய ஸம்பாவனையில்லாத நித்யஸூரிகள் முன்பு அஸேவ்யர்காலிலே குனிந்து ஒருநாளிலே அநுகூலித்து, "அழுக்குடம் பெச்சில்வாய்' என்று அநுதபித்து, பின்பு வகுத்தார்காலிலே குனிந்தவர்களல்லர்: பணித்தல் பணிதல் செய்யாதவர்கள். இத்தால்-முக்தரை வயாவர்த்திக்கிறது. [பணிவும் பண்பும் தாமேயாம்] - அவர்கள் பணிவுக்கும ஜ்ஞாநாதிகுணங்களுக்கும் தாமே விஷயமாயிருக்குமவர். [அணியாராழியும் சங்கமுமேந்தும்] - ஸர்வாபரணமும் தானேயாகப்போரும்படியான திவ்யாயுதங்களை தரித்து, நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுத்தால் அவர்களும் அஸ்தாநே பயசங்கைபண்ணி. மங்களாசாஸநம் பண்ணும்படியாயிற்று இருப்பது. அவர்களுக்கும் நான் பட்டதுபடவேணும் [அவர்காண்மின்] - அவர்கிடீர் பயஸ்தாநத்திலே பிறக்கிறார். தமக்கு ஒரு ப்ரயோஜநத்துக்காகத்தான் வருகிறாரோ? [உலகில்.தணியாவெந்நோய்-தவிர்ப்பான்] 'தணியாவெந்நோய்' ஒருநாளும் முடியாத தாபத்ரயாதிகள் [திருநீலமணியார்மேனியோடு] - நீலமணிபோலே

ச்ரமஹரமாய் ஸுகுமாரமானவடிவோடே, இங்கே வ வேண்டினால், அவ்வடிவோடே வரவேணுமோ? [என் மனம்] - அந்த ஸுகுமாரமானவடிவோடே ஸம்ஸாரத்திலே உலாவுகிறானென்றறிந்த என்மநஸ்ஸானது. [சூழவருவாரே] - சுழன்றுவரும்படி வருகிறவர். தணியா வெந்நோய் - தவிர்ப்பான் - உலகில் - வருகிறவரொன்றுமாம். ... . ( )

ஏழாம்பாட்டு. இங்கேவந்து திருப்பரிசாரத்திலே எழுந்தருளியிருக்க நான் உதவப்பெறுதே அவஸந்நனால், ஓரடியானுமுளனென்று அவனுக்கு அறிவிப்பாரையும் பெறுகிறிலோ மென்கிறார்.

> வருவார்செல்வார் வண்பரிசாரத்திருந்த* என்
> திருவாழ்மார்வற்கு என்திறம்சொல்லார் செய்வதென்?*
> உருவார்சக்கரம்சங்கு சுமந்து இங்கு உம்மோடு*
> ஒருபாடுழல்வான் ஓரடியானுமுளனென்றே. [7]

[வருவார்செல்வார்] - திருநகரியினின்றும் திருப்பரிசாரத்திலே மஹாபதமாக இசங்கரிற்கும். ஸ்வகார்யத்தாலே த்வரித்துப்போவாரைத் தம்தசையையறிவிக்கப்போகிறார்களென்றும், அங்குநின்றும் வருவாரைத் தம்மையழைக்கவருகிறார்களென்று மிருப்பர். இயக்கமற்றிருக்கிறதன்று கிடீர். திருப்பரிசாரத்திலிருப்புக்குப் பரியவேணும்; அதுக்குமேல் பிராட்டியோட்டைச்சேர்த்திக்குப் பரியவேணும். [*பவாம்ஸ்துஸஹவைதேஹ்யா*] என்று இளையபெருமாளைப்போலே தொடர்ந்துபோய் அடிமைசெய்யவேண்டும்படியாயிற்று இவ்விருக்கிறவிருப்பு. [என்திறஞ்சொல்லார்!] - சொன்னவார்த்தை கேட்பிப்பாரில்லாமை சொல்லாதொழிகிறாரல்லர்கிடீர்] [என்திருவாழ்மார்வற்கு] - என்ஸ்வாமிநி ஸந்நிதியாகையாலே சொன்னவார்த்தை விலைச்செல்லுங்கிடீர். [செய்வதென்] - இதுக்கு என்னாற்செய்யலாவதென்? ஸ்வகார்யபரராய்ப் போவர்களாகில், அவர்கள் அங்குப்போனால் சொல்லும் பாசுரமேது? என்ன—[உருவார்சக்கரம் இத்யாதி] - அழகுமிக்கிருந்துள்ள ஆழ்வார்களை ஸாதரமாக தரித்தென்னுதல், திருமேனிக்கெல்லாம் வேறோராபரணம் வேண்டாதே தானே ஆபரணமாகப்போரும்படியான ஆழ்வார்களை தரித்து என்னுதல். [இங்கு - பரிவரின்றிக்கே யிருக்கிற ஸம்ஸாரத்திலே. [உம்மோடொருபாடுழல்வான்] - இடைவிடாதே ஒருபார்ச்வத்தைப்பற்றித்திரிவான். ஒருபார்ச்வத்துக்கு இளைய பெருமாளுண்டிறே. [ஓரடியானுமுளனென்றே]-அநந்யப்ரயோஜநனாயிருப்பானொருவனுளனென்று. [*ஸமஹாத்மாஸுதுர்லப:*] என்கிறபடியே ஒருவரில்லையென்று கைவாங்கியிருப்பர்; அது வேண்டா, ஒருவனுளனென்று என்னிடையாட்டம் சொல்லுகிறிலர்கள்; செய்வதென்? (7)

எட்டாம்பாட்டு. 'பிறரைவிடீர்: உன் திருவடிக்கீழே பரிகைக்கு நிலையாளாக என்னைக் கொள்வது என்று?', என்று அவன் தன்னைக் கேட்கிறார்.

> என்றேயென்னை உன்னேரார்கோலத்திருந்தடிக்கீழ்*
> நின்றேயாட்செய்ய நீ கொண்டருள நினைப்பதுதான்?*
> குன்றேழ்பாரேழ் சூழ்கடல்ஞாலமுழுவேழும்*
> நின்றேதாவிய நீள்கழலாழித்திருமாலே. [8]

[என்றே] - உம்முடைய கார்யம் செய்கிறோமிறே என்ன; அதுதான் என்று? என்கிறார். [என்னை] - உனக்குப் பரிந்தன்றி உளனாகாதிருக்கிற என்னை. [உன் இத்யாதி]- உன் அழகு மிக்க ஒப்பனை திருந்தின திருவடிகளின் கீழே. மங்களாசாஸநம் பண்ணியல்லது நிற்கவொண்ணாத திருவடிகளென்கை. [நின்றேயாட்செய்ய] - [*தேஹிமேததாமிதே*] என்று ப்ரயோஜநத்தைக் கொண்டுபோகையன்றிக்கே, விடாதே அடிமைசெய்ய.

[நீ கொண்டருள] - நான் கிடந்தானை கண்டேறுகையன்றிக்கே, அடிமை செய்வானென்று திருவுள்ளத்தே கொண்டருள, [நினைப்பதுதான்] - [நின்றேயாட்செய்ய - நினைப்பதுதான்] அவன் நினைவுக்கே பல வ்யாப்தியுள்ளது. தம்பபிநிவேசம் அப்ரயோஜகமென்றிருக்கிறார். [குன்றேழ் இத்யாதி] - "வண்பரிசாரத்திருந்த" என்று - எழுந்தருளியிருக்கிறவிருப்புத் தனக்குப் பரியவேண்டியிருக்க, அதிமாநுஷமான செயலைச் செய்தால் மங்களாசாஸநம் பண்ணியே நிற்கவேண்டாவோ? ஸப்தகுலபர்வதமென்ன, ஸப்தத்வீபமென்ன, அவற்றைச் சூழ்ந்த ஸப்தஸமுத்ரமென்ன, இப்படி ஏழுவகைப்பட்ட பூமியையடைய நின்ற நிலையிலே நின்று அளந்து கொண்டருளும்படி நீண்ட திருவடிகளை உடையையாய்க் கையும் திருவாழியுமான ச்ரிய:பதியே! சங்கசக்ராதி திவ்யாயுதங்களையுடைய ச்ரிய:பதியாய்வைத்து, காடு மோடையுமான பூமியையடைய, நின்ற நிலையிலே ஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டு அளந்த ச்ரமம்தீர சிசிரோபசாரம் பண்ணப்பெறும் நாள் என்று? என்கை. அரியனசெய்ய வல்ல நீ, நான் உன்திருவடிகளைக்கிட்டி நின்று அடிமை செய்யும்படி நினைத்தருளவேணு மென்றுமாம். ... ... (8)

ஒன்பதாம் பாட்டு. நமக்குப்பரிய ப்ரஹ்மாதிகளுண்டாயிருக்க, நீர் இங்ஙன் அஞ்சுகிறதென்? என்ன, அவர்கள் உன்ஸௌகுமார்யம் அறிவர்களோவென்கிறார்.

திருமால்! நான்முகன் செஞ்சடையானென்றிவர்கள் * எம்
பெருமான் தன்மையை யாரறிகிற்பார்? பேசியென் *
**ஒருமாமுதல்வா! ஊழிப்பிரான்! என்னையாளுடை *
கருமாமேனியனென்பன் என்காதல்கலக்கவே. (9)

[திருமால்] - திருமாலென்று நிஷ்கர்ஷித்தது ஸம்போதிக்கிறார். நீயும் பிராட்டியுமான சேர்த்திக்கு மங்களாசாஸநம்பண்ணுவர்களோ அவர்கள்? [நான்முகன்] - ஸ்ருஷ்டிக்கு உறுப்பான பலமுகங்களையுடையனாய், அதிலே அங்யபரனானவன். [செஞ்சடையான்] - ஸாதக வேஷந்தோற்ற நிற்கிற ருத்ரன்: தன்னபிமதலாபத்திலே அங்யபரன். [எம்பெருமான் தன்மையை] - ஸர்வேச்வரனான உன்னுடைய ஸௌகுமார்யத்தை. [ஆரறிகிற்பார்] - சிலராலே அறியலாயிருந்ததோ? அங்யபரராயிருக்கிறவர்கள் உன் ஸௌகுமார்யத்தை அறியவல்லர்களோ? அநங்யபரரானால்தான் தேவருடைய ஸௌகுமார்யந்தான் சிலராலறியலாமோ? [பேசியென்] - இதுசொல்லி என்னப்ரயோஜநமுண்டு? அவர்களைப் பரிவராக்கவோ? உன் ஸௌகுமார்யத்தைப் பரிச்சிந்நமாக்கவோ? அவர்கள் நம்மை அறியமாட்டார்களாகில் அறிந்த நீர் பேசிக்காணீரென்ன, "என்னால்தான் செய்யலாயிருந்ததோ!" என்கிறார்: [ஒருமாமுதல்வா] — விலக்ஷணமான பரமகாரணமானவனே! [ஊழிப்பிரான்] - காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களுக்கும் ஸ்வாமியானவனே! [என்னை இத்யாதி] - புறம்பே அங்யபரனான என்னை அநங்யபரனாம்படிபண்ணின வடிவையுடையவனே! [என்பன்] - இவ்வளவிறே என்னளவும். ஸர்வநிர்வாஹகனாய் வடிவழகிலே என்னைச் சேர்த்துக்கொண்ட இதிறே என்னைக்கலங்கப் பண்ணிற்று. [என்காதல்கலக்கவே] - என்னுடையப்ரேமமானது நான் அஞ்சும்படி கலங்கப் பண்ண, உன் வடிவழகிலும் மேன்மையிலும் கலங்கிச் சொன்னவத்தனைபோக்கி, உன் ஸௌகுமார்யத்தை எல்லைகண்டுசொன்னேனல்லேன். ப்ரேமாந்தனாய்க்கொண்டு சொன்னேனத்தனை போக்கி, நெஞ்சொழிந்து சொன்னேனல்லேன். ப்ரயோஜநாந்தரபரரான ப்ரஹ்மாதிகள் பரிவும் உனக்கு ஸத்ருசமன்று, ப்ரேமாந்தனான என்பரிவும் உனக்கு ஸத்ருசமன்று என்றதாயிற்று. ... ... (9)

பத்தாம்பாட்டு. இவர்பயத்தைப் பரிஹரிக்கைக்காக நமக்கு ஸநகாதிகள் முக்தர் நித்யஸூரிகள் இவர்கள் கிட்டிநின்று பரிமாறுகிறார்கள்: நாம்தாம் அரிய செயல்களும் செய்யவல்லோம் சிலரானபின்பு, நீர் நமக்கு அஞ்சவேண்டாகாணுமென்ன; முன்பு பய

ஹேதுக்களானவைதானே பயநிவ்ருத்திக்கு உடலாய் 'அத்தையநுஸந்தித்து இனியராகிருர். இவர்தமக்கு இன்னபோது இன்னது பயஹேதுவாம், இன்னபோது இன்னது பரிஹாரமாம் என்று தெரியாதிறே.

கலக்கமில்லா நல்தவமுனிவர் கரைகண்டோர் *
துளக்கமில்லா வானவர் எல்லாந்தொழுவார்கள் *
மலக்கமெய்த மாகடல்தன்னைக்கடைந்தானை *
உலக்கநாம்புகழ்கிற்பது என்செய்வது? உரையீரே. (10)

[கலக்கமில்லாநல்தவமுனிவர்] - தங்கள் ஜ்ஞானத்துக்கு விஷயங்களால்வரும் கலக்கமின்றிக்கே, மஹாதபஸ்ஸுக்களை யுடையராய்மனனசீலரான ஸநகாதிகள். [கரைகண்டோர்]- முக்தர். [துளக்கமில்லாவானவர்]- துளக்கம் -நடுக்கம். ஸம்ஸாரஸ்பர்சமில்லாத நித்யஸூரிகள். துளக்கம்—சலநம். அதாவது - ஸங்கோசம். [எல்லாந்தொழுவார்கள்] - முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யஸித்தருமான இவர்கள் அடிமை செய்கிறவர்கள். அடிமையாவது — ஸ்வாமிக்கு அதிசயத்தைப் பண்ணுமதாகையாலே, மங்களாசாஸநமிறே. [மலக்கம் இத்யாதி] மஹத்தத்த்வமான கடலை க்ஷுபிதமாம்படி கடைந்த பெருமிடுக்கன். பரிகிறவர்கள்தாங்களும் குழைசரக்காம்படி பெருமிடுக்க னென்கை. [உலக்க இத்யாதி] - அவன் படியை நோாக அறியாத நாம் பரிவிலே யிழிந்து முடியப்பேசப் புக்கது, என்செய்தோமானோம்? சொல்லிகோள். முன்பு தன்மிடுக்கைக் காட்டினவிடங்களில் அத்தை ப்ரதிபத்தி பண்ணாதே அதுதன்னையே சொல்ல இப்போது ஸமாஹிதமாயற்றது, இப்ரபந்தம் தலைக்கட்டக்கடவதாகையாலேயாதல், ஈச்வரனுடைய ஜீவநாத்ருஷ்டத்தாலேயாதலிறே. ... (10)

நிகமத்தில் - இத்திருவாய்மொழி யப்யஸிப்பார் அவன்தனிமைகண்டு பயப்படும் ஸம்ஸாரத்தில் பிறவா ரென்கிருர்.

உரையாவெந்நோய்தவிர அருள்நீள்முடியானை *
வரையார்மாட மன்னுகுருகூர்ச்சடகோபன் *
உரையேய்சொல்தொடை ஓராயிரத்துளிப்பத்தும் *
நிரையேவல்லார் நீடுலகத்துப்பிறவாரே. (11)

[உரையாவெந்நோய்] — வாசாமகோசரமாய், அதிக்ரூரமான நோய். தம்மளவில் ஸாத்மிக்கையன்றிக்கே, "உபயவிபூதிநாதனுக்கு என்வருகிறதோ?" என்று அஞ்சினநோயிறே. [தவிரவருள்நீள்முடியானை] - இதுபோம்படிக்கிடாக அருளும் ஸ்வபாவனை உபயவிபூதி நாதனை. "இவர்பயம்போம்படி 'உம்முடைய அபேக்ஷிதம் செய்கிறோம்' என்று சிர:கம்பநம் பண்ணினன்போலேகாண்" என்று அம்மங்கியம்மாள். இவ்வாழ்வாருடைய பயம் நிவ்ருத்தமான பின்பாயிற்று, உபயவிபூதிக்கும் ரக்ஷகனாய்ச் சூடின முடியும் நிலைநின்றதாயிற்று. [வரையார் இத்யாதி] - இவர்பயம் நிவ்ருத்தமானவாறே ஸம்ருத்தமுமாய் ஸ்த்திரமுமாயிற்றுத்திருநகரியும். [உரையேய் இத்யாதி] - உக்தியால் சேர்ந்தசொல்தொடையையுடைத்தாய்விலக்ஷணமான ஆயிரம். [இப்பத்தும் நிரையேவல்லார்] -இப்பத்தை அடைவுதப்பாமல் அப்யஸிக்க வல்லார்: தமக்குப்பிறந்த கலக்கத்தாலே, இதிலிழிவார்க்கும் அடைவுபட அநுஸந்திக்க வொண்ணாதென்றிருக்கிருர். [நீடுலகத்துப்பிறவாரே] - இப்பூமிப்பரப்பையடைய அநுஸந்தித்தால், பரப்பேயாய், ஸர்வேச்வரன் தனிமைக்குப் பரிய ஒருவரைக் கிடையாத இத்தேசத்திலே பிறவார்கள்; ஒருநாடாக மங்களாசாஸநம்பண்ணுகிற தேசத்திலேபோய் நித்யாநுபவம் பண்ணப்பெறுவர். ... ... (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி.

அங்கமரர்பேண அவர்நடுவேவாழ் திருமாற்கு
இங்கோர்பரிவரிலையென்றஞ்ச — எங்கும்
பரிவருளரென்னப்பயந்தீர்ந்த மாறன்
வரிகழற்றாள்சேர்ந்தவர்வாழ்வார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்,
ஜீயர் திருவடிகளே சரணம்.

"ஸர்வேச்வரன் ஸம்ஸாரிகளுடைய அபேக்ஷையே ஆலம்பநமாக ஸம்ஸாரத்திலே வந்தவரித்துத் தனியே உலாவாநிற்கும்: ஸம்ஸாரிகளும் தந்தாம் அபேக்ஷிதங்களைப்பற்றக் கிட்டுமதொழிய இவன்வாசியறிந்து பரியக்கடவாரில்லை: என்புகுகிறதோ?" என்று அஞ்சின இவர்க்கு, அந்த அச்சந்தீரும்படி "நமக்குப்பரிவருண்டு: ஒருத்தர் பரியவேண்டாதபடியான, மிடுக்கும் நமக்குண்டு" என்று தன்படிகளைக்காட்டி ஸமாதாநம்பண்ண ஸமாஹிதராய் நின்றார் - கீழ்: இதில் - இவராகிறார் ப்ரேமஸ்வபாவராயிருப்பர், * காதல்மையலேறிக்கலங்கி "முக்தரும் நித்யரும் இங்கில்லையே, ஸநகாதிமுமுக்ஷுக்கள் நல்லதபஸ்ஸும் மநநத்யானமும் விடமாட்டார்கள்: கடல்கடைந்தது தேவயோநியிலேயன்றே" என்று கலங்குவர். இன்னம் இவர்க்கு இது மறுவலிடக்கூடும்" என்று பார்த்து, மறுவலிடாதபடி தன்சௌர்யவீர்யாதி குணங்களையும், ஸ்ருஷ்ட்யாத்யத்புதகர்மங்களையும், எதிரிட்டவிரோதி வர்க்கத்தைவேரோடே வாங்கிப் போகடவல்ல சக்தியையும் காட்டிக்கொடுத்து, அதுக்குமேலே, "அதிசயிதஜ்ஞாந சக்திகராய்த் தனக்குப்பரிவராயிருப்பார் மூவாயிரம் ப்ராஹ்மணருண்டு" என்று காட்டிக் கொடுக்கக்கண்டு க்ருதார்த்தராய், அவன் வடிவழகிலேயும் நெஞ்சுசென்றநுபவித்து இனியராகிறார்.

ஸ்ரீ விபீஷணாழ்வான் (*ராகவம் சரணம் கத:*) என்றுவந்து விழுந்தபோது, மஹாராஜர் பெருமாள்பக்கல் ப்ரேமத்தாலேகலங்கி, துணுக்கென்று, "இவன்சொன்ன வார்த்தை பெருமாள்திருச்செவியிலே படுமாகில் சாலத்தப்பாம்" என்று, "நாயன்றே! ராவணப்ராதா, ராக்ஷஸஜாதி, அவன் புகுரக்கடவனல்லன்" என்ன, "இவர் நம்பக்கல் பரிவாலே சொல்லுகிறவார்த்தை, நம்மிடுக்கைக்காட்டவே தெளிவர்" என்றுபார்த்து, [* பிசாசாந்தாநவாந் *] இத்யாதியாலே தம்முடைய மிடுக்கைக்காட்டக்கண்டு அவர் அச்சந் தீர்ந்து, [* கிமத்ரசித்ரம் *] என்று இனியரானாற்போலவும், மல்லயுத்தத்தில் [* நஸமம்யுத்த மித்யாஹு: *] என்கிற பார்ச்வஸ்தருடைய பயத்தை, அவர்கள்ஸந்நிதியிலே க்ருஷ்ணன் மல்லரை யுழியச்செய்து தீர்த்தருளினாற்போலவும், தம்முடைய பயத்தைப் போக்கியருள, அத்தாலே க்ருதார்த்தராய், "இனி நமக்கு தாரகபோஷக போக்யங்கள் இவனல்லது இல்லை" என்று ப்ரீதராய், முன்பு அழகைக்கண்டு பரிவாலே பீதரானவர், அழகிலே நெஞ்சுசென்றநுபவித்து க்ருதார்த்தராய்த் தலைக்கட்டுகிறார்.

நான்காந் திருவாய்மொழி—வார்கடாவருவி – ப்ரவேசம்

முதற்பாட்டு. குவலயாபீடம் முதலான ப்ரதிகூலரை நிரஸித்த சீர்கொள் சிற்றாயருடைய திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு எங்களுக்கு நிர்ப்பயமான புகலென்கிறார்.

வார்கடாவருவியானைமாமலையின் மருப்பிணைக்குவடிறுத்துருட்டி *
ஊர்கொள்திண்பாகனுயிர்செகுத்துஅரங்கின் மல்லரைக்கொன்றுசூழ்பரண்மேல்*
போர்கடாவரசர்புறக்கிட மாடமீமிசைக்கஞ்சனைத்தகர்த்த*
சீர்கொள்சிற்றாயன் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறுஎங்கள்செல்சார்வே. (1)

[வார்கடாவருவியானைமாமலையின்] - வாராநின்றுள்ள மதஜலமான அருவியையுடைய ஆனையாகிற மாமலையினுடைய. கடா - மதம். மதகரமான த்ரவ்யங்களைத்தீற்றிப் பிச்சேற்றிப் புகுகிறவாசலிலே நிறுத்தினான், ப்ரமாதத்தாலே வந்ததென்று மாதுலனைக் கண்ணநீர்விழவிட்டுத்தானிருப்பானாக. *புகுவாய்நின்றபோதகம் வீழப்பொருதான்* என்னக்கடவதிறே. [மருப்பிணைக் குவடிறுத்து]- மருப்பாகிற இணைக்குவடுகளை இறுத்து: கொம்பாகிற சிகரங்களை அநாயாஸேந முறித்து. அம்மலையிலே இரண்டு சிகரங்களை ஒடித்தாற்போலே. [உருட்டி] - கொம்புகளைப்பறித்தவாறே யுளுக்காந்தது: திருவடிகளாலே அநாயாஸேந தள்ளி. [ஊர்கொள்திண்பாகன்] - உயிருள்ள பதார்த்தத்தை நடத்துமாபோலே நடத்தவல்லனாயிற்று சிக்ஷாபலத்தாலே. திண்ணியனாய் ஆனையை நடத்துகிற பாகன். [உயிர் செகுத்து] - அத்தைத்தள்ளினாலும் இவனுயிர் போகாதவன்று அத்தை முடித்ததாகாது காணும். [அரங்கின்மல்லரைக்கொன்று] - ஆனையின் கொம்புகளை இரண்டையும் இருவருங்கொண்டு ரங்கமத்யத்திலே புக்கவளவிலே, அச்செருக்குப் பொறாமையாலே, யுத்தோந்முகராய் வந்த சாணூரமுஷ்டிகர்களைக் கொன்று. ஆனை திர்யக்காகையாலே விரகறியாதேபட்டது; அது போயிற்றாகிலும் மல்லருண்டென்று கம்ஸன் நினைத்திருந்தவர்களை அழியச்செய்தபடி. [*நஸமம்யுத்தமித்யாஹு:*] என்று பெண்கள் முதலான பார்ச்வஸ்தரடங்கக் கூப்பிட்டு பீதரான ஸமயத்திலே, அவர்கள்பயமெல்லாம் போம்படி அநாயாஸேந மல்லரைக்கொன்று. [சூழ்பரண்மேல்] - சுற்றுமுண்டான மஞ்சத்தின் மேலே நின்ற. [போர்கடாவரசர்புறக்கிட]- கெடுபடையை வெற்றியுண்டாம்படி கடாவிப்போரு மரசர். [*ஸேநாநயவிசாரத:*] என்கிறபடியே தூசித்தலையிலே வெற்றியோடல்லது மீளாதபடி படைபொருத்தி யுத்தத்தை நடத்தவல்ல ராஜாக்கள் முதுகுகாட்டி ஓடும்படியாக. [மாடமீமிசை] -[*துங்கமஞ்சவ்யவஸ்த்தித:*] என்கிறபடியே, உயர்ந்த மாடத்திலே இருக்கிற. தனக்கு பயம் எவ்வளவுண்டு அவ்வளவும் உயர்த்தினானாயிற்று மாடத்தை. [கஞ்சனைத்தகர்த்த] - அவனிருக்கிற இடத்தளவும் எழப்பாய்ந்து, *கஞ்சன்குஞ்சிபிடித்தடித்தபிரான்* என்கிறபடியே - மயிரைப்பிடித்துக் கீழே விழவிட்டு மேலே பாய்ந்து பசளைக்கலம்போலே உடைத்தான்; [*அவஜ்ஞயாஹதம்த்ருஷ்ட்வா க்ருஷ்ணேநமதுரேச்வரம்*] என்கிறபடியே. [*கேசேஷ்வாக்ருஷ்ய விகளத்கிரீடமவநீதலே—ஸகம்ஸம்பாதயாமாஸ தஸ்யோபரிபபாதச*] "ராஜத்ரோஹிகளைக்கொல்லும்போது ராஜசிஹ்நங்களை வாங்கிக் கொள்ளுமாபோலே, தான் கொடுத்த முடியை வாங்கிக்காண் கொன்றது" என்று அம்மங்கியம்மாள் பணிப்பர். [சீர்கொள்சிற்றாயன்] - பருவம் நிரம்பாதிருக்கச்செய்தே வீரஸ்ரீயால் குறைவற்றிருக்கிறவன். [திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு] புலிநின்றதுறு போலே ப்ரதிகூலர்தங்களுக்கு அஞ்சவேண்டும் ஊர். [எங்கள்] - மஹாராஜர், பெரியாழ்வார், ஸ்ரீவிதுரர், தாம், பிள்ளையுறங்காவில்லிதாஸர், இங்ஙனொத்த பரிவர். [செல்சார்வே] - நிர்ப்பயஸ்தாநமென்று புகும் புகல். கீழ், இவர்க்கு ஓடினபயம் நீங்கிற்றென்னுமிடம் இயல்தழைப்பிலே தெளிந்திருக்கிறபடி கண்டதே! ... ... (1)

இரண்டாம் பாட்டு. ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஸமர்த்தனாய்த் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனல்லது எனக்கு நல்துணையில்லையென்கிறார்.

எங்கள்செல்சார்வு யாமுடைய அமுதம் இமையவரப்பனென்னப்பன்*
பொங்குமூவுலகும்படைத்தளித்தழிக்கும் பொருந்துமூவுருவனெம்மருவன்*
செங்கயலுகளுந்தேம்பணைபுடைசூழ் திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு
அங்கமர்கின்ற* ஆதியானல்லால் யாவர்மற்றுஎன் அமர் துணையே? (2)

[எங்கள் செல்சார்வு] - அநுகூலராயிருப்பார்க்கெல்லாம் அஞ்சவேண்டாத புகல். [யாமுடைய அமுதம்] - புகலேயாய், போக்யவஸ்து வேறே தேடவேண்டாதே யிருக்கை. "எங்கள், யாம்" என்னப்பலருண்டே; *கேசவன் தமர்க்குப் பின்பு தனியரல்லரே. *குன்றமெடுத்தபிரானடியாரொடு மொன்றி நின்ற சடகோபன்* என்று அவர்களோடு ஒன்றிநின்று சொல்லுகிற சொல்லிறே. [இமையவரப்பனென்னப்பன்] - நித்ய ஸூரிகளை அடிமை கொண்டாற்போலே என்னை அடிமைகொண்டவன்: குறைவற்றார்க்கும் ஸத்தாஹேதுவாய், குறைவுக்கெல்லையான எனக்கும் ஸத்தாஹேதுவானவன். [பொங்கு இத்யாதி] - விஸ்த்ருதமான த்ரைலோக்யத்தையும் உண்டாக்கி ரக்ஷித்து அழிக்குமவன். [பொருந்துமூவுருவன்] - இச்செயல்களுக்குப் பொருந்தின மூன்று வடிவை உடையவன்: ப்ரஹ்மாந்தர்யாமியாய் ஸ்ருஷ்டிக்கும்; ருத்ராந்தர்யாமியாய் ஸம்ஹரிக்கும்; ஸ்வேநரூபேண நின்று பாலநத்தைப் பண்ணும். பொருந்துகையாவது - ரஜஸ்தம:ப்ரசுரரான ப்ரஹ்மாதிகளோடு திவ்யவிக்ரஹத்தோடு வாசியற்றிருக்கை. [எம்மருவன்] - "அல்லாதார் காரியம் நம் புத்த்யதீநமாயிருக்குமத்தனையல்லது நங்கார்யம் அல்லாதார்நினைவின்படியல்லகாணு மிருப்பது" என்று எனக்கு அறிவித்து; என் பயநிவ்ருத்தியைப்பண்ணி, எனக்கு தாரகனானவன். [*உத்பத்திஸ்த்திதிநாசாநாமஹேதும்ஹேதுமீச்வரம்*] - ஸ்வேதர ஸகலங்களும் தன்னினைவிலேயாய், தான் ஒருவன் நினைவின்படியன்றிக்கே இருக்கிறபடியைக்காட்டி என்னை தரிப்பித்தவன். [செங்கயலுகளும்] - யௌவநத்தாலே சிவந்தகயல்கள் களித்து வர்த்திக்கும்தேசம். பரிவரில்லையென்று முன்பே க்லேசித்து, பின்பு வார்கடாவருவியாய் ப்ரீதராகவேண்டாதே, ஸகல பதார்த்தங்களும் களித்தே வர்த்திக்கும் தேசமென்கை. [தேம்பணைபுடைசூழ்] - தேனையுடைத்தான நீர்நிலங்கள் சூழ்ந்த என்னுதல், மருதநிலத்தாலே சூழப்பட்ட ஊரென்னுதல். [அங்கமர்கின்ற] - அவதாரங்கள்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே நித்யவாஸம்பண்ணுகிற ஊர். [ஆதியான்] -ஸர்வகாரணமானவனென்னுதல், எனக்கு ஸத்தாஹேதுவானவனென்னுதல்: ப்ரஜைக்கு ப்ராத்யாஸந்நமாக வர்த்திக்கும் தாயைப்போலே, என் ஸத்தையை நோக்கிக்கொண்டிருக்கிறவன். [அல்லால் யாவர்மற்று என்னமர் துணையே] - இவனையொழிய எனக்குச்சேர்ந்த துணையில்லை. அல்லாதார் கழுத்துக்கட்டியாதல், துணையென்று பேராய் ஆபத்திலேகூட வழுதல் செய்யுமித்தனை. ... ... (2)

மூன்றாம்பாட்டு. ஸ்ரீவராகமாய் ப்ரளயங்கொண்ட பூமியை எடுத்தருளித் திருச்செங்குன்றூரிலே நின்றவனுடைய திருவடிகளல்லது வேறு மநோரதத்திலும் எனக்கு சரணமில்லையென்கிறார்.

என்னமர்பெருமான் இமையவர்பெருமான் இருநிலமிடந்தவெம்பெருமான்*
முன்னைவல்வினைகள்முழுதுடன்மாள என்னையாள்கின்ற வெம்பெருமான்*
தென்திசைக்கணிகொள்திருச் செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரைமீபால்
நின்றவெம்பெருமான்*அடியல்லால்சரண் நினைப்பிலும் பிறிதில்லையெனக்கே.(3)

[என்னமர்பெருமான் இமையவர்பெருமான்] - * அயர்வறுமமரர்களதிபதியாய், எனக்கு அமர்ந்த ஸ்வாமியாயுள்ளான். நித்யஸூரிகள் தனக்குப் பரிவராயிருக்கிற இருப்பைக் காட்டி, நான் அஞ்சாதபடி பண்ணி என்னுடைய சேஷத்வத்தை நிர்வஹித்தவன். [இருநிலம் இத்யாதி] - ப்ரளயங்கொண்ட மஹாப்ருதிவியை எடுத்த தன் ஸாமர்த்யத்தைக் காட்டி என்னை அடிமைகொண்டவன். ப்ரளயங்கொண்ட பூமியோபாதி ஸர்வரும் தனக்குக் குழைசரக்காயிருக்கிறபடியைக் காட்டித் தம் பயத்தைக் கெடுத்தானென்கை. [முன்னை இத்யாதி] -

ப்ராக்தனமான ப்ரபலகர்மங்களை வாஸனையோடே போக்கி என்னை அடிமைகொள்ளுகிற ஸ்வாமி. சௌர்யவீர்யாதிகளைக் காட்டி, கீழ் எனக்குப் பிறந்த பயமெல்லாம்போம்படி என்னை அடிமைகொண்டவனென்கை. வல்வினை என்கிறது - பக்தி பாரவச்யத்தையாயிற்று. அதிறே "ஸர்வசக்திக்கு என் வருகிறதோ?" என்னும் பயத்தைப்பிறப்பித்தது. [தென்திசை இத்யாதி]- ஆர்யர்களிகழ்ந்த பூமியான தெற்குத் திக்குக்கு ஆபரணமான ஊர். [மீபால் நின்ற வெம்பெருமான்]-மேலைத் திக்கில் நிலையும் உத்கர்ஷ ஹேதுவாய் இவர்க்கு பயநிவ்ருத்திக்கு உடலாயிருக்கிறது. திகபேக்ஷயா இறே பரத்வமிருப்பது. [அடி இத்யாதி] - அவன் திருவடிகளொழிய மற்று ரக்ஷகமாயிருப்பதொரு வஸ்து மநோரதத்திலுமில்லை. ... ... (3)

நாலாம்பாட்டு. மஹாபலியை வென்றும் கடலைக்கடைந்தும் ஆச்ரிதர் ஆபத்தைப் போக்கித் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவன் திருவடிகளல்லது வேறு எனக்கு அரணில்லை யென்கிறார்.

பிறிதில்லையெனக்குப்பெரியமூவுலகும்நிறையப் பேருருவமாய்நிமிர்ந்த*
குறியமாணெம்மான்குரைகடல்கடைந்த கோலமாணிக்கமென்னம்மான்*
செறிகுலைவாழைகமுகதெங்கணிசூழ் திருச்செங்குன்றூர்த்திருச்சிற்றாறு
அறிய* மெய்ம்மையேநின்ற எம்பெருமான் அடியிணையல்லதோரரணே. (4)

[பிறிதில்லை எனக்கு] - அவனையொழிய வேறு எனக்கு ரக்ஷகரில்லை. [பெரிய மூவுலகும் நிறையப் பேருருவமாய் நிமிர்ந்த] - ப்ரஹ்மலோக பர்யந்தமான ஆகாசாவகாசமடைய விம்மவளர்ந்த. தொடங்கின கார்யம் வென்ற ப்ரீதிப்ரகர்ஷத்தாலே வளர்ந்தபடி. [குறியமாணெம்மான்] - வளருகைக்கு உடலாகக்கொண்ட வாமநவேஷத்தையும், அர்த்தித்வத்தையுங்காட்டி என்னை அடிமைகொண்டவன். மஹாபலியை வெல்லுகைக்குக்கொண்ட வடிவைக்காட்டி பயத்தைக் கெடுத்தபடி. [குரைகடல் கடைந்த] - மஹாகோஷமெழும்படி கடலைக் கடைந்தவன் [கோலமாணிக்கம்] - பெருவிலையனான ரத்நம்போலேயிருக்கிற அழகிய வடிவைக் கொண்டாயிற்றுக் கடலைக்கடைந்தது. என்னமமான்] - கடல்கடைந்த ஸாமர்த்யத்தையும் அழகையுங்காட்டி என்னை அடிமை கொண்டவன். [செறிகுலைவாழை இத்யாதி] - செறிந்த குலையையுடைத்தான வாழை, அப்படிப்பட்ட கமுகு, தெங்கு, இவற்றின் திரளாலே சூழப்பட்ட ஊர். ஊர்ச்சிறப்பென்றும் அரணென்றும் இரண்டில்லை. செறிந்த குலைகளாலும் திரண்டு சூழ்ந்திருக்கையாலும் உகவாதார்க்குப் புகுரவொண்ணாதிருக்கை. [திருச்சிற்றாறறிய] திருச்சிற்றாற்றிலுள்ளார் "ஸர்வேச்வரன்" என்றறியும்படியாக. *மஞ்சா: க்ரோசந்திவத். [*மெய்ம்மையேநின்ற வெம்பெருமான்*] - [*ஆத்மாநம்மாநுஷம்மந்யே*] என்றும் [*அஹம் வோபாந்தவோஜாத:*] என்றும், மறைக்கவேண்டாதபடி பத்தும்பத்தாக நின்ற என் ஸ்வாமி. [அடியிணையல்லதோரரணே] - அவன் திருவடிகளல்லது ஒரு ரக்ஷகமில்லை. அடியிணையல்லதோரரண் - பிறிதில்லை எனக்கு. ... ... (4)

அஞ்சாம்பாட்டு. அல்லாத உகந்தருளின தேசங்களுமுண்டாயிருக்கத் திருச்செங்குன்றூரிலே நீர் அதிநிர்ப்பந்தம் பண்ணுகிறதென்? என்ன, — அது அங்ஙனே இருக்கச் செய்தேயும் திருச்செங்குன்றூரிலல்லது எனக்கு ஹ்ருதயம் சேர்ந்தணையாதென்கிறார்.

அல்லதோரரணும் அவனில் வேறில்லை அதுபொருளாகிலும் *அவனை
யல்லதென்னாவி யமர்ந்தணைகில்லாது ஆதலாலவனுறைகின்ற*
நல்லநான்மறையோர் வேள்வியுள்மடுத்த நறும்புகைவிசும்பொளிமறைக்கும்*
நல்லநீள்மாடத் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறெனக்கு நல்லரணே. [5]

[அல்லதோரரணுமவனில்வேறில்லை] - அல்லாதவிடங்களும் அவனுக்குப் புறம்பாயிருப்பதில்லை. [அதுபொருள்] - அர்த்ததத்வம் அது. [ஆகிலும்] - இங்ஙனே இருந்ததே

யாகிலும். [அவனையல்லது என்னுள்ளி அமர்ந்தனைகில்லாது] - திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனை யல்லது என்மநஸ்ஸு சேர்ந்தணையாது; ஸ்ரீவைகுண்டநாதன் ஈச்வரனல்லாமையும் ப்ராப்தியில்லாமையுமோ, திருவடி [*பாவோநாந்யத்ரகச்சதி*] என்றது? அப்படியே இவரும். அமர்ந்தணைகை. உள்ளெவதுப்பற்றுப் பொருந்துகை. [ஆதலால்] - இப்படியாகையால். [அவனுறைகின்ற] - அவன் நித்யவாசம் பண்ணுகிற - திருச்செங்குன்றூர் என்றவாம். [நல்லநான்மறையோர்] அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணர். [வேள்விபுள்மடுத்தநறும்புகை]- யாகங்களிலே ப்ரவ்ருத்தமான ஹவிஸ்ஸுந்திபான தாமம். அநந்யப்ரயோஜநராகில், இவர்களநுஷ்டாநத்துக்கு ப்ரயோஜநமென்? என்னில், — ஸ்வயம் ப்ரயோஜநமாதல் பகவத்ப்ரதிபக்ஷங்களை அழியச்செய்யுமபிசாரம்பலமாதல். எம்பெருமானைப்போலேயாயிற்று அவ்வூரில் ப்ராஹ்மணரும் [விசும்பொளிமறைக்கும்]-ஆகாசத்தில் ஒளியுள்ள ஆதித்யாதிகளை மறைக்குமென்னுதல். விசும்புதன்னில் ஒளியை மறைக்குமென்னுதல். [நல்லநீள்மாடம்]-ஒரு கர்மமும் வேண்டா, ஊரரண்தானே ப்ரதிகூலர்க்கு துஷ்ப்ராபமாயிருக்கும். [திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு] - *மாடமாமயிலைத் திருவல்லிக்கேணி என்னுமாபோலே. [எனக்குநல்லரணை]- அஸ்தாநே பயசங்கைபண்ணும் எனக்கு பயநிவ்ருத்தியுண்டாம் தேசம், அதுவல்லதில்லை. திருச்சிற்றாறென்று - திருப்பதிக்கும்பேர், ஆற்றுக்கும்பேர். ... ... (5)

ஆறும்பாட்டு. நித்யஸூரிகளுக்கு ஸர்வவிதபந்துவுமாய், ப்ரஹ்மாதிகளுக்கு ஆச்ரயணீயனைக்கொண்டு திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற இவனை "தனக்கென் வருகிறதோ" என்று அஞ்சவேண்டாதபடி நிர்ப்பயமான திருச்செங்குன்றூரிலே காணப்பெற்றேனென்கிறார்.

> எனக்குநல்லரணையெனதாருயிரை இமையவர்தந்தை தாய்தன்னை*
> தனக்குந்தன் தன்மையறிவரியானைத் தடங்கடற்பள்ளியம்மானை*
> மனக்கொள்சீர்மூவாயிரவர் வண்சிவனுமயனுந் தானுமொப்பார்வாழ்*
> கனக்கொள்திண்மாடத்திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறதனுட்கண்டேனே.(6)

[எனக்குநல்லரணை].[*அத ஸோபயங்கதோ பவதி] என்கிற விஷயத்துக்குப்பயப்படுகிற எனக்கு நிர்ப்பயமான அரணானவனை. [எனதாருயிரை] - தன்னுடைய ரக்ஷகத்வத்தைக் காட்டி எனக்கு தாரகனானவனை. [இமையவர்தந்தைதாய்தன்னை]-அஸ்தாநே பயசங்கைபண்ணும் நித்யஸூரிகளுக்கு ஸர்வவிதபந்துவுமானவனை. *சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டு என்னக்கடவதிறே. [தனக்குந் தன்தன்மை யறிவரியானை]- ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான தன்னாலும் தன்னைப் பரிச்சேதிக்கப்போகாது. முதலிலே பயத்துக்கு அவகாசமில்லை; ஒருவஸ்துவைப் பரிச்சேதித்து நலியவேணுமே. [தடங்கடல் பள்ளியமமானை] ச்வேதத்வீபவாஸிகள் ஆச்ரயிக்கைக்கும், மதுகைடபாதிகளை அழியச்செய்கைக்கும், ப்ரஹ்மாதிகள் பரிகைக்கும் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவனை. [மனக்கொள்சீர்மூவாயிரவர்] - பகவத்குணங்களை மநஸ்ஸிலேகொண்டு, "இக்குணாதிகனுக்கு என்வருகிறதோ!" என்று அஸ்தாநேபயசங்கை பண்ணி வர்த்திப்பார் மூவாயிரம் ப்ராஹ்மணருண்டு. அவ்வூரில் ப்ராஹ்மணரும் இவர்கோடியிலேயாயிற்று; [*வவந்தேநியதோமுநிம்*] என்கிற ஸ்ரீ பரத்வாஜமஹாமுனியோடொக்குமவர்கள். தன்னைப்பிரிந்த அன்றுமுதல் ராவணவதம்பண்ணி மீளுமளவுஞ்செல்ல, இவர்களுக்கு என்வருகிறதோ? என்று இத்தையே நினைத்திருந்தவனிறே ஸ்ரீ பரத்வாஜ பகவான். [வண்சிவனுமயனும் தானுமொப்பார்வாழ்] - மூவர்செய்யும் கார்யமும் ஒரொருத்தரே செய்யவல்லராயிருப்பர்கள். அதிகாரிபுருஷர்களில் இவர்களுக்கு உண்டான ஏற்றம். [கனக்கொள்திண்மாடம்]-(செறிந்த திண்ணிதானமாடம்) இவர்களுடைய மிகை, ஊரரண்தானே சிலருக்கு ப்ரவேசிக்கப்போகாது. [திருச்சிற்றாறதனுள்கண்டேனே] - பயப்பட்டதேசத்திலே பயம் நிவ்ருத்தமானாற்போலே, ஸம்ஸாரத்துக்குள்ளே நிர்ப்பயமாயிருப்பதொருதேசமுண்டாய், அதிலே காணப்பெற்றேன். ... ... (6)

ஏழாம்பாட்டு. திருச்செங்குன்றூரிலே நின்றருளின சீர்கொள்சிற்றாயன், தன்னழகோடே மறக்கவொண்ணாதபடி என்னெஞ்சிலே வந்து புகுந்தானென்கிறார்.

திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறதனுட்கண்ட அத்திருவடியென்றும்*
திருச்செய்யகமலக்கண்ணும் செவ்வாயுஞ்செவ்வடியுஞ்செய்யகையும் *
திருச்செய்யகமலவுந்தியும் செய்யகமலமார்வுஞ்செய்யவுடையும் *
திருச்செய்யமுடியுமாரமும்படையும் திகழவென்சிந்தையுளானே. (7)

[திருச்செங்குன்றூரில் இத்யாதி] - நிர்ப்பயஸ்தாநமான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றிலே காணலாம்படி நின்ற ஸ்வாமி. திருவடி-ஸ்வாமி. [திருச்செய்யகமலக்கண்ணும்] - அழகிதாய், சிவந்திருப்பதாய், விகாஸம் செவ்வி முதலானவற்றாலே தாமரை போலேயிருந்த திருக்கண்களும். [செவ்வாயும்] - நோக்கால் பிறந்த முதல்உறவை க்ரயம் செலுத்திக்கொடுக்கும் ஸ்மிதமும். [செவ்வடியும்] - ஸ்மிதத்துக்குத் தோற்று விழும்திருவடிகளும். [செய்யகையும்] - திருவடிகளில் விழுந்தாரை எடுத்தணைக்கும் திருக்கையும். [திருச்செய்யகமலவுந்தியும்] - அணைத்தார்க்கு நித்யாநுபாவ்யமாய், அழகுக்கு எல்லையாய், ஸர்வோத்பத்திஸ்தாநம் என்று தோற்றும்படியிருக்கிற திருநாபியும். [செய்யகமலமார்வும்]- பகவத்ஸம்பந்தமில்லாதார்க்கும் பற்றாசான பிராட்டிக்கு இருப்பிடமாகையாலே சிவந்த திருமார்வும். கமலையென்றுமாம். [செய்யவுடையும்] - திருமேனிக்குப்பரபாகமாய், பும்ஸ்த்வாவஹமான திருப்பீதாம்பரமும். [திருச்செய்யமுடியும்] - அப்படி திருமேனிக்குப் பரபாகமாய் பயந்திரும்படி ரக்ஷகத்வஸூசகமாயிருந்துள்ள திருவபிஷேகமும். [ஆரமும்] - ‘பெரிய வரைமார்பில் பேராரம் பூண்டு’ என்கிறபடியே - திருமார்வுக்குத்தகுதியான திருவாரமும். [படையும்] - வினைத்தலையில் ஆயுதமாய், போகதசையில் ஆபரணமாயிருந்துள்ள திவ்யாயுதங்களும். [திகழ] - [* சோபயந்தண்டகாரண்யம் *] என்கிறபடியே விளங்க. [என்றும் - என் சிந்தையுளானே] - அவன் என்றுமொக்க என்சிந்தையிலே வர்த்திக்கையாலே பயத்துக்கு ஒதுங்கவிடமில்லை. ... ... (7)

எட்டாம்பாட்டு. இப்படி பூர்ணமாக அநுபவித்த சீர்கொள் சிற்றாயனுடையவிலக்ஷணமான குணங்களிலும் அழகிலும் அழுந்தி, அவனைப் புகழும்படி அறிகிறிலேனென்கிறார்.

திகழவென்சிந்தையுளிருந்தானைச் செழுநிலத்தேவர்நான்மறையோர் *
திசைகைகூப்பியேத்துந் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை *
புகர்கொள்வானவர்கள்புகலிடந்தன்னை அசுரர்வன்கையர்வெங்கூற்றை *
புகழுமாறறியேன்பொருந்துமூவுலகும் படைப்பொடுகெடுப்புக்காப்பவனே. (8)

[திகழ என்சிந்தையுளிருந்தானை] - இதுவும் இவர்க்கு ஒருபயநிவ்ருத்திக்குஹேது. தம்நெஞ்சிலே யிருக்கையாலே ஓரரணுக்குள்ளே யிருக்கிறாப்போலே இருக்கிறதாயிற்று. உகவாதார் நெஞ்சிலேயிருந்த பயமும் போயிற்று; *இனிப்போய்ப் பிறரொருவர்வன்னெஞ்சம்புக்கிருக்கவொட்டேன் வளைத்துவைத்தேன்* என்னுமவர்களிறே. [செழுநிலத்தேவர் இத்யாதி]- நாலுவகைப்பட்ட வேதங்களும் கைவந்த விலக்ஷணராய் பூஸுரரான வைஷ்ணவர்கள், திக்குக்கள்தோறும் நின்று கைகூப்பி ஏத்தாநின்றுள்ள திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையிலே வர்த்திக்கிறவனை. உகவாதார்க்குக்கிட்ட வொண்ணாதபடி துர்க்கமான ஊரிலே நிற்கிறபடி. [புகர்கொள் இத்யாதி] - தங்களை யொழிந்தார்க்கெல்லாம் ஆச்ரயணீயராகையால் வந்த புகரையுடையரான ப்ரஹ்மாதிகளுக்கும் ஆபத்துவந்தால் புகலிடமாயுள்ளவனை. [அசுரர் வன்கையர்வெங்கூற்றை] - முன்கைமிடுக்கரான அஸுரவர்க்கத்துக்கு, அந்தகன் தண்ணீரென்னும்படி வெவ்விய கூற்றமாயுள்ளவனை. [புகழுமாறறியேன்] - அவனுக்கு ஒரு குறையில்லை; என்குறைதீரப் புகழுவதொரு ப்ரகாரம் அறிகிறிலேன்; புகழாதொழியவும் மாட்டுகிறிலேன். ஆனால் செய்யவடுப்பதென்? என்னில், - [பொருந்து இத்யாதி] - தனக்குவிதேயமான ஸர்வ

ஜசக்தியையுடையவும் ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுமவனென்று திரளச்சொல்லுமத்தனை; பிரித்து வகையிட்டுச் சொல்லப்புக்கால் சொல்லி முடிக்கப்போகாது. ப்ரயோஜகத்திலே சொல்லுமித்தனை. ... ... (8)

ஒன்பதாம்பாட்டு. ப்ரஹ்மாதி ஸகல ஜந்துக்களுடைய ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுவான் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனென்னுமிடம் அர்த்தவாதமன்று, மெய்யென்கிறார்.

படைப்பொடுகெடுப்புக்காப்பவன் பிரமபரம்பரன் சிவப்பிரானவனே *
இடைப்புக்கோருருவுமொழிவில்லையவனே புகழ்வில்லையாவையுந்தானே *
கொடைப்பெரும்புகழாரினையர் தன்னனார் கூரியவிச்சையோடொழுக்கம் *
நடைப்பலியியற்கைத்திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறமர்ந்தநாதனே. (9)

[படைப்பொடு இத்யாதி] - ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம், பாலநம் இவையெல்லாம் தன்னதீநமாகவுடையவன். [பிரமபரம்பரன்] - மநுஷ்யாதிகளில் இந்த்ராதிகளுக்குண்டான ஏற்றம்போலே, அந்த இந்த்ராதிகளிலேற்றமுடையனான ப்ரஹ்மாவாகிற பராத்பரன். [சிவப்பிரான்] - அப்படியே தேவர்களில் தலைவலித்தானாயிருக்கிற ருத்ரன். அவர்களும் இவனிட்ட வழக்கு. [இடைப்புக்கு இத்யாதி] - நடுவே புக்கு ஒருபதார்த்தமும் ஸ்வதந்த்ரமாயிருப்பதில்லை; அடைய ப்ரகாரமாய்த் தான் ப்ரகாரியாயிருக்கும். [யாவையுந்தானே] - இங்ஙன் பிரித்துச் சொல்லுகிறதென்? சேதநாசேதநவிபாகமற அவனதீநம். [புகழ்வில்லை] - இதில் அர்த்தவாதமில்லை. ப்ரஹ்மாதிகளுக்கும் இவ்வேற்றங்கள் சொல்லக்கடவது; அது உபசாரம். இவ்விஷயத்தில் அர்த்தவாதசங்கையுமில்லை. இப்படி, எல்லாம் ஸ்வாதீநமாம்படி இருக்கிறவன் ஆர்? என்ன-'திருச்சிற்றாறமர்ந்தநாதன்' என்கிறார்-[கொடைப்பெரும்புகழார்]-அவ்வூரிலுள்ளார், கொடையால்வந்த பெரும்புகழையுடையார். எதிரிகளையும் தாநத்தாலே வசீகரிக்க வல்லாராயிருக்கை. தாநமும் ஸாமாதிகளிலே ஒன்றிறே. பெரும்புகழாவது - ஜ்ஞாநதாநம் : [* வித்யாதாநம்விசிஷ்யதே *] - [இனையர்] - "இன்னார்" "இன்னார்" என்று ப்ரஸித்தராயிருக்குமவர்கள்: [* விதேசெஷ்வபிவிக்யாதா: *] என்று சத்ருதேசத்திலும் ப்ரஸித்தராயிருக்கையாலே சத்ருக்கள் அங்கே சென்றால் மீளப்போகாதென்று இங்குவராதினையாதிருக்கை. 'இனையர்' என்றுபாடமானபோது, இப்படியிருப்பார் அநேகரென்கிறது. [தன்னனார்] - தன்னோடொத்தவர்கள். அவன்தன்னைப்போலே அதிகரித்த காரியத்தில் வெற்றிகொண்டல்லது மீளாதவர்கள். [கூரியவிச்சையோடொழுக்கம்] - ஸம்யக்ஜ்ஞாநமும், ஜ்ஞாநாநுரூபமான ஸமாசாரங்களும். எதிரிகளையறிந்து பரிஹரிக்கவல்ல ஜ்ஞாநங்களும், எதிரிகளுக்கு நலிய அவகாசமான ஆசாரவைகல்யமின்றிக்கேயிருக்கையும். இந்த்ரன் திதிகர்பத்தை அழிக்கைக்கு, ஆசாரவைகல்யமிறே அவகாசமாயிற்று. [* சத்ருதண்டஸ்ஸுவ்ருத்ததா *] [நடைப்பலி] - நித்யமான பகவத்ஸமாராதநம். நடையாகை - நிரந்தரமாகை. [பலி] - பூஜை. [இயற்கை] - இதுவே யாத்ரையாயிருக்குமவர்கள். [திருச்செங்குன்றூரில் இத்யாதி] - திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றில் நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேச்வரன் - படைப்பொடு கெடுப்புக்காப்பவன். ... (9)

பத்தாம்பாட்டு. ஸர்வேச்வரனுய்வைத்து ஸகலஜந்துக்களுக்கும் ஆச்ரயணீயனாகைக்காகத் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனை அநுபவிக்கப்பெற்றேனென்கிறார்.

அமர்ந்தநாதனை அவரவராகி அவர்க்கருளருளுமம்மானை *
அமர்ந்ததண்பழனத்திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை *
அமர்ந்தசீர்மூவாயிரவர் வேதியர்கள்தம்பதி அவனிதேவர்வாழ்வு *
அமர்ந்தமாயோனை முக்கணம்மானை நான்முகனையமர்ந்தேனே. (10)

[அமர்ந்தநாதனை] - உபயவிபூதிக்கும் நிருபாதிகசேஷியென்றால் போரும்படி இருக்கிறவனை. [*த்ரைலோக்யமபிநாதேநயேநஸ்யாந்நாதவத்தரம்*]-என்கிறபடியே, த்ரைலோக்யத்தையும் பெருமாளுக்குக் கையடைப்பாக்கினாலும் பின்னையும் ரக்ஷ்யம் சுருங்கி ரக்ஷகத்வத்துடிப்பே விஞ்சியிருக்கும். [*"யேந - நாதேந - நாதவத்தரம் - ஸ்யாத்"*] [அவரவராகி] - அர்த்திகள் கிட்டினால் அவர்கள் தந்தாமுக்கு நல்லராமாபோலே, அவர்களுக்கும் நல்லனாயிருக்குமவன். அவர்கள் இது நமக்கு வேணும் என்றிருக்குமாபோலே, இவர்களுக்கு இது வேணும் என்றிருக்கை. அங்ஙனன்றிக்கே, அவர்களுக்குப் பெறுகையிலே அர்த்தித்வம், கொடுக்கக் கொடுக்க கொள்ளுகையிலே அர்த்தித்வம் இவனுக்கு. பெற்றோமென்னும் ஹர்ஷம் அவர்களுக்கு; கொடுக்கப்பெற்றோமென்னும் ஹர்ஷம் இவனுக்கு. [அவர்க்கருளருளும்] - அவர்களபேக்ஷி தங்களைத் தன்பேறாகக் கொடுக்கை; கொள்ளுகிறவனுடைய இரப்பைத்தானுடையனாய்க் கொடுக்கை;[*ஸஸர்வாநர்த்திநோத்ருஷ்ட்வா ஸமேத்யப்ரதிநந்த்ய ச*] என்கிறபடியே.]அம்மானை] - ஸர்வேச்வரனை: பூர்ணனையென்னுதல், ப்ராப்தனையென்னுதல். [அமர்ந்ததண்பழனம் இத்யாதி] - சேர்ந்து குளிர்ந்த நீர்நிலங்களையுடைய திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையிலே நின்றருளினவனை. [அமர்ந்தசீர்] - சேர்ந்தகுணங்களையுடைய மூவாயிரம் ப்ராஹ்மணர். சேஷித்வத்துக்கு அவன் தக்கிருக்குமாபோலே, சொன்ன சொன்ன ஏற்றமெல்லாம் தகும்படி இருப்பர்கள். [வேதியர்கள் தம்பதி] - மூவாயிரவரளவன்றிக்கே ப்ராஹ்மணஜாதிக்காக வாஸஸ்தாநம். [அவனிதேவர்வாழ்வு] - பூஸுரரான வைஷ்ணவர்களுக்கு ப்ராப்யபூமி. [அமர்ந்தமாயோனை]-அத்தேசத்திலே நித்யவாஸம்பண்ணுகிற ஆச்சர்யபூதனான ஸர்வேச்வரனை. [முக்கணம்மானை நான்முகனையமர்ந்தேனே] - ப்ரஹ்மாதிகளுடைய ஸத்தாதிகளுக்கு நிர்வாஹகனானவனை. ப்ரஹ்மருத்ரர்களைப் பலகால் சொல்லுகிறது - இவனுடைய நிர்வாஹகத்வம் தோற்றுகைக்காகவும், நிர்வாஹ்யங்களிலே யொன்றால் நலிவுண்டாகை கூடாதென்கைக்கும். அன்றிக்கே, "அமர்ந்தமாயோன்" என்று வைத்து, இவர்களைச் சொல்லித் தலைக்கட்டுகையாலே - ஸமாநாதிக்ருதசப்தங்கள் விசேஷ்யத்திலே பர்யவஸிக்கக் கடவதாகையாலே, ப்ரகாரியானவனை. [அமர்ந்தேனே] கிட்டப்பெற்றேனென்கிறார். [*பூதாநிவிஷ்ணு:*] இத்யாதிவத். ... ... (10)

நிகமத்தில் - இத்திருவாய்மொழியை அப்யஸிப்பார்க்கு, இதுதானே முதலிலே பரமபதத்தேறக்கொடுபோய், பின்னை ஸம்ஸாரமாகிற மஹாநாடகத்தை அறுக்குமென்கிறார்.

தேனைநன்பாலைக்கன்னலையமுதைத் திருந்துலகுண்டவம்மானை*
வானநான்முகனைமலர்ந்ததண்கொப்பூழ் மலர்மிசைப்படைத்தமாயோனை*
கோனைவண்குருகூர்வண்சடகோபன் சொன்னவாயிரத்துளிப்பத்தும்*
வானின்மீதேற்றியருள்செய்துமுடிக்கும் பிறவிமாமாயக்கூத்தினையே. (11)

[தேனை இத்யாதி] - இவருடைய பயசங்காஹேதுக்கள் சொல்லுகிறது. அவனுடைய ரஸ்யதையிறே இவரை அஞ்சப்பண்ணுகிறது. எனக்கு ஸர்வவிதபோக்யனானவனை, [*ஸர்வரஸ:*] என்னக்கடவதிறே. [திருந்துலகுண்ட இத்யாதி]-மேல் பயநிவ்ருத்தி ஹேதுக்

களைச் சொல்லுகிறது. கட்டளைப்பட்ட ஜகத்தை ப்ரளயத்திலே அழியாதபடி திருவயிற்றிலே வைத்துப் பரிஹரித்த பெரியோனை. [வானம் இத்யாதி] [கொப்பூழ்-மலர்ந்ததண் - மலர்மிசை வானான்முகனை - படைத்த மாயோனை] - வானிலேயிருக்கிற சதுர்முகனை, ஸ்ருஷ்ட்யநுகுணமான செவ்வியையுடைய திருநாபீ கமலத்திலே ஸ்ருஷ்டித்த ஆச்சர்யபூதனை. [கோனை] நிருபாதிகசேஷியை. கீழ் ப்ரஹ்மாதிகளுக்குச் சொன்ன ஐக்யம் ஸ்வரூபேணவன்று, கார்யகாரணபாவத்தாலே சொல்லிற்றென்னுமிடம் இங்கே ஸ்பஷ்டம். ஆபத்ஸகனாய், அழிந்தவற்றை உண்டாக்கவல்லனாய், ப்ராப்தனாயிருக்குமவனென்கை. [வண்குருகூர் இத்யாதி] ஆராஜகமானால் ராஜபுத்ரன் தலையிலே முடியைவைத்து விலங்கு வெட்டிவிடுமாபோலே; இப்பத்துத்தானே முந்துற பரமபதத்தைக் கொடுத்து, பின்னை ஸம்ஸாரமாகிற மஹாநாடகத்தையும் அறுக்கும். ... ... (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

வாராமலச்சமினி மால்தன்வலியினையும்*
சீரார் பரிவருடன்சேர்த்தியையும் —பாருமெனத்
தானுகந்தமாறன்தாள் சார்நெஞ்சே! சாராயேல்*
மானிடவரைச் சார்ந்தமாய்.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்,
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஐந்தாம் திருவாய்மொழி — மாயக்கூத்தா — ப்ரவேசம்

கீழிரண்டு திருவாய்மொழியிலுமாக பகவத்தத்த்வம் பிறராலே அழியப்புகுகிறதென்று வெறுத்தார்; இதில் தம்முடைய ஆர்த்தநாதத்தாலே அவனை அழிக்கப் பார்க்கிறார். கீழில் திருவாய்மொழியிலே அவனுக்குப் பரிவருண்டென்று பயமுந்தீர்ந்து வடிவழகையநுபவித்தாராய் நின்றார். அவ்வழகு, நெஞ்சிலே, "திகழுவென்சிந்தையுளிருந்தான்" என்கிறபடியே ஊற்றிருந்து, பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து, அதுபெறாமையாலே, "கீழ்ப்பட்டக்லேசங்களெல்லாமொன்றுமல்ல, இதிலே ஒருகலாமாத்ரம்" என்னும்படி நொந்து, காட்டுத் தீ கதுவினாற்போலே தப்தராய, தப்பிற்காட்டிலும் ஆகுலமான கரணங்களையுடையராய், "என் விடாயெல்லாந்தீரும்படி திவ்யாவயவங்களோடே வர வேணும். அழகியதிருவபிஷேகத்தோடே வரவேணும், மேகம்போலே வரவேணும், அழகியவடிவோடே வரவேணும்: உதயஜமயத்திலாதித்யனைப்போலே பெரியபுகரோடே வரவேணும்" என்றாற்போலே கூப்பிட்டு, பின்னையும் அவன்வந்து முகங்காட்டக்காணாமையாலே, நாம் இந்த க்லேசத்தோடே முடிந்துபோமித்தனையாகாதே யென்று இழவோடே தலைக்கட்டுகிறது ... ...

முதற்பாட்டு. என்விடாயெல்லாந்தீரும்படி, ஒருதாமரைத்தடாகம் போலேவந்து தோற்றியருளவேணு மென்கிறார்.

மாயக்கூத்தா! வாமனா! வினையேன்கண்ணா! கண்கைகால்*
தூயசெய்யமலர்களாச் சோதிச்செவ்வாய்முகிழதா*
சாயல்சாமத்திருமேனி தண்பாசடையா* தாமரை நீள்
வாசத்தடம்போல்வருவானே! ஒருநாள்காணவாராயே! (1)

[மாயக்கூத்தா] - ஆச்சர்யங்களையும் மநோஹாரிசேஷ்டிதங்களையு முடையவனே! இந்த்ரனுடைய இழவுபட்ட தலைகட்டுகைக்காக அன்றேபிறந்து அன்றே வளர்ந்து அன்றே இரப்பிலே அதிகரிக்கையும், மஹாபலி யஜ்ஞவாடத்தளவும் தர்சநீயமாம்படி நடந்து சென்று "மாவலீ" என்றாற்போலே முக்தஜல்பிதங்கள் முதலான மநோஹாரி சேஷ்டிதங்களையு முடையவனே! நடந்துசென்றநடை, வல்லாராடினாற்போலே யிருக்கிறதாயிற்று இவர்க்கு. [வாமனா] - இரந்தது இரந்தவர்க்கீகையே ப்ரயோஜநமாயிருக்கிறவன்கிடீர், தன்னைக்காண்கையே ப்ரயோஜநமாயிருக்கிற என்னை இரப்பாளனாக்கி இரங்காதிருக்கிறான். [வினையேன் கண்ணா] - ஸ்ரீவாமநனாய் அவதரித்தது இந்த்ரனுக்காப்போலே, க்ருஷ்ணனாய் அவதரித்தது தமக்காக என்றிருக்கிறார். அவதாரங்கள் நடுவில் க்ருஷ்ணாவதாரத்தில் ஆண்மையாலே சொல்லுகிறார். ஸர்வஸாதாரணனுடைய அவதாரமாகையாலே, உகந்தவர்களுக்கெல்லாம் "எனக்கு" என்னலாயிருக்கையாலே சொல்லுகிறாரென்றுமாம். வினையேனென்கிறது - பல்லிலேபட்டுத் தெறித்தாற்போலே, அவதாரத்துக்குப் பிற்பட்டபடியாலே சொல்லுகிறார். [கண்கைகால் தூயசெய்யமலர்களா] - கிட்டினாரோடு முகநுறவுபண்ணும் கண், நோக்குக்குத் தோற்றவர்களை அணைக்கும் கை, ஸ்பர்சத்துக்குத் தோற்றவிழும் திருவடிகள், - அங்கேகிடாது தலையெடுத்து அநுபவிக்குமதாய்க் கண்டபோதே விடாயதீரும்படி ச்யாமமான திருமேனிக்குப் பரபாகமான நிறத்தையுடைத்தான தாமரைப்பூவாக. [சோதிச்செவ் வாய் முகிழதா] - புகரையுடைத்தாய்ச் சிவந்திருக்கிற திருவதரமானது, அதில் முகுளமாக. [*அவாக்யநாதர*:] என்கிற தத்வமாகையாலே, காம்பீர்யாதிசயத்தாலே, ஸ்மிதம் விகாஸோந்முகமான அளவாய்த்தேயிருப்பது; ஆகையாலே - முகுளமென்கிறது. [சாயற்சாமத்திரு மேனிதண்பாசடையா] - ஒளியையுடைத்தாய் ச்யாமமான திருமேனி, குளிர்ந்தபச்சிலையாக; [*புண்டரீகாப:*] "அக்கமலத்திலைபோலும்" என்கிறபடியே. [தாமரைநீள் வாசத் தடம்போல் வருவானே] - மட்டமாரத் தாமரைமலர்ந்திருப்பதாய், ஏகார்ணவத்தை ஒரு தடாகமாக்கினாற்போலே பரந்திருப்பதாய், அப்பரப்படங்கப் பரிமளத்தாலே நிரம்பியிருப்பதொரு தடாகம்நடந்துவருமாபோலேயாயிற்று, பரிமளம் முன்பே அலையெறிய வரும்போதிருப்பது: [*ஸர்வகந்த:*] என்னக்கடவதிறே. [வருவானே] - வரும்வல்லபவனே! முன்பு தபலக்கல் வரும்படியை உபகாரஸ்ம்ருதியாலே சொல்லுகிறார். [ஒருநாள்] - "ஒருநாள் நாக்குநீளக" என்னுமாபோலே. [காண] - வந்தால் கொள்ளும் ப்ரயோஜநம், காணுமித்தனை. ஒருதேசவிசேஷத்திலும் ஸதாதர்சநத்திலேயிறே ஆர்வம். அப்பேறுபெறும்படி. [வாராயே] - அதனையாலே நாக் காணவிருக்குமளவிறே; [*தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்*] என்கிறபடியே, தாம் கிட்டிக் காணுமது ஸ்வரூபவிரோதமென்றிருக்கிறார். ... ... (1)

இரண்டாம்பாட்டு. என்விடாய் கெடும்படி அழகியமயிர்முடியுடனே வந்து தோற்றியருளவேணு மென்கிறார்.

காணவாராயென்றென்று கண்ணும் வாயும்துவர்ந்து* அடியேன்
நாணிநன்னாட்டலமந்தால் இரங்கியொருநாள்நீயந்தோ!*
காணவாராய்கருநாயிறுதிக்கும் கருமாமாணிக்கம்*
நாள்நல்மலைபோல்சுடர்ச்சோதி முடிசேர்சென்னியம்மானே! (2)

[காணவாராயென்றென்று] ஒருகால் "காணவாராய்" என்றால் வரக்காணவிட்டால், ஆறியிருக்கவல்லரன்றே; பின்னையும் "காணவாராய், காணவாராய்" என்பாராயிற்று. [கண்ணும் வாயும் துவர்ந்து] - எங்கேனவருமென்று அறியாமையாலே, திக்குக்கள்தோறும் பார்த்துக் கண்பசையறவுலர்ந்தது. ["கண்ணநீர்கைகளாலிறைக்கும்" என்னும் தசையும் கழிந்தது. கூப்பிட்டு வாயும் பசையறவுலர்ந்தது. [அடியேன் நாணி] - அதிலேயில் அவத்யம் நம்மதாம்படியான ஸம்பந்தமுடைய நான் லஜ்ஜித்து. இவனை நாட்டார் என்சொல்லுகிறார்களென்று லஜ்ஜித்தேன்னுதல்; ப்ரயோஜநார்த்தியாய்க் கூப்பிடுகையன்றியே, முறையறிந்து காண்கைக்குக் கூப்பிட்ட நமக்குத் தன்படி அழகிதாயிருந்ததென்று லஜ்ஜித்தேன்னுதல். [நன்னாடு] - *அநந்தக்லேசபாஜநமாகையாலே விபரீத லக்ஷணையாதல், விஷயாநுபவத்தாலே களித்துவர்த்திக்கும் தேசமென்னுதல். பிள்ளான், "எம்பெருமானைப்பெற்று அநுபவிக்கும் நாடுகாண்" என்னுமாம், "இல்லையாகில் கூப்பிடார்களோ?" என்று. [அலமந்தால்] - தடுமாறினால். [இரங்கி] - உனக்கு அபேக்ஷையில்லாவிட்டால் பரார்த்தத்துக்கு இரங்கவேண்டாவோ? ருஷிகளுக் குள்ள ஆந்ருசம்ஸ்யமு மில்லையோ? [ஒருநாள்] - பலநாள் வேணுமென்கிறேனோ? [நீ] - கண்டுகொண்டு நிற்கவேண்டும்படி வைலக்ஷண்யத்தையுடைய நீ. [அந்தோ] - உன் வைலக்ஷண்யம் அறியாதொழிந்தால், என்னார்த்தியும் அறியாதொழிவதே! [காணவாராய்] - ப்ரயோஜநார்த்தியாய் அழைக்கிறேனோ. [கருநாயிறுதிக்கும்] - கறுத்திருக்கிற ஆதித்யனுதிக்கிற. [கருமாமாணிக்க நாள்நல்மலைபோல்] - அவ்வாதித்யனுதிக்கிற உதயகிரி இருக்கிறபடி. நீலமாய்ப் பெருவிலையனான ரத்னபர்வதம்போலே. [நாள்நல்மலை] - "நாட்பூ" என்னுமாபோலே, அபிநவமாய் தர்சநீயமான மலை. "கருமாமாணிக்கம் - நன்மலைமேல் - கருநாயிறுதிக்கும் பொழுது போல் - முடிசேர்சென்னியம்மான்" என்று கூட்டுவது. நாள் - பொழுது. [சுடர்ச்சோதிமுடி] - மிக்க புகரையுடைய மயிர்முடி. 'கருநாயிறுதிக்கும்' - என்கிற த்ருஷ்டாந்தபலத்தாலே, முடியென்று - மயிர்முடியாகிறது. [சேர்சென்னி] - அதுக்கு ஆச்ரயமான திருமேனி ரத்நபர்வதம்போலேயாயிற்றிருப்பது. [அம்மானே] - ஸர்வேச்வரனே! ஸம்ஸாரி புக்களைச்சென்றால், தாபஹரமாக அவனுக்குச் செய்வது திருக்குழலைப்பேணுமத்தனை. [*கேசவ:க்லேசநாசந:*] என்றிறே இருப்பது. ... ... (2)

மூன்றாம்பாட்டு. தெளிந்தநீரைப்பருகின காளமேகம்போலே ச்ரமஹரமான வடிவோடே என்னார்த்தி தீரவந்து தோற்றவேணுமென்கிறார்.

முடிசேர்சென்னியம்மா! நின்மொய்பூந்தாமத்தண்துழாய்*
கடிசேர்கண்ணிப்பெருமானே! என்றென்றேங்கியழுதக்கால்*
படிசேர்மகரக்குழைகளும் பவளவாயும்நால்தோளும்*
துடிசேரிடையுமமைந்தது ஓர் தூநீர்முகில்போல்தோன்றாயே. (3)

[முடிசேர்சென்னியம்மா] - ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகம் சேர்ந்த சென்னியையுடைய ஸர்வேச்வரனே! [நின்மொய்பூந்தாமத்தண்துழாய்] - தகுதியாய்ச் செறியத் தொடுக்கப்பட்டு மநோஹரமாய் ஒளியையுடைத்தாய் ச்ரமஹரமாய், நாட்செல்ல நாட்செல்லப் பரிமளம் மிக்குச்செல்லுகிற திருத்துழாய்மாலையையுடைய ஸர்வேச்வரனே. [என்றென்று] - ஒருகால்சொல்லி ஆறியிருக்கிறேனைத்தான் ஆறியிருக்கிறாயோ? [ஏங்கியழுதக்கால்] - பொருமி அழுதக்கால், என்னழுகைக்குரலில் தளர்த்தியைக்கேட்டால் சடக்கெனவந்துகொடு நிற்கவேண்டாவோ? [படிசேர்மகரக்குழைகளும்] - படியாய்ச் சேர்ந்த வென்னுதல், படியிலேசேர்ந்தவென்னுதல்; ஸ்வபாவமாய்க்கொண்டு சேர்ந்தவென்னுதல்,

திருமேனியிலேசேர்ந்த வென்னுதல். "படிகண்டறிதியே" என்னக்கடவதிறே [பவளவாயும்]- பந்தமெல்லாந்தோற்றும் திருப்பவளமும். [நால்தோளும்] - அணைக்கைக்குக் கல்பகதருபணைத் தாற்போலே நாலுதோளும். [தடி இத்யாதி] - துடிபோலேயிருந்த இடையுமாய்க்கொண்டு சமைந்ததொரு முகில்போலேயாயிற்று வடிவிருப்பது. இவ்விசேஷணங்கள் கேவலம் முகிலுக்கு இல்லாமையாலே அபூதோபமை. [தூநீர்முகில்] - தெளிந்தநீரைமுகந்த முகில். அகவாயில்தண்ணளியெல்லாம் வடிவிலே காணலாம்படி வந்துதோற்றவேணும். (3)

நாலாம்பாட்டு. உன்னுடைய வடிவழகுவந்து என்மநஸ்ஸிலே நிறைந்து நலிகிறபடி என்னால் பேசிமுடிகிறதில்லையென்கிறார்.

தூநீர்முகில்போல்தோன்றும் நின்சுடர்கொள்வடிவுங்கனிவாயும் *
தேநீர்க்கமலக்கண்களும் வந்தென்சிந்தைநிறைந்தவா *
மாநீர்வெள்ளிமலைதன்மேல் வண்கார்நீலமுகில்போல *
தூநீர்க்கடலுள் துயில்வானே! எந்தாய்! சொல்லமாட்டேனே. (4)

[தூநீர்முகில்போல்தோன்றும்] - கண்டபோதே விடாய்கெடும்படியான வர்ஷுக வலாஹகம் போலேயாயிற்றுத் தோன்றுவது. [நின்சுடர்கொள்வடிவும்]- சுத்தஸத்வமயமாகையாலே நிரவதிகதேஜோரூபமான விக்ரஹத்துக்கு, அன்னலும் துன்னலுமாய்த் திரண்ட மேகத்தை ஒப்பாகச் சொல்லவொண்ணாதிறே. *ஒண்சுடர்க்கற்றையிறே. [கனிவாயும்] - கண்டபோதே நுகரலாம் கனிபோலேயிருக்கிற வாயும். [தேநீர்க்கமலக்கண்களும்] - தேனாகிற நீரையுடைத்தான தாமரைப்பூப்போலேயிருந்த கண்களும். இத்தால் - செவ்வியை நினைக்கிறது. தேனினுடைய நீர்மையையுடைய கண்களென்றுமாம். அதாவது - கண்ணாலே பருகலாயிருக்கை. [வந்தென்சிந்தைநிறைந்தவா] - வந்து என் சிந்தைநிறைந்தவா - சொல்லமாட்டேனென்றந்வயம். இதர விஷயங்கள் அநுபவித்துவிட்டால் விஸ்மரிக்கலாயிருக்கும்: இவ்விஷயம் அநுபவித்துப் போநின்றாலும் நெஞ்சிலேயூற்றிருக்கும். [மாநீர்வெள்ளிமலைதன்மேல்] - மிக்க நீர்வெள்ளத்தே ஒருவெள்ளிமலையின்மேலே. [வண்கார்நீலமுகில்போல] -உதாரமாய்க் கறுத்து நெய்த்திருப்பதொருமுகில் படிந்தாற்போலே யென்னுதல். உதாரமாய் கார்காலத்தில் முகில் படிந்தாற்போலே என்னுதல்- [தூநீர்க்கடலுள் துயில்வானே] - சுத்தஜலத்திலே திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறவனே! வெள்ளிமலை யென்கிற த்ருஷ்டாந்தபலத்தாலே தார்ஷ்டாந்திகத்திலும் அழைத்துக்கொள்ளுமித்தனை. [எந்தாய்] -கீழ்ச்சொன்ன வைலக்ஷண்யமில்லையாகிலும் விடவொண்ணாத ப்ராப்தியிருக்கிறபடி. [எந்தாய்-வந்தென்சிந்தைநிறைந்தவா சொல்லமாட்டேன்] - மநஸ்ஸில் ப்ரகாசம் க்லேசஹேதுவாகாநின்றது, இதுக்கு ஒரு பாசுரம் அறிகிறிலேன். விரஹதசையில் குணாநுஸந்தாநம் க்லேசத்துக்கு உடலாமத்தனையிறே. தூநீர்க்கடலுள் துயில்வானென்று - "காணவேணும்" என்னும் அபேக்ஷையில்லாதார்க்கு முற்பாடனாய்வந்து சாய்ந்தபடி சொல்லுகிறது. ... ... (4)

அஞ்சாம்பாட்டு. உன்னுடைய அழகு என் ஹ்ருதயத்திலே ஸ்ம்ருதி விஷயமாய் நலியாநின்றது; இது மறக்க ஒருவிரகு சொல்லவேணுமென்கிறார்.

சொல்லமாட்டேனடியேன் உன்துளங்கு சோதித்திருப்பாதம் *
எல்லையில்சீரிளநாயிறு இரண்டுபோலென்னுள்ளவா *
அல்லலென்னுமிருள் சேர்தற்கு உபாயமென்னே ? ஆழிசூழ் *
மல்லைஞாலமுழுதுண்ட மாநீர்க்கொண்டல்வண்ணனே! (5)

[சொல்லமாட்டேன்] - என் ஹ்ருதயத்திலே நின்று நலிகிறபடிக்குப் பாசுரமிடப் போகிறதில்லை. [அடியேன்]-ஸம்பந்தத்தாலே தவிரமாட்டுகிறிலேன். [உன்துளங்கு இத்யாதி] அசேதென்ன, விளங்காநின்றுள்ள ஒளியையுடைய உன்திருவடிகள். [எல்லை இத்யாதி]- அள

விறந்த அழகையுடைய பாலாதித்யர்களிருவரைப்போலே என் ஹ்ருதயத்தே நின்று நலிகிறபடி. பாலாதித்யர்களென்கிறது *கண்ணாலே பருகலாயிருக்கையாலும், பாதிக்கத்தொடங்கின வித்தனை என்று தோற்றுகையாலும். [இளநாயிறு] - என்னை பாதிக்க பாதிக்க இளமைமிகுகிறபடி. [என்னுள்ளவா சொல்லமாட்டேன்] [அல்லல் இத்யாதி] [உன்னைக்காட்டாதே அருமைப்படுத்தப் பார்த்தாயாகில் நாட்டார் 'தண்ணிது' என்கிற அஜ்ஞாநம் வருவது ஓருபாயம் ஏதோ?" என்றருளிச் செய்வர் பட்டர்; இப்போது மறந்து பிழைக்கலாமென்னுமதனாலே. "திருவடிகள் என் ஹ்ருதயத்திலே ப்ரகாசியாநிற்க, து:காத்மகமாம் அஜ்ஞாநம் வருகைக்கு உபாயமுண்டோ" என்னும் அம்மாள். உண்டாகில், உண்டுடுத்துத் திரியலாமே நாட்டாரோபாதி. [ஆழி இத்யாதி] - கடல்சூழ்ந்த மஹாப்ருதிவியையெல்லாம் ப்ரளயத்திலே நசியாமே வயிற்றிலேவைத்து ரக்ஷித்த பரமோதாரனே! ஆழிசூழ்மல்லைஞாலம் முழுதுண்டமாநீரென்று - ஏகார்ணவமாய் அத்தைப்பருகின மேகம்போலே யிருக்கிற வடிவையுடையவன் என்னுதல். மல்லைஞாலம் - மஹாப்ருதிவி. ... ... (5)

ஆறும்பாட்டு. உன்னுடைய ஸௌந்தர்யாதிகளை நினைத்து "காணவேணும்" என்று கூப்பிடுகிற நான் காணும்படி ஏதேனுமோரிடத்திலேவந்து தோற்றியருளவேணுமென்கிறார்.

கொண்டல்வண்ணா! குடக்கூத்தா! வினையேன்கண்ணா! கண்ணா! * என்
அண்டவாணா! என்றுஎன்னையாளக்கூப்பிட்டழைத்தக்கால் *
விண்தன்மேல்தான்மண்மேல்தான் விரிநீர்க்கடல்தான்மற்றுத்தான் *
தொண்டனேனுன்கழல்காண ஒருநாள்வந்து தோன்றாயே. (6)

[கொண்டல்வண்ணா] - காணவே விடாயாறும்படியான வடிவையுடையவனே! [குடக்கூத்தா] - மநோஹாரியான சேஷ்டிதத்தையுடையவனே! [வினையேன் கண்ணா கண்ணா]- எனக்கு த்ருஷ்டிபூதனான க்ருஷ்ணனே! [வினையேன்] - கண்ணையிழந்திருக்கும்படியான பாபத்தைப் பண்ணினேன். [என்னண்டவாணாவென்று] - என்னை விஷயீகரிக்கைக்காக அண்டாதிபதியானவனே! கல்யாணகுணயோகம் ஆச்ரிதார்த்தமாய் இருக்குமாபோலே, விபூதியோகமும் தமக்காகவென்றிருக்கிறார். [என்னையாள] - ஒரு ப்ரயோஜநாந்தரத்துக்காக அழைக்கிறேனோ? என்னை நித்யகைங்கர்யங்கொள்ளவேணுமென்றன்றோ அழைக்கிறது? [கூப்பிட்டழைத்தக்கால்] - க்ரமப்ராப்தி ஸஹிக்கவல்லேனாய்த்தான் தாழ்க்கிறாயோ? என் ஆர்த்தநாதங்கேட்டால் "க்ரமத்திலே வருகிறோம்" என்று ஆறியிருக்கலாயிருந்ததோ? [விண்தன்மேல்தான்] - மாநீர்க்கொண்டல் ஸஞ்சரிக்கும் ஆகாசத்திலே தோற்றவுமமையும். [விண்தன்மேல்தான்]-பரமபதத்திலிருக்கிற இருப்போடேவந்து தோற்றவுமாம். [மண்மேல்தான்] - அவதரித்துத்தோற்றவுமாம். [விரிநீர்க்கடல்தான்] - க்ஷீராப்தியில் கண்வளர்ந்தருளுகிறபடியே வந்து தோற்றவுமாம். [மற்றுத்தான்] - தூணிலேவந்து தோற்றினாப்போலே யாதல், ஆனைக்குவந்து தோற்றினாப்போலே யாதல் தோற்றவுமாம். [தொண்டனேன்] - உன் திருவடிகளில் கைங்கர்யத்தில் சபலனான நான். [உன்கழல்காண] - எனக்கு ஜீவநமான திருவடிகளைக்காண. [ஒருநாள் வந்து தோன்றாயே] "பலநாள்வேணும்" என்று நிர்ப்பந்திக்கிறேனோ? என் ஸத்தை கிடக்கைக்கு ஒருநாள் வந்து தோற்றியருளவேணும். (6)

ஏழாம்பாட்டு. இங்கேவந்து தோற்றியருளுதல், அது திருவுள்ளமல்லவாகில் அங்கே யழைத்து அடிமைகொள்ளுதல் செய்தருளவேணுமென்கிறார்.

வந்துதோன்றாயன்றேல் உன்வையந்தாயமலரடிக்கீழ் *
முந்திவந்துயான்நிற்ப முகப்பேகூவிப்பணிகொள்ளாய் *
செந்தண்கமலக்கண்கைகால் சிவந்தவாயோர்கருநாயிறு *
அந்தமில்லாக்கதிர்பரப்பி அலர்ந்ததொக்குமம்மானே! (7)

[வந்துதோன்றாய்] - என் கண்வட்டத்திலேவந்துதோன்றவேணும். தந்தைகாலில் விலங்கற வந்துதோன்றிய தோன்றலையிறே வந்து தோன்றாயென்கிறது. [அன்றேல்]-என்னார்த்தியைப்பார்த்து உன்னுடைய க்ருபையாலே வந்து முகங்காட்டப்பார்த்திலையாகில், உன் பூர்த்தியையும் என் சிறுமையையும் பார்த்து முகங்காட்டப் பார்த்திலையாகிலென்றுமாம். [உன்னையந்தாயமலரடி] - வஸிஷ்டசண்டாளவிபாகம் பாராத திருவடிகள். [மலரடி] - ஒரு செவ்விப்பூவைக்கொண்டாயிற்றுக் காடுமோடையுமளந்தது. [மலரடிக்கீழ் முந்திவந்துயான் நிற்ப] - நிரதிசயபோக்யமான திருவடிகளின்கீழே முற்பாடனாய் வந்து நிற்கும்படியாக. [முகப்பே] - கண்வட்டத்திலே. [கூவிப்பணிகொள்ளாய்]- சோற்றையிட்டுப் பணிகொள்ளாய் ["க்ரியதாமிதிமாம்வத "] என்று கண்முகப்பே அடிமை கொண்டருளவேணும். குணஜ்ஞாநத்தாலேதரித்திருக்கும் ஸ்ரீபரதாழ்வான்ப்ரக்ருதியல்லேன்: [*ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ*] என்னும் இளையபெருமாள்ப்ரக்ருதியான என்னை அடிமைகொண்டருளவேணும். "வழுவிலாவடிமைசெய்யவேண்டும்" என்றும், "நின்னலாலிலேன்" என்றும் இட்டுவைத்தவிடத்தில் கிடக்கமாட்டேன். "நன்றுமஞ்சுவன்நரகம்நானடைதல்" என்னுமவரிறே. [செந்தண் இத்யாதி] - சிவந்து குளிர்ந்த தாமரைபோலே கண்ணையும் கையையும் காலையுமுடையனாய், சிவந்த வாயையுடையனாய், நீலமான நிறத்தையுடையனாயிருப்பானொரு ஆதித்யன், "ஸஹஸ்ரம்" என்று ஒரு ஸங்க்யையின்றிக்கே அளவிறந்த கிரணங்களைப் பரப்பிக்கொண்டு விகஸிதமானாற்போலே வந்து தோன்றவேணும். [அம்மானே] -உன்மேன்மையைப் பார்த்து அங்கேயழைத்து அடிமைகொள்ளுதல், உன்னுடைமை நசியாமைக்கு த்வரையுண்டாகில் இங்கேவந்து அடிமை கொள்ளுதல் செய்தருளவேணும். (7)

எட்டாம்பாட்டு. உனக்குப்போலியான மேகதர்சநத்தாலே நோவுபடாநிற்க, வந்து முகங்காட்டுகிறிலை; இதுவோ உன்ஸங்கஸ்வபாவம்? என்கிறார்.

ஒக்குமம்மானுருவமென்று உள்ளங்குழைந்து நாணாளும்*
தொக்கமேகப்பல் குழாங்கள் காணுந்தோறுந்தொலைவன் நான்*
தக்கவைவர் தமக்காய் அன்றுஈரைம்பதின்மர் தாள்சாய*
புக்கநல்தேர்த்தனிப்பாகா! வாராயிதுவோ பொருந்தமே* (8)

[ஒக்குமம்மானுருவமென்று] - "ஸர்வேச்வரன்வடிவு இதரவிஜாதீயம்" என்று புத்திபண்ணாநிற்கச்செய்தே, * தூமஜ்யோதிஸ்ஸலிலமருதாம் ஸமூஹமான மேகத்தை ஸத்ருசமென்று ப்ரமிப்பர். [உள்ளங்குழைந்து] - இது தோற்புரையன்றியே -அகவாய் சிதிலமாய். [நாணாளும்]- இந்தசைதில்யம் காதாசித்கமன்றிக்கே, இடைவிடாமல் செல்லுகை. [தொக்கமேகப்பல்குழாங்கள்] - மேகசகலங்களுக்குஇடையார்; திரண்டமேகஸமூஹங்களைக் காணுந்தோறும்.[நாணாளும்-தொலைவன்] தர்மிலோபம்பிறக்கிறதுமில்லை. ஜீவித்திருக்கவும் பெறுகிறிலேன். [நான்] - மேகதர்சநம் நாட்டார்க்கு ஆச்வாஸஹேதுவிறே. [தக்கவைவர்] - என்ன மேகதர்சநத்துக்கு இடைந்து பாண்டவர்களை நோக்கிற்று? "பந்துக்கள் ஜீவிக்கவேணும், எங்களுக்கும் ஐந்துகுடிக்காடு அமையும்" என்னும் தக்கோர்மையுடைய ஐவர். [தமக்காய்] [*ரதம்ஸ்த்தாபய*]என்னும்படிகையாளாய். [அன்று] அவர்கள் தனியரான அன்று. [ஈரைம்பதின்மர்தாள்சாய]- "பந்துக்கள் ஜீவிக்கில் ஜீவியோம்" என்ற நூற்றவரும் காலறும்படியாக. [புக்க]-தூசித்தலையிலே புக்க. இவனை ஸாரதியாகவுடைத்தானையாலே அதிச்லாக்யமான தேர். [தனிப்பாகா]-தனியே நிர்வாஹகனானவனே! ரதியைக்காண்கிறிலர். [*நகாங்க்ஷேவிஜயம்க்ருஷ்ண*] என்றவனைச் சேமம்சாத்திவைத்து வ்யாபரிக்கையாலே, ஸாரதியையாயிற்று இவர் காண்கிறது. [வாராய்] -ஸேநயோருபயோர்மத்யேரதம்ஸ்த்தாபய*] என்ன, உபயஸேனையின் நடுவே தேரை நிறுத்தின நீ, அத்தேரை இம்மேகங்களின நடுவே நடத்தினலாகாதோ? ஐவருமாய், எதிரிகள் ஸங்க்யாதருமானாலோ உதவல்ரவது? தனியனுமாய மேக சமூகங்கள் அஸங்க்யாதமானால் உதவலாகாதோ? [இதுவோபொருத்தம்] -

ஆச்ரிதரோடுமுன்பு நீ பொருந்திப்போந்தபடி. இதுவோ? ஆச்ரிதர்க்காக ஸாத்யஸாதனங்கள் பண்ணியும், "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், பகலை இரவாக்கியும் பக்ஷபதித்தது பொய்யோ: [*நாராயணகதாமிமாம்*]என்றவனும் கைக்கூலிகொண்டு புலமைபாடினனாதே யென்கிறார். இப்போது தமக்கு உதவில் அவை மெய்யாவதென்றிருக்கிறார். [வாராய்]-எனக்கு இதெல்லாம் வேணுமோ? முகங்காட்டவமையாதோ? .... (8)

ஒன்பதாம்பாட்டு. அந்திமதசையில் ஸ்வர்க்கத்தேறப்போன இவர்கள்நிற்கிடீர்; திருவாழியாழ்வான் முதலான நித்யரோடும் பொருத்தமிதுவோ? என்று ஸ்வகதமாக விசாரிக்கிறார். இருந்ததேகுடியாக ரக்ஷிக்கவந்த க்ருஷ்ணன், தன்னைக்காண்கையே தேட்டமான எனக்கு என்செய்தருளுமென்று நினைக்கிறாராகவுமாம்.

இதுவோபொருத்தம்? மின்னாழிப்படையாய்! ஏறுமிருஞ்சிறைப்புள்*
அதுவே கொடியாவுயர்த்தானே! என்றென்றேங்கியழுதக்கால்*
எதுவேயாகக்கருதுங்கொல்? இம்மாஞாலம்பொறைதீர்ப்பான்*
மதுவார்சோலை உத்தரமதுரைப்பிறந்தமாயனே. (9)

[இதுவோபொருத்தம்]- இப்படிக்கூப்பிடச்செய்தேயும் வரக்காணாமையாலே கண்ணுஞ்சுழலைபிட்டு, மீண்டும் 'இதுவோபொருத்தம்?' என்கிறார். [மின்னாழிப்படையாய்]- மேகத்திலே மின்னினாற்போலே, ஆச்ரிதவிரோதிநிரஸநசீலமான திருவாழியைப்படையாகவுடையவனே!அத்திருவாழியைக்கொண்டு என்னுடைய ப்ரதிபந்தகத்தின் மேலே வ்யாபரித்தாலாகாதோ? [ஏறும் இத்யாதி] - ஏறக்கடவ பெரியசிறகையுடைய புள்ளானதுதன்னையே த்வஜமாக எடுத்தவனே! ஆச்ரிதரை எல்லாவடிமையும் கொள்ளுமவனன்றோ? [என்றென்றேங்கியழுதக்கால்]- இப்பாசுரம் மாறாதே பொருமிப் பொருமி அழாநின்றால். [எதுவேயாகக்கருதுங்கொல்]- இக்கூப்பீட்டுக்கு முகங்காட்டநினைக்கிறானோ? கூப்பிட்டேபோவானென்றிருக்கிறானோ? இக்கூப்பீட்டுக்கு அவன்திருவுள்ளம் எங்ஙனேபுண்படுகிறதோ? என்றுமாம். [இம்மாஞாலம்பொறைதீர்ப்பான்] -இம்மஹாப்ருதிவியினுடைய பாரத்தைப் போக்குகைக்காக.[மதுவார்சோலை]- மதுஸ்யந்தியான சோலையையுடைய. [உத்தரமதுரை]- வடமதுரையில்,சத்ருக்களான கம்ஸாதிகள்நடுவே பிறந்தமாயனே! ஆவிர்ப்பவிக்கையன்றியே [*ததச்ச த்வாதசே மாஸே*] என்கிறபடியே கர்ப்பவாஸம்பண்ணிப்பிறந்த ஆச்சர்யபூதனே பூபாரநிரஸநம் என்கிறவ்யாஜத்தாலே இதரஸஜாதியனாய்வந்தவதரித்து ஆச்ரிதவிரோதிகளைப்போக்கும் ஸ்வபாவனானவன், நம் கூப்பீட்டுக்கு என்நினைத்திருக்கிறானென்கை. (9)

பத்தாம்பாட்டு. அவதாரத்துக்குப் பிற்பாடனாய், அந்தர்யாமித்வம் கண்ணுக்கு அவிஷயமானபின்பு, உன்னை நான் எவ்விடத்தே காண்பதென்கிறார்.

பிறந்தமாயா!பாரதம்பொருதமாயா! நீயின்னே*
சிறந்தகால்தீநீர்வான்மண்பிறவுமாயபெருமானே*
கறந்தபாலுள்நெய்யேபோல் இவற்றுளெங்குங்கண்டுகோள்*
இறந்துநின்றபெருமாயா!உன்னையெங்கேகாண்கேனே? (10)

[பிறந்தமாயா] - அகர்மவச்யனுய்வைத்து, அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தானத்தை இதரஸஜாதீயமாக்கி வந்தவதரித்த ஆச்சர்யபூதனே! [பாரதம்பொருதமாயா] - பிறந்தாற் போலே யிருப்பதொன்றுயிற்று இவ்வாச்சர்யமும்! ஸத்யப்ரதிஜ்ஞனானவன் அஸத்யப்ரதிஜ்ஞனான ஆச்சர்யம். "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுக்கையும், பகலை இரவாக்குகையும். [நீயின்னே] - நீ இப்படி ஸுலபனாயிருக்கச் செய்தே. [சிறந்த இத்யாதி] - காரணமான ப்ருதிவ்யாதிபூதங்களுக்கும். [பிறவும்] - தத்கார்யமான தேவாதிபதார்த்தங்களுக்கும். [ஆய பெருமானே] - ஆத்மாவான ஸர்வேச்வரனே! காற்றுக்குச்சிறப்பாவது - காரணத்வமொழித்திருக்க தாரகத்வத்தால் வந்த ஏற்றம். [கறந்த இத்யாதி] - கண்ணாலே காண்கிற பாலினுள்ளே நெய்யுண்டாயிருக்கக் காணவரிதானாற்போலே ஸகல பதார்த்தங்களிலும் நின்றுனவத்தாக் காணவொண்ணாதபடி நிற்கிற அத்யாச்சர்யபூதனே! ப்ரஹ்மவிதுபநிஷத்து, [*கவாமநேக வர்ணாநாம்க்ஷீரஸ்யத்வேகவர்ணதா। க்ஷீரவத்பச்யதிஜ்ஞாநம்லிங்கிநஸ்துகவாம்யதா ‖ க்ருதமிவபயஸி நிகூடம் பூதேபூதேசவஸதிவிஜ்ஞாநம்। ஸததம்மந்தேதவ்யம்மநஸாமந்தாநபூதேந ‖ ஸர்வபூதாதிவாஸம் யத் பூதேஷுசவஸத்யபி। ஸர்வாநுக்ராஹகத்வேந ததஸ்ம்யஹம் வாஸுதேவ இதி*] என்கிறபடியே. [கறந்தபால்] - காலத்தாலும் மதநாதியாலும் தோற்று கிறநெய், கறந்தகாலத்தில் தோற்றுதிறே. உன்பக்கலிலே ந்யஸ்தபாரனாகையாகிற ஸம்ஸ்காரத் தாலல்லது காண அரியையென்கை. [உன்னை எங்கே காண்கேனே] - பரமபதத்தில் காட்சிக்கு சரீரஸம்பந்தமறவேணும்; அவதாரத்துக்குப்பிற்பாடனானேன்; அர்ச்சாவதாரம் நான் நினைத்த படி கிடையாது; அந்தர்யாமித்வம் கண்ணுக்கு விஷயமன்று; இனி இவ்விழவோடே முடிந்து போமித்தனையாகாதே ... . (10)

நிகமத்தில்-இத்திருவாய்மொழிவல்லார், தாம்பட்ட து:கம்படாதே, இஹலோகத் திலே இஜ்ஜந்மத்திலே அவனைப்பெற்று நிரந்தரமாக ஸுகிப்பரென்கிறார்.

எங்கே காண்கேன்! ஈன் துழாயம்மான் தன்னையான்? என்றென்று*
அங்கேதாழ்ந்தசொற்களால் அந்தண்குருகூர்ச்சடகோபன்*
செங்கேழ் சொன்னவாயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள்*
இங்கேகாண இப்பிறப்பேமகிழ்வர் எல்லியுங்காலையே. (11)

[ஈன்துழாயம்மான் தன்னை யான் எங்கேகாண்கேன்] - ஐச்வர்ய ஸூசகமான திருத் துழாய்மாலையையுடைய ஸர்வேச்வரனைக் கண்டல்லது தரிக்கமாட்டாதபடி சபலனான நான் எங்கேகாணக்கடவேன்? [என்றென்று] -பரத்வாதிகளைப் பெறாத நான் உன்னை நிரந்தரமாகச் சொல்லி. ஒருகால் சொல்லி ஆசையை யாவிஷ்கரித்தோமிறே என்று ஆறியிருக்கிறாரல்லரே; லாபத்தளவும் சொல்லுமித்தனையிறே. [அங்கேதாழ்ந்தசொற்களால்] - தோளும், தோள்மாலை யிலும், அந்த சேஷித்வத்திலும் ப்ரவணமான சொற்களாலே [அந்தண்குருகூர்ச்சடகோபன்] [*உபதிஷ்டந்து மாம் ஸர்வே வ்யாதய:*] என்கிறபடியே, இவ்வாற்றாமைக்கெல்லாம் ஆடல் கொடுத்த ஆழ்வார் என்று ஆளவந்தார்நிர்வாஹம். [செங்கேழ்சொன்னஇத்யாதி] - மநோவாக்காயங்கள் ஏகரூபமாய்ச்சொன்ன ஆயிரத்திலும் இப்பத்தையும். [வல்லார்கள்] - அப்யஸிக்கவல்லார். [இங்கே இத்யாதி] - இஹலோகத்திலே இஜ்ஜந்மத்திலே திவாராத்ர விபாகமின்றிக்கே பகவதநுபவம் பண்ணி மகிழப்பெறுவர். "ஆளக்கூப்பிட்டழைத்தக்கால்" என்று

கூப்பிட வந்து முகங்காட்டாத அவத்யத்தை, இப்பத்தையப்யஸித்தவர்களோடே கடுகவந்து முகங்காட்டித் தீருமாயிற்று ஈச்வரன்; பார்யையோடே வெறுப்புண்டானால் அவள்பக்கல் முகம் பெறுகைக்காக ப்ரஜைகளை ச்லாகிப்பாரைப்போலே. ... ... (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி.

மாயன் வடிவழகைக்காணாதவல்விடா
யாய்* அதறவிஞ்சியழுதலற்றும்—தூயபுகழ்
உற்றசடகோபனைநாமொன்றிநிற்கும்போதுபகல்
அற்றபொழுதானதெல்லியாம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்,

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆருந்திருவாய்மொழி—எல்லியுங்காலையும்—ப்ரவேசம்

*மாயக்கூத்தனில், ஆழ்வார், தமக்கோடினவிடாய் பேச்சுக்கு நிலமாகையாலே பேசினார்.; ஈச்வரனுக்கு ஓடினவிடாய் பேச்சுக்கு நிலமல்லாமையாலே பேசிற்றில்லை. [*ஊர்த்த்வம் மாஸாந்ந ஜீவிஷ்யே*] என்று இத்தலையில் விடாய்; [*நஜீவேயம்க்ஷணமபி*] என்றிறே அத்தலையிருப்பது. *"மாயக்கூத்தனில் இவர்க்கோடினவிடாய்க்கு உதவப்பெற்றிலோம்" என்னுமத்தாலே தப்தனாய், ஆகுலனாய் பிற்பாட்டுக்கு [*ஹ்ரீரேஷா ஹிமமாதுலா*] என்கிறபடியே லஜ்ஜித்து "இனி நாம் கடுகமுகங்காட்டில் ப்ரீதியாலே உடைகுலைப்படுவர், ப்ரீதியை ஸாத்மிப்பித்து உளராக்கிப் பரிமாறவேணும்" என்று, பதினாலாண்டு பிரிவாலே நொந்த ஸ்ரீ பரதாழ்வானை தரிப்பித்து முகங்காட்டுகைக்காகத் திருவடியைப் போகவிட்டு, ஸ்ரீபரத்வாஜபகவானாச்ரமத்திலே இருந்தாப்போலவும்; பாண்டவர்களுக்காகத் தூதுபோகிறபோது ப்ரேமபரவசரான விதுராதிகள்ப்ரீதியை அகஞ்சுரிப்படுத்தி முகங்காட்டுகைக்காக [*குசஸ்த்தலே நிவஸதி ஸச ப்ராத ரிஹேஷ்யதி*] என்கிறபடியே-குசஸ்த்தலத்திலே விட்டுக்கொண்டிருந்து, பிற்றைநாள் ஹஸ்திநாபுரத்திலே எழுந்தருளினாப்போலவும்; தம்மோடே ஸம்ச்லேஷோந்முகனான ஸர்வேச்வரன் தம்முடைய ப்ரீதியை ஸாத்மிப்பித்துத் தம்மோடே கலக்கைக்காகத் திருக்கடித்தானத்திலே எழுந்தருளியிருந்து தம்பக்கல் பண்ணுகிற வ்யாமோஹத்தை அநுஸந்தித்து இனியராய், அத்தைப்பேசி அநுபவிக்கிறார். கீழில் திருவாய்மொழியில் வ்யஸநஹேதுவான நினைவுதானே இப்போது உஜ்ஜீவகமாம்படி பண்ணினான். *செறுவாரும் நட்பாகுவரிறே செங்கோனருள்பெற்றவாறே.

முதற்பாட்டு. என்னுடைய ஆர்த்தி தீர்த்தருளுவான் ஸர்வேச்வரனே; அவனூர் திருக்கடித்தான மென்கிறார்.

எல்லியுங்காலையும் தன்னை நினைந்தெழ*
நல்லவருள்கள் நமக்கே தந்தருள்செய்வான்*
அல்லியந்தண்ணந்துழாய்முடி அப்பனூர்*
செல்வர்கள்வாழுந் திருக்கடித்தானமே. 1

எல்லியுங்காலையும் இத்யாதி] திவாராத்ர விபாகமின்றிக்கே எல்லாக்காலத்திலும் உபகாரகனான தன்னை நினைத்து உஜ்ஜீவிக்கும்படி. [நல்லவருள்கள்] என்குற்றமாதல், தன் ஸார்வஜ்ஞ்யமாதல் பாராதே, தன்பேறாகப்பண்ணின அருள். *மாயக்கூத்தனில் விடாய்க்கு அருளினனென்று இருக்கிறிலர். [நமக்கேதந்தருள் செய்வான்] "பலரடியார் முன்பருளிய" என்கிறபடியே, நித்யஸூரிகளும் தாம்பெற்ற பேறு பெற்றிலர் என்றாயிற்று நினைத்திருப்பது. [அல்லியந்தண்ணந்துழாய்முடி] கீழில் திருவாய்மொழியிலே "மொய்பூந்தாமத்தண்டுழாய்க் கடிசேர்கண்ணிப்பெருமானே" என்று இவர் ஆசைப்பட்டபடியே காட்டிக்கொடுத்தான், [ஊர்] இப்படி உபகாரகனானவன் வர்த்திக்கையாலே நமக்கு ப்ராப்யபூமி திருக்கடித்தான மென்கிறார். [செல்வர்கள் வாழும்] *மாயக்கூத்தனும் *எல்லியுங்காலையுமாக வேண்டாதே அநுபவத்தோடே காலங்கழிக்கிறவர்கள்; *லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:* என்கிறபடியே யிருப்பார்சிலர். [எல்லியும் இத்யாதி] அப்பனானவனூர் என்னுதல்; செல்வர்கள் வாழும் ஊர் திருக்கடித்தானமென்னுதல்; அல்லியந்தண்ணந்துழாய் முடியப்பன் - நல்லவருள்கள் நமக்கே தந்து அருள்செய்வானென்னுதல். ... ... (1)

இரண்டாம்பாட்டு. என்பக்கல்வருகைக்கு ப்ரதிபந்தகங்களையும் தானேபோக்கி, திருக்கடித்தானத்திலும் என்ஹ்ருதயத்திலும் ஒக்கஅபிநிவேசித்து என்னுள்ளே வர்த்தியா நின்றானென்கிறார்.

திருக்கடித்தானமும் என்னுடைச்சிந்தையும்*
ஒருக்கடுத்து உள்ளேயுறையும்பிரான்கண்டீர்*
செருக்கடுத்து அன்றுதிகைத்தவரக்கரை*
உருக்கெட வாளிபொழிந்தவொருவனே. [2]

[ஒருக்கடுத்து] ஒருங்கவடுத்து. அதாகிறது ஒக்க நினைக்கை. திருக்கடித்தானத்தையும் என்ஹ்ருதயத்தையும் ஒக்கவிரும்பி. [உள்ளேஉறையும்] மநஸ்ஸிலே நித்யவாஸம் பண்ணாநின்றான். விரோதிசெய்ததென்? என்ன, - அது ராக்ஷஸர்பட்டது பட்டது. [செருக்கடுத்து] யுத்தகண்டூதி வர்த்தித்து. [அன்று] *நநமேயம்* என்றவன்று. [திகைத்தவரக்கரை] சக்கரவர்த்தித்திருமகனை வெல்லலாமென்று நினைத்தமதிகேடரான ராக்ஷஸரை [உருக்கெட] *சிங்கம் பிங்கம் சரைர்தக்தம்* [வாளிபொழிந்த] *சரவர்ஷம் வவர்ஷ ஹ* என்கிறபடியே. ஒருவன்] ஏகவீரனானவன். ... ... (2)

மூன்றாம் பாட்டு. பிராட்டியோடுகூடத் திருக்கடித்தானத்திலே நித்யவாஸம் பண்ணுகிற ஆச்சர்யபூதனான உபகாரகன் அநுஸந்திக்குந்தோறும் இனியனாகாநின்றானென்கிறார்.

ஒருவரிருவரோர்மூவரென நின்று*
உருவுகரந்துஉள்ளுந்தோறுந்தித்திப்பான்*
திருவமர்மார்வன் திருக்கடித்தானத்தை*
மருவியுறைகின்ற மாயப்பிரானே. [3]

[ஒருவர் இத்யாதி] வாளிபொழிந்தபடி. எங்ஙனேயென்ன, இங்ஙனே யென்கிறார். [ஒருவரிருவரோர்மூவரெனநின்று உருவுகரந்து] ஒருவராய்த்தோன்றுற், இருவராய்த்தோன்றுற், மூவராய்த்தோன்றுற், பின்னை இந்த்ரியார்த்தஸம்யோகமில்லாதபடி சாரிகைவந்து. ஒருவரிருவரோர் மூவரென நின்று உாவுகரந்து—செருக்கடுத்தன்று திகைத்த அரக்கரை உருக்கெட வாளிபொழிந்தவொருவன் திருக்கடித்தானமும் என்னுடைச்சிந்தையும் ஒருக்கடுத்து உள்ளே யுறையும்பிரான் கண்டீர் என்று கீழ்ப்பாட்டோடே அந்வயமாகக்கடவது. [திருவமர்மார்வன்] *நகச்சிந் நாபராத்யதி* என்னும் பிராட்டியோடே கூடவாயிற்று வந்தது. [திருவமர்மார்வன் திருக்கடித்தானத்தை மருவியுறைகின்ற மாயப்பிரான் உள்ளுந்தோறும் தித்திப்பான்] பெரிய பிராட்டியார் நித்யவாஸம் பண்ணுகிற திருமார்வையுடையனாய், திருக்கடித்தானத்தை மருவியுறையாநின்றுகொண்டு என்பக்கலிலே ஆச்சர்யமாம்படி ப்ரவணனானவன், அநுஸந்திக்குந்தோறும் புதியனாய் இனியனாகாநின்றான். ... ... (3)

நாலாம்பாட்டு, திருக்கடித்தானத்தைப் பகலிருக்கை மாத்ரமாகக்கொண்டு ஸங்காதிசயத்தாலே என்னெஞ்சையே நிரந்தரவாஸஸ்தானமாகக் கொண்டானென்கிறார்.

மாயப்பிரான் எனவல்வினை மாய்ந்தற*
நேசத்தினால் நெஞ்சம் நாடுகுடிகொண்டான்*
தேசத்தமரர் திருக்கடித்தானத்தை*
வாசப்பொழில் மன்னுகோயில்கொண்டானே. [4]

[மாயப்பிரான்] ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையுடைய உபகாரகன். [எனவல்வினைமாய்ந்தற] தன்னைப் பிரிந்து நான் பட்ட க்லேசமெல்லாம் நசித்துப்போம்படி; *மாயக்கூத்தனில்* காணவாராயென்றென்று கண்ணும்வாயும் துவர்ந்துபட்டவிடாயெல்லாம் வாஸனையோடேபோம்படி. [நேசத்தினால்] தான் என்பக்கல்பண்ணின ஸங்கத்தாலே. [நெஞ்சம் நாடு] ஸம்ச்லேஷவிச்லேஷங்களாலே ஒரு த்ரிபாத்விபூதிபோலே ஆக்கினையிற்று இவர் திருவுள்ளத்தை. [குடிகொண்டான்] ஸ்பரிகரமாக நித்யவாஸம் பண்ணாநின்றான்; *அரவத்தமளிப்படியே. [தேசத்தமரர்திருக்கடித்தானத்தை] நித்யாநுபவம் பண்ணுகையாலுண்டான தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்கு ப்ராப்யமான திருக்கடித்தானத்தை. [வாசப்பொழில் மன்னு] வாசத்தையுடைய பொழிலோடேகூடின. தேசத்தமரர்திருக்கடித்தானத்தை கோயில்கொண்டான், நேசத்தினால் நெஞ்சம் நாடு குடிகொண்டான். ... . (4)

அஞ்சாம்பாட்டு. என்பக்கல் ப்ரேமாதிசயத்தாலே திருக்கடித்தானத்தோடேகூட என் ஹ்ருதயத்திலே புகுந்தருளினானென்கிறார்.

கோயில்கொண்டான்தன் திருக்கடித்தானத்தை*
கோயில்கொண்டானதனோடும் என்னெஞ்சகம்*
கோயில்கொள் தெய்வமெல்லாந்தொழ வைகுந்தம்
கோயில்கொண்ட குடக்கூத்தவம்மானே. [5]

[கோயில்கொண்டான் இத்யாதி] திருக்கடித்தானத்தைத் தனக்கு அஸாதாரணமான கோயிலாகக் கொண்டான், [கோயில் இத்யாதி] 'செருப்புவைத்துத் திருவடி தொழுவாரைப்போலே ஆகவொண்ணாது'' என்று திருக்கடித்தானத்தோடேகூட வந்து என்னெஞ்சிலே புகுந்தருளினான். [கோயில்கொள் இத்யாதி] ஒரோ கோயில்களுண்டாயிருக்குமிறே - திருவடி, திருவநந்தாழ்வான், ஸேனைமுதலியார் இவர்களுக்கு; அவர்கள் தொழும்படி ஸ்ரீவைகுண்டத்தைத் தனக்குக் கோயிலாகக்கொண்ட ஸர்வேச்

வான். க்ருஷ்ணனுய்வந்து அவதரித்துக் குடக்கூத்தாடி, அந்தச்ரமமாறும்படி திருக்கடித்தானத்தைக் கோயில்கொண்டான்; அத்தோடேகூட என்ஹ்ருதயத்தை - தனக்குக் கோயிலாகக்கொண்டான் : * அழகியபாற்கடலோடும் * என்கிறபடியே. திருக்கடித்தானத்தில் நிலை என்னைப் பெறுகைக்காகையாலே, ஸாத்யம் கைப்பட்டால் ஸாதநத்திலிழிவாரில்லையாயிருக்க, என்னைப்பெற்றது அத்தேசத்திலே நிற்கையாலேயென்று அத்தேசத்தோடே வந்து புகுந்தான். ... ... (5)

ஆறும்பாட்டு. தம்முடைய ப்ரீதிப்ரகர்ஷத்தாலே திருக்கடித்தானத்தை எல்லாரும் ஆச்ரயியுங்கோளென்கிறார்.

கூத்தவம்மான் கொடியேனிடர்முற்றவும் *
மாய்த்தவம்மான் மதுசூதவம்மானுறை *
பூத்தபொழில் தண்திருக்கடித்தானத்தை *
ஏத்தநில்லா குறிக்கொண்மினிடரே. (6)

[கூத்தவம்மான்] மநோஹாரியான சேஷ்டிதங்களையுடைய ஸர்வேச்வரன். [கொடியேன்] மஹாபாபியான என்னுடைய. [இடர்முற்றவும்மாய்த்தவம்மான்] தன்னைப்பிரிந்து நான்பட்ட க்லேசத்தையெல்லாம் வாஸனையோடே போக்கின என் ஸ்வாமி. [மதுசூதன் இத்யாதி] ப்ரதிகூலநிரஸந ஸ்பாவனுன ஸர்வேச்வரன் நித்யவாஸப்பண்ணுகிற தேசம். [பூத்தபொழில்] அவன் நித்யவாஸம் பண்ணுகையாலே நித்ய வஸந்தமானபொழில். கடாக்ஷவர்ஷம் மாறிலிறே பூ மாறுவது? [தண்திருக்கடித்தானத்தை] ச்ரமஹரமான திருக்கடித்தானத்தை, [ஏத்தநில்லா - இடர்] இனியத்தைச் செய்ய, இடரானது "நமக்கு இது தேசமன்று" என்று *சும்மெனுதே கைவிட்டோடும். [குறிக்கொண்மின்] இத்தை "ஓலக்க வார்த்தை" என்றிராதே, புத்திபண்ணுங்கோள். ... ... (6)

ஏழாம்பாட்டு. உங்கள் து:கநிவ்ருத்திக்கு ஏத்தவேண்டா, திருக்கடித்தானத்தை நெஞ்சாலே நினைக்கவமையுமென்கிறார்.

கொண்மினிடர்கெட உள்ளத்துக்கோவிந்தன் *
மண்விண்முழுதுமளந்த ஒண்தாமரை *
மண்ணவர்தாந்தொழ வானவர்தாம்வந்து *
நண்ணு திருக்கடித்தானநகரே. (7)

[கொள்மின் இத்யாதி] உங்கள் ஸமஸ்தது:கங்களும் போம்படியான திருக்கடித்தானத்தை மநஸ்ஸாலே நினையுங்கோள். [கோவிந்தன்] ஸர்வஸுலபனுனவனுடைய. [மண்விண்முழுதுமளந்தவொண்தாமரை] ஒரு தாமரைப்பூவைக் கொண்டாயிற்று பூய்யந்தரிக்ஷங்களை அளந்துகொண்டது. [மண்ணவர்தாந்தொழ] இடக்கை வலக்கையறியாத பூமியிலுள்ளார்தொழ. பரமபதம் நித்யர்க்கேயாயிருக்குமாப்போலே, உகந்தருளின தேசம் ஸம்ஸாரிகளுக்கேயாயிருக்கை. [வானவர் இத்யாதி] ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்துக்கொடுநிற்கிற நீர்மையை அநுஸந்தித்து, நித்யஸூரிகளும் வந்துகிட்டுகிற தேசத்தை - கொண்மினிடர்கெடவுள்ளத்து. இங்குள்ளார் அங்குப்போவது மேன்மையைஅநுபவிக்க; அங்குள்ளார் இங்குவருவது சீலகுணநுபவம் பண்ணுகைக்கு. ... ... (7)

எட்டாம்பாட்டு. அவனுக்கு 'விலக்ஷணமான நகரங்கள் பலவுமுண்டாயிருக்கச் செய்தேயும், என்னுடைய நெஞ்சையும் திருக்கடித்தானத்தையும் தாயப்ராப்தமான ஸ்த்தாநமாக விரும்பியிருக்குமென்கிறார்.

தானநகர்கள் தலைச்சிறந்தெங்கெங்கும் *
வானிந்நிலங்கடல் முற்றுமெம்மாயற்கே *
ஆனவிடத்தும் என்னெஞ்சுந்திருக்கடித்
தானநகரும் * தனதாயப்பதியே. [8]

[தானநகர் இத்யாதி] (வானிந்நிலங்கடல்—எங்கெங்கும்—தலைச்சிறந்த—தானநகர்கள் முற்றுமெம்மாயற்கே யானவிடத்தும்) மேலில் லோகங்களிலும், பூமியிலும், கடலிலும், கண்டவிடமெல்லாம் மிகவும் ச்லாக்யமான இருப்பிடமான நகரங்கள் முற்றும் என்பக்கலிலே அபிநிவிஷ்டனான ஆச்சர்யபூதனுக்கு. [ஆனவிடத்தும்] ஆயிருக்கச் செய்தேயும். என்னெஞ்சும் திருக்கடித்தானநகரும் தனக்கு தாயப்ராப்தமான ஸ்தாநமாக விரும்பியிராநின்றான். (8)

ஒன்பதாம்பாட்டு. அல்லாததிருப்பதிகளுமெல்லாம் அவனுக்கு அப்படியேயன்றோ வென்னில், அது அப்படியேயாகிலும் என்னோடே கிட்டுகைக்கு உறுப்பானநிலம் என்று திருக்கடித்தானத்திலே அத்யபிநிவிஷ்டனானானென்கிறார்.

தாயப்பதிகள் தலைச்சிறந்தெங்கெங்கும் *
மாயத்தினால் மன்னிவீற்றிருந்தானுறை *
தேசத்தமரர் திருக்கடித்தானத்துள் *
ஆயர்க்கதிபதி அற்புதன்தானே. [9]

[தாயப்பதிகள் இத்யாதி] (தலைச்சிறந்த — தாயப்பதிகள் — எங்கெங்கும்) மிகவும் விலக்ஷணமாய்ப் பழையதாய்வருகிற ஸ்தாநங்களெங்கும். [மாயத்தினால்] அபிநிவேசத்தாலே யென்னுதல். இச்சையாலே என்னுதல். * மாயா வயுநம் ஜ்ஞாநம் * [மன்னிவீற்றிருந்தான்] விரும்பி, தன் ஐச்வர்யமெல்லாந் தோற்றும்படி இருந்தருளினவன். ஐச்வர்யத்தால் வந்த வேறுபாடுதோற்ற இருந்தவனென்றுமாம். [உறை] நித்யவாஸம் பண்ணுகிற. [தேசத்தமரர் இத்யாதி] தேஜஸ்ஸையுடையநித்யஸூரிகளுக்கு ப்ராப்ய பூமியான திருக்கடித்தானத்துள். [ஆயர்க்கதிபதி] கோபஸஜாதீயனாய் வந்தவதரித்து அவர்களில் தலைவனானவன். [அற்புதன்] ஆச்சர்யமானபடிகளையுடையவன், உகந்தருளின தேசங்களெல்லாவற்றிலும் விருப்பமுண்டாகிலும். என்னை லபிக்கைக்காகத் திருக்கடித்தானத்திலே, தன்மேன்மையும் நீர்மையுமெல்லாம் ப்ரகாசிக்க நின்றானென்கை. ... ... (9)

பத்தாம்பாட்டு. என்னைப்பெறுமளவும் திருக்கடித்தானத்திலே நின்றான்; என்னைப் பெற்றபின்பு நிற்பதுமிருப்பதும் என்னெஞ்சிலே யென்கிறார்.

அற்புதன்நாராயணன் அரிவாமனன் *
நிற்பது மேவி இருப்பதென்னெஞ்சகம் *
நற்புகழ்வேதியர் நான்மறைநின்றதிர் *
கற்பகச்சோலைத் திருக்கடித்தானமே. [10]

[நாராயணன்] தன்னுடைமையை விட்டுக்கொடாத வத்ஸலன். [அரி] ஆச்ரித விரோதிநிரஸந ஸமர்த்தன். [வாமனன்] தன்னைச் சிறுகவிட்டு ஆச்ரிதருடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் முடிக்குமவன். [அற்புதன்] இப்படிகளாலே ஆச்சர்யபூதன். [நற்புகழ் இத்யாதி] அநந்யப்ரயோஜநர் என்னும் புகழையுடைய வைதிகராலே உச்சரிக்கப்பட்ட நாலுவேதங்களாலும் முழங்காநின்றுள்ள கல்பகவனத்தையுடைய திருக்கடித்-

தானத்திலே அவன் நிற்பது, மேவியிருப்பது என்னெஞ்சகமென்னுதல்; திருக்கடித்தானத்து நாராயணன் அரி வாமனன் அற்புதன் நிற்பதும் என்னெஞ்சகம், மேவியிருப்பதும் என்னெஞ்சகமென்னுதல். திருக்கடித்தானமென்று ஸப்தம்யர்த்தே ப்ரதமை. ... ... (10)

நிகமத்தில் - இத்திருவாய்மொழி கற்றவர்களை, இதுதானே திருநாட்டிலே கொடுபோய்விடு மென்கிறார்.

சோலைத் திருக்கடித்தானத்து உறைதிரு
மாலை* மதிள்குருகூர்ச் சடகோபன் சொல்*
பாலோடமுதன்ன ஆயிரத்திப்பத்தும்*
மேலைவைகுந்தத்து இருத்தும்வியந்தே. (11)

[சோலை இத்யாதி] ச்ரமஹரமாய் தர்சநீயமான சோலையையுடைய திருக்கடித்தானத்திலே நித்யவாஸம் பண்ணுகிற ச்ரிய:பதியை. [மதிள்குருகூர்] ஸாம்ஸாரிக துரிதங்களுக்குப் புகவொண்ணாத அரணையுடைய திருநகரி. [சடகோபன்சொல்] * ரகுவர சரிதம் முநிப்ரணீதம்* என்னுமாப்போலே. பாலோடமுதன்ன ஆயிரமென்னுதல்; பாலோடமுதன்ன இப்பத்தென்னுதல், வாச்யவாசகங்களுடைய சேர்த்தியிருக்கிறபடி. பாலென்கிறது சோலைத் திருக்கடித்தானத்துறை திருமாலை. அமுதென்கிறது சடகோபன் சொல்லென்கிற வாசகத்தை. இது ஆளவந்தார் நிர்வாஹம். [இப்பத்தும் வியந்து மேலை வைகுந்தத்திருத்தும்] "ஸம்ஸாரத்திலே இத்தை அப்யஸிப்பாரொருவனுண்டாவதே என்று விஸ்மயப்பட்டு ஸர்வாதிகமான பரமபதத்திலே கொடுபோய் வைக்கும். *மாயக்கூத்தனில் விடாய் நடையாடாத தேசத்திலே வைத்து, ஒருநாளும் பிரியாத அநுபவத்தைக் கொடுக்கும். ... ... (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி.

எல்லிபகல்நடந்த இந்தவிடாய்தீருகைக்கு*
மெல்லவந்துதான் கலக்கவேணுமென*—நல்லவர்கள்
மன்னுகடித்தானத்தே மாலிருக்கமாறன்கண்டு*
இந்நிலையைச்சொன்னனிருந்து.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்,
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஏழாந் திருவாய்மொழி—இருத்தும் ப்ரவேசம்.

இத்திருவாய்மொழியில் பேற்றுக்கு க்ருஷிபண்ணினபடி கீழுடைய; மேல் அப்பேற்றுக்கு வேலியாயிருக்கிறது. 'இத் திருவாய்மொழிதன்னில் செய்கிறதென்?' என்னில், தாம் அநாதிகாலம் புத்திபூர்வகமாகப் பண்ணிப் போந்த ப்ராதிகூல்யங்களையடைய விஸ்மரித்து, ஆநுகூல்யம் பிறந்த பின்பு ப்ராமாதிகமாக உண்டானவற்றைக்காணக் கண்ணிட்டு, தம்முடைய பேற்றுக்குத் தானே யத்நித்து, தமக்குப் பிறந்த விடாய் தீரும்படி ஸம்ச்லேஷித்து, இதுதான் இவர்க்கு உபகரித்தானாயிருக்கையன்றிக்கே தன் பேறாயிருக்கிறபடியை அநுஸந்தித்து "தானே அர்த்தியாய்த் தன்பேறாக வந்து கலந்தவனை நாம் இரப்பாளராய்க் கூப்பிட்டவிடம் என்செய்தோமானோம்?" என்று லஜ்ஜித்து, "ஒரு ஸம்ஸாரிசேதநன்பக்கலிலே ஸர்வேச்வரன் பண்ணும் விஷயீகாரமிருக்கும்படியேயிது! என்று வித்தராய்; *ராகவேணபயே தத்தே ஸங்கதோ ராவணாநுஜ:* என்று 'ராவணன்

பின் பிறந்த நாம் ரகுகுலத்திலுள்ளார்க்கு ஆளாகப் புகா நின்றோமே?' என்றிருந்தவன், பெருமாள்பாடுநின்றும் அருளப்பாடிட்டு வந்தவாறே, "என்னையே இப்படி கைக்கொண்டருளுவது! அவன்பின் பிறந்த தன்மை எங்கேபோயிற்று ?" என்று, வேரற்ற மரம் போலே, கூடவந்தநால்வரோடும் திருவடிகளிலே விழுந்து தறைப்பட்டாப்போலவும்; ராமகுணங்கள் நடையாடாத அசோகவனிகையிலே திருவடி போய்புக்கு, *ஸம்ச்ரவே மதுரம் வாக்யம்* என்று, பிராட்டி உளளாம்படி ராமநாம ஸங்கீர்த்தனத்தைப் பண்ண, "இந்நிலத்தில் இது பரிமாறுவதொன்றல்ல: *கிந்நு ஸ்யாச்சித்தமோஹோயம் பவேத்வாதகதிஸ்த்வியம், உந்மாதஜோ விகாரோவா ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா* என்று "இது சித்தமோஹத்தால் வந்ததோ? வாதகதியோ? உந்மாதஜ விகாரமோ? ம்ருகத்ருஷ்ணிகையோ?" என்று பலபடிகளை சங்கித்து "முன்னே நின்று வார்த்தைசொல்லா நின்றான்; இது கேட்டு நாம் விக்ருதராகிறமையுமுண்டு ஆனபின்பு, இது மெய்யாமித்தனை" என்று ஸ்ரீ ஜநகராஜன்திருமகள் தெளிந்து ஹ்ருஷ்டையானாப் போலவும்; இவரும், "இதுவும் ப்ரமஸ்வப்நாதிகளிலே யொன்று" என்று சங்கித்து, "அங்ஙனல்ல, மெய்" என்று தெளிந்து ப்ரீதராய், "நமக்கு அத்வேஷத்தைப் பிறப்பித்து ஆபிமுக்யத்தையுண்டாக்கித் தன்னாலல்லது செல்லாமையைப் பிறப்பித்து, தன்மேன்மை பாராதே இப்படி தாழநின்று வந்து கலந்து பரிமாறுவதே! இதென்ன ஆச்ரித பாரதந்த்ர்யம்! இதென்ன நீர்மை!" என்று அவன்படிகளை அநுஸந்தித்து ஹ்ருஷ்டராகிறார். ... *

முதற்பாட்டு. இத்திருவாய்மொழியில் தமக்குண்டான லாபத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

இருத்தும்வியந்தென்னைத் தன்பொன்னடிக்கீழென்று*
அருத்தித்தெனைத்தோர் பலநாளழைத்தேற்கு*
பொருத்தமுடை வாமனன்தான்புகுந்து* என்றன்
கருத்தையுற வீற்றிருந்தான் கண்டுகொண்டே. (1)

[என்னைத்தன்பொன்னடிக்கீழ் - வியந்து - இருத்தும் - என்று] தன் வாசியறியாதே சப்தாதி விஷயங்களிலே அங்யபரனான என்னை, ச்லாக்யமான தன் திருவடிகளின் கீழே, * ஸமஹாத்மா ஸுதுர்லப: * என்று கைவாங்கியிருக்கும் ஸம்ஸாரத்திலே நம்மை அபேக்ஷிப்பானொருவனுண்டாவதே !" என்று விஸ்மயப்பட்டு இனி ஒருநாளும் பிரியாதபடி இருத்தி அடிமைகொள்ளும். இத்தால் ப்ராப்ய ப்ராபகங்களைச் சொல்லுகிறது. தன் பொன்னடிக் கீழென்று - ப்ராப்ய ஸ்வரூபம் சொல்லிற்று; இருத்துமென்று - ப்ராபகனுமவனே யென்றது. [வியந்து - இருத்தும்] தன் பேறாக இருத்தும். [அருத்தித்து] சேதநனைவாசிக்கு இத்தனையும் வேணுமிறே. [எனைத்தோர்பலநாள்] 'நாணாளும்' என்றதைச் சொல்லுகிறார். [அழைத்தேற்கு] "என்னையாளக்கூப்பிட்டழைத்தக்கால்" என்றத்தைச் சொல்லுகிறார். "இவன் ப்ரணயித்வத்தையறியாதே, தாழ்த்தானாகவும், நாம் அபிநிவிஷ்டராகவும் நினைத்துக்கூப்பிட்டு என்னகார்யஞ் செய்தோமென்கிறார்காண்!" என்னும் பிள்ளான். (அழைக்கவுங்கூடமாட்டாத இவனையோ நாமழைத்தது.) அத்தலையில் ப்ரணயித்வத்தை அநுஸந்தித்தால், அர்த்தித்வமே தொடங்கி மிகையாயிறேயிருப்பது; *எழுதுமென்னுமிது மிகையாயிறே யிருப்பது [பொருத்தமுடை] இப்படிப் பொருத்தமுடையவனையே "இதுவோ பொருத்தம்!" என்றது. [வாமனன்] நான் அர்த்தித்தவிடம் என்செய்தேனானேன், தன்னுடைமை பெறுகைக்குத்தான் இரப்பாளனானவனை. [தான் புகுந்து] என்னைத் தான் பெறுகைக்கு அர்த்தியாய் வந்து புகுந்து. [என்தன்கருத்தையுற] 'தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்ற என்னினைவைத் தான்கைக்கொண்டான். [வீற்றிருந்தான்] இவரைப் பெற்றவத்தாலுண்டான வேறுபாடு வடிவிலேதோற்ற க்ருதக்ருத்யனாயிராநின்றான். [கண்டு

கொண்டே] மஹாவ்யாதியைத் தப்பின புத்ரனை மாதாபிதாக்கள் பார்த்துக்கொண்டிருக்குமாப்போலே * மாயக்கூத்தனில் விடாய்க்குத்தப்பினவ ரென்று பார்த்துக்கொண்டிராநின்றான். (1)

இரண்டாம்பாட்டு. என்னுடைய இந்த்ரியவச்யதையைத் தன்னழகாலே தவிர்த்து என்னை விஷயீகரித்த உபகாரத்தோடொவ்வாது ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆபந்நிவாரணமு மென்றார்.

இருந்தான்கண்டுகொண்டுஎனதேழைநெஞ்சாளும் *
திருந்தாதவோரைவரைத் தேய்ந்தறமன்னி *
பெருந்தாட்களிற்றுக்கு அருள்செய்தபெருமான் *
தருந்தானருள்தான் இனியானறியேனே. (2)

[இருந்தான் கண்டுகொண்டு] தரித்ரன், தநலாபமுண்டானால் பார்த்துக்கொண்டிருக்குமாப்போலே, பார்த்தபடியே இராநின்றான். * அந்யோந்யமபிவீக்ஷந்தௌ ந த்ருப்திமுபஜக்மது:* என்கிறபடியேசொல்ல எதிர்த்தலையான தம்மைக்காண்கிறிலர். [எனதேழை நெஞ்சாளும்] கண்டதெல்லாவற்றிலும் சபலமாயிருக்கிற என்னெஞ்சை, அதுவே பற்றாசாக இந்த்ரியங்கள் பொதியெடுக்கத்தொடங்கிற்று. ஒரு ப்ரபலனைப் பற்றாதே நடுவேநின்றவாறே பணி கொள்ளத் தொடங்கிற்று. [திருந்தாத] ஸர்வசக்தியான ஸர்வேச்வரனாலும் அநாதி காலம் திருந்தப்போகாதபடியிறே இவற்றின் வன்மை யிருப்பது. [ஓரைவர்] இனியிப்படி ஓரைவரைத் தேடப்போகாது. நூவற்றால்பட்ட நலிவின் மிகுதியாலே சொல்லுகிறார். [தேய்ந்தறமன்னி—இருந்தான்] கண்ணுக்கிலக்கான ப்ராக்ருத விஷயங்களில் பற்று நோாக க்ஷயிக்கும்படி, தன்வடிவழகைச்காட்டிக்கொண்டு புகுந்திருந்தான். விஷயாந்தரங்களிலும் வடிவழகிலேயிறே இவன் துவக்குண்டிருப்பது. ராஜாக்கள் சத்ருக்களை ஆஸநபலத்தாலே வெல்லுமாப்போலே, இருப்பாலே இந்த்ரியங்களை வெல்லவேணும் என்று வந்து புகுந்திருந்தான். *போதரேயென்று சொல்லிப் புந்தியிற்புகுந்து தன்பாலாதாம் பெருகவைத்த அழகனிறே. [பெருந்தாள் இத்யாதி] பெரியதாள்களையுடைய களிற்றுக்கு அருளின ஸர்வேச்வரன். வடிவில் கனமும் நோவில் பாடாற்றவொண்ணாமைக்கு உடலென்கை. [பெருமான்-தான் -தரும் -அருள் தான்] தருமருள்- தந்தவருள். "தரும்" என்கிறவிது- காலத்ரயத்திலும் சொல்லலாயிருக் கையாலே சொல்லுகிறார். ஆச்ரிதர்க்குச் செய்ததும் தமக்குச் செய்ததாகவிறே இவர் நினைத்திருப்பது. [இனியானறியேன்] எனக்கு உதவின பின்பு, நான் அத்தை ஒன்றாக நினைத்திரேன். ஆனை நோவுபட்டது ஆயிரம்வத்ஸரம், அகப்பட்டபொய்கை பரிச்சிந்நம், முதலையொன்று; எனக்குக்காலம் அநாதி, அகப்பட்டது ஸம்ஸாரார்ணவத்திலே, முதலை அஞ்சு; இத்தை மீட்டுக்கொண்ட மஹாகுணத்துக்கு அதொரு குணமாயற்றதோ? ஸ்ரீ கஜேந்த்ராழ்வான்பக்கல் பண்ணின அருளையிட்டுப் புறம்புள்ளாரை வ்யாவர்த்தித்தார்; தமக்குப்பண்ணின அருளையிட்டு அதுதன்னை வ்யாவர்த்திக்கிறார்: ... ... (2)

மூன்றாம்பாட்டு. அவாப்த ஸமஸ்தகாமனான ஸர்வேச்வரன், தன்பக்கல் இப்படி வ்யாமோஹம் பண்ணுகை கூடாததொன்று என்று சங்கித்து. இவ்வநுபவம், ப்ரமாதிகமின்றே பிறந்ததோவென்கிறார்.

அருள்தானினியானறியேன் அவனென்னுள் *
இருள்தானற வீற்றிருந்தானிதுவல்லால் *
பொருள்தானெனின் மூவுலகும்பொருளல்ல *
மருள்தானீதோ? மாயமயக்குமயக்கே. (3)

[அருள் தானினியானறியேன்] என்னுடைய இந்த்ரியவச்யதையைத் தவிர்த்த இது தன்னையும் இப்போது ஒன்றாக நினைத்திரேன். எத்தைப்பற்ற? என்னில். [அவன் இத்யாதி] அவன் என்னுடைய ஹ்ருதயத்தில் அஜ்ஞாநாந்தகாரமெல்லாம் போம்படி பெரும்பேறு பெற்றானாய், அவ்வேறுபாடு தோற்ற இராநின்றான்; இனி எனக்கு வேறொன்றுதேற்றுமோ? [இதுவல்லால் இத்யாதி] இதுக்குத் திருமாலை யாண்டான் பணிக்கும்படி -"நாட்டார், ஐச்வர்யங்களில் தலையாகச் சொல்லுவது த்ரைலோக்யைச்வர்யத்தையிறே; அதுவும் எனக்கு ஒரு சரக்கல்லவென்கிறார்" என்று. எம்பெருமானார் அருளிச்செய்யும்படி - "என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து எழுந்தருளியிருக்கிற இருப்பொழிய, *வீற்றிருந்தேழுலகுந்தனிக்கோல் செல்ல இருக்குமிருப்பையும் தனக்கு ஐச்வர்யமாக நினைத்திருக்குமோவென்று பார்த்தால், அதுவும் ஒருசரக்காக நினைத்திருக்கிறிலன்" என்று. இதுவே ப்ரகரணத்துக்குச் சேருவது. [மருள் தானீதோ] ஒருஸம்ஸாரிசேதநனைப்பெற்று ஸர்வேச்வரன் இப்படி இருந்தானென்னு மதுகூடுவதொன்றன்று; இது என்னறிவுகேட்டாலே சொல்லுகிறேனோ? [மாயமயக்குமயக்கே] அன்றிகே, அவன் தன்னுடைய ஆச்சர்யமான ப்ரமஸாதநங்களையிட்டு ப்ரமிப்பித்தானோ? நெடுநாள் ப்ரக்ருதியையிட்டு அறிவுகெடுத்தான், இப்போது தன்வ்யாமோஹத்தாலே என்னை ப்ரமிப்பித்தான். ... ... (3)

நாலாம்பாட்டு. அவன் என்னை ப்ரமிப்பித்தானல்லன்; என்னுள்ளே கலந்தருளினானே; இதில் ஒருஸம்சயமில்லை யென்கிறார்.

மாயமயக்குமயக்கான் என்னைவஞ்சித்து*
ஆயனமரர்க்கரியேறு எனதம்மான்*
தூயசுடர்ச்சோதித் தனதென்னுள்வைத்தான்*
தேசந்திகழும் தன்திருவருள் செய்தே. (4)

[என்னைவஞ்சித்து மாயமயக்கு மயக்கான்] அநாச்ரிதரான துர்யோதநாதிகளைக் குறித்து "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், பகலையிரவாக்கியும் வஞ்சித்தானித்தனை யல்லது, பாண்டவர்கள்விஷயத்தில் அத்தைச் செய்தானோ? ஆகையால், தனக்கே பரமான என்னை வஞ்சித்து, ஆச்சர்யமான ப்ரமஸாதநங்களாலே ப்ரமிப்பியான். ஹேதுவென்னென்ன [ஆயனமரர்க்கரியேறு எனதம்மான்] நித்யஸூரிகளுக்கும் அவ்வருகான ஏற்றத்தையுடையனாய்வைத்து, க்ருஷ்ணனாய் வந்து அவதரித்து, என்னுடைய சேஷத்வத்தை நிர்வஹித்த பரமாப்தன் என்னை வஞ்சித்து மாயமயக்குமயக்கான். ஆனால், இப்பேறு வந்தபடிதானென்னென்ன [தேசந்திகழும் தன் திருவருள்செய்து தூயசுடர்ச்சோதித்தனதென்னுள்வைத்தான்] லோகமெல்லாம் அறியும்படி என்பக்கலிலே நிர்ஹேதுக க்ருபையைப்பண்ணி. [தன்திருவள்] புறம்பொருவர்க்கின்றிக்கே தனக்கே அஸாதாரணமான அருள். ஹேயப்ரத்யநீகமாய் விலக்ஷண தேஜோரூபமாய், சுத்தஸத்த்வமயமாய், தனக்கே அஸாதாரணமான வடிவை, என்னுள்ளே வைத்தான். தான் அநந்யஸாத்யனென்னும்படியைக் கொண்டு என்னுள்ளே ப்ரகாசிப்பித்தான். * தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம்ஸ்வாம்* என்கிற படியே. (4)

அஞ்சாம்பாட்டு. "ஒருவர்பெறும்பேறே!" என்று லோகமடையக் கொண்டாடும்படி என்னுள்ளே வந்து நின்றருளினான். அத்தால் வந்த புகழையல்லது இவனுடைய மற்றுள்ள புகழையும் ஒன்றாக மதியேனென்கிறார்.

திகழுந்தன் திருவருள் செய்து உலகத்தார்
புகழும்புகழ்* தானது காட்டித்தந்து* என்னுள்
திகழும்மணிக்குன்றமொன்றே ஒத்துநின்றான்*
புகழும்புகழ் மற்றெனக்குமோர்பொருளே. (5)

[திகழுந்தன் திருவருள்செய்து] பிறருடைய பரிச்சிந்நமான அருள்போலன்றிக்கே, இரண்டுதலைக்கும் நிறமாம்படியான தன் க்ருபையை என்பக்கலிலே பண்ணி. [உலகத்தார் இத்யாதி] என்னுடைய பேற்றைக்குறித்து லோகத்தார்பண்ணும் ஸ்தோத்ரத்தைத் தான் காட்டித்தந்தான். "பாலேய்தமிழரிசைகாரர்பத்தர் பரவுமாயிரம்" என்று லோகமாகக் கொண்டாடும்படி பண்ணுகை. * இமௌ ஸ்ரீ பார்த்திவலக்ஷணங்விதௌ குசீலவௌ சாபி மஹாதபஸ்விநௌ * என்றாப்போலே நாடாகப் புகழாநின்றது. [என்னுள் இத்யாதி] என்னுள்ளே வந்து புகுந்து, பெரும்பேறுபெற்றானாய், நிலைபெற்றுப் புகருடையனாய்க் கால் வாங்கிப்போகமாட்டாதே, விளங்காநின்ற ஒரு ரத்நபர்வதம் போலே நின்றான். [புகழும் புகழ்] என்னுள் ளேநின்ற இம்மஹாகுணத்தையல்லது, மற்றுள்ள புகழை ஒருபுகழாக மதியேன். என்னுடைய இந்த்ரியவச்யதையைப் போக்கினனென்று நான் சொன்ன இது ஒருசரக்காக நினைத்திரேன். ... ... (5)

ஆறாம்பாட்டு. எனக்குத் தன்னையொழிய வேறொன்றைத் தந்துவிட்டால், புறம்பு தன்னை வேறொருவர் கொள்வாரில்லாமை எனக்குத்தந்தானோ? என்பக்கல் அபிநிவேசத்தாலே தந்தருளினனென்கிறார்.

பொருள் மற்றெனக்குமோர்பொருள்தன்னில் சீர்க்கத்
தருமேல் * பின்னையார்க்கு அவன் தன்னைக் கொடுக்கும்?
கருமாணிக்கக் குன்றத்துத் தாமரைபோல் *
திருமார்வுகால்கண் கை செவ்வாயுந்தியானே. [6]

[பொருள் இத்யாதி] (பொருள்தன்னில் - மற்றெனக்குமோர் - பொருள் - சீர்க்கத் தருமேல்) புருஷார்த்தவர்க்கத்திலே வேறே கனத்ததொரு புருஷார்த்தத்தை. தருமேல்— தந்துவிட்டால். [பின்னையார்க்கு அவன் தன்னைக் கொடுக்கும்] பின்னை இப்பொருள் கடிதாகக் கைக்கொள்வாருண்டோ? என்! கைக்கொள்வாரில்லையோ? என்னில். [கருமாணிக்கம் இத்யாதி] இவ்வேப்பங்குடிநீரைப் புறம்பு ஸ்வீகரிப்பாருண்டோ? [கருமாணிக்கக்குன்றத்து] ஆச்ரயத்துக்கு த்ருஷ்டாந்தம். [தாமரைபோல்] அவயவசோபைக்கு த்ருஷ்டாந்தம். [திருமார்வு] புருஷகாரமான பிராட்டி எழுந்தருளியிருக்கிற மார்வு. [கால்] அச்சேர்த்திக்குத்தோற்று விழும் திருவடிகள். [கண் இத்யாதி] திருவடிகளிலே விழுந்தாரைக் குளிரநோக்கும் கண், அவர்களை எடுத்தணைக்கும் கை, இன்சொல்லுச் சொல்லும் திருவதரம். அவர்களுக்கு அநுபாவ்யமான திருவுந்தி. * உந்திமேலதன்றோ * என்னக்கடவதிறே. ... ... (6)

ஏழாம்பாட்டு. அவன் தம்மோட்டைக் கலவியாலே ஹ்ருஷ்டனாய், அது தன்பேறாக முறுவல்செய்த திருப்பவளத்தை அநுபவித்துப்ரீதராகிறார்.

செவ்வாயுந்தி வெண்பல்சுடர்க்குழைதம்மோடு*
எவ்வாய்ச்சுடரும் தம்மில்முன்வளாய்க்கொள்ள*
செவ்வாய்முறுவலோடு எனதுள்ளத்திருந்த*
அவ்வாயன்றி யானறியேன்மற்றருளே. (7)

[செவ்வாய் இத்யாதி] சிவந்த திருவதரம், திருவுந்தி, வெளுத்ததிருமுத்து, புகரையுடைத்தான திருமகரக்குழை இவற்றோடேகூட. [எவ்வாய்ச்சுடரும்] மற்றுமெவ்விடத்துமுண்டான தேஜஸ்ஸும். வாய் - இடம். [தம்மில்முன்வளாய்க்கொள்ள] ஒன்றுக்கொன்று "நான், நான்" என்று தம்மில்தாம் முற்பட்டு வளைத்துக்கொள்ள. அஹமஹமிகையாய் முற்பட்டு வளைத்துக்கொள்ள வென்னுதல், முற்பட்டு என்னை வளைத்துக்கொள்ள வென்னுதல்.

[செவ்வாய் முறுவலோடு எனதுள்ளத்திருந்த] *அவாக்யநாதர:* என்றிருக்கக்கடவ தத்த்வம், இவரைப்பெற்று "இது தன்பேறு" என்று தோற்ற முறுவல்செய்திருந்தபடி. பூவலரும் போது எங்குமொக்க ஒரு செவ்வி பிறக்குமாப்போலே, திவ்யாவயவங்கள்தோறும் ஒருவிக்ருதி பிறக்கும்படியாயிற்று ஸ்மிதம்பண்ணிற்று. [அவ்வாயன்றி] அவ்விடமன்றி. ஸ்மிதம் பண்ணிக்கொண்டிருந்த இருப்பல்லது. * காந்தஸ்மிதா * என்று ஸ்வரூபத்தைச்சொல்லி, * ஜாதஹாஸா * என்றதிறே, அப்போதை ஹர்ஷத்தாலுண்டான விக்ருதி யென்னுமிடந் தோற்ற. மற்றுண்டான அருளை நான் அறியேன். இதுவேயமையும். மற்றொன்று வேண்டா வென்கை. (7)

எட்டாம்பாட்டு. அவன் தம்மோடேவந்து கலக்கைக்கடி அவன் க்ருபையென்கிறார்.

அறியேன்மற்றருள் என்னையாளும் பிரானார்*
வெறிதேயருள்செய்வர் செய்வார்கட்குகந்து*
சிறியேனுடைச் சிந்தையுள் மூவுலகும்* தன்
நெறியாவயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரே. (8)

[அறியேன்மற்றருள்] வேறருளுமறியேன். [என்னையாளும்பிரானார்] என்னை அடிமை கொள்ளுகிற உபகாரகரானவர். [வெறிதேயருள் செய்வர்] நிர்ஹேதுகமாக க்ருபை பண்ணுவர். ஆருக்கென்னில். [செய்வார்கட்கு] *யமேவைஷ வ்ருணுதே* என்று தாம் விஷயீகரிக்க நினைத்தார்க்கு. தாந்தாமொன்று செய்வார்க்கென்னில், "வெறிதே" என்னக் கூடாதிறே. ஆனாலும் ஒரு ஹேதுவேண்டாவோ அருளுக்கென்னில், – உகப்பாயிற்று ஹேது: *ப்ரியதம ஏவஹி வரணீயோ பவதி* என்னக்கடவதிறே. ருசியுண்டானாலும், இவன் சேதநனென் வாசிக்குச் சைதந்யப்ரயுக்தமான ஸ்வபாவமாகக்கொள்ளு மித்தனையல்லது. பேற்றுக்கு ஸாதநமாகச்சொல்லவொண்ணாதிறே. நிர்ஹேதுகமாகவருள் இப்படி எங்கே கண்டோமென்ன - புறம்பு தேடிப்போகவேணுமோ? [சிறியேனுடைச் சிந்தையுள்] அத்யல்பனாயிருக்கிற என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே. [மூவுலகும் இத்யாதி] உடையவன் உடைமையை நோக்குவது முறையாலேயாயிருக்குமிறே. தம்முடைய ரக்ஷ்யவர்க்கத்தை முறையிலே நோக்குகிறவர், என்னுடைய ஹ்ருதயத்திலே பொருந்தி முறைகெடப் பரிமாறுகின்றார். தம்மைச் சிறுமைக்கெல்லையாக நினைத்தபடியாலே முறைகேடாய்த்தோற்றுகின்றதாயிற்று இது. அவன் இவரை மூவுலகுக்கும் அவ்வருகாக நினைத்திராநின்றான்; இவர், தம்மை மூவுலகுக்கும் இவ்வருகாக நினைத்திராநின்றார். .... (8)

ஒன்பதாம்பாட்டு. இப்படி விஷயீகரிக்கைக்கு நீர்செய்ததென்? என்னில்,—அநுமதி மாத்ரம்பண்ணினேனித்தனை' யென்கிறார்.

வயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரும்யவரும்*
வயிற்றில்கொண்டு நின்றொருமூவுலகும்* தம்
வயிற்றில்கொண்டு நின்றவண்ணம் நின்றமாலை*
வயிற்றில்கொண்டு மன்னவைத்தேன்மதியாலே. (9)

[வயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரும்] ஜநநியானவள், ப்ரஜையை வயிற்றிலே வைத்து நோக்குமாப்போலே, ஜகத்தை நோக்கும் க்ஷத்ரியாதிகளையும். [யவரும்] இந்த க்ஷத்ரியர்தங்களையும் நோக்கிக்கொண்டு போருகிறப்ரஹ்மாதிகளையும். [வயிற்றில் இத்யாதி] ப்ரஹ்மாதிகளையும் க்ஷத்ரியாதிகளையும் தன்னுள்ளே கொண்டிருந்துள்ள மூவுலகையும்

[தம்வயிற்றில்கொண்டு] தம்முடைய ஸங்கல்ப ஸஹஸ்ரைக தேசத்தாலே நடத்திக்கொண் டென்னுதல்; வயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரையும் யவரையும் வயிற்றிற்கொண்டு நின்றொரு மூவுலகையும் தம் வயிற்றிற்கொண்டென்று பிரித்துச் சொல்லுதல். [நின்றவண்ணம் நின்றமாலே] இவற்றையடையத் தன்வயிற்றில் கொண்டவிடத்திலும், ஒரு விகாரமின்றிக்கே நின்ற ஸர்வேச்வரனே. ஸவிபூதிகனான ஸர்வேச்வரனை என்னுடைய ஹ்ருதயத்திலே போகாதபடி வைத்தேன். [மதியாலே] "இவன்படியை அறிந்துகொண்டே னென்கிறார்" என்னும் அம்மாள். அன்றிக்கே "மதி:- அநுமதி: என்றுக்தி, அநுமதிமாத்ரத்தாலே" என்பர் பட்டர்; அதாவது - அவன் புகுருகிறவிடத்தில் விலக்கிற்றிலனென்கை. ... ... (9)

பத்தாம்பாட்டு. எம்பெருமான் ஸபரிகரமாக என்னுள்ளே புகுந்தான்; அவனை நான் இனி ஒருநாளும் விச்லேஷித்து து:கப்படேனென்கிறார்.

வைத்தேன்மதியால் எனதுள்ளத்தகத்தே*
எய்த்தேயொழிவேனல்லேன் என்றுமெப்போதும்*
மொய்த்தேய்திரைமோது தண்பாற்கடலுளால்*
பைத்தேய்சுடர்ப் பாம்பணை நம்பரனையே. **[10]**

[வைத்தேன்மதியாலென துள்ளத்தகத்தே] அநுமதியாலே என்னெஞ்சிலுள்ளே வைத்தேன். ஓரநுமதிமாத்ரத்துக்கு இத்தனை பலமுண்டாவதே! [எய்த்தேயொழிவேனல் லேன்] இனி ஒருநாளும் இளைத்து க்லேசப்படக்கடவேனல்லேன். இவ்வார்த்தை எத்தனை குளிக்கு நிற்குமென்ன, [என்றுமெப்போதும்] எல்லாதிவஸத்திலும், எல்லாவவஸ்தை யிலும். [மொய்த்தேய்திரை] திரண்டு தகுதியான திரைகள் மோதாநின்றுள்ள ச்ரமஹர மான திருப்பாற்கடலிலே. சிறுதிவலைபடிலும் 'மோதிற்று' என்னும்படியிறே ஸௌகுமார்ய மிருப்பது! [பைத்தேய்சுடர்பாம்பணை] திரைகள்வந்து திருமேனியில் படாதபடி விகஸித மான பணங்களையுடையனாய், பகவதநுபவத்தால்வந்த தகுதியான புகரையுடையனான திருவநந் தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகையாலுண்டான ஏற்றத்தையுடையவன். [நம்பரனை] அவ்வேற்றத்தை நமக்கு வெளியிட்டுத்தந்தவனை: வைத்தேன் மதியால் எனதுள்ளத்தகத்தே, எய்த்தேயொழிவேனல்லேன் என்று மெப்போதும். *அரவத்தமளியினோடும் அழகிய பாற் கடலோடுங்காணும் இவர்திருவுள்ளத்திலே புகுந்திருந்தது. ... ... (10)

நிகமத்தில் இப்பத்தானது, தன்னைக்கற்றவர்கள்ஸம்ஸாரத்துக்கு த்ருஷ்டிவிஷ மென்கிறார்.

சுடர்ப்பாம்பணை நம்பரனைத் திருமாலை*
அடிச்சேர்வகை வண்குருகூர்ச்சடகோபன்*
முடிப்பான்சொன்னவாயிரத்து இப்பத்தும்சன்மம்
விட* தேய்ந்தறநோக்கும் தன்கண்கள்சிவந்தே. **(11)**

[சுடர்ப்பாம்பணைநம்பரனைத்திருமாலை] இப்பத்தும் கற்றார்க்கு ஜந்மமறுகையிறே பலமாகச் சொல்லுகிறது: அத்தால் போய் அநுபவிக்கும் ப்ராப்யத்தைச்சொல்லுகிறது. பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வான்மடியிலே பெரிய பிராட்டியா ரோடே எழுந்தருளியிருக்கக்கண்டு அநுபவிக்கையிறே முக்தப்ராப்யபோகந்தான். [அடிச் சேர்வகை இத்யாதி] திருவடிகளிலே சேருகையே தமக்கு ஸ்வபாவமாகவுடைய ஆழ்வார். ஜ்ஞாநாநந்தங்களன்று இவர்கு நிரூபகம்; சேஷத்வமாயிற்று. [முடிப்பான் சொன்ன

இத்யாதி] ஸம்ஸார ஸம்பந்தத்தை அறுக்கைக்காகச் சொன்ன ஆயிரத்து இப்பத்து அடிச் சேர்வகை முடிப்பானென்றுமாம். சன்மமானது விட்டுப்போம்படியாக நோக்கும். அதுசெய்யுமிடத்தில், [இப்பத்தும் தன்கண்கள் சிவந்து நோக்கும்] அதாவது ஜந்மத்துக்கு இப்பத்தும் த்ருஷ்டிவிஷமென்கை. இப்பத்துக்கும் ஜந்மத்துக்கும் ஸஹாநவஸ்தாநலக்ஷண விரோதமுண்டென்கை. ... ... (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

இருந்தவன் தான்வந்திங்கிவரெண்ணமெல்லாம் *
திருந்தவிவர்தந்திறத்தேசெய்து *—பொருந்தக்
கலந்தினியனாய்நிற்கக் கண்டசடகோபர் *
கலந்தநெறிகட்டுரைத்தார்கண்டு.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

எட்டாந்திருவாய்மொழி — கண்கள்சிவந்து ப்ரவேசம்.

*மாயக்கூத்தனில் இவர்க்கோடின விடாயெல்லாம் ஆறும்படி வந்து ஸம்ச்லேஷித்து தன்விடாயுந்தீர்ந்து, இவரைப்பெற்ற பேற்றாலே ப்ரீதனாய், "நினைவின்றிக்கேயிருக்கச்செய்தே இங்ஙனே சேரவிழுந்தது, இனி ப்ரவ்ருத்தமான ஸம்ச்லேஷம் சிதிலமாகவொண்ணாது; இவராகிறார் *வளவேழுலகிலாழ்வாராயிற்று; நம்மைக் கிட்டக்கொள்ள 'சிறியேனுடைச் சிந்தை' என்று தம் அயோக்யதையை அநுஸந்தித்தவர், இன்னம் அதுபின்னாட்டி அகலப் பார்ப்பார்; ஏற்கவே பரிஹரிக்கவேணும்" என்றுபார்த்து, "இனி இவர்தாம் அகலப்பார்ப்பதும் 'அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்த ஆத்மவஸ்து அங்குத்தைக்கு யோக்யமன்று' என்றாயிற்று. இது அங்ஙனல்ல, வந்தேறியான இதைப்பாராதே அடியைப்பாரீர்" என்று இவ்வாத்மவஸ்துவினுடைய வைலக்ஷண்யத்தை இவர்நெஞ்சிலே படுத்தவேணும், என்று பார்த்து "நித்யமாய், ஜ்ஞாநாநந்தலக்ஷணமாய், நமக்கு அத்யந்தசேஷமாய்க்காணுமிருப்பது; நீர் கிட்டுமது நமக்கு அவத்யமல்ல: கௌஸ்துபத்தோபாதி பிராட்டிமாரோபாதி நமக்கு நிறமாமித்தனை' என்று இவருடைய ஸ்வரூபவைலக்ஷண்யத்தை இவர்நெஞ்சிலேபடுத்துகிறானாய் "அதுசெய்யுமிடத்தில் 'உம்முடைய ஆத்மஸ்வரூபமிருக்கும்படி காட்டவாரீர்'என்றால்'மின்மினி போலேயிருக்கிற இதில் சரக்கென்?' என்று இவர் இசைவாரொருவரல்லர்; 'அவ்வாயன்றியான றியேன் மற்றறுள்', என்று நம்வடிவழகிலே துவக்குண்டிருப்பதொன்றுண்டு; நம்மைமுன்னிட்டு நமக்கு ப்ரகாரமாயிருக்கிற ஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுப்போம்" என்று பார்த்து. "வாரீர், நம்முடைய வடிவழகிருக்கிறபடி கண்டீரே; நம்மைக்காணும் காட்சியிலே உம்மையுங் காணலாய்க்காணுமிருப்பது" என்று தன்னுடைய வடிவழகை முற்பட அநுபவிப்பித்து,தனக்கு நூபுராதிகளோபாதி அத்யந்தபோக்யமுமாய் அத்யந்த சேஷமுமாயிருக்கிற ஆத்மஸ்வரூபத்தைக்காட்டிக்கொடுக்க, அத்தை அநுபவித்து இனியராகிறார். இத்திருவாய்மொழியில் முதலிரண்டரைப்பாட்டாலே தன்னையநுபவிப்பித்து, அநந்தரம் ஆத்மஸ்வரூபத்தைக்காட்டிக் கொடுத்தானாயிருக்கும். அதுக்கு அடியென்? என்னில், "வஸ்துதான் ஸ்வாச்ரயமாயல்லது இராமையாலே ஆச்ரயமான தன்னைக்காட்டி, பின்னை ஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுக்கிறான்" என்பாருமுண்டு. அன்றிக்கே,"ஸ்வரூபமிருக்கும்படியைக் காட்டித்தா வாருமென்றால் இசையார் என்று தன்னை முற்படக் காட்டிக்கொடுக்கிறான்" என்பாருமுண்டு. "இரண்டரைப்பாட்டாலும் * இருந்தும்வியந்திற்கலவி பின்னாட்டுகிறது" என்பாருமுண்டு.

முதற்பாட்டு. அவன், தம்மோட்டைக்கலவியாலே புதுக்கணித்த திவ்ய ஸௌந்தர்யாதிகளோடே என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்திருந்தானென்கிறார். நம் ஆழ்வார்கள் வடிவழகுக்கு அவ்வருகு ஸ்வரூபகுணங்களில் இழியமாட்டார்கள்; திவ்ய விக்ரஹத்தை சுபாச்ரயமாகப் பற்றினபின்னை அவ்வருகுபோவானென்று சாஸ்த்ரங்கள் சொல்லுகிறது-இத்தை விட்டுப் போகச் சொல்லுகிறதல்ல; ஸ்வரூபகுணங்களும் உபாஸ்யமென்கைக்காகச் சொல்லுகிறது. அவன்தன்னோடு பிராட்டிமாரோடு சேஷபூதரோடு வாசியில்லை; எல்லார்க்கும் அபிமதமாயிருக்குமாயிற்றுத் திருமேனி.

கண்கள்சிவந்துபெரியவாய் வாயுஞ்சிவந்துகனிந்து*உள்ளே
வெண்பலிலகுசுடரிலகு விலகுமகரகுண்டலத்தன்*
கொண்டல்வண்ணன் சுடர்முடியன் நான்குதோளன் குனிசார்ங்கன்*
ஒண்சங்கதைவாளாழியான் ஒருவனடியேனுள்ளானே. (1)

[கண்கள்சிவந்து] *தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ* என்று கண்களாகில் சிவந்திருக்குமிறே. இப்படி யிருக்கச் செய்தே* மாயக்கூத்தனில் விச்லேஷத்தாலே விவர்ணமானது. *இருத்தும் வியந்தில் ஸம்ச்லேஷத்தாலே தன்னிறம் பெற்றபடி. கண்ணிலே துவக்குண்டு கால்வாங்கமாட்டாதே யிருக்கிறவிருப்பு, இசையிலே காணும்தனை. [பெரியவாய்] வ்ருத்திஹ்ராஸாதிக ளுண்டாகிறதாயிற்று. *ஸதைகரூபரூபாய* என்கிறது-கர்மநிபந்தநமாந விகாரங்கள் இல்லையென்ற இத்தனையொழிய ஆச்ரித ஸம்ச்லேஷத்தாலே பிறக்கும் விகாரத்தை இல்லையென்கிறதன்றே; அப்படியே யானவன்று ஆச்ரணீயனன்றிக்கேயொழியுமே. அவனும் தன்னளவிலே விக்ருதனாகக் கடவனிறே. [வாயும்சிவந்து] கண்ணேயன்றிக்கே, திருவதரமும் தன்னிறம் பெற்றபடி சொல்லுகிறது. "செவ்வாய் - வெண்பல் சுடர்க்குழை" என்றது பின்னாட்டுகிறபடி. [கனிந்து] இச்சிவப்பு, தன்னிலேயூறி நெய்த்துத் தோற்றுநின்றதாயிற்று. [உள்ளே] திருவதரத்தில் சிவப்பைவிட்டு, உள்ளுப்புகுகையிலுண்டான அருமையடையத் தோற்றுகிறது. [வெண்பலிலகுசுடர்] திருவதரத்திற்சிவப்புக்குப் பரபாகமான வெண்மையை யுடைத்தாய், தேஜஸ்ஸூநின்று சுழியாநின்றதாயிற்று. [இலகு விலகுமகர குண்டலத்தன்] திருக்குழலிலிருட்சிக்கு ப்ரகாசகமாய், அலைந்துவருகிற திருமகர குண்டலத்தையுடையவன். "இக்கலவி நமக்கு ஸம்பவிப்பதே!" என்று தலைசீய்த்துப்படாநின்றான்போலே, கடலுடைந்தாப்போலே தன்னளவிலே ஹ்ருஷ்டனாகாநின்றான். [கொண்டல்வண்ணன்] வர்ஷூகவலாஹகம்போலே வடிவம் குளிர்ந்து கறுத்தது. முன்பு விவர்ணமாய்ப்போலே திருமேனியிருந்தது. [சுடர்முடியன்] தன்னழகாலே அல்லாதவழகை முட்டாக்கிடும் திருவபிஷேகத்தையுடையவன். *மாயக்கூத்தனில் இவர் விடாய்தீர்ந்தபின்பாயிற்று முடியும் நற்றறித்தது. "முடிசேர்சென்னியம்மா" என்றிறே கூப்பிட்டது. [நான்குதோளன்] இவரை அணைத்தபின்பு தோள்கள் பணைத்தபடி. [குனிசார்ங்கன்] "மகரகுண்டலத்தன்" என்கிறவோபாதி, இவையும் சிலவாபரணங்களிருக்கிறபடி. வீரர்கள் கையில் வில்லு வினையில்லாதபோதும் வளைந்தேயிருக்குமிறே. [ஒண்சங்கு] *உண்பது சொல்லில், உன் செல்வம் சாலவழகியது* என்னும்படியான ஒண்சங்கு. [கதைவாளாழியான்] இவற்றையுடையவன். [ஒருவன்] புண்டரீகாக்ஷனாய், காளமேகநிபச்யாமனாய், சதுர்புஜனாய், சங்கசக்ராதி திவ்யாயுதோபேதனாகையாலே அத்விதீயன். [அடியேன்] அவனுடைய சேஷித்வம் அத்விதீயமாயிருக்கிறாப்போலே, இவருடைய சேஷத்வமும் அத்விதீயம். அதாவது - ஸ்வரூபஜ்ஞாநத்தாலன்றிக்கே அழகுக்குத்தோற்று அடியேனென்கிறார். [உள்ளானே] பராகர்த்தமான மநஸ்ஸை ப்ரத்யக் விஷயமாக்கினவாறே, *யுவாகுமார:* என்று கேட்டேபோம் வடிவழகு, வயிரப்பேழை திறந்தாப்போலே அவயவசோபையும் ஆயுதசோபையும் ஆபரணசோபையுமாய் மிளிராநின்றதாயிற்று. ... ... (1)

இரண்டாம்பாட்டு. என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்திருந்த அளவன்றிக்கே, என் சரீரத்திலேயும் புகுந்து கலந்தானென்கிறார்.

அடியேனுள்ளான் உடலுள்ளான் அண்டத்தகத்தான் புறத்துள்ளான்*
படியேயிதுவென்றுரைக்கலாம்படியனல்லன் பரம்பரன்*
கடிசேர்நாற்றத்துள்ளாலை இன்பத்துன்பக்கழிநேர்மை*
ஒடியாவின்பப்பெருமையோன் உணர்விலும்பரொருவனே. (2)

[அடியேனுள்ளான்] திருக்கோட்டியூர்நம்பிஸ்ரீபாதத்திலே ஆறுமாஸம் ஆழ்வான் ஸேவித்துநின்று போரப்புக்கவாறே, "ஆழ்வான்! ஆழ்வார் *அடியேனுள்ளான்* என்றபடி கண்டாயே" என்ன, "க்ருதார்த்தனானேன்" என்று போந்தானும். என்னுள்ளான் என்ன வேண்டுமிடத்திலே, 'அடியேனுள்ளான்' - என்கையாலே - ஜ்ஞாநாநந்தங்களன்று வஸ்துவுக்கு நிரூபகம்; சேஷத்வமென்கை. ஜ்ஞாநாநந்தங்களிலும் அந்தரங்கம் பகவச்சேஷத்வமென்கை. [உடலுள்ளான்] சேதநனுக்கு பகவத்ஸ்வரூபத்திலும் திவ்யமங்களவிக்ரஹமே உத்தேச்ய மானாப்போலே, ஈச்வரனுக்கும், இவர்ஸ்வரூபத்திலும் இவர்கழிக்கிற சரீரம் உத்தேச்ய மாய்த் தோற்றுகின்றது; செருக்கர் அபிமதவிஷயத்தில் அழுக்கு உகக்குமாப்போலே. இத்தால் - "ஜீவபரபேதமும், ஜீவர்களுக்கு பரஸ்பர பேதமும், சேஷசேஷி ஸம்பந்தமும் அபாரமார்த்தம்" என்கிற பக்ஷங்கள் அர்த்தாத் ப்ரதிக்ஷிப்தங்கள். உம்முடைய திருமேனியை விரும்புகிறவன் ஆர்? என்ன, இன்னானென்கிறது மேல்:- [அண்டத்தகத்தான் புறத்துள்ளான்] அண்டாந்தர்பூதமான பதார்த்தங்களோடு, புறம்புள்ள பதார்த்தங்களோடு வாசியற ஸர்வகத னானவன். ஸர்வகதமான வஸ்துகிடீர் ஒருவ்யக்தியில் ஏகதேசமான சரீராம்சத்திலே அகப் பட்டதென்கை. [படியேயிது] (இதுவே - படி.) ஸர்வதா ஸத்ருசமாயிருப்பதோர் உபமா னத்தை உடையவனல்லன். ஸர்வகதமுமாய் ஸர்வநிர்வாஹகமுமா யிருப்பதொரு வஸ்துவுண் டாகிலிறே ஒப்புச் சொல்லலாவது. சொல்லும்படிதான் என்? என்னில், [பரம்பரன்] மேலான வற்றுக்கெல்லாம் மேலானவன். *நேதிநேதி* என்கிறபடியே - இவ்வளவன்று என்னுமித் தனை. ஆனாலும் இவ்விஷயத்தை ப்ரதிபத்தி பண்ணும்படிதானென்? என்னில், [கடிசேர் நாற்றத்துள்ளாலை] ஆலை-மது. கடி என்றும், நாற்றம் என்றும் - பரிமளமாய், மீமிசைச் சொல்லாய் - மிக்கபரிமளமென்கை. கடி என்று - புதுமையாய், செவ்விப் பரிமளமென்றுமாம். பரிமளத்துக்கு உள்ளும் புறம்பு மில்லாமையாலே - நாற்றத்திலென்றபடி. [இன்பத்துன்பக் கழிநேர்மை] அதினுடைய அநுபவத்தால் வந்த ஸுகத்தில் து:காம்சத்தைக் கழித்த நேர்மை யுண்டு - நுண்மை - ஸுகாம்சம். புஷ்பத்தில் பரிமளத்தை த்ருஷ்டாந்தமாகச் சொல்லுகை யாலே, அதில் அல்பாஸ்த்திரத்வங்கள் து:காம்சம்; அதுகழிந்த நுண்மை - ஸுகாம்சம்; துன் பம்கழிந்த இன்பமென்றபடி. [ஒடியாவின்பப்பெருமையோன்] ஒடியாததுமாய், பெரியது மானஸுகம். நித்யமுமாய் நிரதிசயமுமான ஆநந்தத்தையுடையவன். * ஆநந்தமய: என்கிறார். [உணர்விலும்பரொருவனே] ஜ்ஞானத்தில்வந்தால் மேலான ஒருவன். அத்விதீய ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனென்கை. [ஒடியாவின்பப் பெருமையோனுணர்விலும்பரொருவன் - அடியேனுள் ளான் -உடலுள்ளான்] எல்லார்க்கும் ஸ்ப்ருஹணீயவிஷயமாயிருக்கிறவன்கிடீர் என் சரீரத்தை ஆதரிக்கிறான்! ... ... (2)

மூன்றும்பாட்டு. கேவலக்ருபையாலே ஸ்வவிஷயமாக இச்சையையும் பிறப்பித்து, என்னோடே ஸம்ச்லேஷித்து, ஸம்ச்லேஷ ஸ்த்தைர்யார்த்தமாக விலக்ஷணமுமாய்த் தனக்கு அநந்யார்ஹமுமான ஆத்மஸ்வரூபத்தையும் காட்டியருளினானென்கிறார்.

உணர்விலும்பரொருவனை அவனதருளாலுறல்பொருட்டு*என்
உணர்வினுள்ளேயிருத்தினேன் அதுவுமவனதின்னருளே*
உணர்வுமுயிருமுடம்பும் மற்றுலப்பிலனவும்பழுதேயாம்*
உணர்வைப்பெறவூர்ந்திறவேறி யானுந்தானாயொழிந்தானே. (3)

[உணர்விலும்பரொருவனை] உணர்விலேயுளரான நித்யஸித்தர்; ஜ்ஞாநாதிகரான நித்யஸூரிகளுடைய ஸத்தாதிகள் ஸ்வாதீநமாம்படியிருக்கிற அத்விதீயனை. இத்தால் - ப்ராப்யஸ்வரூபஞ்சொல்லிற்று. *அயர்வறுமமரர்களதிபதியாயிருக்கு மிருப்பிறே ப்ராப்யம். *அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ* என்றிறே இவர் ப்ரார்த்தித்தது. [அவனதருளால்] அவனுடைய ப்ரஸாதத்தாலே. ப்ராப்யம் அவனே என்கிற நிர்பந்தத்தோபாதி, ப்ராபகமும் அவன் ப்ரஸாதமேயாயிருக்கிறபடி. [உறற்பொருட்டு] ப்ராபிக்கையின் பொருட்டு. ப்ராப்ய ப்ராபகம் அவனேயாகில், நீர் அதில் அந்வயித்த அம்சமேதென்ன, [என்னுணர்வினுள்ளேயிருத்தினேன்] அவனை என்னுடைய ஜ்ஞாநத்துக்கு விஷயமாக்கினேன். 'வைத்தேன்மதியால்' என்றதுதானிறே. இச்சித்தேனென்கை. இச்சைதான் ஸ்வாதீநமோ வென்னில்,— [அதுவுமவனதின்னருளே] அந்த இச்சைதான் பிறந்தது அவன் ப்ரஸாதத்தாலே. நின்றநின்ற அளவுகள்தோறும் 'இவ்வளவும் அவனாலே பிறந்தது' என்னும்படியாயிற்றிருப்பது அவனுடைய ஸௌஹார்தம். *தன்பொன்னடிகீழ் - இருத்தும் வியந்து* என்று ப்ராப்யமும் ப்ராபகமும் அவனே யென்று, *அருத்தித்து* எனறதிறே; அத்தையிறே இங்குச்சொல்கிறது. இரண்டரைப்பாட்டென்கிறது அற்றது. மேல் - ஆத்மஸ்வரூபவைலக்ஷண்யத்தைக் காட்டித்தந்தானென்கிறது — [உணர்வும்] வைஷயிகஜ்ஞானமும். [உயிரும்] பஞ்சவ்ருத்திப்ராணனும். [உடம்பும்] சரீரமும். [மற்றுலப்பிலனவும்] மற்றும் அபரிச்சேத்யமான மஹதாதிப்ரக்ருதிவிகாரங்களும், ப்ராக்ருதியும். [பழுதேபாமுணர்வைப் பெறவூர்ந்து] இவையெல்லாம், ஹேயமென்னும்படியான அறிவை நான் பெறும்படி நடத்தி; அந்வர்த்தப்ரயோஜநத்தேர் ஊருமாப்போலே. இவை அபுருஷார்த்தமென்னுமுணர்வுண்டு - மயர்வறமதி; அத்தை நான் உடையேனும்படிபண்ணி. [இறவேறி] ப்ரக்ருதி ப்ராக்ருதங்கள் அபுருஷார்த்தங்களென்னு மளவேயன்றிக்கே முடியப்போய்; ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாய், பகவச்சேஷதைகரஸமாயிருக்கும் ஆத்மவஸ்துவென்னுமளவும் காட்டித்தந்து. [இறவேறி] முடியவேற்றி. யானும்தானாயொழிந்தானே] அவ்வளவிலும் பர்யவஸியாதே, என்னைச்சொல்லும் சொல்லாலே தன்னைச் சொல்லலாம்படி தனக்கு ப்ரகாரதயா சேஷமென்னுமிடத்தையும் காட்டித்தந்தான். 'ஆழ்வீர்!' என்றால், 'ஏன்', என்பான் ஈச்வரன்போலேகாணும். அஹம்சப்தமும் அஹம்புத்தியும் தன்னளவும் செல்லும்படி ப்ரகாரதைக வேஷமாயிருக்கிறபடியைக் காட்டித்தந்தான். *தச்சப்தம் குணவிசிஷ்டவாசியானவோபாதி, *த்வம்சப்தமும் அசித்விசிஷ்ட ஜீவாந்தர் யாமியளவும் செல்லக்கடவதிறே. ... ... (3)

நாலாம்பாட்டு. ப்ராப்தியைக் காட்டினவளவேயன்றியே இவ்வாத்மா தனக்கு அத்யந்தபோக்யமென்னுமிடத்தையும் காட்டித்தந்தானென்கிறார்.

யானுந்தானாயொழிந்தானை யாதும்யவர்க்கும்முன்னோனை*
தானும்சிவனும்பிரமனுமாகிப் பணைத்த தனிமுதலை*
தேனும்பாலுங்கன்னலும் அமுதுமாகித்தித்தித்து*என்
ஊனிலுயிரிலுணர்வினில் நின்றவொன்றையுணர்ந்தேனே. (4)

யானும்தானாயொழிந்தானை] கீழ்ச்சொன்ன அநந்யார்ஹசேஷத்வத்தில் ப்ரீதியாலே அநுபாஷிக்கிறார். [யாதும் இத்யாதி] யாதும் யவர்க்குமென்று காரணவஸ்துமான

சேதநாசேதநங்களைச் சொல்லுகிறது. [முன்னோனை] கார்யத்துக்கு நியமேந பூர்வக்ஷணவர்த்தியானதிறே காரணமாவது. [தானுமித்யாதி] ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே அவதரித்த தானும். ப்ரஹ்மருத்ரர்கள் முதலான கார்யவர்க்கமுமாய்க் கொண்டு விஸ்த்ருதமான அத்விதீயகாரணமானவனை. சேதநாசேதநங்களடங்க அழிந்தபோது தன்திருமேனியிலே சக்த்யவஸ்தப்ரபைபோலே ஸூக்ஷ்மரூபேண இவை கிடக்கும்படி யேறட்டுக்கொண்டுநோக்கி, ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே தன்பக்கலினின்றும் விபக்தமாக்கி, அண்டஸ்ருஷ்டியளவும் தானே நடத்தி. அண்டாந்தர்வர்த்திகளில் ப்ரதாநரான ப்ரஹ்மாதிகளை உண்டாக்கி, ஸ்வேநரூபேண நின்று பாலநகர்மத்தைப் பண்ணியும், ப்ரஹ்மருத்ரர்களுடைய சரீரத்தையும் ஆத்மாவையும் அதிஷ்டித்துக்கொண்டுநின்று ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைப்பண்ணியும், அவர்கள் செய்கிற கார்யங்களோடு தான்செய்கிற கார்யங்களோடு வாசியற எல்லாம் தானே நடத்துகிறவனை.

[தேனும்] இப்படி இனிதாயிருக்கிறது ஆர்க்கு? என்னில் *ஸர்வரஸ:* என்று சேதநனுக்கு அவன் இனியனாயிருக்குமாப்போலே ஈச்வரனுக்கும் இது இனிதாயிருக்குமிறே. அவனுக்கு "என்னது" என்று இனிதாயிருக்கும்; இவனுக்கு "அவனது" என்று இனிதாயிருக்கும். "ஈச்வரபாரதந்த்ரன்" என்று அறிவதற்குமுன்னும், "ஸ்வாநுபவம் அமையும்" என்னும்படி இனிதாயிருக்கிறதிறே. [என்னுனில்இத்யாதி] என்சரீரத்திலும், ப்ராணனிலும், ஜ்ஞாநத்திலும் வ்யாப்தமாய், விலக்ஷணமான ஆத்மாவைத் தனக்கு சரீரமாகவுடையவனை அறியப்பெற்றேன். "நின்றவொன்று" என்கிறது ஜீவாத்மஸ்வரூபவாசியான சப்தம்; ஆச்ரயமான ப்ரகாரிபர்யந்தாபிதாநம்பண்ணுகிறது. ஸ்வநிஷ்டமல்லாமையாலே பகவத்பர்யந்தமாயிறே யிருப்பது. ஆத்மாவினுடைய போக்யதையாகிற் சொல்லுகிறது, காரணத்வம் சொல்லுகிறதென்? என்னில், விமுகரான சேதநரை கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டித்து விட்டான்; ஐச்வர்யகாமரான ப்ரஹ்மாதிகளுக்கு அவர்களுகந்த ஐச்வர்யத்தைக் கொடுத்துவிட்டான்; எனக்கு, அஸிதம்சம் த்யாஜ்யமென்னுமிடத்தையும், ஐச்வர்யம் அபுருஷார்த்தமென்னுமிடத்தையும் ஆத்மவஸ்து தனக்கு அநந்யார்ஹசேஷமாய் நிரதிசயபோக்யமாயிருக்குமென்னுமிடத்தையும் காட்டித் தந்தானென்கைக்காகச் சொல்லுகிறார். *நின்றனரிருந்தனரிற்போலே, இஸ்ஸாமாநாதிகரண்யத்துக்கு விசேஷணம்சமான போக்யதையிலே தாத்பர்யம். வையதிகரண்யத்துக்கும், நாட்டார் சொல்லுகிற சுத்தபேத மன்று பொருள்; ஸாமாநாதிகரண்யத்துக்கும், ஸ்வரூபைக்ய மன்று பொருள். 'யாதும்யவர்க்கும் முன்னோனை' என்று தொடங்கி 'என்னுனியிரிலுணர்வினில் நின்ற வொன்றான யானும் தானாயொழிந்தானை உணர்ந்தேன்' என்றந்வயம். ... ... (4)

அஞ்சாம்பாட்டு. "கீழ் பகவத்ப்ரகாரமாக ஆத்மா அநுஸந்திக்கப்பட்டது; இதுக்கு மேல் நாலுபாட்டு படகதமான சௌக்ல்யத்தைப் பிரித்து நிஷ்கர்ஷக சப்தத்தையிட்டு வ்யவஹரிக்குமாப்போலே, 'எம்பெம்மானோடு' என்கிற பாட்டளவும் கேவல ஆத்மஸ்வரூபத்தைச் சொல்கிறது" என்று எம்பார் அருளிச்செய்யும்படி. ஆண்டான், "ப்ரகாரமானவேஷத்திலே சொல்லுகிறது" என்னும். "நின்றவொன்றை" என்கிறவிதில் பகவத்ப்ரஸாதத்தாலே நான் அறிந்த இவ்வாத்மவஸ்து ஒருவர்க்கும் அறியப்போகாது, வருந்தியறிந்தாலும் ஸாக்ஷாத்கரிக்கப்போகிறதன்றென்கிறார்.

நின்றவொன்றையுணர்ந்தேனுக்கு அதனுள்நேர்மையதுவிதுவென்று*
ஒன்றுமொருவர்க்குணரலாகாது உணர்ந்துமேலுங்காண்பரிது*
சென்றுசென்றுபரம்பரமாய் யாதுமின்றித்தேய்ந்தற்று*
நன்றுதீதென்றறிவரிதாய் நன்றாய்ஞானங்கடந்ததே. (5)

[நின்றவொன்றை] *தேஹேந்த்ரியமந:ப்ராணதீக்களிற்காட்டில் அந்யமாய், இவை அழியுமன்றும் அழியாதே, ஏகரூபமாய், இவற்றுக்கு நியந்தாவுமாய், விலக்ஷணமுமாகை

ஆத்மாவை. [உணர்ந்தேனுக்கு] ஆராய்ந்தேனுக்கு. *உயர்வறவுயர்நலம்* என்று அவனுடைய கல்யாணகுணங்களிலே இழிந்தவராகையாலே இதுக்குமுன்பு மின்மினி போலேயிருக்கிற ஆத்மஸ்வரூபத்தில் கண்வைத்திலர்; பரிகரமும் பக்திரூபாபந்நஜ்ஞாந மாகையாலே இத்தை யநுஸந்திக்கைக்குப் போதுபெற்றிலர், (முக்தன், *நோபஜநம் ஸ்மரந் பண்ணுமாப்போலே யிறே, பகவத்குணப்ரவணனுக்கும் ஆத்மஜ்ஞாநம் அவிஷயமாயிருக்கும்படி). இத்தை ஆராய்ந்தேனுக்கு இது இருந்தபடியென்? என்கிறார்:—[அதனுள்நேர்மை] அதினுடைய வைலக்ஷண்யம். [அதுவிதுவென்று] அநுபூதங்களின்படி என்றுதல், அநுபவிக்கிறவற்றின்படி என்றுதல் அறியப்போகாது. [ஒன்றுமொருவர்க்கு உணரலாகாது] (ஒருவர்க்கு-ஒன்றும்-உணரலாகாது) எத்தனையேனும் அதிசயித ஜ்ஞாநர்க்கும் ஏகதேசமும் அறியப்போகாது. [உணர்ந்து மேலும் காண்பரிது] *ஜ்ஞாதும் த்ரஷ்டுஞ்ச தத்த்வேந* என்கிறபடியே அறியப்போகாது, அறிந்தால் பின்னை ஸாக்ஷாத்கரிக்கவும்போகாது. [சென்றுசென்று பரம்பரமாய்] போய்ப்போய் ஒன்றுக்கொன்று மேலாயிருக்கிற அந்நமய ப்ராணமய மநோமயங்களுக்கு அவ்வருகாய். [யாதுமின்றித்தேய்ந்தற்று] அவற்றின் ஸ்வபாவங்கள் ஒன்று மின்றிக்கே அவற்றோடறத் தேய்ந்தற்று. [நன்றுதீதென்று அறிவரிதாய்] தேஹம், தேஹத்திற்காட்டில் இந்த்ரியம், அதிற்காட்டில் மநஸ்ஸு, அதிற்காட்டில் ப்ராணன் என்று ஒன்றுக்கொன்று வைலக்ஷண்யமுண்டாயிருப்போலே, ப்ராக்ருதங்களின்படியால் நன்றென்றும் தீதென்றும் அறியவரிதாயிருக்கும் [நன்றாய்] ஸ்வேதரவ்யாவ்ருத்தமாய், [ஞானங்கடந்ததே] ஐந்த்ரியிகஜ்ஞாநத்துக்கு எட்டாதிருக்கும். கீழிலவை ஒன்றுக்கொன்று நெடுவாசியாயிருக்கச் செய்தேயும் ஏகப்ரமாணகம்யத்வ ஸாம்யமுண்டு: அதுவுமில்லையென்கிறது. ஆக, இப்பாட்டில்—ஸாங்க்யத்தில் தத்த்வ ஸங்க்யாநக்ரமத்தாலே ஆத்மஸ்வரூபத்தைச் சொல்லும்படியையும், அதுதன்னை அறிகையிலுண்டான அருமையையுஞ் சொல்லிற்று. ... ... (5)

ஆறும்பாட்டு. யோகசாஸ்த்ரத்திற் சொல்லுகிறபடியே இந்த்ரிய ஜயாதிரூபமான யோகத்தாலே ப்ரக்ருதிவிநிர்முக்த ஆத்மஸ்வரூபத்தை து:கேந ஸாக்ஷாத்கரிக்கலாமென்கிறார்.

நன்றாய்ஞானங்கடந்துபோய் நல்லிந்திரியமெல்லாமீர்த்து*
ஒன்றாய்க்கிடந்தவரும்பெரும்பாழ் உலப்பிலதனையுணர்ந்துணர்ந்து*
சென்றாங்கின்பத்துன்பங்கள் செற்றுக்களைந்துபசையற்றால்*
அன்றேயப்போதேவீடு அதுவேவீடுவீடாமே. (6)

[நன்றாய் ஞானங்கடந்துபோய்] வ்யாவ்ருத்தமான நன்மையை யுடைத்தாய், இந்த்ரிய ஜ்ஞாநத்துக்கு அவிஷயமாயிருக்குமென்று அவற்றை அநுபாஷிக்கிறதென்னவுமாம். நன்றாயென்கிற இதுகிடக்க, சப்தாதி விஷயங்களைத் தப்பிப்போயென்னுதல். "ஜ்ஞாயத இதிஜ்ஞாநம்" என்கிற ப்ரக்ரியையாலே - ஜ்ஞாநமென்கிறது. ஜ்ஞாநத்தால் காணப்படும் விஷயங்களை ஜ்ஞாநசப்தத்தாலே சொல்லுகிறது. [நல்லிந்திரிய மெல்லாமீர்த்து] விஷயங்களைத் தப்பிப்போனாலும், அவையிருந்தவிடங்களிலே மூட்டக்கடவதான ஸாமர்த்யத்தையுடைய இந்த்ரியங்களையும் கழித்து. [ஒன்றாய்க்கிடந்த இத்யாதி] அநாதிகாலம் சேதநனோடு ஸம்ஸ்ருஷ்டமாய்க் கிடப்பதாய், *மம மாயா துரத்யயா* என்கிறபடியே ஒருவரால்கடக்க வரிதாய், மஹதஹங்காராத்யவஸ்த்தைகளாலே பரப்பையுடைத்தாய், போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளலாம்படியாய், ப்ரவாஹரூபத்தாலும் ஸ்வரூபத்தாலும் நித்யமாயிருக்கிற அசித்தத்த்வத்தை; ப்ரக்ருதியை கார்யங்களாயும் காரணங்களாயு மிருக்குமென்னுமிடத்தை மிகவுமுணர்ந்து. [ஆங்கு-நன்றாய்-சென்று] தன்பக்கல் போக்யதாபுத்தியைப் பிறப்பிக்கக் கடவதான இதில்

கால்தாழாதே, ஆத்மஸ்வரூபத்தளவும் சென்று. [இன்பத்துன்பம் இத்யாதி] அத்தை த்யாஜ்யமென்று விட்டாலும், ஸுகது:கங்களுக்கு ஹேதுவான புண்யபாபகர்மங்கள் கிடக்குமாகில் பின்னையும் கொண்டு மூட்டுமிறே; அவற்றையும்விட்டு. அவற்றை விட்டாலும் ருசிவாஸனைகள் கிடக்குமாகில் பின்னையும் கர்ப்பிக்கும். [பசையற்றால்] ருசிவாஸனைகளற்றால். [அன்றேபப்போதே] அக்காலத்திலே அம்முஹூர்த்தத்திலே. [வீடு] ப்ரக்ருதி ப்ராக்ருதங்களில் தொற்று-அறும். ப்ரக்ருதியின்தனை சுணையும், ஸௌகுமார்யமுமுடையாரில்லை. தன்பக்கல் த்யாஜ்யபுத்தி பண்ணினானைத் தானும் முகம்பாராது. [அதுவேவீடு] "அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்" என்று ப்ராக்ருதங்களில் தொற்று அற்றவாறே ஆத்மப்ராப்திலக்ஷண மோக்ஷமாயிருக்கும். அதுக்கென்னச் செய்யவேண்டுவதில்லை. [வீடாமே] அவனுக்கு ப்ரகாரமாக ஆத்ம வஸ்துவை அநுஸந்தித்து, அவ்வழியாலே இதுதன்னை ப்ராப்யமாகவிறே இவர் தாம் நினைத்திருப்பது. அவ்வளவு போகமாட்டாதே இதின் நன்மையைக் கண்டு இவ்வளவிலே கால்தாழ்வார்க்கும் போந்திருந்ததீ! என்கிறார். தம்முடைய உத்தேச்யத்தில் ஏகதேசத்தைப் புருஷார்த்தத்தில் சரமாவதியாகக் கொள்ளுகையாலேயிறே முன்பு இவர் இத்தைச் சிரித்திருந்தது. .... (6)

ஏழாம்பாட்டு. கீழ்ச்சொன்ன உபாயத்தின்படியே அவ்வஸ்துவை ப்ராபிக்கமாட்டாதே அதிலே ஸம்சயமநுவர்த்திக்குமவர்கள் உருவ க்லேசப்பட்டேபோமித்தனையென்கிறார்

அதுவேவீடு வீடுபேற்றின்பந்தானுமதுதேறி*
எதுவேதானும் பற்றின்றி யாதுமிலிகளாகிற்கில்*
அதுவேவீடு வீடுபேற்றின்பந்தானுமதுதேறாது*
எதுவே வீடேதின்பமென்று எய்த்தாரெய்த்தாரெய்த்தாரே. (7)

[அதுவேவீடு] கீழ்ச்சொன்ன அதுவே ஆத்மப்ராப்திலக்ஷணமோக்ஷமாகிறது. [வீடுபேற்றின்பந்தானுமது] அம்மோக்ஷத்தை ப்ராபித்தால்வரும் ஸுகமும் அதுவே. [தேறி] இப்படி தெளிந்து. [எதுவேதானும் பற்றின்றி] ப்ரக்ருதி ப்ராக்ருதங்களிலுண்டான தொற்றற்று. [யாதுமிலிகளாகிற்கில்] அதில் ருசிவாஸனைகளும் அறப்பெறில், கர்மத்தையநுஷ்டித்து ஜ்ஞானத்தையுடையனாய், * ஸ்த்திதப்ரஜ்ஞாக்யா வஸ்த்தை பிறந்து, யோகமும் தலைநின்று. ஆத்மஸாக்ஷாத்காரம்பண்ணப்பெறில். [அதுவே வீடு] கீழ்ச்சொன்ன ஆத்மப்ராப்தியே மோக்ஷம். [வீடுபேற்றின்பந்தானுமது] மோக்ஷஸித்தியில் வரும் ஸுகமும் அந்த ஆத்மாநுபவம். [தேறாது] இப்படி தெளியமாட்டாதே. [எதுவேவீடு ஏதின்பமென்றெய்த்தார்] 'மோக்ஷமாகிறது எது? மோக்ஷ ஸுகமாகிறது எது? என்று இளைத்தவர்கள். [எய்த்தாரெய்த்தாரே] இளைத்தாரிளைத்தாரென்று உருவ க்லேசப்பட்டேபோமித்தனை; நிராச்ரயமாக ஆத்மஸ்வரூபத்தை அநுஸந்திக்கை நிஷ்ப்ரயோஜநமென்கை. (7)

எட்டாம்பாட்டு. இப்படி துஸ்ஸம்பாதமான ஜ்ஞானம் கைவந்தாலும், அந்திமஸ்ம்ருதியில்லையாகில் செய்ததெல்லாம் வ்யர்த்தமென்கிறார்.

எய்த்தாரெய்த்தாரெய்த்தாரென்று இல்லத்தாரும்புறத்தாரும்
மொய்த்து* ஆங்கலறிமுயங்கத் தாம்போகும்போது*. உன்மத்தர்போல்
பித்தேயேறியநுராகம் பொழியும்போது எம்பெம்மானோ
டொத்தேசென்று* அங்குள்ளங்கூடக்கூடிற்றாகில் நல்லுறைப்பே. [8]

[எய்த்தாரெய்த்தார்] இவனுக்கு உத்க்ரமணதசை பிறப்பதற்கு முன்னே இவன் முடிகை இஷ்டமாயிருக்கையாலே, "முடிந்தான் முடிந்தான் முடிந்தான்" என்று பலகாலும் சொல்லாநிற்பர்களாயிற்று. இவன் கலங்கினதசையிலே நெஞ்சைத்தெளிவித்து உத்தேச்ய வஸ்துவை அநுஸந்திக்கவல்லனும்படி, பண்ணுகையன்றிக்கே, "முடிந்தான், முடிந்தான், முடிந்தான்" என்கிற இத்தையே சொல்லாநிற்பர்களாயிற்று. [இல்லத்தாரும் புறத்தாரும்] இவன் தான் உள்ள நாளில் இவர்களுக்கு ஒன்றுங்கொடாமையாலே, "இவனும் இதொரு நடுவிற்பெருங்குடியுமென்? இவன் முடிந்து உள்ள த்ரவ்யத்தை நாமே விநியோகங்கொண்டாலாகாதோ?" என்றிருப்பர்கள் பார்யாதிகள். [புறத்தாரும்] அவனும் இவர்களுமான ஸமுதாயம் பொறுமையாலே "போகவமையும்" என்றிருப்பர்கள் புறம்புள்ளார். [மெய்த்து] கல்யாணத்துக்கு அழைத்தாலும் வாராதவர்கள், து:கமுண்டானவாறே தாங்களே வந்து மேல்விழுவர்கள். [ஆங்கலறி] இவனுக்குள்ளதெளிவும் போம்படி கூப்பிடாநிற்பர்கள்; மீளுகைக்கு சங்கையுண்டான தசையிலே, பயத்தாலே ப்ராணன்போம்படி கூப்பிடுவர்கள். [முயங்க] கட்டிக்கொள்ள. கூப்பீட்டுக்குப் போகாத குறைப்ராணன்களும் போம்படி, ஸ்நேஹிகளைப்போலே மேலேவிழுந்து கட்டிக்கொள்வர்கள். [தாம்போகும்போது] "இவர்களையும் இவ்வைச்வர்யத்தையும் விட்டுப்போகாநின்றோம்" என்று நெஞ்சு இங்கேயிழுக்க, தன்னால் மீளவொண்ணாமையாலே சரீரத்தைவிட்டுத் தாங்களே போகாநிற்பர்கள். "தாம்போகும் போது" என்கிறார்காணும் அப்போதை க்லேசத்தைப்பற்ற. [உன்மத்தர் இத்யாதி] வீதராகருங்கூட, உந்மாததசையிற்போலே அறிவுகெட்டு; தெளிவுபிறந்து தன்னையும் ஸர்வேச்வரனையும் அநுஸந்திக்கவேண்டும் தசையிலே கலங்கி. [அநுராகம் பொழியும்போது] இளையாளைப் பொன்னையும் பூட்டிக்கொடுவந்து முன்னே நிறுத்துவர்கள். புத்ராதிகள் பக்கல் ஸ்நேஹியாத நாளைக்கும்போர ஸ்நேஹிக்கத்தொடங்கும். ஜீவிக்கும்நாள் லோபத்தாலே இவற்றுக்கு ஒன்றும் செய்யான். இப்போதாக "புதைத்துவைத்த தநத்தை ஆபரணமாகப் பூட்டிக் காணப்பெற்றிலோம்" என்று மதகுதிறந்து ஸ்நேஹிக்கும். [எம்பெம்மானொடொத்தே சென்று இத்யாதி] இப்படி கலங்குகிற ஸமயத்திலே தெளிவுண்டாய், தன்னையும் அவனையும் அநுஸந்தித்து, "அவனோடொத்த சுத்தியையும் இது உடைத்து" என்று அநுஸந்திக்கையாகிற இவ்வர்த்தம் கூடிற்றாகில், "அவ்வஸ்துவும் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்கும். இவ்வஸ்துவும் ஜ்ஞாநாநந்தலக்ஷணமாயிருக்கும்" என்று அநுசந்திக்கும்படி அவ்வாத்மவஸ்துவிலே ஹ்ருதயம் சேருகையாகிற அர்த்தம் கூடுமாகில். [நல்லுறைப்பு] நல்லவாய்ப்பு. (ஆத்மப்ராப்திஸித்திக்கும்.) அல்லாதபோது, செய்ததெல்லாம் வ்யர்த்தம். உன்மத்தர்போல் பித்தேயேறில் அபிமதம் ஸித்தியாது. அநுராகம் பொழியில் ஆதிபரதனைப்போலே மானாய்ப் போமித்தனை. ஆண்டான் பணிக்கும்படி-"*நின்ற ஒன்றையுணர்ந்தேனுக்கு* என்னும் பாட்டுத் தொடங்கி, நிஷ்க்ருஷ்டாத்மாநுஸந்தாநமாத்ரமேயன்றிக்கே பகவச்சேஷத்வ பர்யந்தமாக அநுஸந்திக்கிறது; இப்பாட்டில் 'எம்பெம்மானொடொத்தே சென்றங்குள்ளங்கூடக்கூடிற்றாகில்' என்கிற அந்திமஸ்ம்ருதியும், எம்பெருமான் தனக்கு சேஷமாக இவ்வாத்மவஸ்துவை நினைத்திருக்குமாப்போலே, இவனும் அவனோடொத்து அவன் நினைவோடொத்து அத்தசையிலே சேஷத்வாநுஸந்தாநம் கூடுமாகில் நல்வாய்ப்பு" என்று. பகவத்குணங்களிலே வித்தராயிருக்கிற இவர் இதெல்லாம் அநுஸந்திக்கிறதென்? என்னில், "இப்படி அரிதாயிருக்கிற இத்தைக்கிடீர் எனக்குக் காட்டித்தந்தது" என்று அவன்பக்கல் உபகாரஸ்ம்ருதியாலே. (8)

ஒன்பதாம்பாட்டு. அந்திமஸ்ம்ருதியிலே ஜீவபரபேதம் ப்ரஸ்துதமானவாறே, "இந்தபேதம் அபரமார்த்தம்; தத்த்வஜ்ஞாநம் பிறந்த ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஒன்று" என்றுகொண்டு நித்யஸம்ஸாரியான சேதநனையே ப்ரஹ்மமாகச் சொல்லுகிற மாயாவாதிகளை க்ஷேபிக்கிறார்.

கூடிற்றாகில்நல்லுறைப்புப் கூடாமையைக்கூடினால்*
ஆடற்பறவையுயர்கொடி எம்மாயனாவததுவதுவே*
வீடைப்பண்ணியொருபரிசே எதிர்வும் நிகழ்வுங்கழிவுமாய்*
ஓடித்திரியும் யோகிகளும் உளருமில்லையல்லரே. (9)

[கூடிற்றாகில் நல்லுறைப்பு] அநுபாஷணம். [கூடாமை இத்யாதி] சசவிஷாணமாதல், ககநகுஸுமமாதல், வந்த்யாஸுதனாதல் அநுபபந்நமானவை கூடுமாகில், “ஸர்வேச்வர வாஹநம்” என்னும் ஹர்ஷப்ரகர்ஷத்தாலே ஆடாநின்றுள்ள பெரிய திருவடியை த்வஜமாகவுடையவனாய், ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களை யுடையனாய், பெரிய திருவடி திருத்தோளிலே பின்பும் பிறகுவாளியுமாய் ஸம்ஸாரி சேதநனிருப்பது. [அதுவதுவே] அவ்வஸ்துவே; வஸ்து வஸ்த்வந்தரமாகாதிறே. நித்ய ஸித்தர்க்கும் அவ்வருகாக ஸம்ஸாரி சேதநரைச் சொல்லுவாரும் சிலருண்டோவென்ன,—[வீடைப்பண்ணியொருபரிசே] (ஒருபரிசே - வீடைப்பண்ணி) சாஸ்த்ரமூலமாக வன்றிக்கே, அவித்யாநிவ்ருத்தியே மோக்ஷமென்று ஸ்வபுத்தியாலே ஒன்றைக்கட்டி. [எதிர்வும் நிகழ்வும் கழிவுமாய்] பூதபவிஷ்யத்வர்த்தமாந காலத்ரயத்திலுமுளராய். [ஓடித்திரியும் யோகிகளுமுளரும்] நிஷ்ப்ரயோஜநமாகத் தட்டித்திரியும் மஹா யோகிகளும் உளர். [இல்லையல்லரே] இல்லாமையில்லை. காலம் அநாதி; பண்ணிவைக்கும் பாபங்களுக்கு எல்லையில்லை; இப்படியிருப்பார் சில மஹாபுருஷர்களுண்டாகக்கூடாதோ? ஸம்ஸாரத்தில் கூடாததுமுண்டோ? ... ... (9)

பத்தாம்பாட்டு. ஸாங்க்யாதிகுத்ருஷ்டிகளில் நான் புகாதபடி தானேஸ்வயம்வரித்து நினைவுக்கு வாய்த்தலையான மநஸ்ஸிலே நித்யவாஸம் பண்ணுகையாலே, என்னுடைய ஸகல அரிதங்களும் போயிற்றென்கிறார்.

உளருமில்லையல்லராய் உளராயில்லையாகியே*
உளரெம்மொருவரவர்வந்து என்னுள்ளத்துள்ளேயுறைகின்றார்*
வளரும்பிறையுந்தேய்பிறையும்போல அசைவுமாக்கமும்*
வளருஞ்சுடருமிருளும்போல் தெருளும்மருளும்மாய்த்தோமே. (10)

[உளருமில்லையல்லராய்] “ஈச்வரனென்பானொருவனுளன். இல்லையென்ன வொண்ணாதே அஸ்திமாத்ரமாயிருக்கும்” என்று ஸேச்வரஸாங்க்யமதம். விதிநிஷேதக்ஷமனன்றிக்கேயிருக்கும் பர்த்தாவைப்போலே, ஈச்வரனாகிறான் ஜகந்நியமநக்ஷமனன்றிக்கே ஸத்பாவமாத்ரமேயாயிருக்குமென்கை. [உளராயில்லையாகியே] “இல்லையாகியேகாண் அவனுடையவுண்மை” என்னும் நிரீச்வரஸாங்க்யன். அந்தபக்ஷங்களை நிரஸிக்கிறார். அன்றிக்கே, ஆச்ரிதாநாச்ரித விஷயமாக்கி, இல்லையல்லராய் உளராயிருப்பர் ஆச்ரிதர்க்கு; இல்லையாகியே யுளராயிருப்பர் அநாச்ரிதர்க்கு. [உளரெம்மொருவர்] குணவிபூத்யாதிகளால் பரிபூர்ணராய்க்கொண்டு உளராய், அவற்றைக்காட்டி என்னை விஷயீகரித்த அத்விதீயர். [அவர்வந்து என்னுள்ளத்துள்ளேயுறைகின்றார்] குணாதிகரான அவர் என்னளவும் வந்து, *மயர்வறமதிநலமருளித் தாம் திருத்தின நெஞ்சிலே நித்ய வாஸம்பண்ணுகின்றார். [வளரும் இத்யாதி] தீபஸந்நிதியில் அந்தகாரம் நில்லாதாப்போலே, அவர் என் ஹ்ருதயத்திலே நித்யவாஸம் பண்ணுகையாலே, சந்த்ரனுக்குப் போலே மாறிமாறி வரக்கடவதான வ்ருத்திக்ஷயங்களும், ஆதித்யனும் அந்தகாரமும்போலே மாறிமாறிவரக்கடவதான ஜ்ஞாநாஜ்ஞாநங்களும் மாய்க்கப்பெற்றோம். (10)

நிகமத்தில் இப்பத்தும் கற்றாரை, தம்மை விஷயீகரித்தாப்போலே விஷயீகரித்துத் தன் திருவடிகளின்கீழே வைத்துக்கொள்ளுமென்கிறார்.

தெருளும்மருளும்மாய்த்துத் தன் திருந்துசெம்பொற்கழலடிக்கீழ்*
அருளியிருத்தும்அம்மானும் அயனுஞ்சிவனும்திருமாலால்
அருளப்பட்ட சடகோபன் ஓராயிரத்துளிப்பத்தால்*
அருளியடிக்கீழிருத்தும் நம்மண்ணல்கருமாணிக்கமே. **(11)**

[தெருளும் மருளும்மாய்த்து] ப்ரஹ்மாவின் ராஜஸமடியாக வந்த குத்ருஷ்டி ஜ்ஞாநமானதும், ருத்ரன்தாமஸஜ்ஞாநமடியாக வந்த ஆகமாதி பாஹ்யஜ்ஞாநமான அஜ்ஞானமும் மாய்த்து; ஸ்வாநுபவவிரோதியான ப்ராக்ருதவிஷயஜ்ஞாநாஜ்ஞாநங்களை வாஸநையோடே போக்கி. [தன்திருந்துசெம்பொற்கழலடிக்கீழ்] ஆச்ரிதரை வேறொருவர்காலில் குனியவிடாத தாய், ஸ்ப்ருஹணீயமாய், வீரக்கழலை யுடைத்தான திருவடிகளின்கீழே. இப்போதை வீரக்கழல் பிராட்டி முன்னாக ஆச்ரயித்தாரைத் தன் கையிலும் பிறர்கையிலும் காட்டிக்கொடாத வீரக்கழல். [அருளியிருத்தும்] கேவல க்ருபையாலே இருத்தும். [அம்மானும் அயனும் சிவனும் திருமாலால்] ப்ரஹ்மருத்ர ப்ரமுகரான ஸர்வாத்மாக்களுக்கும் நிர்வாஹகனாய் ஸர்வேச்வரனை ச்ரிய: பதியாலே. [அருளப்பட்டசடகோபன்] *மயர்வறமதிநலமருளினன் *என்கிறபடியே அருளுக்கு விஷயபூதரான ஆழ்வார். இவ்வருளுக்கு வாய்த்தலை பிராட்டியென்கை. [ஓராயிரத்துளிப்பத்தால் - நம்மண்ணல் கருமாணிக்கமே - அருளியடிக்கீழிருத்தும்] ஸர்வநிர்வாஹகனாய், ஸ்ப்ருஹணீயமான வடிவழகையும் குணங்களையுமுடையனை ஸர்வேச்வரன் தானேயருளித் தன்திருவடிகளின் கீழே சேர்த்துக்கொள்ளும். இத்திருவாய்மொழி யப்யஸித்தார்க்குத் தாம்பெற்ற பேறு என்கிறார். ... ... (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

கண்ணிறையவந்து கலந்தமால் இக்கலவி*
திண்ணிலையா வேணுமெனச்சிந்தித்து—தண்ணிதெனும்
ஆருயிரினேற்றமதுகாட்ட ஆய்ந்துரைத்தான்*
காரிமாறன் தன்கருத்து.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்,
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஒன்பதாந்திருவாய்மொழி—கருமாணிக்கமலை ப்ரவேசம்.

கீழில் திருவாய்மொழியில், முதலிரண்டரைப்பாட்டாலே, அவனுடைய ஸௌந்தர்ய சீலாதிகளை அநுஸந்தித்து, அவற்றுரூபாதி விலக்ஷணமுமாய் அநந்யார்ஹமுமாயிருக்கிற ஆத்மஸ்வரூபத்தைக் குறைப்பாட்டாலே அநுஸந்தித்து இனியரானார். அந்த சேஷத்வரஸத்தாலே ப்ரீதராய், ப்ரீதிபாரவச்யத்தாலே தாமான தன்மையழிந்து ஒரு பிராட்டிதசையை ப்ராப்தராய், ஸ்வதசையை அந்யாபதேசத்தாலே பேசி இனியராகிறார். "ப்ரீதியில் அந்யாபதேசமுள்ளது இத்திருவாய்மொழி யொன்றுமே" என்று ஆழ்வான் நிர்வஹிக்கும்படி. திருப்புலியூரில் எம்பெருமானோடே இயற்கையிலே புணர்ந்து பிரிந்தாளொருபிராட்டி அவனாலே அபஹ்ருதசித்தையாயிருக்கிறபடியை உயிர்த்தோழியானவள் கண்டு, இவள்வடிவில் வேறுபாட்டாலும் பேச்சில் வேறுபாட்டாலும் ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தம் என்றறிந்தாள். இவை யொன்றையு மறியாதே, *பதிஸம்யோக ஸுலபம் வயோ த்ருஷ்ட்வா ச மே பிதா *என்கிறபடியே, ப்ராப்தயௌவனையென்னு மிவ்வளவே கொண்டு, பித்ராதிகள் "ஸ்வயம்வரத்துக்கு ராஜபுத்ரர்கள் வருவது" என்று நகரத்திலே மணமுரசறைவிக்க, அத்தைக்கேட்ட தோழியானவள், ஸ்ரீபரதாழ்வானை, "நீ ராஜா" என்றுபண்ணின தூர்யகோஷம் செவிப்பட்டபோது

அவன் பட்டதெல்லாம் பட்டு; "இத்தவநி பெண்பிள்ளை செவிப்படுமாகில் * மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழாத தன்மையளாயிருக்கிற இவளைக்கிடையாது, ஏற்கவே பரிஹரிக்கவேணும், அது செய்யுமிடத்தில் 'திருப்புலியூர்நாயனாரோடே ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமாயிற்று' என்போமாகில் நம் காவற்சோர்வாலே வந்ததாம். அறிவியாதொழியில் இவளை யிழக்கவரும். இனி இவ்வளவில் செய்யலாவதென்?" என்றுபார்த்து, "இவர்கள் தாங்களும் 'இவளுக்கு வடிவிலே ஒரு வேறுபாடுண்டு; இதுக்கு ஹேது ஏதோ? என்று விசாரியா நின்றார்கள். நாமும் இவர்களோடே நிரூபணத்தே யிழிந்து அவ்வழியாலே அறிந்தோமாய் இத்தை விலக்கவேணும்" என்று நிரூபித்து "இவள்வடிவிருந்தபடியால் இவளுக்குத் திருப்புலியூரில் நாயனாரோடே ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமாயிற்றுப்போலே யிருந்தது. அவனுடைய குணசேஷ்டிதங்களையே வாய்புலற்றாநின்றாள். நீங்கள் செய்கிறவற்றைத தவிருங்கோள்" என்று அறத்தொடுநிற்கிறாளாய். "இது தர்மமல்ல" என்ன, "ஆனால் நீ சொல்லுகிற திருப்புலியூரில் நாயனாருக்கு இவளுக்கீடான வைலக்ஷண்யமுண்டாகவேணும்: ஒப்பனையும் ஆண்பிள்ளைத்தனமும் குணமும் ஐச்வர்யமும், ஔதார்யமும் ப்ரணயித்வமுமுண்டாகவேணும், ஸதாசாரனாகவேணும்; வேதார்த்த தத்த்வஜ்ஞானமுடையனாகவேணும்; இவையெல்லாம் உண்டோ?" என்ன, "நீங்கள் கேட்கிறவளவல்ல; இவையெல்லாம் குறைவற்றவிஷயம். இவை யொன்றுமில்லையேயாகிலும் இவள்தான் அங்கே அநந்யார்ஹையானாள்: நீங்கள் செய்கிற இவற்றைத் தவிருங்கோள்" என்று அத்தைவிலக்குகிறதாயிருக்கிறது. 'மணவிலக்கு' என்பதொரு கிளவித்துறை இது. திருமந்த்ரத்திலே தனக்கும் பிறர்க்குமா யிருக்கு மிருப்பைக் கழித்து அநந்யார்ஹசேஷத்வத்தைச் சொல்லக்கடவதிறே, அது இங்குச் சொல்லுகிறது. கீழிற்றிருவாய்மொழியில் - அநந்யார்ஹசேஷத்வஞ்சொல்லிற்று. இதில் - அந்யசேஷத்வமும், ஸ்வஸ்வாதந்த்ர்யமும் அபுருஷார்த்தமென்கிறது. ஒருகந்யகை யாகில், ஒருவனுக்கே யாயிருக்கையும், ஒருவனுக்கேயானால் பிறர்க்குரிய ளல்லளாயிருக்கையுமிறே ஸ்வரூபம்.

முதற்பாட்டு. அவனுடைய திவ்யாவயவ ஸௌந்தர்யத்தைக்கண்டு மற்றொன்றறியாதபடி ஈடுபட்டாளென்கிறாள். "கருமாணிக்கக்குன்றத்துத் தாமரை போல் திருமார்வு கால்கண்கை செவ்வாயுந்தியான்" என்று*இருத்தும் வியந்திலநுபவித்த வித்தைத் தோழி பேச்சாலே பேசி இனியராகிறார்.

கருமாணிக்கமலைமேல் மணித்தடந்தாமரைக் காடுகள்போல்*
திருமார்வு வாய் கண் கை யுந்தி காலுடையாடைகள் செய்யபிரான்*
திருமாலெம்மான் செழுநீர்வயல் குட்டநாட்டுத் திருப்புலியூர்*
அருமாயன்பேரன்றிப்பேச்சிலள் அன்னைமீர்! இதற்கென்செய்கேனோ? (1)

[கருமாணிக்க மலைமேல்] அநுபவிப்பார்நெஞ்சு குளிரும்படி கருமையையுடைத்தாய், ப்ரகாசத்தால் மிக்கிருப்பதாய், நிரதிசய போக்யமாயிருப்பதொரு மலைமேலே. கறுத்தே இருள் நீக்குவதொருமலையென்றுமாம். அபூதோபமை யிருக்கிறபடி. [மணித்தடந்தாமரைக் காடுகள் போல்] இப்படி இருப்பதொரு மலைமேலே, தெளிந்ததொருதடாகமாய், அதுகாடுபடத்தாமரை பூத்தாற்போலேயாயிற்றுத் திருமேனியும் திவ்யாவயவங்களு மிருப்பது. [திருமார்வு] பற்றாசான பெரியபிராட்டியாரெழுந்தருளியிருக்கும் திருமார்வு. திருமார்வுக்குச் சிவப்பு பிராட்டிஸந்நிதானத்தாலே. [வாய்] அவள் வழியாலே உறவுபண்ணினார்க்கு அநுகூலபாஷணம் பண்ணுகிற திருப்பவளம். [கண்] இன்சொல்லுச் சொல்லப்புக்கு அநுகூலதர்சநத்தாலே தடுமாறினால், நறையும் தலைக்கட்டிக்கொடுக்கும் கண். [கை] நோக்குக்குத் தோற்றாரை அணைக்கும்கை. [உந்தி] உத்தேச்யபூமியிலே விழாநின்றால் நடுவே காற்கட்டவல்ல திருவுந்தி; நடுவே யழுக்கும் சுழியிறே. [கால்] இவையெல்லாவற்றுக்கும் தோற்று விழும்

திருவடிகள். [உடையாண்டைகள்] அங்கே கிடந்தநுபவிக்கும் திருப்பீதாம்பரம்; "கமலபாதம்" என்று, "சிவந்தவாடை" என்னக்கடவதிறே. [பிரான்] இவ்வவயவசோபையுடைய *பக்தாநாம்* என்றிருக்குமவன். [திருமால்] அழகையன்றிக்கே, இவளுக்கீடான மேன்மையுமுண்டு. *யஸ்ய ஸா ஜநகாத்மஜா - அப்ரமேயம் ஹி தத்தேஜ: * என்கிறபடியே. [எம்மான்] 'இவளை அவனுக்குக் கொடுங்கோள்" என்றால், "இவளுக்கு அவன்தாம் போருமோ?" என்னவேண்டாதபடி யிருப்பதே என்னுபன்! என்கிறாள். [செழுநீர் இத்யாதி] அழகிய ஜலஸம்ருத்தியையுடைத்தான வயல்சூழ்ந்த. [குட்டநாட்டுத் திருப்புலியூர்] குட்டநாடென்று அந்நாட்டுக்குப் பேர். [அருமாயன்] பெறுதற்கரிய ஆச்சர்யபூதன். [பேரன்றிப்பேச்சிலள்] பரவ்யூஹவிபவங்களுக்கு ஏகாந்தமான திருநாமங்களைச் சொல்லுகிறிலள். அல்லாத உகந்தருளின நிலங்களில் நிற்கிறவர்கள்பேரும் சொல்லுகிறிலள். [அன்னைமீர் இதற்கென் செய்கேன்] 'அவர்களோடொக்கத்தானும் இப்போதறிந்து சொல்லுகிறாள்' என்னுமிடந்தோற்ற, இதுக்கு நான் எத்தைச்செய்வேனென்கிறாள். ... ... (1)

இரண்டாம்பாட்டு. அவனுடைய ஆபரணசோபையில் அகப்பட்டாளென்கிறாள்.

அன்னைமீர்! இதற்கென்செய்கேன்? அணிமேருவின்மீதுலவும்*
துன்னுசூழ்சுடர்நாயிறும் அன்றியும்பல்சுடர்களும்போல்*
மின்னுநீண்முடியாரம் பல்கலன்தானுடையெம்பெருமான்*
புன்னையம்பொழில்சூழ் திருப்புலியூர் புகழுமிவளே. (2)

[அன்னைமீர் இதற்கென் செய்கேன்] நீங்கள் கற்பித்திலீகோள்; நான் கற்பித்திலேன்; இதுக்கு நான் எத்தைச்செய்வேன்? [அணி இத்யாதி] அழகிதான மேருவின் மேலே ஸஞ்சரியாநிற்பானுமாய், காண்கிறவளவன்றிக்கே நெருங்கிச் சூழ்ந்த தேஜஸ்ஸையுடைய விலக்ஷணனான ஆதித்யனும். [அன்றியும்பல்சுடர்களும்போல்] மற்றும் அப்படியே யிருக்கிற நக்ஷத்ராதிதேஜ:பதார்த்தங்களும்போல. [மின்னுநீண் முடி] "துன்னுசூழ்சுடர்நாயிறு" என்றுசொன்ன திருவபிஷேகம். [ஆரம்] "அஞ்சுடர் மதியம்பூண்டு" என்கிறபடியே திருவாரம். [பல்கலன்] அல்லாத திவ்யாபரணங்கள். [எம்பெருமான்] ப்ரீத்யுக்தி. இவ்வம்சம் பொய்யாகாதபடி யிருந்த என்நாயன். [புன்னையம் பொழில்சூழ்] (அழகியபுன்னைப்பொழில் சூழ்ந்த. அவ்வூரில்) சோலைவாய்ப்பை யன்றோ இவள் சொல்லுகிறது. சோலையிலே கலங்கார் வார்த்தையாயன்றோ இருக்கிறது. [திருப்புலியூர் புகழுமிவளே] பிள்ளாய்! இவ்வூர்வாசி எங்கேயறிந்தாள்? அவனுடைய ஆபரண சோபையோபாதி அவ்வூரில் சோலையிலும் அவ்வூரிலும் குமிழிநீருண்டாளாய்த் தோற்றுகிறதில்லையோ இவள் வார்த்தையாலே. ... ... (2)

மூன்றாம்பாட்டு. "ஒப்பனையழகு ருஷிகளும் சொல்லார்களோ, இது கலவிக்கு ஸூசகமாகவேணுமோ" என்ன; *பர்த்தாரம் பரிஷஸ்வஜே* என்று வீரவாசிகண்டு அணைக்கும் பிராட்டிபாசுரமாயன்றோ இவள்வார்த்தை யிருக்கிறதென்கிறாள்.

புகழுமிவள்நின்றிராப்பகல் பொருநீர்க்கடல் தீப்பட்டெங்கும்*
திகழுமெரியொடுசெல்வதொப்பச் செழுங்கதிராழிமுதல்*
புகழும் பொருபடையேந்திப் போர்புக்கசுரரைப் பொன்றுவித்தான்*
திகழுமணிநெடுமாடநீடு திருப்புலியூர்வளமே. (3)

[புகழுமிவள் நின்றிராப்பகல்] இவள் - இராப்பகல் - நின்று புகழும்) வீரவாசியறிந்து ஈடுபடும் பருவமன்றிக்கேயிருக்கிற இவள், கேட்டார்வாய்க் கேட்டு ஒருகால்

சொல்லி விட்டாளோ, அஹோராத்ரம்நின்று வாய்புலற்றாநின்றாள். [புகழும்] நெஞ்சாலே நினைத்துவிட்ட அளவேயோ? வ்ரீளை குடிபோய் வாய்விட்டுப்புகழுகிறாளல்லளோ? [பொருநீர்க்கடல் தீப்பட்டு] பொராநின்றுள்ள திரையையுடைத்தான கடல் நெருப்புக்கொளுந்தி. [எங்கும் திகழ மெரியொடு செல்வதொப்ப] பரப்புமாறிக்கொண்டு ஜ்வலியாநின்றுள்ள நெருப்போடேகூட நடந்து செல்லுமாபோலேயாயிற்று ஆயுதங்களால் வந்த புகரும் திருமேனியுமிருக்கும்படி. புகழும்பொருபடையான - செழுங்கதிராழிமுதல் - ஏந்தி] *ஹேதிபிச்சேதநாவத்பிருதிரிதஜயஸ்வநம்* என்று திவ்யாயுதங்கள்தான் அவனைப் புகழும்படியாதல்; *சத்ரோ: ப்ரக்யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை: * என்கிறபடியே 'கையும் ஆயுதமுமாய்ப் பொருத்தமிருந்தபடியென்?' என்று சத்ருக்கள் புகழும்படியைச் சொல்லுகிறது'' என்று எம்பெருமானார் அருளிச்செய்யும்படி. [பொருபடை] யுத்தோத்யுக்தமான ஆயுதம். [செழுங்கதிர்] மிக்க தேஜஸ்ஸையுடைத்தான திருவாழி முதலான திவ்யாயுதங்களையேந்தி. [போர்புக்கசுரரைப்பொன்றுவித்தான்] ஸாயுதனாய் யுத்தத்திலேபுக்கு துஷ்ப்ரக்ருதிகளைமுடித்தான், பொன்றுவிக்கை - முடிக்கை. [திகழும்இத்யாதி] உஜ்ஜ்வலமான மாணிக்கங்களையுடைய ஓங்கின மாடங்களையுடைத்தாய், கல்பாவதியான திருப்புலியூரிலழகை - புகழும். வளம் - அழகு. எதிரிகளுக்குக் கிட்டவொண்ணாமைக்கு அவன் தான்வேண்டா; அவ்வூரேயமையும். பிராட்டி, ஸ்ரீமிதிலையைவிட்டு *ராகவஸ்ய நிவேசநே* என்று திருவயோத்யையைப்புகழுமாப்போலே, இவள் திருநகரியைவிட்டுத் திருப்புலியூர்ப்புகழே புகழாநின்றாள். * அயோத்யாபராஜிதா * என்கிற பரமபதத்தை நினைத்திருக்குமாப்போலேகாணும் இவள் அவ்வூரை நினைத்திருப்பது. "மாகவைகுந்தங்காண்பதற்கு என்மனமேகமெண்ணுமிராப்பகலின்றியே" என்றிறே அங்கும் இவர்பாசுரம். ... ... (3)

நாலாம்பாட்டு. வெறும் ஆண்பிள்ளைத்தனமே போராதே, ஆபத்ஸகனாகவேணுமேயென்ன, 'அக்குறைதானுண்டோ இவனுக்கு?' என்கிறாள். புனல்தரு புணர்ச்சியையன்றோ இவள் வாய்புலற்றுகிறது.

ஊர்வளங்கிளர்சோலையும் கரும்பும் பெருஞ்செந்நெலுஞ்சூழ்ந்து*
ஏர்வளங்கிளர் தண்பணைக் குட்டநாட்டுத்திருப்புலியூர்*
சீர்வளங்கிளர்மூவுலகுண்டுமிழ் தேவபிரான்*
பேர்வளங் கிளர்ந்தன்றிப் பேச்சிலள் இன்றிப்புனையிழையே. (4)

[ஊர்வளங்கிளர்சோலையும்] ஊரில் ஸம்பத்தைக கோட்சொல்லிக்கொடுக்கும் சோலையென்னுதல்; ஊர்களுக்கு இட்டுச்சொல்லும் சிறப்புக்களைத் தெரிவிக்கும் சோலையென்னுதல்; [கரும்பும் பெருஞ்செந்நெலும்சூழ்ந்து] வயலடங்கக் கரும்பும், அதுக்கு நிழல் செய்யும் செந்நெலும் சூழ்ந்துகிடக்கும். [ஏர்வளங்கிளர்] ஏராலுண்டான அழகையுடைத்தாயென்னுதல், ஏரினுடைய ஸமுதாயத்தைச் சொல்லிற்றாதல். அதாவது உழுவது நடுவதாய்ச்செல்லாநிற்கை. [தண்பணை] மருதநிலமென்னுதல், அழகிய நீர் நிலமென்னுதல். மருதநிலமென்றத்தால், வயலைச்சொன்னபடி. [சீர்வளங்கிளர் மூவுலகுண்டுமிழ்] குணங்களின் நன்மையடையச் செயலிலே தெரியும்படி, ஸகல லோகங்களையும் வயிற்றிலேவைத்து, வெளிநாடு காணவுமிழ்ந்த *அயர்வறுமமரர்களதிபதி. [பேர்வளம்] திருநாமங்களினுடைய அழகைச் சொல்லுதல். திருநாமங்களையடங்க வென்னுதல். [கிளர்ந்தன்றிப் பேச்சிலள்] குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்களை, கடல்கிளர்ந்தாப்போலே பெரியகிளர்த்தியோடேயன்றோ இவள் சொல்லுகிறது. நாம் திருநாமம் சொல்லுமாப்போலேயோ இவள் சொல்லுகிறது. [இன்று] இவ்வேறுபாடும் நன்மையும் நேற்றில்லைகிடீர். [இப்புனையிழையே] திருநாமம் சொல்லச் சொல்ல ஒருபடி ஆபரணம் பூண்டாற்போலே இராநின்றாள். ... ... (4)

அஞ்சாம்பாட்டு. வெறும் ஆபத்ஸகத்வமே போருமோ? இவளுக்குத் தக்க ஐச்வர்யமு முண்டாகவேணுமேயென்ன; அதுவுமுண்டென்கிறாள்.

புனையிழைகளணிவும் ஆடையுடையும் புதுக்கணிப்பும்*
நினையும் நீர்மையதன்று இவட்கிது நின்று நினைக்கப்புக்கால்*
சுனையினுள் தடந்தாமரைமலரும் தண் திருப்புலியூர்*
முனைவன் மூவுலகாளி அப்பன் திருவருள் மூழ்கினளே. (5)

[புனையிழைகளணிவும்] ஆபரணங்கள் நாம் பூட்டினாற்போலே யிருந்ததோ? [ஆடையுடையும்] முகந்தலையறிந்து உடுத்ததாயிருந்ததோ? [புதுக்கணிப்பும்] நீர்பாய்ந்த வயல்போலே இவளவடிவிலே பிறந்த செவ்வி பாரீர்கோள்! [நினையும் நீர்மையதன்று இவட்கிது நின்று நினைக்கப்புக்கால்] (நின்று நினைக்கப்புக்கால் - நினையும் நீர்மையதன்று இவட்கிது) உபக்ரமித்து விடுகையன்றிக்கே, காலதத்த்வமுள்ளதனையும் நின்று ஆராயப்புக்காலும். இவளுக்குப் பிறந்த இவ்வழகுகள் நினைக்கப்போகாது. *யதோ வாசோ நிவர்த்தந்தே* என்கிறவிஷயத்தைப் பரிச்சேதிக்கிலும், இவள்படி பரிச்சேதிக்கப்போகாது. இவையெல்லாவற்றாலும் நீ பரிச்சேதித்த அம்சமேதென்ன? [அப்பன் திருவருள்மூழ்கினள்] [சுனையினுள் தடந்தாமரைமலரும்] ஒருபூவே தடாகத்தைக் கண்செறியிட்டாப்போலே மலரும். அவ்வூரில் பதார்த்தங்கள் பிறர்க்கு இடங்கொடாதென்கிறாள். இவளுக்குப் புறம்பு போக்கில்லை. [திருப்புலியூர்முனைவன்] அவ்வூருக்கு ப்ரதாநன். [மூவுலகாளி] ஸமஸ்தலோகங்களுக்கும் நிர்வாஹகன். ஐச்வர்யத்துக்குப் புறம்பு ஒருவரைத்தேடிப்போகவேண்டா. [அப்பன்] "ஐச்வர்யத்தாலும் குறைவறப்பெற்றேன்" என்று தன்ப்ரீதியாலே சொல்லுகிறாள். [திருவருள் மூழ்கினளே] கடல்கொண்ட வஸ்துவை எங்ஙனே மீட்கப்பார்க்கிறபடி? அருட்கடலிலே மூழ்கின இவளை மீட்கலாமோ உங்களாலே? ... ... (5)

ஆறாம்பாட்டு. ஐச்வர்யமே போருமோ? உதாரனைவேண்டாவோ? என்ன, அவனுடைய ஔதார்யகுணத்திலே யகப்பட்டு ஸம்ச்லேஷித்தமைக்கு அடையாளம் வ்யக்தமாக உண்டென்கிறாள்.

திருவருள்மூழ்கி வைகலும் செழுநீர் நிறக் கண்ணபிரான்*
திருவருள்களுஞ் சேர்ந்தமைக்கு அடையாளந் திருந்தவுள*
திருவருளருளால் அவன்சென்று சேர் தண் திருப்புலியூர்*
திருவருட்கமுகொண்பழத்தது மெல்லியல்செவ்விதழே. (6)

[வைகலும்-திருவருள்மூழ்கி] அநேககாலம் அவன்ப்ரஸாதத்திலே அவகாஹித்து. நாம் கண்டத்தைப்ரியுமித்தனையிறே. * எதிர்சூழல்புக்கு இப்படி பரிமாறித்திரிகிறது எத்தனை காலமுண்டு. அறிந்தோமோ? [செழுநீர்நிறக் கண்ணபிரான்] ஸௌந்தர்ய லாவண்யங்களைக் காட்டிக்காணும் இவளை இப்படி அகப்படுத்திற்று. [திருவருள்களும் சேர்ந்தமைக்கு]. அவனுடைய ப்ரஸாதமெல்லாம் இவ்வாச்ரயமொன்றிலும் வந்து சேர்ந்தமைக்கு. [அடையாளந்திருந்தவுள] அவன்விஷயீகாரம் பெற்றமைக்கு அடையாளம் வ்யக்தமாக உள. (நீ இதென்கொண்டறிந்தாய்? என்ன) [திருவருளருளால்] குணகுணிநிரூபணம் பண்ணாதே விஷயீகரிக்கையாகிற ஸ்வபாவத்தை உபகரிக்கைக்காக; திருவருளருளுகைக்காக. ஆல் - அசை [அவன்சென்று இத்யாதி] *கலங்காப் பெருநகரம் கல்லிருக்கையாயிருக்கவன்றே அவன் இங்குவந்து ஸந்நிஹிதனாயிற்று. [திருவருட்கமுகு] என்று சிலவுண்டு. அதாவது நீராலே வளருகையன்றிக்கே, பெரிய பிராட்டியாரும் ஸர்வேச்வரனுமாகக் கடாக்ஷிக்க அத்தால் வளருவன சில; அதினுடைய அழகிய பழம்போலே யிராநின்றது, ம்ருதுஸ்வபாவையான இவளுடைய அதரம். அவ்வாயிலே யறியலாயன்றோ விருக்கிறது. (6)

ஏழாம்பாட்டு. கேவலம் உதாரனாகப்போராதே, ப்ரணயித்வகுண முண்டாக வேணுமேயென்ன; அவ்வூரில் ஸ்த்தாவரங்களுங்கூடப் பரஸ்பரம் ஆச்ரயமாம்படியன்றோ அவனுடைய ப்ரணயித்வகுணமிருந்தபடி யென்கிறாள்.

மெல்லிலைச்செல்வவண்கொடிப்புல்க வீங்கிளந்தாள்கமுகின்*
மல்லிலைமடல்வாழை யீன்கனிசூழ்ந்து மணங்கமழ்ந்து*
புல்லிலைத்தெங்கினூடு காலுலவுந்தண் திருப்புலியூர்*
மல்லலஞ்செல்வக்கண்ணன் தாளடைந்தாள் இம்மடவரலே. (7)

[மெல்லிலைஇத்யாதி] ம்ருதுஸ்வபாவமான இலையையுடைத்தாய், ச்ரத்தையையுடைத்தாயிருக்கிற வண்கொடியுண்டு – உதாரமானகொடி: தன்பர்த்தாவான கமுகுக்குத் தன்னுடம்பை முற்றூட்டாகக்கொடுக்கும்போலே. [வீங்கிளந்தாள்கமுகின்] கொடி தழுவத் தழுவ வளராநின்று, ஒருகாலைக்கொருகால் இளகாநின்றுள்ள தாளையுடையகமுகு. *யஸ்ய ஸா ஜனகாத்மஜா - அப்ரமேயம்ஹி தத்தேஜ:* என்னும் ந்யாயத்தாலே, *ததௌ பாஹுலதாம் ஸ்கந்தே கோபீ மதுநிகாதிந:* [கமுகின்மல்லிலைமடல்வாழை] கமுகோடேகூடின பெரிய இலையையும் மடலையுமுடைய வாழை. வெற்றிலைக்கொடிக்கும் கமுகுக்கும் வெயில் தட்டாதபடி நிழல்செய்து நிற்குமாயிற்று வாழை. [ஈன்கனிசூழ்ந்து] பழத் தாறுகள் தெற்றிக் கிடக்குமாயிற்று. [மணங்கமழ்ந்து] காற்றானது விளைவதறியாதேபுக்கு, பரிமளத்தில் லோபத்தாலே அங்கேயிங்கே சுழித்து, பரிமளத்தை எறட்டுக்கொண்டு வாழைநெருக்கத்தாலே நெருக்குப்பட்டு, அல்பாவகாசமுள்ள தெங்கின் சோலையிலே புகப்பட்டு ஸஞ்சரியாநிற்குமாயிற்று. [புல்லிலை] புல்லப்பட்ட இலை. அந்யோந்யம் தழுவப்பட்ட இலையையடைய தெங்கென்னுதல்; வாழை யிலையோடே தழுவின இலையையுடைய தெங்கென்னுதல்; சோலை நெருக்கத்தாலே நேரிதான இலையென்னுதல். [மல்லலம் செல்வக்கண்ணன்] நிரவதிகமாய் அழகிதான ஸம்பத்தையுடைய க்ருஷ்ணன். [தாளடைந்தாள்] ப்ரணயித்வகுணத்துக்குத் தோற்றுத் திருவடிகளைப் பற்றினாள். [இம்மடவரல்] முன்பு எனக்கு பவ்யையாய்ப் போந்த இவள்கிடீர் மீட்கவொண்ணாதபடியானாள். ... ... (7)

எட்டாம்பாட்டு. வெறும் ப்ரணயித்வமே போராதே. *கர்மணைவஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:* என்றன்றோ குடியிருப்பது? ஆனால் இதுக்குத் தக்க ஆசாரமுண்டாகவேணுமே அவனுக்கென்ன; ஆனால் அவ்வூரிலுள்ளாருடைய ஆசாரமிருக்கிறபடியைக் கேட்கலாகாதோவென்கிறாள்.

மடவரலன்னைமீர்கட்கு என்சொல்லிச் சொல்லுகேன்?* மல்லைச்செல்வ
வடமொழிமறைவாணர் வேள்வியுள்நெய்யழல் வான்புகைபோய்*
திடவிசும்பிலமரர்நாட்டை மறைக்கும் தண் திருப்புலியூர்*
படவரவணையான்தன் நாமமல்லால் பரவாளிவளே. [8]

[மடவரல்] மடவந்தபடியை; இவள் எனக்கு பவ்யையானபடியை; பற்றிற்று விடாதபடியை யென்றுமாம். [அன்னைமீர்கட்கு] என்கையிலே இவளைக்காட்டித்தந்திருக்கிற உங்களுக்கு .[என்சொல்லிச் சொல்லுகேன்] இவள் என்வழிவாராநின்றாளென்னவோ? இவள் எனக்கு பவ்யையென்னவோ? [மல்லை இத்யாதி] நிரவதிகமான ஸம்பத்தையுடையராய், ஸம்ஸ்க்ருதத்துக்கும் வேதத்துக்கும் வ்யாஸதபம் செலுத்தவல்லராயிருந்துள்ள ப்ராஹ்மணருடைய

யாகங்களில் நெய்யாலே ஹோமம்பண்ணின அக்நியிலுண்டான செறிந்தபுகையானது போய் [திடவிசும்பி லமரர்நாட்டை மறைக்கும்] வ்யவஸ்த்திதஸ்வபாவமான ஆகாசத்தில் தேவலோகத்தை மறைக்கும். ஸ்வர்க்கத்திலுள்ள வைமாநிகரை அட்ஸரஸ்ஸுக்கள் முகங்கண்டு அநுபவிக்க வொட்டாதே மறைக்கும், போகத்துக்கு ஏகாந்தமாகத் திரைவளையாநின்ற தென்றபடியாம். [தண்திருப்புலியூர்] *ஸங்கரஸ்ய ச கர்த்தா ஸ்யாமுபஹந்யாமிமா: ப்ரஜா:* என்றிறே அவன்படியும். [படவரவு இத்யாதி] ஸ்வஸ்பர்சத்தாலே விகஸிதபணனான திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவனுடைய திருநாமமல்லது வாய்புலற்றுகிறிள். நான் அருகேயிருக்க, ஸம்ச்லேஷதசையில் படுக்கையழகையே சொல்லி வாய்புலற்றுநின்றுள். [இவள்] என்னையொழிய வேறொன்றை ப்ரவர்த்திக்க அறியாத இவள். ... ... (8)

ஒன்பதாம்பாட்டு. ஆசாரமே போருமோ, ப்ரயோகவ்ருத்தியைப் பார்த்து அநுஷ்டானத்துக்கு வேண்டுவ தறிந்திருக்கவொண்ணுதே? *நிஷ்டிதம் ஸர்வசாஸ்த்ரேஷு ஸர்வவேதேஷு நிஷ்டிதம்* என்றன்றோ இக்குடியிலுள்ளாருடையபடி. இதுக்குத் தக்க வேதார்த்த தத்த்வஞானமுண்டாக வேணுமேயென்ன, அதுக்கும் ஒரு குறையில்லையென்கிறுள்.

பரவாளிவள் நின்றிராப்பகல் பனிநீர்நிறக்கண்ணபிரான்*
விரவாரிசைமறைவேதியரொலி வேலையினின்றொலிப்ப*
கரவார்தடந்தொறும் தாமரைக்கயம் தீவிகைநின்றலரும்*
புரவார்கழனிகள்சூழ் திருப்புலியூர்ப் புகழன்றிமற்றே. (9)

[பரவாளிவள்நின்றிராப்பகல்] இவள் அடைவுகெடப் பேசாநின்றுள்; இராப்பகல் பேசாநின்றுள். இதுக்கு வேறு ப்ரமாணம் தேடவேணுமோ? இவளுக்தியேயன்றோ ப்ரமாணம். [பனிநீர்நிறக்கண்ணபிரான்] குளிர்ந்த வடிவையும், அப்படியேயிருக்கிற சீலத்தையுமுடையவன். [விரவாரிசைமறை] விரவி - எங்குமொக்கப்பரம்பி, ஆர்ந்து, மிக்கிருந்துள்ள, ஸ்வரத்தையுடைத்தான வேதமென்னுதல். அன்றிக்கே, 'விரைவார்' என்று பாடமாகில், விரையென்று - போக்யதையாய், வாரென்று - அதில் மிகுதியாய், இசைமறையென்று - ஸாமவேதமென்னுதல், [வேதியரொலி] வேதகோஷமும், வேதார்த்த விசாரம்பண்ணுகிறவர்களுடைய கோஷமும். [வேலையினின்றொலிப்ப] ஸமுத்ரகோஷத்திற்காட்டில் நின்று கோஷிக்க. [கரவார்தடந்தொறும்] முதலை மிக்கிருந்துள்ள பொய்கைதோறும். [தாமரை இத்யாதி] (தாமரைக்கயம்) கயமென்று திரளுக்கும், பெருமைக்கும் பேர். [தீவிகை] விளக்கு, தாமரையினுடைய திரளானது நிலைவிளக்குப்போலே அலர்ந்து நிற்கும். [புரவார்கழனிகள்சூழ்]. (புரவு - ஸாரம், பூஸாரமென்றபடி.) புரவார்ந்திருக்கையாவது - தலைதரப்பெருக்காயிருக்கை. பட்டர், "அவ்வூரில் ப்ராஹ்மணர் இறுத்து மாய்கிறுர்கள், இவர் ஊருக்குச் சிறப்புச்சொல்லிப் போருகிறுரிறே" என்றருளிச்செய்வர். [திருப்புலியூர்ப்புகழன்றிமற்று பரவாளிவள் நின்றிராப்பகல்] அவ்வூரிலுள்ளாருடைய வேதகோஷமும், வேதார்த்த விசாரம் பண்ணுகிற ஆரவாரமும், அவ்வூரில் போக்யதையுமேயிறே இவள் அடைவுகெடச் சொல்லாநிற்பது. (9)

பத்தாம்பாட்டு. நீ சொல்லுகிறவை யெல்லாம் கிடக்க: இவளை அவனுக்குக்கொடுக்க வேண்டும்படி அஸாதாரண லக்ஷணம் ஏதேனுமுண்டாகில் சொல்லென்னச் சொல்லுகிறுள்

அன்றிமற்றேருருபாயமென்? இவளந்தண் துழாய்கமழ்தல்*
குன்றமாமணிமாடமாளிகைக் கோலக்குழாங்கள்மல்கி*
தென்திசைத்திலதம்புரை குட்டநாட்டுத்திருப்புலியூர்*
நின்றமாயப்பிரான் திருவருளாம் இவள்நேர்பட்டதே. (10)

[அன்றிமற்றொருபாயமென் - இவளந்தண்துழாய் கமழ்தல்] வேறுமற்று உபாய
முண்டோ, இவள் அழகிதாய்க்குளிர்ந்த திருத்துழாய் நாறுகைக்கு? ராஜபுத்ரனை அஜ்ஞையா
தார்க்குக் கோயிற்சாந்து நாறுகைக்கு விரகுண்டோ? என்னுடம்பாதல் உங்களுடம்பாதல்
திருத்துழாய் நாறுகின்றதோ? ஸ்வாபதேசத்தில், "அந்தண்டுழாய்கமழ்தல்" என்கிற விது
அங்கீகாரஸூசகமாயிருக்கிறது. [குன்றம் இத்யாதி] மலைபோலே அவிசால்யமாயிருப்பதாய்,
பெருவிலையனை ரத்நங்களாலே செய்யப்பட்டிருந்துள்ள மாடங்களினுடையவும் மாளிகை
களுடையவும் தர்சநீயமான குழாங்களால் மிக்கு. தெற்கில் திக்குக்குத் திலகம்போலே
யிருக்கிற குட்டநாட்டுத் திருப்புலியூரிலே நின்றருளின ஆச்சர்யபூதன்; "அவனுக்கு இவள்
போராள்" என்னும்படி குணாதிகன். "இவளுக்கு அவன் போரான்" என்றன்றோ நீங்களிருக்
கிறது? "அவனுக்கு இவர் போராள்" என்றன்றோ அவ்வூரிலுள்ளார் வார்த்தை. [திருவரு
ளாம்இவள் நேர்பட்டதே] இவள் நேர்பட்டது அவன் திருவருளாம். அவன் திருவருளேயா
மென்றாள். இதுவேயோ? இன்னம் அடையாளமுண்டோவென்ன? [அன்றி மற்றொருபாய
மென் னிவளந்தண்டுழாய்கமழ்தல்]. .... (10)

நிகமத்தில் - இப்பத்தைக் கற்றவர், ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைப்பண்ணப்
பெறுவரென்கிறார்.

நேர்பட்டநிறைமூவுலகுக்கும்நாயகன்தன்னடிமை*
நேர்பட்ட தொண்டர்தொண்டர்தொண்டர்தொண்டன்சடகோபன்சொல்*
நேர்பட்டதமிழ்மாலை ஆயிரத்துள்ளிவைபத்தும்
நேர்பட்டாரவர்* நேர்பட்டார் நெடுமாற்கடிமைசெய்யவே. (11)

[நேர்பட்ட நிறைமூவுலகுக்கும் நாயகன் தன்னடிமை] குறைவற்ற மூவுலகுக்கும்
நேர்பட்ட நாயகன். * த்ரைலோக்யமபி நாதேந யேந ஸ்யாந்நாதவத்தரம் * என்று ரக்ஷ்யவர்க்
கத்தளவன்றிக்கே யிருக்கிற ரக்ஷகத்வத்துடிப்பு. இத்தால் நாயகன்படி சொல்லிற்று.
அநுரூபஸ்ஸ வை நாத: என்னுமாப்போலே. [அடிமைநேர்பட்டதொண்டர் தொண்டர்
தொண்டர் தொண்டன் சடகோபன்] இவர்தம்படி சொல்லுகிறது. அவன்சேஷித்வத்துக்கு
எல்லையானாப்போலே, இவர் சேஷத்வத்துக் கெல்லையானபடி. [சொல் நேர்பட்டதமிழ்மாலை]
அந்த வாச்யத்துக்குத்தகுதியான உக்திவாய்த்த தமிழ்த்தொடையாயிரத்திலும் இத்திருவாய்
மொழி நேர்பட்டவர்கள். [நெடுமாற்கடிமை செய்ய - நேர்பட்டார்] இப்பாசுரத்தைச்
சொன்னவர்கள், இவருடைய வ்ருத்தியிலே அந்வயிக்கப்பெறுவரென்கை. நேர்படுகை-சொல்லப்
படுகை சொல்லப்பட்டாரென்றபடி. ஆக, இப்பாட்டால்- ஸர்வேச்வரஸ்வரூபத்தையும், ஸ்வஸ்வ
ரூபத்தையும், ப்ரதிபாதகமான ப்ரபந்தவைலக்ஷண்யத்தையும், இத்தை யப்யஸித்தாருடைய
ப்ராப்யவைலக்ஷண்யத்தையும் சொல்லிற்றாயிற்று. ... ... (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி }

கருமால் திறத்திலொரு கன்னிகையாம் மாறன்*
ஒருமாகலவியுரைப்பால் —* திரமாக
அன்னியருக்காகா அவன்தனக்கேயாகுமுயிர்*
அந்நிலையையோரு நெடிதா.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

கீழிரண்டு திருவாய்மொழியாலுமாக ஆத்மாவினுடைய அநந்யார்ஹசேஷத்வம் சொல்லிற்று; "அது பிறர்க்குமுரித்தல்ல, தனக்குமுரித்தல்ல" என்றுமிற்றுச் சொல்லிற்று. ப்ரணவத்தில் மத்யமபதத்தாலும், நமஸ்ஸாலும் சொன்ன அர்த்தமாயிற்றுச் சொல்லுகின்றது. அநந்யார்ஹசேஷத்வத்துக்கு எல்லை, ததீயசேஷத்வபர்யந்தமாகையிறே. ததீயர்க்கு க்ரயவிக்ரயார்ஹமானவன்றிறே தச்சேஷத்வம் நிலைநின்றதாவது. "எந்தம்மை விற்கவும்பெறுவார்கள்" என்றிறே இருப்பது, அம்முணியாழ்வான் போசளராஜ்யத்தினின்று வந்தநாளிலே, பட்டர் கண்டருளி, "நீ ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப்போர அடிமைசெய்து போந்தாய் என்று கேட்டோம், உன் ப்ரக்ருதிக்குச்சேர *நெடுமாற்கடிமையைக்கேள்" என்று அருளிச்செய்தாராம். "ஈச்வரசேஷம்" என்று அறிந்தவன்று ப்ரமித்து மீளவுமாம்; ததீயசேஷத்வபர்யந்தமாக உணர்ந்தால் மீளவேண்டாவிறே. *தத்பக்திநிக்நமநஸாம் க்ரயவிக்ரயார்ஹ:* என்னக்கடவதிறே. ஐச்வர்யம் புருஷார்த்தம் என்றிருப்பார், ஆத்மலாபம் புருஷார்த்தம் என்றிருப்பார், பகவச்சேஷத்வம் புருஷார்த்தம் என்றிருப்பார், ஈச்வரனாய், *ஆநந்தமய:* என்றிருக்குமிருப்பு புருஷார்த்தம் என்றிருப்பாராயிறேயிருக்கிறது. இப்படிப்பட்ட புருஷார்த்தங்கள்; தனித்தனியும் திரளவும், நான்பற்றின பாகவதசேஷத்வமாகிற புருஷார்த்தத்தோடொவ்வாது என்று எடுத்துக்கழிக்கவும் போராது. இப்படியிருக்கிற இதுவே காலதத்த்வமுள்ளதனையும் எனக்கும் என்னோடு ஸம்பந்தமுடையார்க்கும் வாய்க்கவேணும் என்று ப்ரார்த்தித்துத் தலைக்கட்டுகிறார். *பயிலும் சுடரொளியிற்காட்டில் இத்திருவாய்மொழிக்கு வாசியென்? என்னில், பாகவதர்கள் சேஷிகளென்றதங்கு; பாகவதர்கள் போக்யரென்கிறதிங்கு. [*கச்சதா மாதுலகுலம்*] ஸ்ரீசத்ருக்நாழ்வானுக்காதல், இவ்வாழ்வார்க்காதலிறே இவ்வர்த்தங்களில் ருசியுள்ளது. [*நித்யசத்ருக்ந;*] "பெருமாள் போக்யர்" என்று அவர்பக்கல் கண்வையான் என்றதிறே. ... ... *

முதற்பாட்டு. நாட்டார் விரும்புகிற ஐச்வர்யபுருஷார்த்தமும் நான் பற்றின புருஷார்த்தத்தோடு ஒவ்வாதென்று எடுத்துக்கழிக்கவும் போராதென்கிறார்.

நெடுமாற்கடிமைசெய்வேன்போல் அவனைக்கருத வஞ்சித்து *
தடுமாற்றற்றதீக்கதிகள் முற்றுந்தவிர்ந்த சதிர்நினைந்தால் *
கொடுமாவினையேனவனடியாரடியே கூடுமிதுவல்லால்*
விடுமாறென்பதென்? அந்தோ! வியன்மூவுலகுபெறினுமே. [1]

[நெடுமாற்கு] நெடுமாலுக்கென்றபடி, மாலென்று - பெரியோனென்றபடி. நெடுமையால் நினைக்கிறது-அதில் பெருமையை; அறப்பெரியோனென்றபடி. அவன்சேஷித்வத்தில் எல்லையைப் பிடிக்கிறார், தாம் சேஷத்வத்தில் எல்லையைக் கணிசிக்கிறவராகையாலே. அன்றிக்கே, மாலென்று - வ்யாமோஹமாய், நெடுமையால் - மிக்கவ்யாமோஹத்தையுடையவனென்னுதல், தன்னளவின்றியே தன்னுடையாரளவிலே நிறுத்தும்படிகாணும் வ்யாமோஹம்; *அடியார்க்கென்னை யாட்படுத்தவிமலன்* [அடிமைசெய்வேன் போலவனைக்கருத] அவனுக்கு அடிமை செய்வாரைப்போலே அவனைநினைக்க. மித்ரபாவமேயாய், ஆராய்ந்தால் அதுதானும் போட்கன். [தடுமாற்றற்றதீக்கதிகள் முற்றுந்தவிர்ந்த] ஒரு ஸத்கர்மத்தை யநுஷ்டித்து, அது நின்று தடுக்குமதில்லாமையாலே தடுமாற்றமற்று வர்த்திக்கிற அவித்யாதிகளடங்கத் தவிர்ந்தன. தவிர்ந்தபடிதானென்னென்னில், - வஞ்சித்துத்தவிர்ந்தன. பகலெல்லாம் ஒக்க வர்த்திக்கக்கடவோமென்று சொல்லிவைத்து, ராத்ரியிலே ஒருகலத்திலேயுண்டு வைத்து

ஒக்கக்கிடந்த விளக்கை யெரியவைத்துப் போனதறியாமே வஞ்சித்துப் போவாரைப்போலே.- 'அடிமைசெய்வேன்போலவனை - வஞ்சித்து சுருத' என்னவுமாம், [முற்றுந்தவிர்ந்த] நான் போக்கிக்கொள்ளு மன்றிறே க்ரமத்தாலே போகவேண்டுவது. *ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே *ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* என்றிறே அவன் போக்கும்போது இருப்பது [சதிர்நினைந்தால்] அவன் திருவடிகளிலே குனிந்தமாத்ரத்திலே துஷ்கர்மங்களடங்கலும் போனபடியை யநுஸந்தித்தால், புருஷார்த்தத்துக்கு எல்லையானாரையன்றோ பற்றவடுப்பது? உறுவதுபார்க்கில் ததீயரையன்றோ பற்றவடுப்பது? [கொடுமாவினையேன்] ப்ரீதி தலைமண்டையிட்டுச் சொல்லுகிறார். பாட்டுக்கேட்பார், பாட்டுவருத்தினவாறே "பாவியேன்" என்னுமாப்போலே. அன்றிக்கே, ப்ரதமாவதியிலே சரமாவதியைப் பற்றப்பெற்றிலேனென்கிறாராகவுமாம். [அவனடியாரடியே கூடும் இதுவல்லால்] தன் திருவடிகளைப் பற்றினார்திறத்திலே அவன் மிக்க வ்யாமோஹத்தைப் பண்ணுவானானால், அவன் விரும்பினாரையன்றோ நமக்கும் விரும்பவடுப்பது? அவன் ஆச்ரிதவ்யாமுக்தனானால் அவனுக்கு ப்ரிய விஷயத்தையன்றோ பற்றவடுப்பது? அவதாரணத்தால் - அங்கு ஸாம்யாபந்நராயிருக்குமவரல்லர், அவன் சேஷித்வத்தினெல்லையிலே நிற்குமாப்போலே, சேஷத்வத்தின் எல்லையிலே நிற்கிறார். [அடியேகூடும்] அவர்களோடொப்பூணுண்ண விருக்குமவரல்லர்; அவர்கள் காலைப் பற்றுவராயிற்று. [விடுமாறென்பதென்] புறம்புண்டான விஷயத்திலே விடுவது பற்றுவதானத்தை இவ்விஷயத்திலும் செய்யவோ? [அந்தோ] நான்பற்றின புருஷார்த்தத்துக்கு நாலு மூன்றுபடி கீழே நிற்கிற ஐச்வர்யம் இத்தோடு ஒவ்வாதென்ன வேண்டுவதே! என்று, அந்தோ! என்கிறார். [வியன்மூவுலகுபெறினும்] காடும் மலையுமான அம்சத்தைத்திருத்தி, அநுபவயோக்யமாம்படிபண்ணி, த்ரைலோக்யத்தையும் எனக்குக் கையடைப்பாக்கினாலும் விடுமாறென்பதென்னந்தோ! ஐச்வர்யத்துக்கு லோகபரிக்ரஹமுண்டாகையிறே, அத்யந்த விஸத்ருசமாயிருக்கச் செய்தேயும், "இது நான் பற்றின பாகவதசேஷத்வத்தோடொவ்வாது என்ன வேண்டுகிறது. ... . (1)

இரண்டாம்பாட்டு. கீழ்ச்சொன்ன ஐச்வர்யத்தோடே ஆத்மாநுபவத்தைச்சேர்த்துத் தந்தாலும் பாகவதசேஷத்வமாகிற புருஷார்த்தத்தோடு ஒவ்வாதென்கிறார்.

வியன்மூவுலகுபெறினும்போய்த் தானேதானேயானாலும்*
புயல்மேகம்போல் திருமேனியம்மான் புனைபூங்கழலடிக்கீழ்*
சயமேயடிமைதலைநின்றார் திருத்தாள்வணங்கி* இம்மையே
பயனே யின்பம்யான்பெற்றது உறுமோபாவியேனுக்கே. [2]

[வியன் மூவுலகுபெறினும்] விஸ்மயநீயமான த்ரைலோக்யைச்வர்யத்தையும் எனக்கொருவனுக்கே யாக்கினாலும். [போய்த்தானே தானேயானாலும்] ஸம்ஸாரபந்தமற்றுப் போய்க் கேவலாத்மாநுபவம்பண்ணப் பெற்றாலும். தானேதானேயென்கிற வீப்ஸையாலே ஸம்ஸாரத்திலே புத்ரபௌத்ராதிகளும் தானுமாய் ஜீவிக்குமத்தையுந்தவிர்ந்து, பரமபதத்தே போய் *அஹமந்நமஹமந்நமஹமந்நம்* என்று களிக்குமத்தையும்விட்டு, கேவலம் தானேயாகை. [புயல் இத்யாதி] வர்ஷுகவலாஹகம்போலேயிருக்கிற திருமேனியைக்காட்டி ஸர்வலோகத்தையு மெழுதிக்கொண்டிருக்கிறவனுடைய, புனையப்பட்ட பூவையும் வீரக்கழலையுமுடைய திருவடிகளின்கீழே. விரூபனானாலும் விடவொண்ணாத ஸம்பந்தத்தையுடையவனென்கை. [சயமேயடிமைதலைநின்றார்] ஸ்வயம்ப்ரயோஜநமாக எல்லா அடிமைகளையும் செய்யுமவர்களென்னுதல்; அவனுடைய ஸௌந்தர்யத்திலே தோற்று எல்லாவடிமைகளும் செய்யுமவர்களென்னுதல். [சயம்] ஸ்வயமென்னுதல், ஜயமென்னுதல். [திருத்தாள் வணங்கி] தேஹாதிரிக்தமாய் நித்யமான ஆத்மவஸ்துவை ப்ராபிக்குமதிலும், அவன் வடிவழகிலே தோற்றி

ருக்குமவர்கள் வடிவில் ஏகதேசமமையுமென்கிறார். [இம்மையே பபனே யின்பம்] சரீரத்தை விட்டுப்போய் அநுபவிக்குமதன்றிக்கே, இஹலோகத்திலே ப்ரயோஜநரூபமான ஸுகமாயிற்று யான் பெற்றது. ஒரு ஸாதநாநுஷ்டாநம் பண்ணி, கைபுகுரும் என்று நினைத்திருக்கையன்றிக்கே. [உறுமோ] இத்தோடொக்குமோ? [பாவியேனுக்கே] நிலைநின்ற புருஷார்த்தத்தினெல்லைக்கும் அபுருஷார்த்தத்துக்கும் வாசி சொல்லும்படியான பாபத்தைப்பண்ணினேன். பகவத்விஷய மல்லாமையாலே ஆத்மப்ராப்தி அபுருஷார்த்தம்; ஐச்வர்யம்போலே அஸ்த்திரமல்லாமையாலே நிலைநின்ற புருஷார்த்தமென்கை. ... ... (2)

மூன்றாம்பாட்டு. ஐச்வர்ய கைவல்யங்களில் விலக்ஷணமான பகவல்லாபமுண்டானாலும், இங்கேயிருந்து ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அடிமைசெய்கையோடு ஒவ்வாதென்கிறார். *உலகமளந்தபொன்னடிக்கு நல்ல ஸ்ரீ வைஷ்ணவர்கள் இங்கேயிருந்து என்னை யடிமைகொள்ளில், உலகமளந்தவன் திருவடிகளிலடிமைதான் உறாதென்கிறார்.

உறுமோபாவியேனுக்கு இவ்வுலகமூன்றுமுடன்நிறைய*
சிறுமாமேனி நிமிர்த்த என்செந்தாமரைக்கண் திருக்குறளன்*
நறுமாவிரை நாண்மலரடிக்கீழ்ப் புகுதலன்றியவனடியார்*
சிறுமாமனிசராயென்னையாண்டார் இங்கே திரியவே. [3]

[உறுமோபாவியேனுக்கு] ஆத்மாநுபவத்தையும் ஐச்வர்யத்தையுங் குறித்துச் சொன்ன வார்த்தையை, பகவத் விஷயத்திலும் சொல்லுகிறார். [உறுமோபாவியேனுக்கு] கீழ்ச்சொன்னவைபோலே களிக்கவொண்ணாது; புருஷார்த்தத்தினெல்லை யல்லாமையாலே கழிக்கவேணும். [பாவியேன்] ப்ரதமாவதிக்கும், சரமாவதிக்கும் வாசிசொல்லவேண்டும்படி பாபத்தைப் பண்ணினேன். உலக மூன்றுமுடன்நிறைய என்று தொடங்கி நாண்மலரடிக்கீழ்ப் புகுதல் - உறுமோ? [இவ்வுலகமூன்று முடன்நிறைய] சில ஏரிகள் வற்றிப் பாழாய்க்கிடக்க, நினைவின்றிக்கே வர்ஷியா, நிறைந்து நிற்குமாப் போலே, தன்வாசியறியாத மூன்று லோகங்களும் ஒருக்காலே நிறையும்படி. [சிறுமாமேனிநிமிர்த்த] கண்ணாலே முகந்து அநுபவிக்கலாம்படி சிறுத்து, வைலக்ஷண்யத்துக்கு எல்லையின்றிக்கே யிருக்கிற திருமேனியை நிமிர்த்த. [எம்] *உன்னைப் பிரமாணித்தார் பெற்ற பேறு* என்கிறபடியே, ஆச்ரிதர்க்காகச்செய்த செயலிறே. [செந்தாமரை இத்யாதி] விகாஸம், செவ்வி, குளிர்த்திகளுக்குத் தாமரையையொப்பாகச் சொல்லலாம்படி யிருக்கிற கண்ணழகையுடைய ஸ்ரீவாமநனுடைய, அழகிய மிக்க பரிமளத்தையுடைத்தான நாட்பூப்போலே யிருக்கிற திருவடிகளின் கீழே. [நறுமாவிரை] நன்றாய் மிக்க பரிமளம். இதுகாணும் இவர்க்கு வேப்பங்குடிநீராய், "உறுமோ" என்று கழிக்கிறது. பகவத்விஷயத்தில் வெளிறுகழிந்த அம்சமான துவாய்த்து இவர்க்கு பாகவத புருஷார்த்தத்தைப் பற்றக்கழிப்பதுகிறது. [அன்றி] அத்தைத் தவிர்ந்து. [அவனடியார்] ஸ்ரீவாமநனுடைய அழகிலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள். அவர்களாகிறார் *முன்னம் குறளுருவாய் மூவடிமண்கொண்டளந்த - மன்னன்சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்*என்றிருக்குமவர்கள். [சிறுமாமனிசராய்] வடிவுசிறுத்து ப்ரபாவம் கனத்திருக்குமவர்கள். "சிறுமை பெருமையாகிற விருத்ததர்மத்வயத்துக்கு ஏகதர்மியில் ஸமாவேசம் கூடினபடி எங்ஙனே?" என்று பட்டர் பால்யத்திலே ஆழ்வானைக்கேட்க, "நம்மோடொக்க அந்நபாநாதிகள் தாரகமென்னலாய், பகவத்விஷயத்தி லவகாஹநம் பார்த்தால் நித்யஸூரிகளோடொப்பர்கள் என்னலாயிருக்கிற, ஆண்டான், அருளாளப் பெருமாள், ஸ்ரீகோவிந்தப்பெருமாள் இவர்கள்காண் சிறுமாமனிசராகிறார்கள்" என்று பணித்தான். [என்னையாண்டார்] என்னையடிமைகொண்டவர்கள். [இங்கே திரிய] என்கண்வட்டத்திலே ஸஞ்சரியாநிற்க. [அன்றி] அவர்களைத் தவிர்ந்து

[நறுமாவிரைநாண்மலரடிகீழ்ப்புகுதல் - உறுமோ பாவியேனுக்கு] இவருடைய கண்ணிநுண் சிறுத்தாம்பிருக்கிறபடி. ஸ்ரீமதுரகவிகளுக்கும் அடி இதுவிறே. *பொய்ந்நின்றஞானந் தொடங்கி * முனியேநான்முகனளவும் இவரையநுவர்த்தித்தவிடத்து, ஆழ்வார், தமக்கு ப்ரயோஜநரூபமாகச் சொன்ன * பயிலுஞ்சுடரொளி, *நெடுமாற்கடிமையே தமக்குத் தஞ்சமாகப் பற்றினர். *யாங்யஸ்மாகம்லை"சரிதாநி* என்னக்கடவதிறே. (3)

நாலாம்பாட்டு. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உகப்பான பகவத்கைங்கர்யம் ஸித்திக்குமாகில், அவர்கள் ஸஞ்சாரத்தாலே ச்லாக்யமான இஜ்ஜகத்திலிருப்பே புருஷார்த்தமென்கிறார். [இங்கேதிரிந்தேற்கு] "சிறுமாமனிசர்" என்றீர்; "இங்கே" என்றீர்: இது *இருள்தருமாஞாலமன்றோ? பாகவதகைங்கர்யத்துக்கு வர்த்தகமான பகவதநுபவம் பூர்ணமாகக் கிடைப்பது பரமபதத்திலேயன்றோவென்னில்? அவ்வநுபவம் அவன்ப்ரஸாதத்தாலே இங்கே கிடைக்குமாகில் இங்கே வர்த்தித்தால் சேதமென்னென்கிறார் என்றுமாம். அங்குத்தை யநுபவத்துக்கும் அவன்ப்ரஸாதமேயிறே ஹேது; அது இங்கே கிட்டுமாகில் சேதமென்னென்னை.

இங்கேதிரிந்தேற்கிழுக்குற்றென்? இருமாநிலம் முன்னுண்டுமிழ்ந்த*
செங்கோலத்தபவளவாய்ச் செந்தாமரைக்கணென்னம்மான்*
பொங்கேழ்புகழ்கள்வாயவாய்ப் புலன்கொள்வடிவென்மனத்ததாய்*
அங்கேய்மலர்கள்கையவாய் வழிபட்டோடவருளிலே. [4]

[இழுக்குற்றென்] தண்மையென்? [இருமாநிலம் முன்னுண்டுமிழ்ந்த] மிக்க பரப்பையுடைத்தான பூமியை ப்ரளயகாலத்திலே வயிற்றிலேவைத்து நோக்கி, ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே உமிழ்ந்த. [செங்கோலத்தபவளவாய்] ப்ரளயத்திலே தள்ளினும் விடவொண்ணாத திருவதரத்தை யுடையவன். சிவந்து அழகிதான பவளம்போலே யிருந்துள்ள திருவதரம். [செந்தாமரைக்கணென்னம்மான்] என்னை நோக்காலே "ஜிதம்" என்னப்பண்ணினவன். உத்தமான குணத்தாலும் அழகாலும் என்னை யெழுதிக்கொண்டவன், [பொங்கேழ் இத்யாதி] பொங்கி - பரந்து; கேழ் - அழகு. பொங்கி யெழாநின்றுள்ள கல்யாண குணங்கள் வாயிலேயுளவாய். ஆற்றுப்பெருக்குப்போலே கிளர்த்தியை யுடைத்தாய்ப் புக்காரைக்கொண்டு கிளரவற்றன குணங்கள். [புலன்கொள்வடிவென்மனத்ததாய்] ஸர்வேந்த்ரியாபஹாரகக்ஷமமான வடிவு என் மநஸ்ஸிலே ஸந்நிஹிதமாய். [அங்கேய்மலர்கள கையவாய்] அவ்வடிவுக்கு அநுரூபமான மலர்கள் கையிலேயுளவாய். [வழிபட்டோடவருளில்] நெறிபட்டுச்செல்லும்படி அருளப்பெறில். மநோவாக்காயங்கள் அவன் திருவடிகளிலே நிரந்தரமாக அடிமைசெய்யும்படி அவன்ப்ரஸாதத்தைப்பெறில். [இங்கே திரிந்தேற்கிழுக்குற்றென்] பாகவதப்ரீதிரூபமான பகவத் கைங்கர்யத்தை அவன்ப்ரஸாதத்தாலே இங்கேபெறில் எனக்கு அதுவே புருஷார்த்தமென்கிறார் (4)

அஞ்சாம்பாட்டு. இப்படிப்பட்ட பகவத்ப்ராப்தியும், கீழ்ச்சொன்ன புருஷார்த்தங்களுமெல்லாங்கூடினாலும், தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள் சொன்னேன்* என்கிறபடியே, பாகவதர்களுக்கு ப்ரியமாகத் திருவாய்மொழிபாடி அடிமை செய்யுமித்தோடு ஒக்குமோ? என்கிறார்.

வழிபட்டோடவருள்பெற்று மாயன்கோலமலரடிக்கீழ்*
சுழிபட்டோடுஞ்சுடர்ச்சோதிவெள்ளத்து இன்புற்றிருந்தாலும்*
இழிபட்டோடுமுடலினிற்பிறந்து தன்சீர்யான்கற்று*
மொழிபட்டோடுங்கவியமுதம் நுகர்ச்சியுறுமோ? முழுதுமே. [5]

[வழிபட்டோடவருள்பெற்று] கைங்கர்யத்திலே நெறிபட்டுச் செல்லும்படி அவன்ப்ரஸாதத்தைப் பெற்று நித்யகைங்கர்யம் பண்ணும்படியாக. [மாயன்]

ஸௌந்தர்ய சீலாதிகளால ஆச்சர்யபூதனானவன். [கோலமலரடிக்கீழ்] தர்சநீயமான புஷ்பம்போலேயிருந்துள்ள திருவடிகளின் கீழே. [சுழிபட்டோடும் சுடர்ச்சோதிவெள்ளத்து] ஆற்றுப்பெருககுப்போலே சுழித்துச்செல்லுகிற தேஜஸ்தரங்கங்களை யுடைத்தான பரமபதத்திலே; *அத்யர்க்காநல தீப்தம் தத் ஸ்த்தாநம்* என்னக்கடவதிறே. [இன்புற்றிருந்தாலும்] *ஏஷஹ்யேவாநந்தயாதி* என்று அவன் ஆநந்திப்பிக்க, ஆநந்தநிர்ப்பரனாயிருந்தாலும். [முழுதும்] கீழ்ச்சொன்ன ஐச்வர்யாதிகளும் இத்தோடே கூடப்பெற்றாலும். [இழிபட்டோடும் உடலினிற்பிறந்து] தாழ்வுச்செல்லையாம்படி கைகழியப்போன சரீரத்தோடே பிறந்து. [தன் சீர்] நித்யஸூரிகளும் குமிழிநீருண்ணும் கல்யாணகுணங்களை. [யான்கற்று] நித்யஸம்ஸாரியாய், அந்தக் குணங்களுக்கு அடைவில்லாத நான் அறிந்து. [மொழிபட்டோடும்] அவை உள்ளடங்காமையாலே சொல்லாய் ப்ரவஹியாநின்றுள்ள. [கவியமுதம்நுகர்ச்சியுறுமோ] திருவாய்மொழியாகிற அம்ருதத்தை அனுபவிக்கையோ டொக்குமோ? [சுடர்ச்சோதிவெள்ளத் தின்புற்றிருந்தாலும் முழுதும்] "அவனடியார் சிறுமாமனிசராய் என்னையாண்டார் இங்கேதிரிய நறுமாவிரைநாண்மலரடிக்கீழ்ப்புகுதல் உறுமோ" என்றாரே கீழே: அத்தைவிட்டு கவியமுதம்நுகர்ச்சியுறுமோ முழுதும்" என்கிறார். அத்தை விட்டாராயிருக்கிறதோவென்னில் விட்டிலர்: "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்" என்கையாலே, அவர்களுக்கு அடிமை செய்கிறபடி. ... ... (5)

ஆறும்பாட்டு. உத்தமான ஐச்வர்யாதிகளும், சேஷியாய் ஜகஜ்ஜந்மாதி காரணமான ஸர்வேச்வரனாய் நிரதிசயாநந்தியாயிருக்கு மிருப்பும், பாகவத ப்ரீதிரூபமாகத் திருவாய்மொழி பாடியநுபவிக்கும் ரஸத்தோடு ஒவ்வாதென்கிறார். புட்பாகனுடைய பெரிய ஒப்பில்லாத விலக்ஷணமானபுகழைத் திருவாய்மொழியாலே நுகருமதுக்கு, விபுவான அவனுடைய ஆநந்தமும் போராதென்கிறார்.

நுகர்ச்சியுறுமோ? மூவுலகின் விடுபேறுதன்கேழில்*
புகர்ச்செம்முகத்தகளிறட்ட பொன்னாழிக்கையென்னம்மான்*
நிகர்ச்செம்பங்கியெரிவிழிகள் நீண்டவசுரருயிரெல்லாம்*
தகர்த்துண்டுழலும்புட்பாகன் பெரியதனிமாப்புகழே. (6)

[நுகர்ச்சியுறுமோ] திருவாய்மொழிமுகத்தாலே பகவத்குணங்களை யநுபவிக்குமத்தோடொக்குமோ? [மூவுலகின்வீடுபேறு] தன் ஸங்கல்ப ஏகதேசத்தாலே ஜகத் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களாம்படியிருக்கிற ஐச்வர்யந்தான் அத்தோடொக்குமோ? அவனுக்கிறே இது ஐச்வர்யமாய்த் தோற்றுவது; இவர்க்கு இது புருஷார்த்தமே? *ஜகத்வ்யாபாரவர்ஜம்* என்றிறபடியே, ஸ்வரூபாநுரூபமானவையிறே புருஷார்த்தமாவது? [தன்கேழில் இத்யாதி] மிடுக்குக்குத் தனக்கு ஒப்பின்றிக்கேயிருப்பதாய், புகரையும், சீற்றத்தாலே சிவந்தமுகத்தையுமுடைத்தான களிறுண்டு; குவலயாபீடம்; அத்தை முடித்த. [பொன்னாழிக்கை] அழகிய திருவாழிமோதிரத்தாலே யலங்க்ருதமான திருக்கையை யுடையவன். குவலயாபீடத்தின் கதுப்பிலே யடித்தபோது, கையுந் திருவாழிமோதிரமு மிருந்தபடி. [என்னம்மான்] கையும் அறுகாழியுமான வடிவைக்காட்டி என்னை எழுதிக்கொண்டவன். உகவாதாரை மிடுக்காலே யழித்தான், உகந்தாரை அழகாலேயழித்தான். [நிகர்இத்யாதி] ஜாதிப்ரயுக்தமான சிவந்த மயிரையுடையராய், எரிபோலே விழியாநின்றுள்ள கண்களையுடையராய், பெரிய வடிவையுடையரான அஸுரர்களுடைய உயிரை யெல்லாம் தகர்த்து புஜித்து, இதுதானே யாத்ரையாயிருக்கிற பெரிய திருவடியைக் கருத்தறிந்து நடத்துகிறவனுடைய, அபரிச்சிந்நமாய் உபமாநரஹிதமாயிருந்துள்ள கல்யாணகுணங்களை - திருவாய்மொழிமுகத்தாலே யநுபவிக்கும் அநுபவத்தோடொக்குமோ? [மூவுலகின் வீடுபேறு] திருவாய்மொழிநுகரும் ஆநந்தத்துக்கு, *ஏழுலகுந்தனிக்கோல்செல்ல வீற்றிருக்குமாநந்தமும் போராதென்கிறார். (6)

ஏழாம்பாட்டு. ஸ்வயம்புருஷார்த்தமாய்வரும் பகவதநுபவம் எனக்கு வேண்டா; பாகவதர்களோடேகூடி அநுபவிக்கும் பகவதநுபவமே காலதத்த்வமுள்ளதனையும் எனக்கு உண்டாகவேணுமென்கிறார்.

தனிமாப்புகழேயெஞ்ஞான்றும் நிற்கும்படியாய்த்தான்தோன்றி*
முனிமாப்பிரமமுதல்வித்தாய் உலகமூன்றும்முளைப்பித்த*
தனிமாத்தெய்வத் தளிரடிக்கீழ்ப் புகுதலன்றியவனடியார்*
நனிமாக்கலவியின்பமே நாளும்வாய்க்கநங்கட்கே. (7)

[தனிமா இத்யாதி] உபமாநரஹிதமாய், ச்லாக்யமானபுகழே காலதத்த்வமுள்ள தனையும் நிற்கும்படியாக. [தான்] அவ்யக்தசரீரனான தான். [தான்தோன்றி] அர்த்திப்பாரின்றிக்கேயிருக்க பூர்ணனாயிருக்கிறதான், தன்பேறாக *பஹுஸ்யாம்* என்று தோன்றி. [முனிமாப் பிரம முதல்வித்தாய்] ஸங்கல்பிக்கிற பரப்ரஹ்மமாகிற பரம காரணமாய், முனி-துறந்தவன். தேசாந்தரம்போன ப்ரஜையைத் தாய் நினைக்குமாப் போலே, "இவை என்பட்டன!" என்று திருவுள்ளத்தாலே நினைத்து, பரப்ரஹ்மமானதானே த்ரிவித காரணமுமாய். [உலகமூன்றும் முளைப்பித்த] கார்யவர்க்கமடையத் தன் பக்கலிலே அரும்பும்படி பண்ணினனாயிற்று; பஹுபவநஸங்கல்பமிருந்தபடி. [தனி இத்யாதி] ஒப்பில்லாத பரதேவதையினுடைய தளிர்போலேயிருக்கிற திருவடிகளின் கீழே புகுதல்; இதுதானும் ஸ்ருஷ்டிப்ரயோஜநம், சேதநனால் உபகரித்தவன் திருவடிகளைப் பற்றவிறே ப்ராப்தம். [அன்றி] அத்தைவிட்டு, [அவனடியார் இத்யாதி] அவ்வுபகாரத்திலே தோற்று எழுதிக்கொடுக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களோடுண்டான, மிகவிலக்ஷணமாயிருந்துள்ள ஸம்ச்லேஷஸுகமே நாள்தோறும் வாய்க்க. [நங்கட்கே] இத்தைவிரும்பி "இதுவே பேறு" என்றிருக்கிற நமக்கு, இது காலதத்த்வமுள்ளதனையும் கிட்டவேணும். ... ... (7)

எட்டாம்பாட்டு. பாகவதர்களோட்டை ஸம்ச்லேஷஸுகம்வேணுமென்றார் கீழ்; அதெல்லாம் வேணுமோ, அவர்கள் திரளைக் கண்ணாலே காண அமையுமென்கிறாரிதில்.

நாளும்வாய்க்கநங்கட்கு நளிர்நீர்க்கடலைப்படைத்து* தன்
தாளும்தோளும்முடிகளும்சமனிலாதபலபரப்பி*
நீளும்படர்பூங்கற்பகக்காவும் நிறைபன்னாயிற்றின்*
கோளுமுடையமணிமலைபோல் கிடந்தான்தமர்கள்கூட்டமே. (8)

[நாளும்வாய்க்க இத்யாதி] இதுவே புருஷார்த்தமென்றிருக்கிற நமக்கு, இது நாள்தோறும் வாய்க்கவேணும். [நளிர்நீர்க் கடலைப்படைத்து] சைத்யமே ஸ்வபாவமான ஜலத்தையுடைய கடலையுண்டாக்கி. கண்வளருகைக்கு ஸத்ருசமான ஜலமென்கை. [சமனிலாத-தாளும் தோளும் முடிகளும்] உபமாந ரஹிதமான திவ்யாவயவங்கள். [பலபரப்பி] அக்கடலிலே பாழ்தீரும்படி வடிவாலே அலங்கரித்து. [நீளும்படர்பூங்கற்பகக்காவும்] நிரவதிகபோக்யமான பூப்போலேயிருக்கிற தாளும், கற்பகக்காவைப் போலேயிருக்கிற தோளும். தாளுந் தோளுமிருக்கிறபடி. [நிறைபன்னாயிற்றின்கோளும்] "முடிகளாயிரத்தாய்" என்கிறத்தைச் சொல்லுகிறது. கோளென்று-தேஜஸ்ஸு. ஆயிரக்கோடி ஆதித்யர்களைத் திரட்டி முடியாக வகுத்தாப்போலேயிருக்கிறமுடி. கோளென்று-க்ரஹங்களாய், அவைதான் தேஜ:பதார்த்தங்களாகையாலே, தேஜஸ்ஸை லக்ஷிக்கிறது என்றுமாம். [மணிமலைபோல்கிடந்தான்] ஒரு ரத்நபர்வதம்சாய்ந்தாற் போலேயாயிற்றுக் கண்வளர்ந்தருளுகிறபடி. [தமர்கள் கூட்டமே நாளும்வாய்க்க] இப்படி வைத்த கண் வாங்கவொண்ணாதபடி கண்வளர்ந்தருளா நிற்குமவனையன்று நாளும்வாய்க்க வென்கிறது; "கிடந்ததோர்கிடக்கை" என்று கிடையழகிலே தோற்றி

ருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள்திரளிலே நானுமொருவனைப் அந்வயிக்கவேணுமென்னுதல், அத்திரளைக்கண்ணாலே காணவமையுமென்னுதல். பசியர் "கலவரிசிச்சோறு உண்ணவேணும்' என்னுமாப்போலே, தம்மபிநிவேசந்தோற்ற அருளிச்செய்கிறார். *ஸத்பிரேவ ஸஹாஸீத* என்றும், "ஈட்டங்கண்டிடக்கூடுமேல்" என்றும் சொல்லக்கடவதிறே. அவன் பண்ணின உபகாரத்துக்குத் தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களோடே ஸம்ச்லேஷிக்கவேணுமென்றார் கீழ்; கிடையாமையாலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள்திரளைக் கண்ணாலேகாணவமையுமென்கிறார் இதில். ... ... (8)

ஒன்பதாம்பாட்டு. ஸ்ரீவைஷ்ணவர்களுடன் ஸஹவாஸந்தான் வேணுமோ? அவர்களுடைய சேஷத்வத்திலே முடிந்தநிலமாகவமையுமென்கிறார்.

தமர்கள்கூட்டவல்வினையை நாசஞ்செய்யுஞ் சதுமூர்த்தி*
அமர்கொளாழிசங்குவாள் வில்தண்டாதிபல்படையன்*
குமரன்கோலவைங்கணைவேள் தாதை கோதிலடியார்தம்*
தமர்கள்தமர்கள்தமர்களாம் சதிரேவாய்க்கதமியேற்கே. *(9)*

[தமர்கள் கூட்டவல்வினையை நாசஞ்செய்யும்] ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய திரளுக்கு வரும் வல்வினையை நாசஞ்செய்யுமென்னவுமாம். அன்றிக்கே, தமர்களுடைய, கூட்டமான வல்வினையை -திரண்டவல்வினையை: நசிப்பிக்குமென்னவுமாம். அன்றிக்கே தமர்கள் வல்வினையைக்கூட்ட, அத்தை நசிப்பிக்குமென்னுதல். இவர்களுக்குக் கூட்டுகையே ஸ்வபாவமானாப்போலே, அவனுக்கும் கழிக்கையே யாத்ரையாயிருக்கிறபடி. [சதுமூர்த்தி] விரோதியைப்போக்குகைக்கு ஏகாந்தமான பலவடிவுகளையும் கொள்ளாநிற்கும். இவர்கள், கைங்கர்யத்துக்குப் பலவடிவு கொள்ளுமாப்போலே யாயிற்று, அவன் ரக்ஷணார்த்தமாகப் பலவடிவு கொள்ளும்படி. [அமர்கொள் இத்யாதி] விரோதி நிரஸநத்துக்கு உறுப்பாக யுத்தோந்முகமான திருவாழிதொடக்கமான திவ்யாயுதத்தையுடையவன். [குமரன்] நித்யயுவாவாயிருக்கும். [கோலம் இத்யாதி] பஞ்சபாணனை காமனுக்கும் உத்பாதகனானவன். "அழகுக்கு எனக்குமேலில்லை" என்றிருக்கும் காமனுக்கும் அழகுக்கு உத்பத்திஸ்தாநமாயிருக்குமென்கை. அப்பருவத்துக்கும் அழகுக்கும் தோற்றிருக்கும் அநந்யப்ரயோஜநரான ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய அடிமையில் முடிந்த நிலமாகவேணுமென்கிறார். [சதிரேவாய்க்க] இந்த நிரதிசய புருஷார்த்தம் என்றுமொக்க வாய்க்கவேணும். [தமியேற்கே] பூதகாலத்திலும் ஸ்ரீ சத்ருக்னாழ்வானைத் தேடிப்பிடிக்க வேண்டுகையாலே வர்த்தமாநகாலத்தில் தமக்கு உபமாநமின்றிக்கேயிருக்கை. கீழ் "நங்கட்கு" என்றார், *கேசவன்தமர்க்குப் பின்பு தனியரல்லாமையாலே: இங்கு "தமியேற்கு" என்கிறது, ஸம்ஸாரிகளில் தமக்கு உபமாநமில்லாமையாலே. (9)

பத்தாம்பாட்டு. இப்ப்ராப்யம், எனக்கும் என்பரிக்ரஹத்துக்கும் என்றும் வாய்க்கவேணு மென்கிறார்.

வாய்க்கதமியேற்கு ஊழிதோறூழியூழி* மாகாயாம்
பூக்கொள்மேனிநான்குகோள்பொன்னாழிக்கைஎன்னமான்*
நீக்கமில்லாவடியார்தம் அடியாரடியாரடியாரெங்
கோக்கள்* அவர்க்கேகுடிகளாய்ச்செல்லும்நல்லகோட்பாடே. *(10)*

[வாய்க்கதமியேற்கு] புருஷார்த்தத்தில் எல்லையிலே அவகாஹிக்கையாலே உபமாநரஹிதனை எனக்கு இப்பேறே வாய்க்கவேணும். [ஊழிதோறூழியூழி] காலதத்வமுள்ளதனையும் இடைவிடாதே யாவதாத்மபாவியாக இதுவேபுருஷார்த்தமென்கை. [மாகாயாம்பூ இத்யாதி] அழகிய காயாம்பூப்போலேயிருக்கிற திருமேனியையும், கல்பகதரு பணைத்தாற்

போலேயிருக்கிற திருத்தோள்களையும், கல்பகம் பூத்தாற்போலேயிருக்கிற திருவாழியையுங் காட்டி என்னை அநந்யார்ஹனாக்கினவன். [நீக்கமில்லாவடியார்] பிரிய நினைக்கில் *குருஷ்வமாம்* என்னவேண்டும்படி விச்லேஷிக்கமாட்டாதவர்களில் சரமாவதியானவர்கள் என் ஸ்வாமிகள். "தமர்கள் தமர்கள் தமர்களாம்" என்று முடித்தவெல்லையை முதலாகத்தொடங்குகிறார். சயமேயடிமைதலைநின்றாராகிறார்-ஸ்ரீபரதாழ்வான்போல்வார்; கோதிலடியாராகிறார்.—ஸ்ரீசத்ருக்நாழ்வான்போல்வார்; நீக்கமில்லாவடியாராகிறார் இளையபெருமாள்போல்வார். [அவர்க்கேகுடிகளாய்] இருகரையராயிராதே, *நசேதி ராமாநுஜேஜத்யேஷா சதுராசதுரக்ஷரீ. காமவஸ்தாம்ப்ரபத்யந்தேஜந்தவோஹந்தமாத்ருச:* என்றிருக்கப்போலே காணும் அடுப்பது. [அவர்க்கே இத்யாதி] அவர்களுக்கே ஸபரிகரமாக அநந்யார்ஹராய்ச்செல்லும் நல்லகட்டளை வாய்க்க தமியேற்கு. கோட்பாடு—கோலுபாடு. (10)

நிகமத்தில் இத்திருவாய்மொழிவல்லார், இதிற்சொன்ன பாகவத சேஷத்வத்தைப் பெற்று ஸபரிகரமாக வாழப்பெறுவரென்கிறார்.

நல்லகோட்பாட்டுலகங்கள் மூன்றினுள்ளுந்தான்நிறைந்த*
அல்லிக்கமலக்கண்ணனை அந்தண்குருகூர்ச்சடகோபன்*
சொல்லப்பட்டவாயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள்*
நல்லபதத்தால்மனைவாழ்வர் கொண்டபெண்டிர்மக்களே. (11)

[நல்லகோட்பாட்டுலகங்கள்] இவர் பாகவதசேஷத்வமே பரமபுருஷார்த்தம்" என்று *நெடுமாற்கடிமை யருளிச்செய்தபின்புகாணும் லோகம் கட்டளைப்பட்டது. [மூன்றினுள்ளும்தான்நிறைந்த] வ்யாப்தியும் தேவையாகையன்றிக்கே புதுக்கணித்தது. [அல்லிக்கமலக்கண்ணனை] இவர், தன்னைப்பற்றினரைப்பற்றி விரும்ப விரும்ப, திருக்கண்களும் சிவந்து புதுக்கணித்தது. [அந்தண்குருகூர்] ஊரும் தர்சநீயமாய் ச்ரமஹரமாயிற்று. [சடகோபன் சொல்லப்பட்டவாயிரம்] வேதம்போலே தான்தோன்றியன்றிக்கே யிருக்கை. பரத்வம்போலே வேதம்; அவதாரம்போலே திருவாய்மொழி. [இவையும்பத்தும்வல்லார்கள்] இப்பத்தை அப்யஸிக்கவல்லவர்கள். [நல்ல இத்யாதி] நல்லபதமாகிறது பாகவதசேஷத்வமிறே, அத்தை இத்திருவாய்மொழியிலே இவர்நிஷ்கர்ஷித்தபடியாலே; அத்தோடேகூட. [மனைவாழ்வர்] கார்ஹஸ்த்ய தர்மம் அநுஷ்டிக்கப் பெறுவர். [கொண்ட இத்யாதி] தாங்களொன்றைநினைக்க பரிகரமொன்றைநினைக்கையன்றிக்கே, ஸபரிகரமாக பாகவதர்களுக்கு உறுப்பாக வர்த்திக்கப்பெறுவர். திருவனந்தபுரத்துக்குச் சாத்தாகப் போகாநிற்கச்செய்தே, திருக்கோட்டியூரிலே செல்வநம்பி திருமாளிகையிலேபோய்ப் புக்கார்களாய், நம்பி தாம் அஸந்நிஹிதராயிருக்க, நங்கையார், நாலுவித்துக்கோட்டை கிடக்க, அவற்றைக்குத்தி ஸ்ரீவைஷ்ணவர்களை அமுது செய்யப்பண்ணிவிட, பிற்றைநாள் நம்பிவந்து "அவை செய்ததென்?" என்ன "பரமபதத்திலே விளைவதாகவித்தினேன்" என்றாளாம். "தொண்டனூர்நம்பி, எச்சான்" என்று சில மஹாபுருஷர்களுண்டிறே பாகவதசேஷத்வமே யாத்ரையாய்ப் போந்தவர்கள்; அவர்கள்படியேயாகப்பெறுவர்கள். ... ... (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி	நெடுமாலழகுதனில்நீள்குணத்தில்* ஈடு படுமாநிலையுடையபத்தர்க்கு—* அடிமைதனில் எல்லைநிலம்தானாகவெண்ணினான்மாறன்* அது சொல்லைநிலமானநிலைகொண்டு.

ஆழ்வார்திருவடிகளே சரணம், எம்பெருமானார்திருவடிகளே சரணம்.
ஜீயர்திருவடிகளே சரணம்.

பகவத்விஷயம்—ஈடு எட்டாம்பத்து முற்றிற்று.